Madurai, Meenakshi Koil Audit Report F 1420.

மதுரை மாவட்டம், மதுரை வட்டம் மற்றும் மதுரை நகர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் பசலி 1420 கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை.

தரம்: சிறப்பு – நிலை 1

பாகம் 1(அ)

அ) செயல் அலுவலர் பெயர் மற்றும் பணிபுரிந்த காலம் : திருவாளர்கள்

01.07.2010 முதல் 30.04.2011 முடிய: ஆர்.பத்மநாபன், பி.எஸ்ஸி., பி.எல்., இணைஆணையர் /செயல் அலுவலர்,

01.05.2011 முதல் 14.05.2011 முடிய: ஆர்.சுதர்சன், பி.எஸ்ஸி., பி.எல்., இணைஆணையர் /செயல் அலுவலர், (கூடுதல் பொறுப்பு)

15.05.2011 முதல் 30.06.2011 முடிய: பி.ஜெயராமன்., பி.எஸ்ஸி, பி.எல்., இணைஆணையர் /செயல் அலுவலர்,

ஆ) தணிக்கையாளர் பெயர் (ம) பதவி : திரு எஸ்.வி.வடபத்ரசாயி, உதவித் தணிக்கை அலுவலர்,

திரு ராஜசேகர், தணிக்கை ஆய்வர்

திரு மணிகண்டன்,தணிக்கை ஆய்வர்

இ) தணிக்கை மேற்கொண்ட நாட்கள் : 04.10.2011 – 29.03.2012

ஈ) மேலாய்வுசெய்தஅலுவலரின் பெயர் : திரு ஆர்.கோவிந்தராஜன், துணை தலைமைத் தணிக்கை அலுவலர் 21.06.2012 &

உ) மேலாய்வு நாள் : 22.06.2012

பாகம் 1 (ஆ)

அ)ரொக்கக் குறிப்பிலுள்ள தொடக்க இருப்பு கடந்த பசலியின் இறுதி இருப்புக்கு ஏற்ப இருந்தது. 30.6.2011 ன் இறுதி இருப்புத் தொகை ரூ 2,43,99,986/- 6/2011 மாதத்திற்குரிய முடிவு இருப்புடன் ஒத்திருந்ததோடு, இத்திருக்கோவிலுக்காக கீழ்கண்ட வங்கி களில்

1. பேங்க் ஆப்இந்தியா	18000
2. பேங்க் ஆப்இந்தியா	18001
3. ஐஓபி	9372
4. எச்.டி.எப்.சி	01231000055186
5. ஐசிஐசிஐ	600301204140
6. எம்.டி.சி.சி	1633
7. எம்.டி.சி.சி	1647

பேணப்பட்டு வரும் சேமிப்பு வங்கி கணக்குப் புத்தகங்களின் இறுதி இருப்புடனும், காசாக்கப் படாத காசோலைகளையும், இருசால் செய்யப்படாத கையிருப்பையும் கழித்த பின் ஒத்திருந்தது. தணிக்கையின் போது கையிருப்பு ரொக்கம் காட்டப் பட்டு சரிபார்க்கப் பட்டது.

ஆ)நிரந்தர வைப்பு இரசீதுகள் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்கள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. இதில் கண்ட குறைபாடுகள் இத்தணிக்கை அறிக்கை பத்தி எண் ல் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன.

இ)தணிக்கை அறிக்கையுடன் கீழ்கண்ட பட்டியல்கள் இணைக்கப் பட்டுள்ளன.

1) வரவு செலவு பட்டியல் பசலி – 1420.
2) தணிக்கை கணக்குகளின் சுருக்கப்பட்டியல் பசலி – 1420.
3) பலவகை கேட்பு வசூல் நிலுவை பட்டியல் பசலி – 1420.
4) 30.06.2011 – ல் உள்ள முதலீடுகள் சுருக்கப் பட்டியல்.
5) 30.06.2011 – ல் உள்ள இருப்பு பொறுப்பு பட்டியல்.

ஈ)1959–ம் ஆண்டு இந்து சமய அறநிலைய துறை சட்டப்பிரிவு 116(2) (14) ன் கீழ் விதி 5–ன்படி இணைக்கப்பட்டுள்ள வினா விடைப் பட்டியலில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

<u>உ)நீக்கப்படாமல் எஞ்சியுள்ள தணிக்கைத் தடைகள்</u>

தணிக்கை ஆண்டின் இறுதியில் நீக்கப்படாமல் எஞ்சியுள்ள தணிக்கைத் தடைகளின் தொகுப்பு ஒன்று தணிக்கை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள அனுபந்தம் பகுதி 1 மற்றும் 2ல் கொடுக்கப் பட்டுள்ளது. தீவிர நடவடிக்கைகள் மூலம் இத்தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டப் படுகிறது.

<u>நிதி நிலைமை</u>

அ) பசலி 1420 ன் துவக்கத்தில் ரூ 27,59,98,470.97 உபரி ஆரம்ப இருப்புடன் தொடங்கபட்ட சாதாரண பொதுக்கணக்கு பசலி 1420 ன் இறுதியில் ரூ 37,94,~~64,797~~ 27,292.12 உபரி இருப்புடன் முடிந்தது. இந்தாண்டில் வரவுக்கு உட்பட்டு செலவாகியுள்ளது. இத்திருக்கோயிலின் முக்கிய வருமானம் உரிமைக்குத்தகை, உண்டியல், கட்டணச் சீட்டு விற்பனை மற்றும் முதலீடு வட்டி மூலம் கிடைக்கிறது. பசலி முடிவில் ரூ 5,58,14,421.64 வருவாய் நிலுவையாக உள்ளது. கடன் மற்றும் முன்பணம் முறையே ரூ 3,83,304.80 மற்றும் ரூ 24,14,849.66/– ம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. வைப்புத் தொகை ரூ~~2,35,71,986.65~~ 2,36,09,491.65 திருப்பித் தரவேண்டியுள்ளது. ரூ 37,08,35,499.60 முதலீடாக உள்ளது.பொதுவாக இத்திருக்கோயிலின் நிதி நிலைமை திருப்திகரமாக உள்ளதாகக் கருதலாம்.

ஆ) தணிக்கை ஆண்டில் கண்காணிப்பாளர் சம்பளம், சிப்பந்திகள் சம்பளம், சிப்பந்திகள் கருணைக்கொடை, பயணப்படி போன்ற நிர்வாகச் செலவுகள் ரூ 4,55,21,165.00 செலவாகியுள்ளது. இது இவ்வாண்டு வரிவிதிப்பு வருமானம் ரூ 20,75,48,761.00 ல் 21.93 % ஆகும்.

பகுதி – 1 (இ)

தணிக்கை அறிக்கையில் காணப்படும் குறைபாடுகளின் சுருக்கம்.

1. அறங்காவலர் குழுவினால் பின் ஏற்பு பெறக்கூடிய மறுப்புக்கள்.

பத்தி எண்கள்: இல்லை

2. ஆணையர்/இணை ஆணையர்/உதவிஆணையர் உத்திரவுகளின் மூலம் தீர்க்கப்படத்தக்க குறைபாடுகள்.

பத்தி எண்கள்: 57, 75, 76, 104, 112, 123, 129, 130, 144, 148.

3. செயல் அலுவலர் இடமிருந்து சட்டப்பிரிவு 90 அல்லது மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் பணி விதிகளின் படி தண்டம் விதிக்கத் தக்க/தொகை வசூலிக்கப்படத்தக்க வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படத்தக்க நன்கு தெரிந்த குறைபாடுகள்

பத்தி எண்கள்: ~~இல்லை~~ 1, 2, 3, 4, 7, 9, 11, 13, 14, 16, 18, 22, 23
24, 29, 30, 31, 113

4. பரம்பரை/நிர்வாகஅறங்காவலர் மீது எடுக்கப்படவேண்டி தண்ட நடவடிக்கைகள் அல்லது வசூல் செய்யப்படக்கூடிய தெளிவான இனங்கள்.

பத்தி எண்கள்: இல்லை

5. உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய குற்றவியல் மறுப்புக்கள்.

பத்தி எண்கள்: இல்லை

6. மேல் அலுவலர்களின் தனி கவனத்திற்கு கொண்டு வரத்தக்க பொதுவான குறைபாடுகள்

பத்தி எண்கள்: 5, 6, 8, 10, 12, 15, 17, 19, 20, 21, 25, 26, 27, 28
32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45
46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 58, 59, 60
61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74
75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89,
90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 102, 103
104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115,
116 முதல் 197 முடிய

பகுதி 1 ஈ

தொடர்ந்து வரும் குறைபாடுகள் - நிவர்த்திக்க தக்க மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்-குறைபாடுகள்.

முன்பசலிகளில் எழுப்பப் பட்ட கீழ்க்கண்ட குறைபாடுகளை நிவர்த்திக்க இதுகாறும் எவ்வித நடவடிககையும் மேற்கொள்ளப் படாத நிலையில் தணிக்கையாண்டின் முடிவில் இக்குறைபாடுகள் தொடர்ந்து வரும் குறைபாடுகளாகவே உள்ளன. விவரம் பின்வருமாறு:

வ,எண்	தடையின் சுருக்கம்	பசலி	பத்தி எண்
01.	உச்சிக்கால இலவச பிரசாதம்-திட்டத்திற்கு பெறப்பட்ட துறையின் உத்திரவு நகல்கள் காண்பிக்கப்படவில்லை-இலவச பிரசாதம் வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட திட்டம் காண்பிக்கப்படவில்லை-இலவச பிரசாத கட்டளைக்கென உள்ள முதலீடு விபரங்கள் மற்றும் கட்டளைதாரர்கள் கட்டளை நடைபெறும் நாள்போன்ற விபரங்கள் அடங்கிய இலவச பிரசாத கட்டளை விபரப்பதிவேடு பேணப்படவில்லை-மற்றும் பிற குறைபாடுகள்	1415	17
02.	மதுரை நகர கூட்டுறவு வங்கியில் முதலீடு-நிதிநிலைமை சரியில்லையெனத் தெரிந்த பின்னரும் திரும்பப்பெற அனுமதி மறுத்தது-அதிகளவு நிதியிழப்பு-கடுங்குறைபாடு	1415	20

இக்குறைபாடுகளை நிவர்த்திக்க உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

5

பகுதி ஆ (அ)

திருக்கோயில் குறைபாடுகள்

1) **கையடக்கக் கணினி மூலம் கட்டணச் சீட்டு விற்பனை – மெஷின் எண் 1420 மூலம் பெறப்பட்ட தணிக்கையாண்டிற்கான விற்பனைத் தொகை ரூ 2,06,250/-, பசலி 1420 க்கு முன்னர் விற்பனை செய்யப் பட்ட தொகை ரூ 22,750/- மற்றும் மெஷின் எண் AD மூலம் பெறப்பட்ட விற்பனைத் தொகை ரூ 1,00,000/- ஆக மொத்தம் ரூ 3,29,000/- திருக்கோயில் கணக்கில் செலுத்தப் படவில்லை – குறைபாடுகள்.**

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் கணினி மூலம் கட்டணச் சீட்டுக்கள் விற்பனை அமுல் செய்யப் பட்டுள்ளது. நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு கணினி, கையடக்கக் கணினி ஆகியன உபயோகப்படுத்தப் பட்டு கட்டணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப் பட்டு வருவாய் பெறப்பட்டுள்ளன.

கணினி மூலமும், கையடக்கக் கணினி மூலமும் பெறப்படும் வருவாய் விவரங்களை நாள்தோறும் திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டு வருகிறது. மேலும் நாள்தோறும் பயன்படுத்திய கணினி மற்றும் கையடக்கக் கணினி மூலம் பெறப்பட்ட வரவு மற்றும் சீட்டு எண்கள் தொடர்பான விவரங்களை பதிவிறக்கம் (DOWNLOAD) செய்யப்பட்டு பிரதான கணினியுடன் இணைக்கப்படும் முறையும் நடைமுறை படுத்தப் பட்டுள்ளது.

3,29,000/-

பிரதான கணினி வாயிலாக பசலி 1420 ல் விற்பனை செய்யப்பட்ட கட்டணச் சீட்டுக்களின் விற்பனை விவரப்பட்டியலை பரிசீலனை செய்த போது தணிக்கையாண்டில் கணினி மற்றும் கையடக்கக் கணினி மெஷின் எண் AA TO AP முடிய 16 கையடக்கக் கணினிகள் மற்றும் கையடக்கக் கணினி மெஷின் எண் 1420 ஆகியனவற்றின் மூலம் கட்டணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப் பட்டு வருவாய் பெறப்பட்டுள்ளதை தணிக்கையில் அறியப்படுகிறது. தணிக்கையாண்டிற்கான கட்டணச் சீட்டுக்களின் விற்பனை விவரப் பட்டியலுடன் இப்பட்டியலும் இணைக்கப் பட்டுள்ளது.

பிரதான கணினி வாயிலான கட்டணச் சீட்டுக்களின் விற்பனை விவரப் பட்டியலில் (கம்ப்யூட்டர்) வீடியோ கட்டணச் சீட்டுத் தலைப்பின் கீழ் 1420 என்ற மெஷின் எண் கொண்ட கையடக்கக் கணினி மூலம் ரூ 250/- முகமதிப்புடைய சீட்டு எண் 92 முதல் 916வரையிலான 825 சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்ட வருவாய் ரூ 2,06,250/- திருக்கோயில் கணக்கில் வரவாகப் படாதது தணிக்கையின் போது கண்டறியப் பட்டது.

அத்துடன் மேற்படி கையடக்கக் கணினி மூலம் விற்பனை செய்யப் பட்ட 1 முதல் 91 முடிய உள்ள கட்டணச் சீட்டுக்கள் எப்போது விற்பனை செய்யப் பட்டதென்பதற்கோ, அதற்கான விற்பனைத் தொகை (சீட்டின் முகமதிப்பு ரூ 250/- வீதம்) ரூ 22,750/- திருக்கோயில் கணக்கில் செலுத்தப்பட்டதற்கோ ஆதாரமான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை. ஆதலின் இத்தொகை ரூ 22,750/-ம் திருக்கோயில் கணக்கில் வரவாகப் படாததையும் தற்போதைய தணிக்கையின் போது கண்டறியப் பட்டது.

மேலும் இந்த கட்டணச் சீட்டுக்களின் விற்பனை விவரப் பட்டியலில், விழாக் கால சிறப்பு நுழைவு கட்டணச் சீட்டுத் தலைப்பின் கீழ் AD என்ற மெஷின் எண் கொண்ட கையடக்கக் கணினி மூலம் ரூ 25/- முகமதிப்புயைடய சீட்டு எண் 854 முதல் 7027 வரையிலான 6174 சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ 1,54,350/- வருவாயாக பெறப் பட்டுள்ளதையும், இத்தொகையில் சீட்டு எண் 4854 முதல் 7027 வரையிலான 2174 சீட்டுக்கள் விற்பனை வருவாயான ரூ 54,350/- மட்டும் திருக்கோயில் கணக்கில் வரவாகப் பட்டுள்ளதையும், சீட்டு எண் 854 முதல் 4853 வரையிலான 4000 சீட்டுக்களின் விற்பனை வருவாயான ரூ1,00,000/- திருக்கோயில் கணக்கில் செலுத்தப் படாததையும் தணிக்கையின் போது அறியப் பட்டது.

இது குறித்து வினவிய போது கையடக்கக் கணினியில் ஏற்பட்ட குறைபாடு காரணமாகத்தான் இத்தவறுகள் நேரிட்டுள்ளதாக தணிக்கைக்குத் தெரிவிக்கப் பட்டது.

கணினியின் குறைபாட்டினால் இத்தவறு நேரிட்டுள்ளது என்ற கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் உரிய ஆவணங்கள், ஆதாரமான பட்டியல்கள் எதுவும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படாத நிலையிலும், பின்வரும் காரணங்களின் அடிப்படையிலும், கணினியில் ஏற்பட்ட குறைபாடு என்பதனைத் தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

1) தணிக்கையாண்டில் மொத்தம் எத்தனை கையடக்கக் கணினி இருப்பில் இருந்தன, அவைகளுக்கு இடப்பட்ட மெஷின் எண் என்ன என்பதற்கான இருப்புப் பதிவுகள் இல்லை.

2) தணிக்கையாண்டில் மொத்தம் எத்தனை கையடக்கக் கணினி உபயோகப்படுத்தப் பட்டன, அவைகளுக்கு இடப்பட்ட மெஷின் எண் என்பன குறித்தான விவரப்பதிவேடு ஏதும் பேணப் படவில்லை.

3) கையடக்கக் கணினி எப்போது கொள்முதல் செய்யப் பட்டது, அதன் ஒவ்வொன்றின் மெஷின் எண் என்ன என்பதனைக் காட்டும் விவரப்பதிவேடுகளோ, ஆவணங்களோ பேணப் படவில்லை.

4) கையடக்கக் கணினி உபமாகப் பெறப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. அவ்வாறெனில் யார்,யாரிடமிருந்து எத்தனை கையடக்கக் கணினிகள் எப்போது உபயமாக பெறப்பட்டன என்பதற்கோ, அவைகளின் மெஷின் எண் என்ன என்கிற விவரத்திற்ககோ ஆதாரமான பதிவேடுகளோ, கோப்புக்களோ தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

5) எந்தெந்த மெஷின்கள் யார்,யாருக்கு, எந்தெந்த நாளில் விற்பனைக்கு வழங்கப் பட்டன, அதனைப் பெற்றுக்கொண்டவரின் கையொப்பம், மெஷின் திரும்ப ஒப்படைக்கப் பட்ட விவரம், அன்னாரால் செலுத்தப் பட்ட தொகை ஆகிய விவரங்களைக் காட்டும் பதிவேடுகளோ, ஆவணங்களோ தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

6) எந்தெந்த மெஷின்கள் எந்தெந்த தேதிகளில் பழுதடைந்து உபயோகப் படுத்த இயலாமல் போனது என்பதற்கோ, அதனை யார் மூலம் பழுது நிவர்த்தி செய்யப் பட்டது என்பதற்கோ, அதற்கான செலவு திருக்கோயில் மூலம் மேற்கொள்ளப் பட்டதா என்பதற்கோ, திரும்ப அந்த மெஷின் எந்த தேதி முதல் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது என்பதற்கோ உரிய பதிவேடுகளோ, ஆவணங்களோ, தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

7) பசலி 1419 லேயே கணினி மூலம் கட்டணச் சீட்டு விற்பனை அமுல் படுத்தப் பட்டதென்றும், ஆதலால் பசலி 1419 ல் பயன் படுத்தப்பட்ட மெஷின்களை பசலி 1420 ல் பயன்படுத்தியபோது சார்புள்ள கட்டணச் சீட்டுக்களின் தொடர் எண்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. அவ்வாறெனில் ஒரே மெஷினில் ஒரு சில கட்டணச் சீட்டுக்கள் மட்டும் பசலி 1419 ன் தொடர் எண் கொண்டும், ஒரு சில கட்டணச் சீட்டுக்கள் மட்டும் எண் 1–முதல் ஆரம்பிக்கப் பட்டும் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளதற்கான சிறப்பு காரணங்கள் ஏதும் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

8) இந்த மென் பொருள் யாரால் உருவாக்கப் பட்டது, மென்பொருள் உருவாக்கியபோது என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப் பட்டது, ஆணையரின் அறிவுரைகள் பின்பற்றி தற்போது கணினி பயன்பாடு செயல்படுத்தப் பட்டுவருகிறதா என்பதை அறிய உரிய கோப்புக்கள் மற்றும் ஆவணங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படவில்லை.

இக்குறைபாடுகளினால் மேற்கண்ட விவரப்படி திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படாத தொகை ரூ 3,29,000/– ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

கணினி கையாளும் பணியாளர்களிடம் உரிய வாக்குமூலங்கள்

இப்பொருள் குறித்து இலாகா மூலம் ஆய்வு செய்து இழப்பு கண்டறியப் படின், இழப்பு நிர்ணயம் செய்யப் பட்டு இழப்பு பொறுப்பான நபர் / நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

2) **பிரதான கோயில் மற்றும் உபகோயில் கட்டணச் சீட்டு விற்பனை – குறைவாக செலுத்திய விற்பனைத் தொகை ஈடு செய்யப்படல் வேண்டும் மற்றும் குறைபாடுகள்.**

2)

அ) தணிக்கையாண்டில் பிரதான கோயிலில் கட்டணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப் பட்டு செலுத்தப் பட்ட தொகையில் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள கட்டணச் சீட்டு விற்பனைப் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி ரூ 3,095/– குறைவாக திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

வ.எண்	சீட்டு விவரம்	குறைவாக செலுத்திய தொகை ரூ பை
1	வெளிநாட்டினர் அனுமதி	1150/–
2	கேமரா	1250/–
3	திருக்கண்மாலை	20/–
4	புரோகிதம், தர்ப்பணம்	600/–
5	தீபாராதனை	50/–
6	துலாபாரம்	25/–
	கூடுதல்	3095/–

3095/–

மேற்கண்ட விவரப்படி குறைவாக செலுத்தப்பட்ட தொகை ரூ 3,095/–ம் தணிக்கைத் தடையின் வைக்கப் படுகிறது. இதனை திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

ஆ) தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் உபகோயில்களில் கட்டணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப் பட்டு செலுத்தப் பட்ட தொகையில் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள கட்டணச் சீட்டு விற்பனைப் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி ரூ 92/– குறைவாக திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

வ.எண்	திருக்கோயில் விவரம்	குறைவாக செலுத்திய தொகை ரூ பை
1.	தென் திருவாலயத் திருக்கோயில்	54.00
2.	ஆஞ்சநேயர் திருக்கோயில் – வடக்குவாசல்	6.00
3.	ஆதி சொக்கநாதர் திருக்கோயில்	32.00
	கூடுதல்	92.00

92/–

மேற்கண்ட விவரப்படி குறைவாக செலுத்தப்பட்ட தொகை ரூ 92/– ம் தணிக்கைத் தடையின் வைக்கப் படுகிறது. இதனை திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

9

இ) தணிக்கையாண்டில் பிரதான கோயிலில் கட்டணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப் பட்டு செலுத்தப் பட்ட தொகையுடன் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள கட்டணச் சீட்டு விற்பனைப் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி ரூ 10,115/- திருக்கோயில் கணக்கில் கூடுதலாக செலுத்தப் பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

வ.எண்	சீட்டு விவரம்	கூடுதலாக செலுத்திய தொகை ரூ பை
1	சிறப்பு நுழைவு	3970/-
2	விழாக் கால சிறப்பு நுழைவு	675/-
3	கலைக்கூடம்	1387/-
4	நெய்தீப விற்பனை	20/-
5	எழுகடல் வாகனப் பாதுகாப்பு	3144/-
6	சிறப்பு தரிசனம்	900/-
7	பொருட்கள் பாதுகாப்பு	19/-
	கூடுதல்	10115/-

கட்டணச் சீட்டுக்களின் விற்பனை வரவுக்கும் மிகையான தொகை திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டதை பரிசீலனை செய்யும் போது திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படாத பல்வேறு வரவினங்கள் உள்ளதாகவும், அவைகள் மூலம் கட்டணம் வசூலிக்கப் பட்டுள்ளதாகவும், பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையில் மேற்கண்டவாறு திருக்கோயில் கணக்கில் கூடுதலாக செலுத்தப் படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் தணிக்கையில் ஐயம் எழுகிறது.

மேலும் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படாத பல்வேறு வரவினங்களின் மூலம் பெறப்பட்ட தொகை திருக்கோயில் கணக்கில் செலுத்தாத நேர்வுகளும் ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் தணிக்கையில் ஐயம் எழுவதுடன், திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகவும், திருக்கோயிலின் நிதி ஆதாரங்களுக்கு ஊறு விளைவிக்கும் செயலாக உள்ளதென்பதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

மேலும் எழுகடல் இருசக்கர வாகன பாதுகாப்பு கட்டணமாக வசூலிக்கப் படவேண்டிய தொகை ரூ 3/- க்குப் பதிலாக மெஷின் AG ல் 1.7.10 முதல் 10.7.10 முடிய உள்ள நாட்களில் 1 முதல் 676 சீட்டுக்களை ரூ 5/- வீதம் விற்பனை செய்யப் பட்டு , டிக்கெட் 1க்கு ரூ 2/- வீதம் 676 டிக்கெட்களுக்கு ரூ 1352/- கூடுதலாக திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளதை தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள விவரத்திலிருந்து கட்டணச் சீட்டுக்களை நிர்ணயம் செய்யப் பட்ட விலைக்கும் கூடுதலான விலைக்கு விற்பனை செய்துள்ளதையும் தணிக்கையில் உறுதி செய்யப் படுகிறது.

இக்குறைபாடுகளை களைய உரிய விரைவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

3) 3) படிவம் 22 (புத்தகங்கள்) முறையாக பேணப்படவில்லை - புத்தகங்கள் இருப்பில் குறைவு - புத்தகங்கள் மதிப்பு ரூ ~~59,697/-~~ 59,577/- ஈடு செய்யப் படல் வேண்டும் - குறைபாடுகள்

அ) பல்வேறு புத்தகங்கள் இருப்பில் குறைவு - மதிப்பு ரூ 45,257/- :

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் புத்தக விற்பனை நிலையத்தில் இந்துமதம் மற்றும் ஆன்மீகம் தொடர்பான பல்வேறு புத்தகங்கள் விற்பனை செய்யப் பட்டு வருவாய் பெறப் பட்டுள்ளன.

விற்பனை செய்யப் படவுள்ள புத்தகங்கள் விவரத்தினை படிவம் 22ல் பதிவுசெய்து இருப்புவைத்து விற்பனைக்கு வழங்கப்படும் விவரம் உடனுக்குடன் படிவம் 22ல் குறிப்பிடப் பட்டு இருப்பு கணக்கு பேணப்படுவது நடைமுறை வழக்கமாகும். ஆனால் தணிக்கையாண்டில் இந்த படிவம் 22 இத்திருக்கோயிலில் சரிவர பேணப்படாத நிலையில், தணிக்கையாண்டின் முடிவில் ஒவ்வொரு இனத்தின் கீழும் இருக்கவேண்டிய புத்தகங்கள் எண்ணிக்கைக்கும், இருப்பில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் ஏற்படுகிறது.

59577/-

மேலும் தணிக்கையாண்டிற்கு பின்னர் பசலி 1421ல் 7/12 ல் பொறுப்பேற்ற எழுத்தர் ஒவ்வொரு இனத்தின் கீழும் இருப்பில் இருந்த / பொறுப்பேற்ற புத்தகங்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு புதியதாக படிவம் 22 பேணி அதில் பதிவுகள் மேற்கொண்டுள்ளார். பசலி 1420க்கான படிவம் 22 ன் இறுதி இருப்பாக உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை, பசலி 1421க்கான படிவம் 22 ன் ஆரம்ப இருப்பாக உள்ள புத்தகங்களின் எண்ணிக்கைக்கு குறைவுபடுகிறது. விவரம் பின்வருமாறு.

வ.எண்.	புத்தக விவரம்	ப1420ன் இறுதி இருப்பு	ப1421ன் ஆரம்ப இருப்பு	இருப்பில் குறைவு	புத்தகம் ஒன்றின் விலை ரூ பை	மொத்த மதிப்பு ரூ பை
1	மீனாட்சிதலபுராணம்	2675	2580	95	50/-	4750/-
2	Madurai thro' ages	114	86	28	150/-	4200/-
3	சைவமும் வைணமும்	6552	6415	137	40/-	5480/-
4	திருவாதவூர் திருமுறை நாதர் திருக்கோயில் வரலாறு	2580	2369	211	50/-	10550/-
5	திருவிளையாடற் புராணம் 1	112	97	15	95/-	1425/-
6.	திருவிளையாடற் புராணம் 2	1288	1268	20	150/-	3000/-
7.	உத்திர காமீக ஆகமம்	155	154	1	450/-	450/-
8	அங்கயற்கண்ணி அனுபூதி	2350	2337	13	4/-	52/-
9	பொற்றாமரை	75	64	11	955/-	10505/-
10	ஆகாயத்தாமரை	60	49	11	295/-	3245/-
11	திருவாப்புடையார் தலவரலாறு	4240	4200	40	40/-	1600/-
	கூடுதல்					45257/-

மேற்கண்ட விவரப்படி இருப்பில் குறைவுபடும் புத்தகங்களுக்கான மதிப்புத் தொகை ரூ 45,257/- ம் தணிக்கை மறுப்பின் கீழ் வைக்கப் படுகிறது. குறைவுபடும் தொகை ரூ 45,257/- ம் திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி இதற்கு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>ஆ) திருக்கோயில் புத்தகங்கள் இருப்பில் குறைவு – (பிரதான கோயில்) – மதிப்பு ரூ 14,440/- –குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலில் பேணப்பட்டு வரும் படிவம் 22 பக்கம் 34 ல் மேற்கொள்ளப் பட்டுள்ள பதிவுகளின் படி இருப்பிலுள்ள திருக்கோயில் புத்தகங்களின் எண்ணிக்கை 10460 ஆகும். இதில் தணிக்கையாண்டில் 8916 புத்தகங்கள் திருக்கோயிலிலுள்ள புத்தக விற்பனை நிலையத்திற்கும், 100 புத்தகங்கள் இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கும் வழங்கப்பட்டுள்ளதை விற்பனை பதிவேடு வாயிலாக அறியப்படுகிறது. ஆனால் படிவம் 22ல் இப்புத்தகங்கள் விற்பனைக்கு வழங்கப் பட்டதற்கான பதிவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. விற்பனை க்கு வழங்கப் பட்டது போக,

படிவம் 22ன் படி இருக்க வேண்டிய 1444 புத்தகங்கள் இருப்பில் இல்லாத நிலையில் இதன் மதிப்பு புத்தகம் ஒன்றுக்கு ரூ 10/- வீதம் ரூ 14,440/- ம் தணிக்கை மறுப்பின் கீழ் வைக்கப் படுகிறது. குறைவுபடும் தொகை ரூ 14,440/- ம் திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி இதற்கு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>இ) திருக்கோயில் புத்தகங்கள் இருப்பில் குறைவு (அமிகு மாரியம்மன் திருக்கோயில்) – மதிப்பு ரூ 120/- – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலில் பேணப்பட்டு வரும் படிவம் 22 பக்கம் 34 ல் மேற்கொள்ளப் பட்டுள்ள பதிவுகளின் படி இத்திருக்கோயிலிலிருந்து இத்திருக்கோயிலின் உபகோயிலான அமிகு.மாரியம்மன் திருக்கோயிலுக்கு 100 திருக்கோயில் புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. அப்புத்தகங்களில் 88 புத்தகங்கள் விற்பனை செய்யப் பட்டு விற்பனை வருவாய் ரூ 880/- திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளன. எஞ்சிய 12 புத்தகங்களுக்கான தொகை ரூ 120/- ம் திருக்கோயில் கணக்கில் நாளது தேதி வரை செலுத்தப்படவில்லை. புத்தகங்களும் திருக்கோயிலில் இருப்பில் இல்லை. ஆதலின் இருப்பில் இல்லாத 10 திருக்கோயில் புத்தகங்களின் மதிப்பு புத்தகம் ஒன்றுக்கு ரூ 10/- வீதம் ரூ 120/- ம் தணிக்கை மறுப்பின் கீழ் வைக்கப் படுகிறது. குறைவுபடும் தொகை ரூ 120/- ம் திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி இதற்கு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

வசூல்.
MR NO.
9126 | 26.6.12
ரூ 120/-

4) **ஏலம் – 28.1.11 ல் பழைய இரும்புச் சாமான்கள் 15 டன் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது– ஏலத்தொகையில் ரூ 73,625/– பாக்கி – பெறப்படவில்லை – நிதி இழப்பு – ஈடுசெய்யப் படல் வேண்டும் – குறைபாடுகள்.**

தணிக்கையாண்டில் 28.1.11 அன்று இத்திருக்கோயிலில் இருப்பில் இருந்த சுமார் 15 டன் எடையுள்ள பழைய இரும்புச் சாமான்களை பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. ஏலத்தில் உயர்ந்த கேள்விதாரர் திரு சசிகுமார் என்பவருக்கு கிலோ ரூ 25/– க்கு ஏலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. (ஏலப் பதிவேடு பக்கம் 9). ஏல நடவடிக்கைகளின் படி 15 டன் எடையுள்ள பழைய இரும்புச் சாமான்களுக்கு அவரால் செலுத்தப் படவேண்டிய தொகை வருமான வரி உட்பட மொத்தம் ரூ 3,83,625/– எனவும், பகுதியாக கீழ்க்கண்ட விவரப்படி ரூ 3,10,000/– பெறப்பட்டதாகவும் திருக்கோயிலின் தண்டல் பதிவேடு நாள் 29.1.11 மற்றும் 4.2.11 – லும், வாடகை இரசீது எண் 55305/28.1.11 மற்றும் 45307/4.2.11 – லும் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அன்னாரால் பலவகை இரசீது எண். 97841/29.1.11 ன் படி ரூ 50,000/– ம், பலவகை இரசீது எண். 98012/4.2.11 ன் படி ரூ 2,60,000/– ம், ஆக ரூ 3,10,000/– வரவாக பெறப் பட்டுள்ளது.

திருக்கோயிலின் ஆவணங்களின் அடிப்படையில் அன்னாரால் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ 73,625/–ம் நாளது தேதி வரை அன்னாரால் செலுத்தப் படவில்லை. இது குறித்து கோப்பினை பரிசீலனை செய்ததில் தொடர்புடைய பதிவுகள் ஏதும் இடம் பெறவில்லை. இத்தொகையினை வசூலிக்க இதுகாறும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

73625/–

மேலும் உத்தேசமாக 15 டன்னுக்கு ஏலம் கோரப்பட்டு, அதன் அடிப்படையில் 15 டன்னுக்கு கிலோ ரூ 25/– வீதம் வருமான வரி உட்பட மொத்தத் தொகையாக ரூ 3,83,625/– கணக்கீடு செய்யப் பட்டுள்ளது. எவ்வளவு எடையுள்ள பழைய இரும்புச் சாமான்கள் எடுத்துச் செல்லப் பட்டன என்பன குறித்தான ஆவணங்கள், லாரிகளின் எடை இரசீதுகள், சம்மந்தப் பட்ட பதிவேடுகள், உரிய அலுவலரின் சரிபார்ப்பு சான்று ஆகியன ஏதும் பேணப்படாத நிலையில் உண்மையில் 15 டன் எடையுள்ள பழைய இரும்புச் சாமான்கள் மட்டும் தான் எடுத்துச் செல்லப் பட்டனவா, அதற்கும் கூடுதலான எடையுள்ள சாமான்கள் எடுத்துச் செல்லப் பட்டனவா என்பதனை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

மேலும் இதற்கு முன்னர் பழைய இரும்புச் சாமான்கள் மற்றும் மரச்சாமான்கள் பொது ஏலத்தில் விடப்பட்ட போதும் உத்தேச எடையை குறிப்பிட்டு ஏலம் கோரப்பட்டு, உத்தேச எடைக்கான முழுத் தொகையையும் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ள விவரத்தினையும் தணிக்கையில் குறிப்பிடப் படுகிறது.

ஆதலின் ஏலதாரிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ 73,625/ – ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது. இதனை திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி, உரிய காலத்திற்குள்ளாகவே இத்தொகையை வசூலிக்க தவறிய நபர் / நபர்களைப் பொறுப்பாக்கி இத்தொகை ரூ 73,625/ – ம் ஈடு செய்யப் படல் வேண்டும்.

5) <u>ஏலம் – பழைய இரும்புச் சாமான்கள் ஏலம் – ஏலம் கோரிய நபர் இரும்புச் சாமான்களை எடுத்துச் செல்லாத நிலையில் மறு ஏலம் விடப்பட்டுள்ளது – ஏல கோரிய நபரால் செலுத்தப் பட்ட வைப்புத் தொகை – திருக்கோயிலுக்கு ஆதாய வரவாக்கப் படல் வேண்டும் – குறைபாடுகள். (கோப்பு எண் 357/08)</u>

அ) தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் 15.10.10 அன்று பழைய இரும்புச் சாமான்கள் ஏலம் நடைபெற்ற போது உயர்ந்த கேள்வி கேட்ட பாபு என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. அன்னாரால் பலவகை இரசீது எண். 95253/13.11.10 ன்படி ரூ 5000/– வைப்புத் தொகையாக செலுத்தப் பட்டுள்ளது.

பின்னர் அவரால் பழைய இரும்புச் சாமான்களை எடுத்துச் செல்லாத நிலையில், அவரை தொடர்பு கொள்ளும் பொருட்டு அவர் கொடுத்த முகவரியை அணுகிய போது அவர் அந்த முகவரியில் இல்லை என அறியவருவதாக திருக்கோயில் கோப்பு எண். 357/08 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதலின் செய்திதாளில் மறு விளம்பரம் செய்து 29.11.10 ல் மறு ஏலம் மூலம் மேற்படி சாமான்கள் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது. செய்தித் தாளில் மறு ஏலம் குறித்து விளம்பரம் செய்த வகையில் செலவுச் சீட்டு எண். 1483/23.2.11 ன் படி ரூ 3,290/– செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஏலம் கோரிய நபர் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு செயல் படாத காரணத்தினாலும், மறு ஏலம் குறித்து நாளிதழில் விளம்பரம் செய்து கூடுதல் செலவு மேற்கொண்ட காரணத்தினாலும், நிர்வாகத்திற்கு தேவையற்ற வகையில் சிரமம் ஏற்படும் வகையில் நடந்து கொண்ட காரணத்தினாலும், அன்னாரால் செலுத்துப்பட்ட வைப்புத் தொகை ரூ 5000/– யும் திருக்கோயிலுக்கு ஆதாய வரவாக்கப் பட உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

ஆ) தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் 9.11.10 அன்று பழைய இரும்புச் சாமான்கள் ஏலம் நடைபெற்ற போது உயர்ந்த கேள்வி கேட்ட உஸ்மான் அலி என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. அன்னாரால் பலவகை இரசீது எண். 95293/29.11.10 ன்படி ரூ 10000/– ம், பலவகை இரசீது எண். 95294/29.11.10 ன்படி ரூ 10000/– ம், ஆக மொத்தம் ரூ 20,000/– வைப்புத் தொகையாக செலுத்தப் பட்டுள்ளது.

பின்னர் அவரால் பழைய இரும்புச் சாமான்களை எடுத்துச் செல்லாத நிலையில், ஏலம் கோரிய நபர் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு செயல் படாத காரணத்தினாலும், மறு ஏலம் குறித்து நாளிதழில் விளம்பரம் செய்து கூடுதல் செலவு ஏற்பட்ட காரணத்தினாலும், நிர்வாகத்திற்கு தேவையற்ற வகையில் சிரமம் ஏற்படும் வகையில் நடந்து கொண்ட காரணத்தினாலும், அன்னாரால் செலுத்துப்பட்ட வைப்புத் தொகை ரூ 20,000/– யும் திருக்கோயிலுக்கு ஆதாய வரவாக்கப் பட உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

இ) தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் 9.11.10 அன்று பழைய மரச் சாமான்கள் ஏலம் நடைபெற்ற போது உயர்ந்த கேள்வி கேட்ட எஸ். வி. டிரேடர்ஸ் என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப் பட்டுள்ளது. அன்னாரால் பலவகை இரசீது எண். 95295/29.11.10 ன்படி ரூ 2000/- ஆக வைப்புத் தொகையாக செலுத்தப் பட்டுள்ளது.

பின்னர் அவரால் பழைய இரும்புச் சாமான்களை எடுத்துச் செல்லாத நிலையில், ஏலம் கோரிய நபர் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு செயல் படாத காரணத்தினாலும், மறு ஏலம் குறித்து நாளிதழில் விளம்பரம் செய்து கூடுதல் செலவு ஏற்பட்ட காரணத்தினாலும், நிர்வாகத்திற்கு தேவையற்ற வகையில் சிரமம் ஏற்படும் வகையில் நடந்து கொண்ட காரணத்தினாலும், அன்னாரால் செலுத்துப்பட்ட வைப்புத் தொகை ரூ 2,000/- யும் திருக்கோயிலுக்கு ஆதாய வரவாக்கப் பட உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

இது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

6). **கட்டணச் சீட்டுக்கள் – அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டுகள் விற்பனை – பிரதான கோயிலில் படிவம் 23 மற்றும் 24 பேணப்படவில்லை –இருப்பிலுள்ள சீட்டுக்கள் – விற்பனை செய்யப் பட்ட சீட்டுக்களின் அடிக்கட்டைகள் – தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை – விற்பனை வரவின் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை – கடுங்குறைபாடுகள்**

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள கட்டணச் சீட்டு விற்பனை விவரப் பட்டியலில் கண்டுள்ள விவரப்படி 28 இன கட்டணச் சீட்டுக்களின் விற்பனை அமுல்படுத்தப் பட்டுள்ளன. த்ணிக்கையாண்டில் கட்டணச் சீட்டுக்களின் விற்பனை மூலம் ரூ 6,72,18,794/– வருவாயாகப் பெறப்பட்டுள்ளது.

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் படிவம் 22 முறையாக, சரிவர பேணப்படாத நிலையில், தணிக்கையாண்டின் முடிவில் ஒவ்வொரு இனத்தின் கீழும் இருக்கவேண்டிய கட்டணச் சீட்டுப் புத்தகங்கள் எண்ணிக்கைக்கும், இருப்பில் உள்ள கட்டணச் சீட்டுப் புத்தகங்களின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் குறித்து தனியே தணிக்கைத் தடை எழுப்பப் பட்டுள்ளது.

தணிக்கையாண்டில் விற்பனை செய்யப் பட்ட அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டுக்களுக்கான படிவம் 23 மற்றும் படிவம் 24 ஆகியன பேணப் படவில்லை. தணிக்கையாண்டில் அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டுக்களின் விற்பனை வாயிலாக கீழ்கண்ட விவரப்படி வருமானம் பெறப் பட்டுள்ளது.

<u>அச்சிடப்பட்ட சீட்டுக்கள் மூலம் பெறப்பட்ட வருவாய் விவரம்</u>

வ.எண்.	சீட்டு விவரம்	விற்பனையான சீட்டுக்கள்	முகமதிப்பு ரூ பை	தொகை ரூ பை
1.	திருக்கல்யாண மண்டபநுழைவு	2000	20/–	40000/–
2.	திருக்கல்யாண மொய்ப்பணம்	11161	10/–	111610/–
3.	அர்ச்சனை	1499	5/–	7495/–
4.	மாவிளக்கு	7110	2/–	14220/–
5.	சிறப்பு நுழைவு	3772	15/–	56580/–
	சிறப்பு நுழைவு	8	15/–	120/–
6.	கலைக்கூடம் (காவி)	867	50/–	43350/–
	கலைக்கூடம் (புளு)	613	50/–	30650/–
7.	விழாக் கால சிறப்பு நுழைவு	234	25/–	5850/–
		310	25/–	7750/–
8.	வீடியோ	40	25/–	1000/–
9.	போட்டோ	993	50/–	23650/–
10.	சிறியவர் நுழைவு	2731	2/–	5462/–
11.	பெரியவர் நுழைவு	28611	5/–	143055/–
		28685	5/–	143425/–
12.	திருக்கண்மாலை	205	5/–	1025/–
13.	திருக்கண் பரிவட்டம்	187	10/–	1870/–
14.	சிறப்பு தரிசனம்	241538	100/–	24153800/–
		9	1000/–	9000/–
15.	தீபாராதனை	1693	25/–	42325/–
16.	பொருட்கள் பாதுகாப்பு	66388	2/–	132776/–

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் அச்சிடப்பட்ட கட்டணச் சீட்டுக்கள் வாயிலாக மேற்கண்ட விவரப்படி கணிசமான தொகை வருவாயாக பெறப்பட்டுள்ள நிலையில் கூட கட்டணச் சீட்டு விற்பனை தொடர்பாக பேணப்படவேண்டிய அடிப்படைப் பதிவேடான படிவம் 23 மற்றும் படிவம் 24 ஆகியன பேணப்படவில்லை என்பதை தணிக்கையில் சுட்டிக்காட்டப் படுகிறது.

படிவம் 22 மற்றும் படிவம் 23 பேணப்படாததாலும், விற்பனையான கட்டணச் சீட்டுக்களுக்கு மாதாந்திர விற்பனை பட்டியல் தயாரிக்கப் படாததாலும், விற்பனையாகாமல் இருப்பிலுள்ள கட்டணச் சீட்டுக்கள் மற்றும் விற்பனை செய்யப் பட்ட கட்டணச் சீட்டுக்களின் அடிக்கட்டைகள் ஆகியன தணிக்கைக்கு சரிபார்த்தலுக்கு உட்படுத்தப் படாததாலும், அச்சிடப்பட்ட கட்டணச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு தணிக்கையாண்டில் திருக்கோயில் கணக்கில் மேற்கண்ட விவரப்படி வரவாக்கப் பட்ட தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

உள்துறையில் இலாகா சார்பில் இரண்டு கண்காணிப் பாளர்களும், திருக்கோயில் சார்பில் ஒரு பேஷ்கார், ஒரு மணியம் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர்கள் பணியில் இருந்தும் கட்டணச் சீட்டுக்களின் விற்பனை குறித்து அத்தியாவசியமாக பேணப்படவேண்டிய அடிப்படை பதிவேடான படிவம் 23 மற்றும் படிவம் 24 பேணப்பட்டு வருகிறதா என்பதையும், பெறப்பட்ட வரவின் சரித்தன்மையை உறுதி செய்யும் வகையில் மாதாந்திர கட்டணச் சீட்டு விற்பனை பட்டியல் தயாரிக்கப் படுகிறதா என்பதையும், கண்காணிக்கப் படவில்லை என்பதை தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிக் கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

17

7) **திருப்பணி நன்கொடை சீட்டு – சிறப்பு தரிசன டிக்கெட் என மாற்றம் செய்யப் பட்டு பொது கணக்கில் வரவாக்க உத்திரவிடப் பட்டுள்ளது–திருப்பணிக் கணக்கில் செலுத்தப் பட்ட விற்பனைத் தொகை ரூ 25,00,000/- பொதுக் கணக்கிற்கு மாற்றப்படல்வேண்டும் – குறைபாடுகள்**
(கோப்பு எண் 1164/09 அ2)

7)

இத்திருக்கோயிலின் கும்பாபிசேகம் முடிவுற்ற நிலையில், ரூ 100/- முக மதிப்புடைய திருப்பணி நன்கொடைச் சீட்டுக்களை, ரூ 100/- மற்றும் ரூ 50/- முகமதிப்புடைய சிறப்பு தரிசன டிக்கெட் என மாற்றம் செய்து முறையே அம்மன் சன்னதி மற்றும் சுவாமி சன்னதியில் விற்பனை செய்யவும் விற்பனை வரவினை பொதுக்கணக்கில் சேர்க்கவும் ஆணையர் மூ.மு 77062/ 2010 இசட் 2 நாள் 7.2.11 குறிப்பில் உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆனால 15.10.10 முதல் 1.2.11 முடிய விற்பனையான கட்டணச் சீட்டுக்களின் விற்பனை தொகை ரூ 1,20,70,400/- ஐ திருக்கோயிலின் திருப்பணிக் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளது. பின்னர் கோப்பு எண். 1164/09 அ2 –ல் முதற்கட்டமாக ரூ 95,70,400/- மாற்றம் செய்யவும், எஞ்சியுள்ள ரூ 25,00,000/- ஐ பின்னர் மாற்றம் செய்யவும் உத்திரவுகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி பலவகை இரசீது எண் 007950 / நாள் 31/3/2011 ன்படி ரூ 95,70,400/- பொதுக் கணக்கிற்கு மாற்றப் பட்டு பொதுக் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளது. இன்னமும் ரூ 25,00,000/- திருப்பணிக் கணக்கிலிருந்து பொதுக் கணக்கிற்கு மாற்றப் படாமல் உள்ளது.

25,00,000

திருப்பணிக் கணக்கிலிருந்து பொதுக் கணக்கிற்கு இதுகாறும் மாற்றம் செய்யப் படாத தொகை ரூ 25,00,000/- – மும் பொதுக் கணக்கிற்கு மாற்றம் செய்யும் பொருட்டு தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது. இத் தொகை விரைவில் பொதுக் கணக்கிற்கு மாற்றம் செய்யப் பட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

18

8) **ஏலம் – பழைய இரும்புச் சாமான்கள் மற்றும் மரச் சாமான்கள் ஏலம் – பொருட்கள் எடையிடப்பட்டு வழங்கப்பட்டதற்கோ, உரிய அலுவலரால் கண்காணிப்பு செய்யப் பட்டதற்கோ உரிய பதிவுகள், ஆவணங்கள் ஏதும் இல்லை – வரவினை சரிபார்த்திட இயலவில்லை –குறைபாடுகள்.**

8)

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படி பழைய இரும்புச் சாமான்கள் மற்றும் மரச் சாமான்கள் பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:

வ.எண்.	ஏல நாள்	விவரம்	எடை	ரேட்	தொகை
1	15.10.10	பழைய மரச்சாமான்கள்	5 டன்	5.65	28,900/-
2	29.10.10	பழைய இரும்புச்சாமான்கள்	12டன்	29/-	3,56,004/-
3	6.1.11	பழைய மரச்சாமான்கள்	5 டன்	7/-	35,805/-
4	28.1.11	பழைய இரும்புச்சாமான்கள்	300 கிலோ	25/-	7,673/-
5	28.1.11	பழைய மரச்சாமான்கள்	5 டன்	7/-	35,805/-

மேற்கண்ட விவரப்படி இரும்புச் சாமான்கள் மற்றும் மரச்சாமான்கள் பொது ஏலத்தில் விடப்பட்ட போது உத்தேச எடையை குறிப்பிட்டு ஏலம் கோரப்பட்டு, உத்தேச எடைக்கான முழுத் தொகையும் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்பட்டுள்ள விவரத்தினை தணிக்கையில் குறிப்பிடப் படுகிறது.

மேலும் உத்தேசமாக எடை குறிப்பிடப் பட்டு ஏலம் கோரப்பட்டு, வருமான வரி உட்பட மொத்தத் தொகை கணக்கீடு செய்யப் பட்டுள்ளது. எவ்வளவு எடையுள்ள பழைய இரும்புச் சாமான்கள் எடுத்துச் செல்லப் பட்டன என்பன குறித்தான ஆவணங்கள், லாரிகளின் எடை இரசீதுகள், சம்மந்தப் பட்ட பதிவேடுகள், உரிய அலுவலரின் சரிபார்ப்பு சான்று ஆகியன ஏதும் பேணப்படாத நிலையில் உண்மையாக எடுத்துச் சென்ற பழைய இரும்புச் சாமான்கள்/ மரச்சாமான்கள் எடை எவ்வளவு என்பது குறித்தும், ஏலத்தில் குறிப்பிடப்பட்ட எடைக்கும் கூடுதலான எடையுள்ள பழைய இரும்புச் சாமான்கள் / மரச் சாமான்கள் எடுத்துச் செல்லப் பட்டனவா என்பன குறித்தும், தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

ஆதலின் இது குறித்து உரிய விவரங்கள் சேகரிக்கப் பட்டு, உரிய நபர்களிடம் விசாரணை செய்து, இழப்பு கண்டறியப் படின், இழப்பு நிர்ணயம் செய்யப் பட்டு, இழப்பு பொறுப்பான நபர்/ நபர்களால் இழப்பு ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இயலும் என்றோ, முன் பசலிக்கு அங்கீகரிக்கப் பட்ட ரேட்டில் நடப்பு பசலிக்கு விறகு சப்ளை செய்ய இயலாது என்றோ, மேற்படி காலங்களுக்கு விறகு சப்ளை செய்யப் படும் முன்னர் எழுத்து மூலமாக திருக்கோயில் நிர்வாகத்திற்கு எந்தவொரு அறிவிப்பும் செய்யப் பட்ட விவரம் கோப்பு வாயிலாக அறியப் படவில்லை.

இந்நிலையில் பசலி 1418 க்கும் பசலி 1419 க்கும் வித்தியாசத் தொகை டன் 1க்கு ரூ 300/- வீதம் 3 டன்னுக்கு செலவுச் சீட்டு எண். 400/27.8.10 ன் படி ரூ 900/-ம், பசலி 1419 க்கும் பசலி 1420 க்கும் வித்தியாசத் தொகை டன் 1க்கு ரூ 400/- வீதம் 3 டன்னுக்கு செலவுச் சீட்டு எண். செலவுச் சீட்டு எண். 1624 -1625/10.3.11 ன் படி ரூ 1,200/-ம், ஆக ரூ 2,100/- செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதை தணிக்கையில் ஏற்க இயலவில்லை.

பசலி 1418-1420 வரை ஒரே டெண்டர்தாரர் மூலம் விறகு கொள்முதல் செய்யப் பட்டுள்ள நிலையில், டெண்டர்தாரருக்கு அனுகூலம் செய்யும் வகையில் மேற்கண்ட விவரப்படியான செலவு மேற்கொள்ளப் பட்டதாக தணிக்கையில் கருதப்படுகிறது.

ஆதலின் மேற்கண்ட விவரப்படியான செலவு ரூ 2,100/- ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப்படுகிறது. இச்செலவு திருக்கோயிலுக்கு ஏற்பட்டுள்ள கூடுதல் செலவாகவும், நிதி இழப்பாகவும் கருதி பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் படல் வேண்டும்.

9). **<u>தணிக்கையாண்டில் உச்சிகால இலவச பிரசாத விநியோகச் செலவு ரூ 6,10,773/- -- பயனாளிகள் எண்ணிக்கை, விநியோகித்த பிரசாத விவரம் மற்றும் இலவச பிரசாதம் விநியோகித்ததற்கான சான்று ஆகியன குறித்தான ஆவணங்கள் ஏதும் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படவில்லை – இத்திட்டம் நடைபெற்றதை தணிக்கையில் உறுதிப் படுத்த இயலவில்லை – குறைபாடுகள்</u>**

9)

இத்திருக்கோயிலில் உச்சிகால இலவச பிரசாத விநியோகம் ஆணையர் உத்திரவுப்படி பல ஆண்டுகளுக்கு முன்னர் அமுல்படுத்தப் பட்டு தணிக்கையாண்டிலும் தொடரப் பட்டு நாளது தேதி வரை நடந்து வருவதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது. உச்சிகாலத்தில் திருக்கோயிலின் வழிபாட்டுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு இலவசமாக பிரசாதம் விநியோம் செய்யும் பொருட்டு இத்திட்டம் அமுல்படுத்தப் பட்டது. பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆணையரால் பல வருடங்களுக்கு முன்பு அமுல் படுத்தப் பட உத்திரவிட ப்பட்ட இத்திட்டம் தணிக்கையாண்டிலும் தொடரப்பட்டுள்ளது.

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் உச்சிகால இலவச பிரசாத விநியோகத் தலைப்பின் கீழ் ரூ 6,10,773/-(5/10 முதல் 3/11 முடிய) செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 4/11 முதல் 6/11 முடிய உள்ள மாதங்களுக்கான செலவுகள் தணிக்கையாண்டிற்குள்ளாக மேற்கொள்ளப் படாமல், பசலி 1421 ல் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதற்கு சிறப்பு காரணங்கள் ஏதும் தணிக்கைக்கு விளக்கப் படவில்லை என்பதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

610773/-

இத்திட்டத்திற்கு தேவையான மளிகைச் சாமான்கள் மாதந்தோறும் திருக்கோயிலில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, கொள்முதல் செய்யப் பட்ட மளிகைச் சாமான்கள் வாரந்தோறும் மடப்பள்ளி பரிசாரகர் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 20 கிலோ அரிசி மற்றும் அதற்குத் தேவையான மளிகைச் சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்டு மடப்பள்ளி பரிசாரகருக்கு வழங்கப் பட்டுள்ளன. திங்கள் கிழமை அன்று தயிர்சாதமும், செவ்வாய், வியாழன், வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமை களில் புளியோதரையும், புதன் மற்றும் சனி கிழமைகளில் எலுமிச்சை சாதமும் அவரால் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப் பட்டதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

உச்சிகால இலவச பிரசாதத்திற்கு தேவையான பொருட்கள் வேண்டி தேவைப் பட்டியலோ, ஏற்கெனவே வழங்கப்பட்ட பொருட்கள் முழுமையாக உபயோகப் படுத்தப் பட்டுவிட்டன என்பதற்கு உரிய சான்றோ, உள்துறையில் பணிபுரியும் பொறுப்பான அலுவலர்களிடம் இருந்து பெறப்படாத நிலையில் உச்சிகால இலவச பிரசாத விநியோகத்திற்கு திட்டப்படி சாமான்கள் கொள்முதல் செய்யப் பட்டு மடப்பள்ளி பரிசாரகருக்கு வழங்கப் பட்டு அன்னாரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. நாளது தேதி வரை இதே முறை பின்பற்றப்பட்டு வருவதாகத் தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

ஏற்கெனவே வழங்கப்பட்ட மளிகைப் பொருட்கள் முழுவதுமாக பயன்படுத்தப் பட்டதை உறுதி செய்யப் படாத நிலையிலும், உள்துறையில் பணிபுரியும் உரிய அலுவலரிடமிருந்து தேவைப்பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டு பொருட்கள் வேண்டப்படாத நிலையிலும், எவ்வாறு மளிகைச் சாமான்கள் மடப்பள்ளி பரிச்சாரகருக்கு வழங்கப் படுகிறது என்கிற விவரம் தணிக்கைக்கு விளக்கப் படவில்லை.

மேலும் நாளொன்றுக்கு 20 கிலோ அரிசி உபயோகப் படுத்தப் படும் நிலையில், ஒரு கிலோ அரிசிக்கு குறைந்த பட்சம் 25 பயனாளிகள் என்று கணக்கிட்டால் 500 நபர்களுக்கு விநியோகம் செய்யப் படல் வேண்டும். தினந்தோறும் உச்சிகாலத்தில் 500 நபர்களுக்கு உச்சிகால இலவச பிரசாதம் விநியோகம் செய்திருக்க சாத்தியக் கூறுகள் குறித்தும் தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

இந்த இலவச பிரசாத விநியோகம் சரிவர நடைபெற்றதை மெய்ப்பிக்கும் வகையில் மடப்பள்ளி பரிச்சாரகரால் ஒவ்வொரு நாளும் என்னென்ன பிரசாதம் தயாரிக்கப் பட்டது என்பதற்கோ, எத்தனை நபர்களுக்கு வழங்கப் பட்டது என்பதற்கோ, எத்தனை நபர்களுக்கு பிரசாதம் வழங்கப் பட்டது என்பதற்கோ, சம்மந்தப்பட்ட சன்னதி அர்ச்சகர்களின் கையொப்பம் பெறபட்டதென்பதற்கோ, உரிய உயர் அலுவலரால் / உள்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டது என்பதற்கோ, இவ்வாறு நாள்தோறும் வழங்கப்பட்ட விவரத்தினை பதிவேடு பேணி அதனை உயர் அலுவலர்களுக்கு எடுத்துச் சென்று அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டதென்பதற்கோ உரிய பதிவேடுகளோ, சில பயனாளிகளிடம் இருந்தாவது ஒப்புதல் பெறப்பட்ட விவரமோ தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படவில்லை.

இத்திட்டத்திற்கான மளிகைச் சாமான்கள் மாதந்தோறும் கொள்முதல் செய்யப் பட்டு மடப்பள்ளி பரிசாரக்கு வழங்கப்படும் பதிவேடு ஒன்றினைத் தவிர வேறு எந்த ஒரு ஆவணங்களும் இத்திட்டம் தொடர்பாக பேணப்படவில்லை என்பதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப்படுகிறது.

உள்துறையில் இலாகா சார்பில் இரு கண்காணிப் பாளர்களும், திருக்கோயில் சார்பில் ஒரு கண்காணிப்பாளரும், ஒரு பேஷ்காரும், ஒரு மணியமும் பணியில் இருந்தும் கூட இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வந்ததை மெய்ப்பிக்கும் வகையில் எந்தவொரு பதிவேடுகளும், ஆவணங்களும் பேணப்படாத செயல்பாடுகள் தணிக்கையில் ஏற்கும்படியாக இல்லை என்பதுடன்,பேணப்பட்டுள்ள இருப்புப் பதிவேட்டிலும் பல்வேறு இனங்களுக்கான மாதந்திர முடிவிருப்பு அடுத்த மாதத்திற்கான ஆரம்ப இருப்பாக எடுத்துச் செல்லப் படாதது குறித்து இத்தணிக்கை அறிக்கையில் தனியே தணிக்கைத் தடை எழுப்பப் பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டப் படுகிறது.

ஆதலின் தணிக்கையாண்டில் இலவச பிரசாதம் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ 6,10,773/- ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது. இது குறித்து உரிய நிர்வாக ஆய்வு செய்து இழப்பு கண்டறியப் படின், இழப்பு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டுவரப்படுகிறது.

10)- <u>அன்னதானத் திட்டம் – அரசாணைப் படி இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது – ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பக்தர்கள் பேரவை டிரஸ்ட் மூலம் திருக்கோயில் வளாகத்தில் அன்னதானம் நடத்தப் படுகிறது – இலாகாவின் அனுமதி பெறப்படவில்லை – மற்றும் குறைபாடுகள்.</u>

11) அரசாணைப்படி இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் அமுல் படுத்தப்பட்டு சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

அன்னதானத் திட்டத்திற்கென தனியே உண்டியல்கள் நிறுவியும், நன்கொடை சீட்டுக்கள் விற்பனை செய்தும், காணிக்கையாக பொருட்கள் பெற்றும், ரொக்க காணிக்கை பெற்றும், முதலீடாக பெற்றும், இத்திருக்கோயில் மற்றும் இதன் உபதிருக்கோயில்களான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை மற்றும் அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில் , மதுரை ஆகிய திருக்கோயில்களிலும் அரசாணை அறிவுரைகளைப் பின்பற்றி அன்னதானத் திட்டம் செயல் படுத்தப் பட்டு வருகிறது.

அன்னதானத் திட்டதிற்கு தனியே ரொக்கக் குறிப்பேடு,ரொக்க பேரேடு, முதலீடு பதிவேடு, தொடர்புடைய பிற பதிவேடுகள் பேணப் பட்டு,இக்கணக்குகள் இத்துறை தணிக்கைக்கும் உட்படுத்தப் படுகின்றன.

இந்நிலையில் இத்திருக்கோயில் வளாகத்தில், இத்திருக்கோயிலின் அன்னதானக் கூடத்திலேயே ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பக்தர்கள் பேரவை டிரஸ்ட் என்கிற அமைப்பின் மூலம் இரவு 7.00 மணிக்கு நாள்தோறும் அன்னதானம் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் அன்னதானம் தரமுள்ளதாகவோ, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டதாகவோ, இருக்குமா என்பதனையும் தணிக்கையிலும் உறுதி செய்ய இயலவில்லை.

அன்னதானக் கூடத்திலுள்ள ஒரு அறையினை இந்த டிரஸ்ட் சாமான்கள் வைக்கும் அறையாக பயன் படுத்துகிறது. திருக்கோயில் அன்னதானத்திற்கு சமையல் செய்யும் நபர்களைக் கொண்டு இரவு நேர சமையலும் செய்யப்படுகிறது. இந்த சமையல் செய்யும் நபர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு அவர்களால் சம்பளம் வழங்கப்படுகிறது. சமையல் அடுப்பு,உபகரணங்கள் மற்றும் பாத்திரங்கள் தனியே இருப்பதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

ஆனால் அன்னதானக் கூடத்தில் உள்ள டேபிள்,சேர்கள் பயன்படுத்தப் படுகிறது. அன்னதானக் கூடத்ினை பயன் படுத்துவதற்கென தனியே இட வாடகை, மின் கட்டணம், தண்ணீர் கட்டணம், டேபிள்,சேர் வாடகை மற்றும் துப்புரவு செய்யும் பணியாளர்களுக்கான சம்பளம் எதுவும் அன்னதானம் செய்யும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பக்தர்கள் பேரவை டிரஸ்ட் – இருந்து திருக்கோயிலுக்கு வழங்கப் படுவதில்லை. தனியார்களிடம் அவர்களால் நன்கொடை வசூலிக்கப் படும் விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இத்திருக்கோயில் மற்றும் இதன் உபதிருக்கோயில்களில் அரசின் அன்னதானத் திட்டம் அமுல்படுத்தப் பட்டு செயல் படுத்தப் பட்டு வரும் நிலையில், இலாகாவின் அனுமதி ஏதுமின்றி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பக்தர்கள் பேரவை டிரஸ்ட் என்ற அமைப்பின் மூலம் திருக்கோயில் வளாகத்தில் நாள்தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருவதை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை. ஆதலின் இப்பொருள் குறித்து தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளும் பொருட்டு இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

11). 3) <u>காணிக்கை – ஆதி சொக்கநாதர் திருக்கோயிலில் பெறப்பட்ட காணிக்கை வரவுகள் – உரிய இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை– குறைபாடுகள்.</u>

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு ஆதி சொக்கநாதர் திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான இனங்கள் காணிக்கையாக பெறப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு.

வ.எண்.	காணிக்கை இரசீதுஎண்/நாள்	பொருட்களின் விவரம்	எடை கிராம்
1.	8616/2.3.11	வெள்ளி விபூதிப் பட்டம் நடுவில் சாதா பச்சைக் கல் பதித்தது	203.000
2.	8617/20.3.11	வெள்ளி கிண்ணம்	149.600
3.	8618/30.4.11	பித்தளை பீடம் சுமார்மதிப்பு ரூ 16,000/-	742.000

பெறப்பட்ட காணிக்கை இனங்கள் குறித்தான இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை. பெறப்பட்ட காணிக்கை இனங்களில் விலை உயர்ந்த இனங்களை பாதுகாப்பினை பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கப் பட்டிருப்பின் அதற்கான ஆதாரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.மேலும் பெறப்பட்ட காணிக்கை இனங்களை திருக்கோயிலின் அத்தியாவசிய பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்டிருப்பின் அதற்கு இணை ஆணையர் / செயல் அலுவலரின் அனுமதி பெறப் பட்ட விவரமோ, அந்த இனங்கள் திருக்கோயிலின் பயன் பாட்டில் உள்ள விவரமோ அடங்கிய பதிவேடு ஏதும் பேணப் படவில்லை.

<u>பிற குறைபாடுகள்:</u>

1) தணிக்கையாண்டிற்கான காணிக்கைப் பதிவேடு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை. பெறப்பட்ட காணிக்கை வரவுகள் குறித்தான விவரங்களைத் தணிக்கையில் அறிய இயலவில்லை.

2) தணிக்கையாண்டிற்கான உபய பரிவட்ட இரசீது மற்றும் இருப்புப் பதிவேடுதணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை. தணிக்கையாண்டில் பரிவட்ட இரசீதுகள் 176 விற்பனையாகியுள்ள நிலையில், பட்டு உட்பட 176 பரிவட்டங்கள் பெறப்பட்டிருக்கக் கூடும். இவைகளை பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கவில்லை. இவைகளுக்கான இருப்புக் கணக்கு பேணப்படவில்லை.இவைகள் இருப்பில் உள்ள விவரம் தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. இவைகளுக்கான சுமார் மதிப்பு ரூ 100/- வீதம் 176 பரிவட்டங்களின் மதிப்பு ரூ 17600/- திருக்கோயிலுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. 17600/-

3) விலை உயர்ந்த பட்டு இனங்கள் காணிக்கையாக பெறப்பட்டிருப்பின், அவைகளின் இருப்பு உறுதி செய்யப் படவில்லை எனில் அதற்கேற்ப இழப்பு நிர்ணயம் செய்யப்பட்டு ஈடு செய்யப்படவேண்டும்.

ஆதலின் தணிக்கையாண்டில் பெறப்பட்ட மேற்குறிப்பிட்ட காணிக்கை இனங்கள் மற்றும் உபய பரிவட்ட இனங்கள் ஆகியவைகளின் இருப்பு பதிவேடு பேணப்பட்டு, இருப்பு உறுதி செய்யப் படல் வேண்டும். இயலாத நிலையில் இதற்கான இழப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, இழப்பு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் படல் வேண்டும்.

12) 14) **பசுமடம் – பசுக்களின் சாணத்திலிருந்து சாண எரிவாயு கலன் (BIO GAS PLANT) அமைத்து பெறப்படும் சாண எரிவாயுவினை சமையல் எரிவாயுவாக பயன்படுத்தப் படின் சமையல் எரிவாயுவிற்காக பசலி தோறும் மேற்கொள்ளும் பல இலட்சம் செலவு தவிர்க்கப் பட சாத்திய கூறுகள் உள்ளன – ஒரு கருத்தாய்வு**

இத்திருக்கோயிலின் வளாகத்திலேயே பசுமடம் அமைந்துள்ளது. திருக்கோயில் மூலம் நடத்தப் படும் ஒரு பசுமடமும், திருக்கோயிலின் கட்டளை தாரர் மூலம் நடத்தப் படும் ஒரு பசுமடமும் அமைந்துள்ளன. திருக்கோயில் மூலம் நடத்தப் படும் பசுமடத்தில் தற்போது 15 பசுக்கள் மற்றும் 5 கன்றுக் குட்டிகள், ஆக மொத்தம் 20 பசுக்கள் மற்றும் கன்றுகள் உள்ளன.

இந்த பசுக்களின் சாணத்தை நாள்தோறும் பசுமடத்தின் ஒரு பகுதியில் சேகரித்து வைத்து வாரத்தின் ஒரு நாள் திருக்கோயில் டிராக்டர் மூலம் திருக்கோயிலுக்கு சொந்தமான செங்குளம் பண்ணைக்கு எடுத்துச் சென்று சேமித்து வைப்பதாகவும், அங்குள்ள மரங்களுக்கு எருவாக பயன் படுத்துவதாகவும் தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

தணிக்கையாண்டில் மாதந்தோறும் எத்தனை டிராக்டர்கள் சாணம் பசுமடத்திலிருந்து செங்குளம் பண்ணைக்கு எடுத்துச் செல்லபபட்டது என்பது குறித்தோ, பசுமடத்திலிருந்து டிராக்டர் மூலம் எடுத்துச் செல்லப் பட்ட சாணம் செங்குளம் பண்ணையில் இறக்கப் பட்டு சேமித்து வைக்கப் பட்டது குறித்தோ, பதிவேடுகள் ஏதும் பேணப்படவில்லை.

இந்நிலையில் பசுமடத்திலிருந்து சேகரிக்கப் படும் சாணத்தினை செங்குளம் பண்ணைக்கு எடுத்துச் சென்று சேமித்து வைக்கப்படுவதற்கு பதிலாக திருக்கோயில் வளாகத்திலேயே ஒரு சாண எரிவாயு கலன் அமைக்கப் பட்டு அதன் மூலம் பெறப்படும் சாண எரிவாயுவினை சமையல் எரிவாயு பயன்படுத்தப்படலாம் எனத் தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால்

1) திருக்கோயிலின் பசுமடத்திலுள்ள பசுக்களின் சாணத்தினை மிகச்சிறப்பான வகையில் பயன்பாட்டுக்கு உட்படுத்த இயலும்.

2) திருக்கோயிலின் சமையல் எரிவாயு செலவுகளை குறைக்க இயலும்.

3) பிற திருக்கோயில்களுக்கும் இச்செயல் முன்னுதாரணமாக அமையும்.

4) தமிழக அரசால் வழங்கப்பட்டு வரும் அரசு மான்யத்தினை இத்திட்டத்திற்கு பெற இயலும்.

5) அடிக்கடி டிராக்டர் மூலம் பசுமடத்திலுள்ள சாணத்தினை நகரத்தின் எல்லைக்கப்பால் உள்ள செங்குளம் பண்ணைக்கு எடுத்துச் செல்லும் கால விரையம் மற்றும் தொடர்பான செலவுகள் தவிர்க்கப் இயலும்.

7)பசு மடத்தினை மேலும் விரிவாக்கம் செய்து திருக்கோயிலின் சமையல் எரிவாயு தேவையை முழுவதுமாக எதிர்கொள்ள சாத்தியக் கூறுகள் உள்ளன.

8)பசு மடத்தினை மேலும் விரிவாக்கம் செய்யப்படின் பக்தர் களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் மேலும் பசுமாடுகள் அதிக எண்ணிக்கையில் உபயமாக பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

ஆதலின் இத்திட்டம் குறித்து நன்கு பரிசீலனை செய்து, ஆணையரின் அனுமதி பெற்று அமுல் படுத்தப் பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

13). **முதலீடு – ஐஓபி வங்கி முதலீடு – முதிர்வு மதிப்பு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டது – ரூ 15,578/– பெறப்படவேண்டும் – குறைபாடு.**

15)

இத்திருக்கோயிலில் நிதியிலிருந்து ஐஓபி வங்கியில் 09.08.2010 அன்று முதலீடு எண் 539470 மற்றும் 539471 ன்படி 7.75 % வட்டி விகிதத்தில் 5.5.2013 ல் முதிர்வு பெற்று தலா ரூ 59,75,880 /– முதிர்வு மதிப்பு பெறும் வகையில் இரண்டு முதலீடுகள் ரூ 48,45,000/– வீதம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி இம்முதலீட்டிற்கான முதிர்வு மதிப்பினை கணக்கீடு செய்தால் முதிர்வு மதிப்பு ரூ 59,83,668.75 ஆகிறது. (33 மாதங்கள்). ஆனால் முதலீடு பத்திரத்தில் முதலீடு முதிர்வு மதிப்பு தலா ரூ 59,75,384/– எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெறப்படவேண்டிய சரியான முதிர்வு மதிப்புடன் ஒப்பீடு செய்யும்பொழுது ரூ 7,788,75/– வீதம் ரூ 15,577.50 அல்லது ரூ 15,578/– வட்டி குறைவாக கணக்கீடு செய்யப் பட்டுள்ளதை தணிக்கையின் போது கண்டறியப் பட்டது.

ரூ15578/-

ஆதலின் இத்தொகை ரூ 15,578/– ஐ தற்போது உள்ள முதிர்வு மதிப்புடன் சேர்த்து பெறும் பொருட்டு இத்தொகை ரூ 15,578/– ம் தணிக்கை தடையின்கீழ் வைக்கப்படுகிறது.

இத்தொகை ரூ 15,578/– ரெப்கோ வங்கியிலிருந்து முதலீடு முதிர்வு பெறும் நாளில் தற்போதுள்ள முதிர்வு மதிப்புடன் சேர்த்து பெறப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

14) - <u>முதலீடு – ரெப்கோ வங்கி முதலீடு – முதிர்வு மதிப்பு குறைவாக கணக்கீடு செய்யப்பட்டது – ரூ 14,355/- பெறப்படவேண்டும் – குறைபாடு.</u>

(16)

இத்திருக்கோயிலில் நிதியிலிருந்து ரெப்கோ வங்கியில் 14.08.2010 அன்று முதலீடு எண் 546489 ன்படி 7.5 % வட்டி விகிதத்தில் 26.07.2012ல் முதிர்வு பெற்று ரூ 13,82,384/- முதிர்வு மதிப்பு பெறும் வகையில் ரூ 12,08,551/- முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி இம்முதலீட்டிற்கான முதிர்வு மதிப்பினை கணக்கீடு செய்தால் முதிர்வு மதிப்பு ரூ 13,96,738,78 ஆகிறது. (711 நாட்கள்). ஆனால் முதலீடு பத்திரத்தில் முதலீடு முதிர்வு மதிப்பு ரூ 13,82,384/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பெறப்படவேண்டிய சரியான முதிர்வு மதிப்புடன் ஒப்பீடு செய்யும்பொழுது ரூ14,354.78/- அல்லது ரூ 14,355/- வட்டி குறைவாக கணக்கீடு செய்யப் பட்டுள்ளதை தணிக்கையின் போது கண்டறியப் பட்டது.

14355

ஆதலின் இத்தொகை ரூ 14,355/- ஐ தற்போது உள்ள முதிர்வு மதிப்புடன் சேர்த்து பெறும் பொருட்டு இத்தொகை ரூ 14,355/- ம் தணிக்கை தடையின்கீழ் வைக்கப்படுகிறது.

இத்தொகை ரூ 14,355/- ரெப்கோ வங்கியிலிருந்து முதலீடு முதிர்வு பெறும் நாளில் தற்போதுள்ள முதிர்வு மதிப்புடன் சேர்த்து பெறப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

15). **முதலீடு - தாய்கோ வங்கியில் 3/11 ல் செய்யப்பட்ட இருமுதலீடுகள் - வெவ்வேறு வட்டிவீதத்தில் உள்ளன - கூடுதலான வட்டிவீதத்திற்கு மாற்றப் படவேண்டும் - குறைபாடுகள்.**

இத்திருக்கோயில் நிதியிலிருந்து தாய்கோ வங்கியில் 3/11 மாதத்தில் இரண்டு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இரு முதலீடுகளின் வட்டிவிகிதம் மாறுபட்டு உள்ளது. விவரம் பின்வருமாறு ;

வ, எண்	முதலீடு எண் / நாள்	முதலீடு தொகை	முதலீடு முதிர்வு நாள்	வட்டி விகிதம்	முதிர்வு மதிப்பு
1	4277/02.03.11	10,00,000.00	02.03.14	10.25 %	13,54,763
2	4289/31.03.11	10,00,000.00	31.03.14	10.50 %	13,64,703

மேற்கண்ட விவரங்களிலிருந்து ஒரே மாதத்தில், ஒரே வங்கியில் செய்யப்பட்ட, ஒரே முதலீட்டு தொகைக்கு, இரு வேறு வட்டிவிகிதங்களில் முதிர்வு மதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு உள்ளதால் வ,எண்,1ல் கண்ட முதலீட்டிற்கான வட்டி இழப்பாகிறது.

வ,எண். 2ல் குறிப்பிட்டுள்ள வட்டிவிகிதத்தில் கணக்கீடு செய்தால் வ.எண் 1க்கு பெறப்படவேண்டிய முதிர்வு மதிப்பு ரூ13,64,703/- ஆகும். ஆனால் வரிசை எண் 2ல் உள்ள வட்டிவிகிதத்திற்கு குறைவான வட்டி விகிதத்தில் வட்டி கணக்கீடு செய்யப்பட்டதால் வ,எண்1க்கு குறிப்பிடப்பட்ட முதிர்வு மதிப்பு ரூ 13,54,763/- ஆகும். இதனால் வ,எண்1ல் கண்ட முதலீட்டிற்கான முதிர்வு மதிப்பில் ரூ 9,940/- குறைவாகிறது.

ஆகவே மேற்கண்ட விவரப்படி வ.எண் 1ல் கண்ட முதலீட்டிற்கு குறைவான வட்டிவிகிதம் கணக்கீடு செய்ததால் ஏற்பட்டுள்ள வட்டி இழப்பு ரூ9,940/ம் தணிக்கை தடையின் கீழ் வைக்கப்படுகிறது.

எனவே வங்கியை அணுகி, வ.எண் 2ல் குறிப்பிட்ட வட்டி விகிதத்தை வ.எண்.1ல் கண்ட முதலீட்டிற்கும் வழங்கக் கோரி திருக்கோயிலுக்கு மேற்கண்ட விவரப்படி முதலீடு வட்டியில் ஏற்பட்டுள்ள வட்டி இழப்பு ரூ 9,940/-ஐ திரும்பப் பெறப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

16) (18) **சில்லரைக் குத்தகை – தணிக்கையாண்டிற்கான உரிமை குத்தகை ரூ.1,57,500/- வசூலிக்கப்படவில்லை – கடும்குறைபாடுகள்**

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் பல்வேறு உரிமங்கள் பொது ஏலம் / டெண்டர் மூலம் விடப்பட்டு வருவாய் பெறப்பட்டுள்ளது. அவைகளில் கீழ்கண்ட விவரப்படியான உரிம குத்தகைத் தொகையினை உரிம காலத்திற்குள்ளாகவே வசூலிக்காதலால் ரூ 1,57,500/- நிலுவையாக உள்ளது. விவரம் பின்வருமாறு.

வ எண்		உரிம விவரம்	உரிமதாரர் பெயர்	நிலுவைத் தொகை ரூ பை
1		ஆதி சொக்கநாதர் பூஜை பொருட்கள் விற்பனை உரிமம்	கே. இந்திரா	500.00
2		மாரியம்மன் கோயில் இருசக்கர வாகன பாதுகாப்பு	ராஜ பாண்டி	1,56,000.00
3		மாரியம்மன் கோயில் சாம்பிராணி கலசம்	மீனாட்சி சுந்தரம்	1,000.00
		கூடுதல்		1,57,500.00

157500-

மேற்கண்ட விவரப்படியான உரிம குத்தகை நிலுவைத்தொகை ரூ.1,57,500.00ம் உரிய நபரிடமிருந்து வசூலித்து திருக்கோயில் கணக்கில் செலுத்தும் பொருட்டு தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

உரிய நபர்களிடமிருந்து இந்த நிலுவைத் தொகையினை வசூலிக்க இயலாத நிலை ஏற்படின், உரிமைக் காலத்திற்குள்ளாகவே, இந்த நிலுவையை வசூலிக்கத் தவறிய நபர்/நபர்களை பொறுப்பாக்கி, இந்த நிலுவைத் தொகை ரூ 1,57,500/- ம் வசூலிக்கப் பட்டு திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

24

17). <u>வேலைகள் – சுத்தீகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் (RO Plant) நிறுவியது – பாங்க் ஆப் இந்தியா உபயமாக வழங்கியதாக RO Plant நிறுவிய இடத்தில் விளம்பரம் உள்ளது – பாங்க் ஆப் இந்தியாவிடமிருந்து பெறப்பட்ட உபய வரவின் விவரம் அறியப்படவில்லை – குறைபாடுகள்</u>

(19)

பணியின் விவரம்	:	சுத்தீகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் நிறுவுதல் (RO Plant)
மதிப்பீடு தொகை	:	ரூ 3,50,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	:	இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க. 1366/2010 நாள் 26.05.2010
டெண்டர்தாரர்	:	ராமலிங்கம் எண்டர்பிரைஸஸ்
டெண்டர் தொகை மற்றும் டெண்டர் அங்கீகாரம்	:	ரூ.3,60,000.00 ந.க.1366/2010 நாள் 10.9.2010
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	1 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.1366/2010 நாள் 23.9.2010
பட்டியல் சிசி 1/ பகுதி	:	அளவீடு புத்தகம் 10/09 பக்கம் 74-80 செ.சீ.எண். 1267 – 1269 /15.01.2011
தொகை	:	ரூ. 3,10,000/-
பிடித்தங்கள்	:	ரூ. 28,725/-
நிகரம்	:	ரூ. 2,81,275/-
பட்டியல் சிசி 2 / இறுதி	:	அளவீடு புத்தகம் 7/07 பக்கம் 69-79 செ.சீ.எண். 2005 – 2006 /30.04.2011
தொகை	:	ரூ. 57,042/-
பிடித்தங்கள்	:	ரூ. 11,610/-
நிகரம்	:	ரூ. 45,432/-பணி முடிவடைந்துள்ளது.

இந்த RO Plant அமையப்பட்ட இடத்தில் Donated by Bank of India என்ற விளம்பரம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வினவியதில் இந்தச் செலவுகள் Bank of India விடமிருந்து பெறப்பட்டுள்ளது எனத் தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

Bank of India மூலம் எப்பொழுது தொகை பெறப்பட்டது, எவ்வளவுதொகை பெறப்பட்டது, என்கிற விவரங்கள் கோப்பின் வாயிலாக அறியப்படாததுடன், தணிக்கைக்கும் தெரிவிக்கப்படவில்லை.

ஆதலின் Bank of India விடமிருந்து இச்செலவு பெறப்படாமலிருப்பின் அதனை பெறப்படவும், தொகை பெறப்பட்டிருப்பின் ரூ.3,67,042/- பெறப்பட்டதற்கான ஆதாரங்களையும் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவேண்டும்.

<u>பிறகுறைபாடுகள்</u>

1) முடிவறிக்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை.
2) RO Plant கொள்முதல் செய்யப்பட்ட விவரம் நிரந்தர பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

18). **வேலைகள் – பசுமடம் – கழிவு நீர் மோட்டார் பம்ப் மூலம் வெளியேற்றும் பணி – டெண்டர் ஒப்பீடு பட்டியல் தயாரிக்கும் போது மதிப்பீட்டின் படி ஒப்பீடு செய்யாமல் 2009 –10 தரவிலை அட்டவணையின் படியான ரேட்டினை குறிப்பிட்டு ஒப்பீடு செய்து கூடுதல் தொகை வழங்கியது ரூ 65,936.34 – குறைபாடுகள்**

பணியின் விவரம்	: பசுமடம் – கழிவு நீர் மோட்டார் பம்ப் மூலம் வெளியேற்றும் பணி
மதிப்பீடு தொகை	: ரூ 2,40,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	: இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க. : 1324/10 நாள் 13.4.10
டெண்டர்தாரர்	: ஞானவேல்
டெண்டர் தொகை மற்றும் டெண்டர் அங்கீகாரம்	: ரூ2,43,191.45 : ந.க.1324/10 நாள் 26.7.10
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	: 1 மாதம்
வேலை உத்திரவு நாள்	: ந.க. 1324/10 நாள் 13.9.10
பட்டியல் சிசி 1/ பகுதி	: அளவீடு புத்தகம் 20/09 பக்கம் 12-33 செ.சீ.எண். 1024 – 1026 /7.12.10
தொகை	: ரூ 1,69,150/-
பிடித்தங்கள்	: ரூ 15,674/-
நிகரம்	: ரூ 1,53,476/-

இப்பணிக்கு டெண்டர்கள் கோரப்பட்டதில் இரண்டு டெண்டர்கள் பெறப்பட்டுள்ளன. குறைந்த டெண்டர்தாரர் கொடுத்த ஞானவேல் – உடன் மேலும் குறைக்க கோரப்பட்டதற்கு, தேதியிடப்படாத தனது கடிதத்தில் திருக்கோயிலின் மதிப்பீட்டு ரேட்டிற்கு இப்பணிகளை செவ்வனே செய்து தருவதாக எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்துள்ளார். மதிப்பீடு தயாரிக்கப்பட்டது 2009 –2010 க்கான தர அட்டவணையின் படியானது ஆகும். அதன் பின்னர் டெண்டர் ரேட்டிற்கு ஒப்பீடு பட்டியல் தயாரிக்கும் போது புதியதாக 2010 – 2011 ரேட்டினை குறிப்பிட்டு அதன் அடிப்படையில் ஒப்பீடு பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது.

இணை ஆணையாளருக்கு சமர்ப்பித்த குறிப்பு கோப்பில் டெண்டர்தாரர் 2010 – 11 ரேட்டிற்கு குறைத்து பணிகள் செய்ய இயலாது எனத் தெரிவித்ததாக குறிப்பு கோப்பு எழுதி இணை ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (கோப்பு எண் 1324/10) டெண்டர்தாரர் தனது கடிதத்தில் 2010 – 2011 தர அட்டவணை ரேட்டினை பற்றி குறிப்பேதும் எழுதவில்லை என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடப்படுகிறது.

2009 –10 ரேட்டின் படி மதிப்பீடு தயார் செய்து, டெண்டர் பெறப்பட்ட பின்னர், டெண்டர் ஒப்பீடு பட்டியல் தயாரிக்கும் போது 2010 –11 ரேட்டினை குறிப்பிட்டு ஒப்பீடு செய்து அதனடிப்படையில் தொகை பட்டுவாடா செய்துள்ளதை பரிசீலனை செய்யும் போது இந்த டெண்டர்தாரருக்கு சலுகை காண்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல் பட்டுள்ளதாக தணிக்கையில் கருதப்படுகிறது.

31

சிசி 1/பகுதி பட்டியலில் 2010 -11 ரேட்டின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப் பட்டு தொகை பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும், 2010 -11 நி அட்டவணையின் படியான ரேட்டிற்கும் ஒப்பீடு செய்யும போது, 2010 -11 நி அட்டவணையின் ரேட் ஒவ்வொரு இனத்தின் கீழும் கூடுதலாக உள்ளது.

சிசி 1/பகுதியின் படி மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு கூடுதலான தொகை கணக்கீடு செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கூடுதலாக பட்டுவாடா செய்யப் பட்ட தொகை ரூ 65,876.34 ம் சம்மந்தப்பட்ட நபரிடமிருந்து பிடித்தம் செய்யப் படல் வேண்டும். இயலாத நிலையில் இதற்கு பொறுப்பான நபர்/நபர்களால் இத்தொகை ரூ 65,936.34 ம் ஈடு செய்யப் படல் வேண்டும்.

<u>அ) பட்டியலில் கணக்கீட்டில் தவறு - மிகைப் பட்டுவாடா ரூ 298/- ம் பிடித்தம் செய்யப் படல் வேண்டும்.</u>

இப்பணிக்கான கணக்கீடு பட்டியலை சரிபார்த்தபோது அளவீடு புத்தகம் 20/09 பக்கம் 18 ல் "supplying erecting water tight steel centering" என்ற விவரப்படியான பணியின் அளவுகள் 11.50 ச.மீ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அளவீடு புத்தகம் பக்கம் 30 க்கு எடுத்துச் செல்லும் போது 12.94 ச.மீ எனக் குறிப்பிடப்பட்டு ரூ 207.15 என்கிற ரேட்டில் தொகை பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. அதாவது 1.44 ச.மீ க்கு 207.15 என்ற ரேட்டில் ரூ 298.30அல்லது ரூ 298/- அதிகமாக பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. இக்கூடுதல் செலவு ரூ 298/- ம் பொறுப்பான நபர்களால் ஈடு செய்யப் படல் வேண்டும்.

ASW
BR 540/28.7.12
298/-

<u>ஆ)ஒப்பந்தப்படியான காலத்திற்குள்ளாக பணி முடிக்கப் படவில்லை.</u>

இப்பணியினை ஒரு மாத காலத்தில் முடிப்பதாக 21.9.10 ல் ஒப்பந்தப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. ஆனால் இப்பணியினை இதுகாறும் முடித்து இறுதி பட்டுவாடா செய்யப் படவில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் சரியான காரணங்களின் அடிப்படையில் பணிகள் தாமதிப்பதாக கோப்புகளில் பதிவுகள் ஏதும் இல்லை.

<u>பிற குறைபாடுகள்</u>

1) 10 குதிரைத் திறன் மோட்டார் பொருத்தப் பட்டதாகவோ, தரசான்றிதழ் பெற்ற குறிப்பிட்ட நிறுவனத்தின் மோட்டார் பொருத்தப் பட்டதாகவோ, மின் மோட்டார் பொருத்தப்படும் முன்னர் மின் மோட்டாரை நேரில் சரிபார்த்ததாகவோ, புதியதாக பெறப்பட்ட மின் மோட்டார் பொருத்தப் பட்டுள்ளதாகவோ , இப்பணிக்கான அளவீடு புத்தகத்தில் உரிய அலுவலரால் சான்று ஏதும் வழங்கப்படவில்லை.

2)குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்ளாக மோட்டார் பழுதடைந்தால் அதனை டெண்டர்தாரர் தன்செலவில் பழுது நீக்கி தரவேண்டுமென்ற விவரத்தினை டெண்டர் நிபந்தனையாக குறிப்பிடப்படவில்லை.

3) புதியதாக மோட்டார் கொள்முதல் செய்யப்பட்டு பொருத்தப் பட்டதற்கு ஆதாரமாக நிறுவனத்திலிருந்து வழங்கப்பட்ட "warrenty card" எதுவும் கோப்புடன் இணைக்கப் படவில்லை.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டுவரப்படுகிறது.

பசுமடம் – மிகை பட்டுவாடா விவரம் பசலி 1420						
வ எண்	பணி விவரம்	2010-11 ரேட் ரூ பை	2009-10 ரேட் ரூ பை	வித்தியாசம் ரூ பை	செய்த பணி அளவுகள்	பட்டுவாடா தொகை ரூ பை
1	Earth work excavation	56.40	51.35	5.05	46.91	236.89
2	Plain cement concrete	1730.05	1647.25	82.80	3.63	300.56
3	Brick Work	2311.00	2196.40	114.60	11.95	1369.47
4	Steel	4300.00	3838.95	461.05	137.44	63366.71
5	Cement concrete	3694.55	3490.30	204.25	1.81	369.69
6	Steel centering	207.15	206.50	0.65	12.94	8.41
7	Plastering with cement	79.25	78.10	1.15	48.98	56.32
8	Plastering with cement	148.50	137.45	11.05	20.66	228.28
				கூடுதல்		65936.34

உதவித் தணிக்கை அலுவலர்

துணை தலைமைத் தணிக்கை அலுவலர்

19). 21) **வேலைகள் – மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்ட நிதி ரூ.478.03 லட்சத்தில் விடுவிக்கப்பட்டது ரூ.382.42 லட்சம் – செய்து முடிக்கப்பட்ட பணிகள், அதற்கான செலவு, பெறப்பட்ட மத்திய நிதி ஆகிய விவரங்கள் அறியப்படவில்லை – பொறியியல் பிரிவின் மெத்தன போக்கு – குறைபாடுகள்**

புதுடெல்லி மத்திய அரசின் சுற்றுலாத் துறை கடிதம் எண் 5–PSW/30/2006 நாள் 16.10.2006 ன்படி இத்திருக்கோயிலில் கீழ்கண்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக 2006 – 2007 நிதியாண்டிற்கு ரூ.478.03 லட்சம் அனுமதிக்கப்பட்டதாகவும் இதில் ரூ.382.42 லட்சம் முதல் கட்டமாக விடுவிக்கப்பட்டதாகவும் தமிழ்நாடு அரசாணை எண் 3 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை நாள் 12.01.2007 உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு.

Sl. No.	Name of the Component	Amount (Rs. in Lakhs)
1	Improvements to 1000 Pillar Mandapam at A/M Meenakshi Sundareswarar Thirukoil, Madurai	155.00
2	Improvements to Kalyana Mandapam at A/M Meenakshi Sundareswarar Thirukoil	32.95
3	Improvements to Rayagopuram, A/M Meenakshi Sundareswarar Thirukoil	10.00
4	Providing Landscaping works – South Chithrai Street, East chithirai Street, North chithirai Street and maintenance works	79.00
5	Cement concret road at four chithirai Streets	93.18
6	Cable Duct arrangements etc. at four chithirai Streets near temple platform	31.90
7	Providing ornamental compound wall with grill at four chithirai Streets	76.00
	Total	478.03

மேற்படி உத்திரவில் இப்பணிகளை 18 மாதங்களுக்குள்ளாக முடிக்கப்படவேண்டுமென்றும், காலதாமத்தால் ஏற்படும் கூடுதல் செலவுகள் மாநில அரசால் வழங்கப்படவேண்டுமென்றும், கூடுதல் செலவுகள் மத்திய நிதியிலிருந்து வழங்கப்பட இயலாதென்றும், பணி முன்னேற்ற விவரத்தை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மத்திய சுற்றுலாத் துறைக்கு அறிக்கை செய்யப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்த அரசாணையின்படி

1) மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரம்
2) மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிவுபெற்ற விவரம்
3) நிலுவையாக உள்ள பணிகள் விவரம்
4) மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான இனவாரி செலவு விவரம்
5) மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு இனவாரியாக பெறப்பட்ட மத்திய நிதி
6) மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு இனவாரியாக பெறப்படவேண்டிய மத்திய நிதி
7) மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட தொகைக்கும் மிகையாக செலவுகள் செய்யப்பட்டிருப்பின் அதற்கான இனவாரி மிகைச்செலவு விவரங்கள்

8) செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மத்திய அரசின் நிதி பெறப்படவேண்டியதிருப்பின் இனவாரியாக அதனைப் பெற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விவரம்

9) செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மத்திய அரசின் நிதி உதவி பெறப்படாமல் இருப்பின் அதற்கான இனவாரியான காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பான நபர்கள் விவரம்

10) அரசாணையில் குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள்ளாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளனவா, இல்லையெனில் அதற்கான காரணங்கள், கால நீட்டிப்பு வேண்டி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அதற்கான விவரங்கள்

ஆகியவற்றை தணிக்கையின்போது பலமுறை அயல் பணி உதவி கோட்டப் பொறியாளர் உட்பட பொறியியல் பிரிவு பணியாளர்களிடம் பலமுறை நேரில் கேட்டும் இவ்விவரங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் திருக்கோயிலுக்கு பெறப்படவேண்டிய நிதி முழுவதுமாக பெறப்பட்டதா, இன்னமும் பெறப்படவேண்டிய நிதி எவ்வளவு உள்ளது, முடிக்கப்பட்ட பணிகளுக்கான மத்திய நிதி பெறப்படாமலிருப்பின் அதற்கான வட்டி இழப்பு, மற்றும் பொறுப்பான நபர்கள் ஆகியன குறித்து தணிக்கை தடை எழுப்ப இயலவில்லை.

இக்குறைபாட்டிற்கு பொறியியல் பிரிவின் மெத்தனப் போக்கே காரணமாக அமைந்துள்ளது.

மேலும், மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் நே.மு.க. எண் 1062/2007/டி3/நாள் 24.05.2009 குறிப்பில் 2006 – 2007 ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட பணிகள் 31.03.2009 க்குள் முடிக்கப்பட்டு பணிமுடிவு அறிக்கைகள் புகைப்படங்கள் மற்றும் இதர சார்வு ஆவணங்கள் 30.06.2009 க்குள் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் பணி முடிக்கப்படாத நிலையில் ஏற்படும் நிதி இழப்புகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களே பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும், ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக் காண்பிக்கிப்படுகிறது.

தணிக்கையாண்டில் மாவட்ட ஆட்சியர் ந.க. 2052 /2008 /43 / நாள் 18.1.11 ன்படி ஐந்து கோபுர நுழைவு வாயில் காலணி மற்றும் பொருட்கள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிக்காக ரூ 8,75,000/- ம் எல்லீஸ் நகர் கட்டுமானப் பணிக்காக 24,95,000/- ஆக மொத்தம் ரூ 33,70,000/- மாநில சுற்றுலாத்துறை நிதி உதவித்திட்டம் 2007 –2008 ன்படி விடுவிக்கப்பட்டு திருக்கோயிலில் பெறப்பட்டுள்ளது.

உரிய விவரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படாத நிலையில் பெறப்பட்ட தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

எனவே, இதுகுறித்து ஆய்வு செய்து, செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பெறப்படாமலிருக்கும் சுற்றுலாநிதியை பெறப்படுவதற்கும் , செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு உரிய காலத்திற்குள்ளாக சுற்றுலா நிதி பெறப்படாததால் ஏற்பட்ட வட்டி இழப்பை கணக்கீடு செய்து, பொறுப்பான நபர்களால் ஈடு செய்யப்படுவதற்கும், தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

35

20). 22) <u>வேலைகள் – திருக்கோயில் நிதியைக் கொண்டு செய்த சுற்றுலா நிதிக்கான பணிகள் – சுற்றுலா நிதி ரூ 1,20,27,973/–ஐ விரைவில் பெறப்பட வேண்டும் – குறைபாடுகள்</u>

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான பணிகள் திருக்கோயில் நிதியைக்கொண்டு செய்யப் பட்ட சுற்றுலா நிதிக்கான பணிகளாகும். ஆதலின் <u>தணிக்கையாண்டில்</u> மேற்கொள்ளப் பட்ட இப்பணிகளுக்கான செலவினை சுற்றுலா நிதியிலிருந்து திரும்பப் பெறப் படல் வேண்டும். விவரம் பின்வருமாறு:

வ.எண்.	பணி விவரம்	செலவு	பணி முடிவு நாள்
1	125 கேவிஏ ஜெனரேட்டர் கொள்முதல்	13,38,000/–	11.8.10
2	ஜெனரேட்டர் அமைக்க கேபிள் சப்ளை	198310/–	29.04.11
3	ஆயிரங்கால் மண்டபம் ஸ்பாட் லைட் அமைக்கும் பணி	3988326/–	பணி முன்னேற்றம்
4	ஆயிரங்கால் மண்டபம் மின்னோட்டப் பணி அமைத்தல்	540050/–	பணி முன்னேற்றம்
5	ஆயிரங்கால் மண்டபம் காட்சிப் பெட்டி அமைத்தல்	637909/–	பணி முன்னேற்றம்
6	ஆயிரங்கால் மண்டபம் கிரானைட் தளம் அமைத்தல	1181354/–	07.10.10
7	எல்லீஸ் நகர் – பக்தர்கள் குடியிருப்பு	4144024/–	பணி முன்னேற்றம்
	கூடுதல்	1,20,27,973/–	

மேற்கண்ட விவரப்படி தணிக்கையாண்டில் திருக்கோயில் நிதியை செலவழித்து மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா நிதி பணிகளுக்கான தொகை ரூ 1,20,27,973/– ஐ விரைவில் சுற்றுலா நிதியிலிருந்து பெறப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்பட தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்</u>

1. முன்னேற்றத்தில் உள்ள பணிகளை விரைவில் முடிக்கப் பட்டு, அதற்கான சுற்றுலா நிதியை காலதாமதமின்றி பெறப்படல் வேண்டும்.

2. ஏற்கெனவே செய்து முடிக்கப் பட்ட சுற்றுலா நிதி பணிகளுக் கான செலவு விவரம் கண்டறியப்பட்டு, அத்தொகையினை நிலுவையின்றி பெறப்படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் களையப்பட தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

21). 23) வேலைகள் – ஆயிரம் கால் மண்டபம் – கிரானைட் தளம் அமைக்கும் பணி – காலதாமதமாக பணி முடிக்கப் பட்டதால் கூடுதல் செலவு – சுற்றுலா நிதி ரூ11,81,354/–பெறப்படவில்லை – வட்டி இழப்பு – குறைபாடுகள்

பணியின் விவரம்	:	ஆயிரம் கால் மண்டபம் சீரமைப்பு கிரானைட் தளம் அமைக்கும் பணி
மதிப்பீடு தொகை	:	ரூ49,70,000/– (Revised Estimate)
மதிப்பீடு அங்கீகாரம்	:	ஆணையர்ந.க. 67838/09 நாள் 27.05.10
தொழில்நுட்ப அங்கீகாரம்	:	ஆணையர் ந.க.67838/09 நாள் 02.07.10
டெண்டர்தாரர்	:	சந்திரசேகர்
டெண்டர் தொகை மற்றும் டெண்டர் அங்கீகாரம்	:	ரூ.47,31,730.00 (As per original Estimate) ந.க.61486/2006 நாள் 29.01.2008
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	3 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.4414/2007 நாள் 06.02.2008
பட்டியல் சிசி 10/ இறுதி	:	அளவீடு புத்தகம் 08/09 பக்கம் 72–80 செ.சீ.எண். 663 – 665 /07.10.2010
தொகை	:	ரூ. 2,31,253/–
பிடித்தங்கள்	:	ரூ. 1,32,428/–
நிகரம்	:	ரூ. 98,825/–
		பணி முடிவடைந்துள்ளது.

அ) காலதாமதமாக பணி முடிக்கப் பட்டதால் கூடுதல் செலவு:

06.02.08ல் வேலை உத்திரவுகள் வழங்கப்பட்டு 25.04.2008ல் மூன்று மாத கால அவகாசத்தில் இப்பணி முடிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், 25.07.2011 க்குள் இப்பணிகள் முடிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சிசி 10/ இறுதி பட்டியல் படி பணி முடிக்கப்பட்டு 07.10.2010ல் இறுதி தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ள நிலையில் இப்பணியினை முடித்திட சுமார் 21/2 ஆண்டு காலம் ஏற்பட்டுள்ளதை உறுதி செய்யப் படுகிறது.

கால தாமதத்திற்கான சரியான காரணங்கள் கோப்பினில் பதிவு செய்யப் பட்டு இணை ஆணையரின் ஒப்புதல் பெறப்படவில்லை. காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்ளை ஆணையாளருக்கு உடன் தெரிவித்து கால நீட்டிப்பு பெறப்படவில்லை. டெண்டர்தாரர் கால நீட்டிப்பு வேண்டி விண்ணப்பம் செய்யப் படவில்லை.

மேலும் இது குறித்து நிபுணர் குழுவின் கருத்து பெறப்பட்டதா, எப்போது பெறப்பட்டது, நிபுணர் குழுவால் வழங்கப்பட்ட கருத்துக்கள் என்ன, என்பது குறித்தும் கோப்பினில் பதிவுகள் ஏதும் இல்லை.

இந்நிலையில் ஆணையர் ந.க. 61486/2006 ஒய் 3 நாள் 3.10.07 ல் ரூ 45,50,000/– க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ரூ 47,31,730/– க்கு ஆணையர் ந.க. 61486/2006 ஒய் 3 நாள் 29.01.08 ல் டெண்டர் அங்கீகரிக்கப்பட்டுள்ள இப்பணிக்கு, ஆணையர் ந.க. 61486/2006 ஒய் 3 நாள் 2.07.10 ல் ரூ 49,70,000/– க்கு திருந்திய மதிப்பீடு அங்கீகாரம் பெறப் பட்டு, மொத்தம் இப்பணிக்கு ரூ 49,66,354/– (ஒப்பந்ததாரருக்கு பட்டுவாடா 49,02,488/– பரிசீலனைக்கட்டணம் 49,700/ –விளம்பர செலவு ரூ14,166/–) செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஆனால் டெண்டர்தாரர் தான் ஒப்புக் கொண்ட ரேட்டில் இப்பணிகளை தற்போது செய்ய இயலாது எனத்தெரிவித்து விண்ணப்பம்

செய்தாக கோப்பினில் பதிவுகள் ஏதும் இல்லை என்பதையும் தணிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

மேலும் ஆணையர் ந.க. 39162/11 ஒய் 4 நாள் 28.7.11 குறிப்பினில் ஒப்பந்தம் இணை ஆணையரால் மேற்கொள்ளப் பட்டு, இணை ஆணையர்/ செயல் அலுவலரால் பட்டுவாடா மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில், முடிவறிக்கை மீது இணை ஆணையர்/செயல் அலுவலர் அளவிலேயே பதிவு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதிலிருந்து கால நீட்டிப்பு எதுவும் பெறப்படாமல், பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தம் இணை ஆணையரால் மேற்கொள்ளப் பட்டு, இணை ஆணையர்/ செயல் அலுவலரால் பட்டுவாடா மேற்கொள்ளப் பட்டுள்ளதை ஆணையர் அனுமதிக்கவில்லை என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப் படுகிறது.

எனவே, டெண்டர்தாரருக்கு சலுகை காட்டும் வகையில் கோப்புக்கள் உள்ளதாக கருதப்பட்டு, டெண்டர் அங்கீகாரத் தொகைக்கும், பட்டுவாடா செய்த தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ1,70,758/- (49,02,488.00 - 47,31,730.00 = 1,70,758) திருக்கோயிலுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவாகவும், தவிர்த்திருக்கக் கூடிய செலவாகவும் கருதி தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

ஆதலின் இத்தொகை ரூ 1,70,758/- திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி, பொறுப்பான நபர்/நபர்களால் இந்த இழப்பு ஈடுசெய்யப் பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>ஆ) சுற்றுலா நிதி ரூ 11,81,354/- திரும்பப் பெறப்படவில்லை</u>

புதுடெல்லி மத்திய அரசின் சுற்றுலாத் துறை கடிதம் எண் 5-PSW/30/2006 நாள் 16.10.2006 ன்படி இத்திருக்கோயிலில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக2006-2007 நிதியாண்டிற்கு ரூ.478.03 லட்சம் அனுமதிக்கப்பட்டதாகவும் இதில் ரூ. 382.42 லட்சம் முதற் கட்டமாக விடுவிக்கப்பட்டதாகவும் தமிழ்நாடு அரசாணை எண் 3 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை நாள் 12.01.2007 உத்திரவில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் ஆயிரங்கால் மண்டப மேம்பாட்டுப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப் பட்ட 155 இலட்ச ரூபாயில் ஆயிரங்கால் மண்டப கிரானைட் தளம் அமைக்கும் பணிக்கு 50 இலட்ச ரூபாய் செலவிட அனுமதிக்கப் பட்டுள்ளது.

இதில் ஆயிரங்கால் மண்டப கிரானைட் தளம் அமைக்கும் பணி ரூ49,66,354/- செலவில் முடிக்கப் பட்டுள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சியரின் ந.க. 1062/07 டி3 நாள் 22/02/08 குறிப்பின் படி ரூ 37,85,000/- விடுவிக்கப் பட்டு பெறப்பட்டதாக இத்திருக்கோயில் கோப்பு எண். 4414/07 வாயிலாக அறியப்படுகிறது. இன்னமும் பெறப்படவேண்டிய தொகை ரூ 11,81,354/-ஐ பெறப்பட மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இத்தொகை ரூ 11,81,354/ ஐ சுற்றுலாத் துறை நிதியிலிருந்து பெறப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக்கும் பொருட்டு இத்தொகை ரூ 11,81,354/-ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

இ) சுற்றுலா நிதி உரிய காலத்தில் பெறப்படாததால் ஏற்பட்ட வட்டி இழப்பு

இப்பணி 7.10.2010 ல் முடிக்கப்பட்டு, இறுதி பட்டுவாடா செய்யப் பட்டுள்ள நிலையில், இப்பணிக்கு சுற்றுலாதுறையிடமிருந்து பெறப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ 11,81,354/- உடன் பெறப்பட்டு 30.6.11 முடிய முதலீடு செய்யப் பட்டிருப்பின் இத்தொகை கடந்த 30.06.11 முடிய குறைந்தபட்சம் 8 சதவீத வட்டி வீதத்தில் ரூ 63,006/- வட்டி ஈட்டி இருக்கக் கூடும்.

இந்த வட்டி திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி, உரிய காலத்தில் இத்தொகையினை பெறப்பட தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிய நபர் / நபர்களை பொறுப்பாக்கி இந்த வட்டித் தொகை ரூ 63,006/- ஐ ஈடு செய்யப் படுவதுடன், இந்த நிலுவைத் தொகை பெறப்படும் நாள் வரை வட்டி கணக்கீடு செய்து ஈடு செய்யப்படவும் தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

இக் குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

22) **வேலைகள் – ஆயிரம் கால் மண்டபம் –ஸ்பாட் லைட் அமைக்கும் பணி – டெண்டர் நிபந்தனைகளை நிறைவேற்றாத நிறுவனத்தின் டெண்டர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது – பணியில் காலதாமதம் –மிகைப் பணிகள் – ஆணையர் அங்கீகாரம் பெறப்படவில்லை மற்றும் குறைபாடுகள்**

பணியின் விவரம்	:	ஆயிரம் கால் மண்டபம் சீரமைப்பு ஸ்பாட் லைட் அமைக்கும் பணி
மதிப்பீடு தொகை	:	ரூ35,90,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	:	ஆணையர்ந.க. 7475/10 நாள் 05.3.10
தொழில்நுட்ப அங்கீகாரம்	:	ஆணையர் ந.க.7475/10 நாள் 12.5.10
டெண்டர்தாரர்	:	Argeear brothers agencies, Madurai
டெண்டர் தொகை மற்றும்	:	ரூ.30,88,178.00
டெண்டர் அங்கீகாரம்		ந.க.27802/2010 நாள் 07.06.2010
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	2 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.3738/2009நாள் 14.06.10
பட்டியல் சிசி 1/ பகுதி	:	அளவீடு புத்தகம் 04/05 பக்கம் 48-55 செ.சீ.எண். 825 – 887 /28.10.10
தொகை	:	ரூ. 20,58,303/-
பிடித்தங்கள்	:	ரூ. 2,31,888/-
நிகரம்	:	ரூ. 18,26,415/-
பட்டியல் சிசி 2/ பகுதி	:	அளவீடு புத்தகம் 04/05 பக்கம் 57-79 செ.சீ.எண். 1546 – 1548 /07.03.11
தொகை	:	ரூ. 12,43,922/-
பிடித்தங்கள்	:	ரூ. 1,40,140/-
நிகரம்	:	ரூ. 11,03,782/-
		பணி முன்னேற்றத்தில் உள்ளது.

அ) டெண்டர் நிபந்தனைகளை நிறைவேற்றாத நிறுவனத்தின் டெண்டர் அங்கீகரிக்கப் பட்டுள்ளது –

1) டெண்டர் நிபந்தனை எண். 1ல் – இப்பணி தொடர்பான துறையில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு அனுபவம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் டெண்டர் அங்கீகரிக்கப் பட்ட Argeear brothers agencies, 1.1.07 முதல் பதிவு செய்யப் பட்டதாக ஆவணங்கள் உள்ளன.

2) டெண்டர் நிபந்தனை எண். 2(அ)ல் – இப்பணி தொடர்பாக பொதுப்பணித்துறை – மின் வட்டத்தில் – மின் ஒப்பந்ததாரராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆனால் டெண்டர் அங்கீகரிக்கப் பட்ட Argeear brothers agencies, பொதுப் பணித்துறை – மின் வட்டத்தில் – மின் ஒப்பந்ததாரராக பதிவு செய்ததற்கான ஆவணங்கள் ஏதும் இணைக்கப்படவில்லை.

3) 7.4.10 வரை தான் Electrical licence செல்லத்தக்கது என இணைக்கப் பட்ட சான்றிதழில் பதிவுகள் உள்ளன.

4) டெண்டர் நிபந்தனைகளின் படி

அ) ஐந்தாண்டு தணிக்கைக்குட்படுத்தப்பட்ட இருப்புநிலைகுறிப்பு
ஆ) குறைந்த பட்சம் 25 இலட்சத்திற்கான Solvency certificate
இ) குறைந்தபட்சம் 5 ஆண்டு IT Clearence certificate
ஆகியன ஏதும் டெண்டருடன் இணைக்கப்படவில்லை.

இத்தனை குறைபாடுகளுடன் இந்த டெண்டர்தாரரை அங்கீகரிக்கப் படலாமென பரிந்துரை செய்து டெண்டர் அங்கீகரிக்கப் பட்டுள்ள விவரம் தணிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

அ) காலதாமதமாக பணி தொடரப் பட்டது – காலநீட்டிப்பு பெறப்படவில்லை:

14.06.10 ல் வேலை உத்திரவுகள் வழங்கப்பட்டு 23.07.2010 ல் இரண்டு மாத கால அவகாசத்தில் இப்பணி முடிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், 23.09.2010 க்குள் இப்பணிகள் முடிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சிசி 2/ பகுதி பட்டியல் படி 07.03.2011 ல் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. பசலி 1421 ல் 10.11.2011 ல் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் இப்பணியினை முடித்திட சுமார் 11/2 ஆண்டு காலம் ஏற்பட்டுள்ளதை உறுதி செய்யப் படுகிறது.

கால தாமதத்திற்கான சரியான காரணங்கள் கோப்பினில் பதிவு செய்யப் பட்டு இணை ஆணையரின் ஒப்புதல் பெறப்படவில்லை. காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்ளை ஆணையாளருக்கு உடன் தெரிவித்து கால நீட்டிப்பு பெறப்படவில்லை. டெண்டர்தாரர் கால நீட்டிப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் செய்யவில்லை.

மேலும் இது குறித்து நிபுணர் குழுவின் கருத்து பெறப்பட்டதா, எப்போது பெறப்பட்டது, நிபுணர் குழுவால் வழங்கப்பட்ட கருத்துக்கள் என்ன, என்பது குறித்தும் கோப்பினில் பதிவுகள் ஏதும் இல்லை.

மதிப்பீட்டில் உள்ள அளவுக்கும் சுமார் 6 மடங்கு அதிகமாக மிகை அளவுள்ள பணிகள் – ஆணையர் அங்கீகாரம் பெறப்படாமல் செலவு ரூ ~~9,01,000/-~~ 252280/-

"Supply and run of 2X2.5 sq.mm PVC copper flex wire in the existing tray fixed on pillars and tappings with connections for termination to the light fittings" என்ற பணிக்கு 400 மீட்டர் ஒயர் தேவைப்படுவதாக குறிப்பிட்டு மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஆனால் இப்பணிக்கு 2652.50 மீட்டர் ஒயர் உபயோகப் படுத்தப் பட்டதாக அளவீடு புத்தகம் 4/05 பக்கம் 57 – 79 ல் பதிவுகள் உள்ளன.

மதிப்பீட்டில் உள்ள அளவுகளுக்கும் சுமார் 6 மடங்கு அளவுக்கு அதிகமாக (2252.50 மீட்டர்) ஒயர் பயன்படுத்தப் படுவதற்கு முன்னர், இந்த பணிக்கு கூடுதலாக ஒயர் பயன்படுத்தப்படவேண்டிய அவசர, அவசியத்தை விளக்கி அலுவலக கோப்பினில் இணை ஆணையரிடம் உரிய உத்திரவுகள் ஏதும் பெறப்படவில்லை.

ஆயிரங்கால் மண்டபத்தில் மேற்கொள்ளப் படும் பணிகள் நிபுணர் குழுவின் ஆலோசனையின் படி மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில், இந்த பணிக்கு கூடுதலாக ஒயர் பயன் படுத்தப்பட நிபுணர்குழுவின் கருத்துக்கள் பெறப்பட்ட விவரம் கோப்பின் வாயிலாக அறியப்படவில்லை.

மேலும் இந்த மதிப்பீட்டினை ஆணையர் அங்கீகரித்துள்ள நிலையில், இந்த பணிக்கு கூடுதலாக ஒயர் பயன் படுத்தப்பட வேண்டியதற்கான அவசர அவசியத்தை தெரிவித்து, மிகைப்பணி மற்றும்

அதற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட ஆணையரிடமிருந்து திருந்திய உத்திரவுகள் ஏதும் பெறப்படவில்லை.

கூடுதலான அளவீட்டில் இப்பணியினை செய்ய ஒப்பந்ததாரருக்கு எழுத்து மூலமாக இணை ஆணையரால் தாக்கீது ஏதும் வழங்கப்பட்டதாக கோப்பினில் பதிவுகள் ஏதுமில்லை.

ஆணையரின் அனுமதியின்றியும், இணை ஆணையரிடம் கோப்பின் வாயிலாக உத்திரவுகள் ஏதுமின்றியும், நிபுணர் குழுவின் கருத்துக்கள் ஏதுமின்றியும், இந்த பணிக்கு கூடுதலாக 2252.50 மீட்டர் ஒயர் பயன்படுத்தப் பட்ட வகையில் (**2252.50 x ~~400~~** 112) ரூ ~~9,01,000/-~~ 252280/- செலவு மேற்கொள்ளப்பட்டு, சிசி2/பகுதி பட்டியலில் பட்டுவாடா மேற்கொள்ளப் பட்டுள்ளதை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

ஆதலின் இம்மிகைச் செலவு ரூ ~~9,01,000/-~~ 252280/- ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

23) 25) **வேலைகள் – ஆயிரம் கால் மண்டபம் –மின்னோட்டப் பணி – பணியில் காலதாமதம் – மதிப்பீட்டில் இல்லாத பணி செய்தது – ஆணையர் அங்கீகாரம் பெறப்பட வில்லை – குறைபாடுகள்**

பணியின் விவரம்	:	ஆயிரம் கால் மண்டபம் சீரமைப்பு மின்னோட்டப் பணி
மதிப்பீடு தொகை	:	ரூ17,25,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	:	ஆணையர்ந.க. 39783/09 நாள் 15.09.09
தொழில்நுட்ப அங்கீகாரம்	:	ஆணையர்ந.க. 39783/09 நாள் 19.09.09
டெண்டர்தாரர்	:	PMK Engineering Services, Madurai
டெண்டர் தொகை மற்றும்	:	ரூ.16,43,000/-
டெண்டர் அங்கீகாரம்		ந.க.3423/2010 நாள் 09.03.2010
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	2 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.1945/2009நாள் 29.03.10
பட்டியல் சிசி 3/ பகுதி	:	அளவீடு புத்தகம் இ 02/05 பக்கம் 75-85 செ.சீ.எண். 742 – 744 /22.10.10
தொகை	:	ரூ. 3,33,050/-
பிடித்தங்கள்	:	ரூ. 37,522/-
நிகரம்	:	ரூ. 2,95,528/-
பட்டியல் சிசி 4/ பகுதி	:	அளவீடு புத்தகம் இ 02/05 பக்கம் 90-98 செ.சீ.எண். 1735 – 1737 /21.03.11
தொகை	:	ரூ. 2,07,000/-
பிடித்தங்கள்	:	ரூ. 23,321/-
நிகரம்	:	ரூ. 1,83,679-
		பணி முன்னேற்றத்தில் உள்ளது.

அ) காலதாமதமாக பணி தொடரப் பட்டது – காலநீட்டிப்பு பெறப்படவில்லை:

2,07,000-

29.03.10 ல் வேலை உத்திரவுகள் வழங்கப்பட்டு இரண்டு மாத கால அவகாசத்தில் இப்பணி முடிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், 23.05.2010 க்குள் இப்பணிகள் முடிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சிசி 4/பகுதி பட்டியல் படி 21.03.2011 ல் தொகை பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது. பசலி 1421 ல் 10.12.2011 ல் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இந்நிலையில் இப்பணியினை முடித்திட சுமார் 11/2 ஆண்டு காலம் ஏற்பட்டுள்ளதை உறுதி செய்யப் படுகிறது.

கால தாமதத்திற்கான சரியான காரணங்கள் கோப்பினில் பதிவு செய்யப் பட்டு இணை ஆணையரின் ஒப்புதல் பெறப்படவில்லை. காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆணையாளருக்கு உடன் தெரிவித்து கால நீட்டிப்பு பெறப்படவில்லை. டெண்டர்தாரர் கால நீட்டிப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் செய்யவில்லை.

மேலும் இது குறித்து நிபுணர் குழுவின் கருத்து பெறப்பட்டதா, எப்போது பெறப்பட்டது, நிபுணர் குழுவால் வழங்கப்பட்ட கருத்துக்கள் என்ன, என்பது குறித்தும் கோப்பினில் பதிவுகள் ஏதும் இல்லை.

மதிப்பீட்டில் இல்லாத பணி – ஆணையர் அங்கீகாரம் பெறப்படாமல் செலவு ரூ 2,07,000/-

"Fabrication, Supply of SSB 315 AMPS incoming 10 Nos., 125 AMPS outgoing with BUS Bar inter connection powder coating etc.," என்ற பணி ஆணையரால் அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீட்டில் இடம் பெறவில்லை.

ஆனால் இப்பணி மேற்கொள்ளப் பட்டு சிசி 4/பகுதி – இல் ரூ 2,07,000/- பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது.

மதிப்பீட்டில் இல்லாத இப்பணியினை செய்யும் முன்னர் , இந்த பணி மேற்கொள்ளப் பட வேண்டிய அவசர, அவசியத்தை விளக்கி அலுவலக கோப்பினில் இணை ஆணையரிடம் உரிய உத்திரவுகள் ஏதும் பெறப்படவில்லை.

ஆயிரங்கால் மண்டபத்தில் மேற்கொள்ளப் படும் பணிகள் நிபுணர் குழுவின் ஆலோசனையின் படி மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில், இந்த பணிக்கு நிபுணர்குழுவின் கருத்துக்கள் பெறப்பட்ட விவரம் கோப்பின் வாயிலாக அறியப்பட வில்லை.

மேலும் இந்த மதிப்பீட்டினை ஆணையர் அங்கீகரித்துள்ள நிலையில், அங்கீகரித்த மதிப்பீட்டில் இல்லாத பணியினை செய்யவும், அதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் ஆணையரின் சிறப்பு அனுமதி உத்திரவுகள் ஏதும் பெறப்படவில்லை.

மதிப்பீட்டில் இல்லாத இப்பணியினை செய்ய ஒப்பந்ததாரருக்கு எழுத்து மூலமாக இணை ஆணையரால் தாக்கீது ஏதும் வழங்கப்பட்டதாக கோப்பினில் பதிவுகள் ஏதுமில்லை.

ஆணையர் ந.க 19678/2011 ஒய் 4 நாள் 2.5.11 குறிப்பில், முடிவறிக்கையில் **BUS Bar** இனம் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பணி துவங்கிய தருணத்தில் **BUS Bar** , இனம் தேவை எனத் தெரிந்தவுடன் ஏன் உரிய அனுமதி பெற்று செயல் படுத்தப்படவில்லை. உரிய நேரத்தில் அனுமதி பெறத் தவறிய உதவி பொறியாளர், மற்றும் உதவி செயற் பொறியாளர் மேல் ஏன் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாதென கோரப்பட்டுள்ளது.

இதனை நோக்கும் போது பொறியியல் பிரிவின் செயல் பாடுகளினால் ஆணையாளர் அதிருப்தியடைந்துள்ள விவரம் அறியப் படுகிறது.

இக்குறைபாடுகளினால் ஆணையர் அனுமதியின்றி மேற் கொள்ளப் பட்ட செலவுரூ 2,07,000/- ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

44

24) **வேலைகள் – மேற்கு மற்றும் வடக்கு கோபுர வாயில்களில் – இரும்பு கிரில் அமைத்தல் – பணி முடிப்பதில் கால தாமதம் – மிகைப்பணி அங்கீகாரம் பெறப்படவில்லை – குறைபாடுகள்**

26)

பணியின் விவரம்	:	மேற்கு மற்றும் கவடக்கு கோபுர வாயில்களில் இரும்பு கிரில் அமைத்தல்
மதிப்பீடு தொகை	:	ரூ4,85,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	:	இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க. 3675/2009 நாள் 13.01.2010
டெண்டர்தாரர்	:	பி. ஆசைத்தம்பி
டெண்டர் தொகை மற்றும் டெண்டர் அங்கீகாரம்	:	ரூ.4,99,520.00 ந.க.3675/2009 நாள் 11.03.2010
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	1 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.3675/2009 நாள் 23.03.2010
பட்டியல் சிசி 1/ பகுதி	:	அளவீடு புத்தகம் 06/09 பக்கம் 87-88 செ.சீ.எண். 739 – 741 /22.10.2010
தொகை	:	ரூ. 1,02,520/-
பிடித்தங்கள்	:	ரூ. 9,499/-
நிகரம்	:	ரூ. 93,021/-
பட்டியல் சிசி 2 / பகுதி	:	அளவீடு புத்தகம் 8/09 பக்கம் 88-93 செ.சீ.எண். 2429 – 2431 /30.06.2011
தொகை	:	ரூ. 1,83,408/-
பிடித்தங்கள்	:	ரூ. 16,994/-
நிகரம்	:	ரூ. 1,66,414/-

பணி முன்னேற்றத்தில் உள்ளது.

20.04.2010ல் ஒரு மாத கால அவகாசதத்தில் இப்பணி முடிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், சிசி 1/ பகுதி முடிக்கப்பட்டு 22.10.2010ல் தொகை பட்டுவாடா செய்யப்பட்ட நிலையில் சுமார் 8 மாத இடைவெளிக்கு பின்னர், சிசி 2/ பகுதி பட்டுவாடா செய்யப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி முடிப்பதில் கால தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் கோப்பில் பதிவு செய்யப்படவில்லை.

37,800/-

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் **Duro Aluminium Sheet Roof with necessary supports** என்ற பணி 36 சதுர மீட்டர் அளவிற்கு மேற்கொள்ளப்பட வேண்டமென உள்ளது. ஆனால் 63 சதுர மீட்டர் மேற்கொள்ளப்பட்டு சிசி2/பகுதியில் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மிகையாக இப்பணி மேற்கொள்ளப்பட்ட வகையில் ரூ.37,800/- கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

இப்பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்படவேண்டிய அவசர. அவசியம் குறித்து, குறிப்புக் கோப்பில் விவரம் பதிவு செய்து இணை ஆணையரின் உத்திரவு பெறப்படாமலேயே தொகை வழங்கப்பட்டுள்ளதை தணிக்கையில் ஏற்க இயலாது.

ஆதலின் இம்மிகைச் செலவு ரூ.37,800/-ம் தணிக்கை தடையின்கீழ் வைக்கப்படுகிறது.

இப்பணிகள் முடிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினை பரிசீலனை செய்யும்போது, வேறு பிரத்தியே காரணங்கள் ஏதும் இருக்கலாம் என தணிக்கையில் ஐயுறப்படுகிறது.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிகவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப் படுகிறது.

25). 27)

வேலைகள் – தெற்கு மற்றும் கிழக்கு சித்திரை வீதி – அலங்கார கிரில் அமைத்தல் – பணி முடிப்பதில் கால தாமதம் – வேலை சிட்டை தயார் செய்ததில் காரணங்கள் குறிப்பிடப்படவில்லை – குறைபாடுகள்

பணியின் விவரம்	:	தெற்கு மற்றும் கிழக்கு சித்திரை வீதி அலங்கார கிரில் அமைத்தல் பணி
மதிப்பீடு தொகை	:	ரூ4,80,000/-
மதிப்பீடு அங்கீகாரம்	:	இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க. 3674/2009 நாள் 08.01.2010
டெண்டர்தாரர்	:	பி. ஆசைத்தம்பி
டெண்டர் தொகை மற்றும் டெண்டர் அங்கீகாரம்	:	ரூ.4,91,441.00 (negotiated) ந.க.3674/2009 நாள் 09.03.2010
பணி முடிக்கப்படவேண்டிய காலம்	:	1 மாதம்
வேலை உத்திரவு நாள்	:	ந.க.3674/2009 நாள் 23.03.2010
பட்டியல் சிசி 1/ பகுதி	:	அளவீடு புத்தகம் 05/10 பக்கம் 42-44 செ.சீ.எண். 722 – 724 /18.07.2010
தொகை	:	ரூ. 1,53,760/-
பிடித்தங்கள்	:	ரூ. 14,248/-
நிகரம்	:	ரூ. 1,39,512/-
பட்டியல் சிசி 2 / பகுதி	:	அளவீடு புத்தகம் 5/10 பக்கம் 54-62 செ.சீ.எண். 2426 – 2428 /29.06.2011
தொகை	:	ரூ. 2,24,249/-
பிடித்தங்கள்	:	ரூ. 20,779/-
நிகரம்	:	ரூ. 2,03,470/- பணிமுன்னேற்றத்தில்உள்ளது.

09.04.2010ல் ஒரு மாத கால அவகாசததில் இப்பணி முடிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், சிசி 1/ பகுதி முடிக்கப்பட்டு 18.07.2010ல் தொகை பட்டுவாடா செய்யப்பட்ட நிலையில் சுமார் 10 மாத இடைவெளிக்கு பின்னர், சிசி 2/ பகுதி பட்டுவாடா செய்யப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி முடிப்பதில் கால தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் கோப்பில் பதிவு செய்யப்படவில்லை.

உதவி செயல் பொறியாளர் கடிதம் நாள் 15.09.2011 ல் வேலை சிட்டை தயார் செய்து மொத்தப் பணியினை ரூ.4,93,104/- க்குள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட வேலை சிட்டையில் ஏன் பணி மாறுபாடு செய்யப்பட்டது என்பதற்கான காரணங்கள் பதிவு செய்யப்படவில்லை. இக்கோப்பிலும் பணி மாறுபாடு குறித்து இணை ஆணையரின் உத்திரவு, அரங்காவலர் குழுத் தலைவரின் தீர்மானமும் பெறப்படவில்லை.

இப்பணிகள் முடிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினை பரிசீலனை செய்யும்போது, வேறு பிரத்தியே காரணங்கள் ஏதும் இருக்கலாம் என தணிக்கையில் ஐயுறப்படுகிறது.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிகவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப் படுகிறது.

26) 28) **டெண்டர் படிவம் - டெண்டர் படிவ விற்பனை வரவு ரூ 68,320/- டெண்டர் படிவ விற்பனை கண்காணிக்கப் படவில்லை - டெண்டர் படிவ இருப்புப் பதிவேடு பேணப் படவில்லை மற்றும் குறைபாடுகள்**

இத்திருக்கோயிலில் பல்வேறு வேலைகளுக்காக டெண்டர்கள் கோரப்பட்டு, டெண்டர் படிவம் விற்பனை செய்யப் பட்டுள்ளன. தணிக்கையாண்டில் டெண்டர் படிவங்கள் விற்பனை செய்யப் பட்டு ரூ68,320/- வருவாயாக பெறப்பட்டுள்ளன.

ஆனால் ஒவ்வொரு பணியின் மதிப்பீடு தொகை எவ்வளவு என்றும், அப்பணிக்கு எத்தனை டெண்டர் படிவங்கள் தயாரிக்கப் பட்டன என்றும், அப்படிவங்கள் யார் பொறுப்பில் உள்ளன என்றும்,டெண்டர் படிவங்கள் யார், யாருக்கு எந்த தேதிகளில் எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப் பட்டது என்றும், விற்பனை செய்யப் பட்டது போக எஞ்சிய டெண்டர் படிவங்கள் எத்தனை என்றும், அறியும் வகையில் இவ்விவரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஏதும் பேணப் படவில்லை.

இதனால் ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு ஏற்றாற் போல் அமுலில் உள்ள அரசாணைப் படி டெண்டர் படிவத்திற்கு விற்பனை விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளதா என்பதையும், ஒவ்வொரு பணிக்கும் எத்தனை டெண்டர் படிவங்கள் யார்,யாருக்கு விற்பனை செய்யப் பட்டன என்பதையும், டெண்டர் படிவங்களுக்கான விற்பனைத் தொகை முழுவதுமாக திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளதா என்பதையும், டெண்டர் படிவத்தினை பெற்ற நபர்கள் மட்டுமே டெண்டரில் கலந்து கொண்டு டெண்டர் கோரியுள்ளனரா என்பதையும், விற்பனையாகாமல் உள்ள டெண்டர் படிவங்கள் அனைத்தும் திருக்கோயிலின் இருப்பில் உள்ளனவா என்பதையும் தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

டெண்டர் படிவங்கள் திருக்கோயிலின் பொறியியல் பிரிவில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப் பட்டுள்ளன. உதவிக்கோட்டப் பொறியாளர் தலைமை ஏற்றுள்ள இந்த பொறியியல் பிரிவில், அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான அனைத்து தொழில் நுட்ப பணியாளர்களும் பணியில் உள்ளனர்.இருப்பினும் கணிசமான வருவாய் ஈட்டப்படும் டெண்டர் படிவ விற்பனை வரவுகளை சரிவர கண்காணிக்கும் வகையில் உரிய பதிவேடுகள் ஏதும் பேணப்படாமல் உள்ளதை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

ஆதலின் இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

27). 29) <u>பணிப்பிரிவு – ஓய்வு பெற்ற சேவகர் திரு வீ.செல்வராஜ் – அகவிலைப் படி அதிகமாக வழங்கியது ரூ 1683/- திரும்பப் பெறப்படல் வேண்டும் – குறைபாடுகள்</u>

இவர் சேவகராகப் பணியாற்றி 31.08.10 ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு இணை ஆணையர் / செயல் அலுவலர் ந.க. 2704/2010 ஆ2 நாள் 20.8.10 உத்திரவில் 90 தினங்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது.

இவருக்கு ஒப்படைப்பு விடுப்புச் சம்பளம் வழங்கப் பட்ட போது உரிய வீதப்படி (74 %) அகவிலைப் படி வழங்கப்பட்ட நிலையில், புதிய சம்பள வீதப்படி சம்பள நிலுவைகள் கணக்கீடு செய்யப் பட்ட போது ஏற்கெனவே உரிய வீதப்படி (74 %) அகவிலைப்படி வழங்கப்பட்டதை கணக்கில் கொள்ளாமல், (64 %) – ல் அகவிலைப்படி வழங்கப்பட்டதாக கருதி திரும்பவும் (10 %) அகவிலைப் படி கணக்கீடு செய்யப் பட்டுள்ளதால் இவருக்கு ரூ 1,683/- கூடுதலாக நிலுவைத் தொகை வழங்கப் பட்டுள்ளது. (சம்பளப் பதிவேடு பக்கம் 88)

ஆதலின் கூடுதலாக வழங்கப்பட்ட அகவிலைப்படி நிலுவைத் தொகை ரூ 1,683/- ஐ அன்னாரிடமிருந்து பிடித்தம் செய்து திருக்கோயிலின் கணக்கில் வரவாக்கப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

28) <u>முதலீடுகள் – முதிர்வடைந்த முதலீடுகளின் வட்டியிலிருந்து – வருமான வரியாக ரூ 6,71,126.11/- பிடித்தம் செய்யப்பட்டுள்ளது – திரும்பப் பெறப் படவேண்டும் – குறைபாடுகள்</u>

அ) அரசு வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள இத்திருக் கோயில் உபரி நிதி தணிக்கையாண்டில் முதிர்வடைந்த நேர்வுகளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள விவரப்படி வருமானவரியாக ரூ 6,71,126.11 பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

1961 ம் வருடத்திய வருமான வரிச் சட்டம் பிரிவு 11(5)(vii) – ன் படி திருக்கோயிலின் உபரி நிதி முதலீடு வட்டிக்கு வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள நிலையில், தணிக்கை யாண்டில் கணிசமான தொகை திருக்கோயிலின் முதலீடு வட்டியில் வருமானவரியாக பிடித்தம் செய்யப்பட்டுள்ள நிலையில், உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தணிக்கையாண்டில் வருமானவரியாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ 6,71,121.11 ஐ திரும்பப் பெறும் பொருட்டு இத்தொகை தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப்படுகிறது.

உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருமானவரியாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ 6,71,121.11ஐ திரும்பப் பெறப்பட்டு திருக்கோயில் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

ஆ) முதலீடு வட்டியினைப் பொறுத்தமட்டில், முதலீடு வட்டி மீதான வருமான வரி பிடித்தம் போக மீதம் பெறப்படும் தொகையே வட்டி வரவாக எடுத்துக் கொள்ளப்பட்டு வரவாகவும் காண்பிக்கப்பட்டு முதலீடு வட்டி வசூல் நிலுவைப்பதிவேடு தயாரிக்கும் முறை வழக்கத்தில் உள்ளது. இது தவறான முறையாகும். அந்தந்த முதலீடுகளுக்குரிய மொத்த வட்டியும் வரவாக வைக்கப் பட்டு, வரவு வைக்கப்பட்ட தொகை போக (அதாவது முதலீடு வட்டிக்கான வருமானவரி பிடித்தம் போக மீதித் தொகை) மீதித் தொகை (வருமானவரி பிடித்தம்) நிலுவையாக காண்பிக்கப்படல் வேண்டும். முதலீடு வட்டி மீதான வருமானவரி பெறப்படும் போது நிலுவைத் தொகைக்கு முதலீடு வட்டி வரவாக கணக்கில் கொள்ளப் படல் வேண்டும். இனி வரும் காலங்களில் இம்முறையினை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும்.

முதலீடு வட்டியிலிருந்து வருமானவரி பிடித்தம் – சுருக்கப்பட்டியல் – பசலி 1420						
வ எண்	வங்கி விவரம்	முதலீடு எண்/நாள்	முதலீடு தொகை	முதிர்வு தொகை	பெறப் பட்ட முதிர்வு தொகை	வருமான வரி பிடித்தம்
1	எஸ்.பி.ஐ	0883769/11.4.08	1000000.00	1287019	1276362	10657.00
2	எஸ்.பி.ஐ	0883910/14.6.08	5000000.00	1520677	1466413	54264.00
3	எஸ்.பி.ஐ	0883159/22.1.09	2654480.00	358063	328901	29162.00
4	சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா	0624023/15.5.08	1500000.00	444753	381096	63657.00
5	இந்தியன் வங்கி	799503/18.8.07	1103961.00	337867	308227	29640.00
6	இந்தியன் வங்கி	379972/14.9.07	2500000.00	741307	669616	71691.00
7	இந்தியன் வங்கி	799266/11.7.07	165805.00	50745	48900	1845.00
8	இந்தியன் வங்கி	0914476/9.8.08	5038130.00	1484195	1386314	97881.00
9	இந்தியன் வங்கி	0914768/8.9.08	2254566.00	470193	429307	40886.00
10	கரூர்வைசியா வங்கி	175605/8.9.08	2656021.00	968657.95	932921	35737.23
11	கரூர்வைசியா வங்கி	938850/11.1.08	2500000.00	813347.49	749879	63468.11
12	எஸ்.பி.எச்	0325567/14.5.08	3000000.00	889507	793107	96400.00
13	எஸ்.பி.எச்	62135007592/ 22.6.10	929215.00	61887	55701	6186.00
14	பேங்க் ஆப் இந்தியா	5368261/22.7.07	1389000.00	457297.68	417505	39792.23
15	ஆந்திரா வங்கி	180529/11.4.08	600000.00	177901	158291	19610.00
16	பேங்க் ஆப் இந்தியா	9451236/23.8.07	1229400.26	388075.05	374825	13249.84
				கூடுதல்		674126.41

உதவித் தணிக்கை அலுவலர் | துணை தலைமைத் தணிக்கை அலுவலர்

50

29) <u>தங்கக் கட்டிகள் விற்பனை – விற்பனை வரவுகள் அரசு நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப் படாமல் அரசுடமை வங்கியில் முதலீடு செய்யப் பட்டது – வட்டி வருவாய் இழப்பு ரூ 2,11,451/- – குறைபாடுகள்</u>

31)

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக இத்திருக்கோயிலின் இருப்பில் உள்ள தங்கக் கட்டிகளிலிருந்து 4.600 கிலோ கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகளை திருப்பரங்குன்றம் அமிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கொள்முதல் நாளன்று நிலவும் விலையில் கொள்முதல் செய்து கொள்ள ஆணையர் ஓ.மு 71953/10 ஐ2 –1 நாள் 14.12.10 ல் திருப்பரங்குன்றம் துணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அனுமதி அளிக்கப் பட்டு அதன் விவரம் இத்திருக்கோயிலுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி மதுரை, நகை வியாபாரிகள் சங்கத்திலிருந்து 16.12.10 அன்று நிலவிய விலை குறித்து சான்று பெற்று கிராம் ரூ 2043/- வீதம் 4.600 கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப் பட்டு அதற்கான தொகை ரூ 93,97,800/- பெறப்பட்டு மதுரை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதலீடு எண் 043526/8.1.11 ன் படி 9 % வட்டி வீதத்தில் ஒன்றரை ஆண்டுக்கு முதலீடு செய்யப் பட்டுள்ளது.

இந்த விற்பனை வரவானது, அசையா சொத்துக்கள் விற்பனை செய்து பெறப்படும் வரவுக்கு ஒப்பாகும். ஆகையால் இந்த விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை மூலதன வரவாக உள்ள நிலையில், அரசாணை நிலை எண் 36 வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 2.2.98 மற்றும் ஆணையர் ப.மு. 8822/98 வி2 நாள் 21.2.98 ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி தங்க கட்டிகளை விற்பனை செய்து பெறப்பட்ட தொகை ரூ 93,97,800/- ஐ அதிக வட்டி ஈட்டும் வகையில் அரசு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப் படாமல் அரசுடமை வங்கியில் முதலீடு செய்யப் பட்டுள்ள தால் குறைந்த பட்சம் 1.5 % வீதம் ஆண்டொன்றுக்கு ரூ 1,40,967/- வீதம் ஒன்றரை ஆண்டுக்கு ரூ 2,11,451/- இழப்பு ஏற்பட்டுள்ளது.

2,11,451/-

மேலும் தாய்கோ வங்கியில் புதிதாக 1 கோடி முதலீடு செய்யப்படும் நேர்வுகளில் சிறப்பு வட்டி விகிதமாக நடைமுறையில் வழங்கப்படும் வட்டி வீதத்துடன் 1 % சேர்த்து வட்டி வீதம் வழங்கப் பட்டு வருகிறது. இந்த நிலையில், பெறப்பட்ட தங்கக் கட்டிகள் விற்பனைத் தொகையுடன் திருக்கோயில் நிதியினையும் சேர்த்து 1 கோடி முதலீடு செய்யப் பட்டிருப்பின் சிறப்பு வட்டி வீதம் பெறப்பட்டிருக்கலாம்.

எனவே, அரசாணை மற்றும் ஆணையர் அறிவுரைகளை பின்பற்றி அதிக வட்டி ஈட்டும் வகையில் அரசு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப் படாததால் திருக்கோயிலுக்கு ஏற்பட்டுள்ள வட்டி வருவாய் இழப்பு ரூ 2,11,451/-ம் பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

25) 184 **தங்கக் கட்டிகள் விற்பனை - இருப்புப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை - விற்பனை வரவுகள் அரசு நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப் படவில்லை - இருப்பிலுள்ள தங்கக் கட்டிகளை வட்டி ஈட்டும் வகையில் அரசுடமை வங்கியில் முதலீடு செய்யப் படவில்லை - குறைபாடுகள்**

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக இத்திருக்கோயிலின் இருப்பில் உள்ள தங்கக் கட்டிகளிலிருந்து 4.600 கிலோ கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகளை திருப்பரங்குன்றம் அமிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கொள்முதல் நாளன்று நிலவும் விலையில் கொள்முதல் செய்து கொள்ள ஆணையர் ஓ.மு 71953/10 ஐ2 -1 நாள் 14.12.10 ல் திருப்பரங்குன்றம் துணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அனுமதி அளிக்கப் பட்டு அதன் விவரம் இத்திருக்கோயிலுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி மதுரை, நகை வியாபாரிகள் சங்கத்திலிருந்து 16.12.10 அன்று நிலவிய விலை குறித்து சான்று பெற்று கிராம் ரூ. 2043/- வீதம் 4.600 கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப் பட்டு அதற்கான தொகை ரூ 93,97,800/- பெறப்பட்டு மதுரை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதலீடு எண் 043526/8.1.11 ன் படி 9 % வட்டி வீதத்தில் ஒன்றரை ஆண்டுக்கு முதலீடு செய்யப் பட்டுள்ளது.

இதில் காணப்பட்ட குறைபாடுகள்

1) இத்திருக்கோயிலின் இருப்பிலிருந்த 4.600 கிலோ தங்கம் திருப்பரங்குன்றம் அமிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு ஆணையர் உத்திரவுப்படி விற்பனை செய்யப்பட்டு பெறப்பட்ட தொகையினை முதலீடு செய்யப் பட்டுள்ள விவரம் குறித்து ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை.

2) இத்திருக்கோயிலின் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவை களின் இருப்புப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை.

3) அ) உருக்கப்பட்டு இதுவரை எவ்வளவு எடையுள்ள தங்கக் கட்டிகள் பெறப்பட்டன,

ஆ) எந்தெந்த நேர்வுகளில் எவ்வளவு எடையுள்ள தங்கக் கட்டிகள் பயன் படுத்தப் பட்டன,

இ) எவ்வளவு எடையுள்ள தங்கக் கட்டிகள் விற்பனை செய்யப் பட்டன,

ஈ) தற்போது இருப்பிலுள்ள தங்கக்கட்டிகளின் எடை அளவ், மற்றும் எண்ணிக்கையுடன் உரிய பதிவேடு பேணப் படவில்லை.

எனவே, உரிய பதிவேடுகள் பேணி, இருப்பிலுள்ள தங்க கட்டிகளை ஆணையர் அறிவுரைப்படி வட்டி ஈட்டும் வகையில் வங்கியில் முதலீடு செய்யப்படல் வேண்டும்.

4) இது மூலதன வரவாக உள்ள நிலையில், அரசாணை நிலை எண் 36 வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 2.2.98 மற்றும் ஆணையர் ப.மு. 8822/98 வி2 நாள் 21.2.98 ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி தங்க கட்டிகளை விற்பனை செய்து பெறப்பட்ட தொகை ரூ 93,97,800/- ஐ அதிக வட்டி ஈட்டும் வகையில் அரசு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப் படாமல் அரசுடமை வங்கியில் முதலீடு செய்யப் பட்டுள்ள தால் குறைந்த பட்சம் 1.5 % வீதம் ஆண்டொன்றுக்கு ரூ 1,40,967/- வட்டி இழப்பு ஏற்படுகிறது.

எனவே, அரசாணை மற்றும் ஆணையர் அறிவுரைகளை பின்பற்றி அதிக வட்டி ஈட்டும் வகையில் அரசு நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகளைக் களைய உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

30). **<u>வைப்புத் தொகை – திருப்பணி கணக்கில் பிடித்தம் செய்துவைக்கப்பட்ட வைப்புத் தொகையை பொது நிதியிலிருந்து திருப்பியது – ரூ 37,505/- திருப்பணி நிதியிலிருந்து திரும்ப பெறப்படவேண்டும் – குறைபாடுகள்.</u>**

இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகளுக்கான பட்டியலில் பிடித்தம் செய்து திருப்பணி கணக்கில் வரவாக்கப்பட்ட தொகையை பொது நிதியிலிருந்து கீழ்கண்ட விவரப்படி திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

32)

அதாவது பொது நிதியில் வரவாக்கப்படாத வைப்புத் தொகை இனங்களுக்கு பொதுநிதியிலிருந்து வைப்புத் தொகை தலைப்பின் கீழ் திருப்பப் பட்டு செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:

வ எண்	செ சீ எண் / நாள்	விவரம்	தொகை
1	1403/10,03,2011	மின்நிலையம் மேம்பாட்டுப்பணி நிறுத்திவைக்கபட்ட தொகை திருப்பியது	ரூ 13,315/-
2	1404/10.03.2011	வடக்காடி வீதி காம்பவுண்டு சுவர் மின்பாதை மாற்றி அமைக்கும் பணி	ரூ 12,159/-
3	1853/05.04.2011	வடக்காடி வீதி காம்பவுண்டு சுவர் மின்பாதை மாற்றி அமைக்கும் பணி	ரூ 12,031/-
		மொத்தம்	ரூ 37,505/-

37505/-

மேற்கண்ட விவரத்திலிருந்து வைப்புத்தொகை திருப்பப் படும் முன்னர், அந்தத் தொகை வைப்புத் தொகை தலைப்பின் கீழ் வரவாக பெறப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்கப் படவில்லை என்பது உறுதி செய்யப் படுகிறது.

திருப்பணியிலிருந்து திரும்ப பெறப்படும் பொருட்டு இத்தொகை ரூ 37,505/- தணிக்கை தடையின்கீழ் வைக்கப்படுகிறது.

இத்தொகை ரூ 37,505/- ம் திருப்பணியிலிருந்து திரும்ப பெறப்பட்டு பொது கணக்கில் வரவாக்கப்படவும், வைப்புத் தொகை திருப்பப் படும் முன்னர் திருப்பப் படும் வைப்புத் தொகை திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யப் படவும், உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பசுமடம் – பசுக்களிலிருந்து கறக்கப்பட்ட பால் – சுமார் மதிப்பு ரூ 2,19,000/– பயன்பாட்டிற்கான ஆதாரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை – குறைபாடுகள்

இத்திருக்கோயிலின் பசுமடத்தில் தணிக்கையாண்டில் 35 பசுமாடுகள் மற்றும் கன்றுகள் இருந்துள்ள நிலையில், தோராயமாக ஆண்டு முழுவதும் 10 கறவை மாடுகள் இருந்துள்ளன. இந்தக் கறவை மாடுகள் மூலம் நாள் ஒன்றுக்கு காலையில் சுமார் 15 லிட்டரும், மாலையில் சுமார் 15 லிட்டரும் ஆக கூடுதல் 30 லிட்டர் பால் கறக்கப்பட்டிருக்கக் கூடும்.

இவ்வாறு கறக்கப் பட்ட பால் பிரதான திருக்கோயிலின் அம்மன்/ சுவாமி அபிஷேகத்திற்கு வழங்கப்பட்டதாக தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அம்மன் / சுவாமி அபிஷேகத்திற்கு பால் வழங்கப்பட்டதற்கு ஆணையரின் அனுமதி உத்திரவுகளோ, அபிசேகத்திற்கு பால் வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக உரிய உள்துறை அலுவலரிடமிருந்து ஒப்புதலோ பெறப்படவில்லை. இது தொடர்பாக பதிவேடுகள் ஏதும் பேணப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

மேலும் தணிக்கையாண்டில் அம்மன் / சுவாமி அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர் ஆகியவை திட்டப்படி தனியே கொள்முதல் செய்யப்பட்டும், அம்மன் / சுவாமி சிறப்பு அபிஷேகத்திற்கு பெறப்பட்ட கட்டணத்தொகையிலிருந்து (ரூ 1300/–) திட்டப்படி தேவையான பால் தனியே கொள்முதல் செய்யப்பட்டும், செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்நிலையில், திட்டப்படி அம்மன் / சுவாமி அபிஷேகத்திற்கு தேவையான பால் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப் பட்டுள்ள நிலையில், ஆணையரின் அனுமதியுமின்றி, அபிசேகத்திற்கு பால் வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக உரிய அலுவலரின் ஒப்புதல் ஏதுமின்றி, அம்மன்/சுவாமி அபிஷேகத்திற்கு நாள்தோறும் தோராயமாக 30 லிட்டர் பால் பசுமடத்திலிருந்து வழங்கப்பட்டதென்ற கூற்றினை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

இவ்வகையில் தணிக்கையாண்டில் பசுமடத்திலிருந்த பசுக்கள் மூலம் கறக்கப்பட்ட மொத்த பாலின் தோராய மதிப்பு ரூ 2,19,000/–ம் (30 லிட்டர் பால் x ரூ.20/– x 365 நாள்) தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப்படுகிறது.

இதுகுறித்து தக்க விசாரணை மேற்கொண்டு, பசுமடத்திலிருந்து பால் பெறப்பட்டதா, நாள்தோறும் எத்தனை லிட்டர் பால் பெறப்பட்டது, பெறப்பட்ட பால் எவ்வாறு பயன் படுத்தப் பட்டது, பசுமடத்திலிருந்து பால் பெறப்பட்டு அம்மன்/சுவாமி அபிசேகத்திற்கு பயன் படுத்தப் பட்ட நிலையில், திரும்பவும் திட்டப்படி அபிசேகத்திற்கு பால் கொள்முதல் செய்யப் பட்டதற்கான சிறப்பு காரணம் என்ன, நாள்தோறும் அம்மன்/சுவாமி அபிசேகத்திற்கு எத்தனை லிட்டர் பால் பயன்படுத்தப் பட்டது என்கிற விவரங்கள் உறுதிசெய்யப் பட்டு , இழப்பு கண்டறியப்பட்டு, இழப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, இழப்பினை பொறுப்பான நபர் / நபர்களால் ஈடுசெய்யப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிக்கவனத்திற்கும் தக்க நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுகிறது.

55

32) **குறும்படம் தயாரித்தல் பணி – Trade channel – Chennai – நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணி நிறைவு பெறாத நிலையில் சென்னையை சேர்ந்த விசாலாட்சி நிறுவனத்திற்கு வழங்கியது – Trade channel – Chennai – நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்பணம் – தொடர் நடவடிக்கை ஏதுமில்லை – குறைபாடுகள்**

34-

ஆணையர் ந.க. 57216/09 கே4 நாள் 5.10.09 குறிப்பில், திருத்தல பெருமை, முக்கிய விழாக்கள் ஆகியவற்றை விளக்குகின்ற குறும்படங்களை அந்தந்த திருக்கோயில் சார்பில் முக்கிய மொழிகளில் தயாரிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆணையர் ந.க. 57216/09 கே4 நாள் 11.12.10 குறிப்பில், Trade channel – Chennai – என்ற நிறுவனம் அரசாணை நிலை எண் 16 செய்தி மற்றும் சுற்றுலா (தி.தொ) துறை நாள் 27.2.1999 ன் படி தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் தயாரிப்பாளர் என்றும், இந்நிறுவனத்தால் தரப்பட்டுள்ள மதிப்பீடுகள் மற்றும் வரி வடிவங்களைப் பரிசீலித்து ஆணையர் அனுமதி பெற அறிவுறுத்தப் பட்டுள்ளது.

ஆணையர் ந.க. 57216/09 கே4 நாள் 24.02.2010 உத்திரவில் குறும்படம் தயாரிக்க Trade channel – Chennai – என்ற நிறுவனத்தால் தரப்பட்டுள்ள ரூ 6,55,000/– க்கான மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கியும், மேற்படி நிறுவனத்தின் மூலம் குறும்படம் தயாரிக்கும் பணிகளை மேற்கொள்ள அனுமதியும் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

டெண்டர் நிபந்தனைகளின் படி Trade channel – Chennai நிறுவனத்திடம் பிணை வைப்புத் தொகை பெறப்பட்ட விவரமும், ஒப்பந்தப் பத்திரம் பெறப்பட்ட விவரமும் கோப்பு வாயிலாக அறியப்படவில்லை. பசலி 1419 ல் இந்த நிறுவனத்திற்கு ரூ.2,62,000/– முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இணை ஆணையர் /செயல் அலுவலர் ந.க. 3460/2009 யு4 நாள் 21.12.10 குறிப்பில் பசலி 1419 ல் இந் நிறுவனத்திற்கு ரூ 2,62,000/– முன்பணமாக வழங்கப்பட்டதாகவும், பலமுறை தொடர்பு கொண்ட நிலையில் தகவல் ஏதும் தெரிவிக்காமல் காலதாமதம் செய்து வருவதாகவும், மேலும் காலதாமதம் செய்தால் தங்களுக்கு வழங்கிய வேலை உத்திரவினை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப் படும் என்றும், தங்களுக்கு திருக்கோயிலிலிருந்து வழங்கப்பட்ட முன்பணத்தினை திருக்கோயிலுக்கு திரும்ப செலுத்த வேண்டும் என்றும் தவறினால் தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் இறுதியாக எச்சரிக்கப் படுவதாக Trade channel – Chennai நிறுவனத்திற்கு தாக்கீது அனுப்பி அதன் விவரம் ஆணையாளருக்கும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

மேலும் இப்பணியினை சென்னையை சேர்ந்த விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனம் ரூ 3,80,000/- க்கு முடித்துத்தர சம்மதம் தெரிவித்துள்ளதால், Trade channel – Chennai நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை ஆணையை இரத்து செய்து, சென்னையை சேர்ந்த விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ 3,80,000/- செலவில் பணியினை தொடரவும் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திடம் என்னென்ன பணிகள் செய்ய வேண்டியுள்ளது எனத் தெரிவித்து அதனை செய்ய இனவாரியாக ஆகும் செலவு என்ன என்று கோரப்பட்ட விவரங்கள் ஏதும் கோப்பின் வாயிலாக அறியப்படவில்லை.

ஆணையர் ந.க. 57216/09 கே4 நாள் 2.2.11 உத்திரவில் குறும்படம் தயாரிக்க Trade channel – Chennai க்கு வழங்கப்பட்ட உத்திரவினை இரத்து செய்தும், சென்னையை சேர்ந்த விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ 3,80,000/- செலவில் இப்பணியினை தொடரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம், நிபந்தனைகள் விவரம் கோப்புக்கள் வாயிலாக அறியப்படவில்லை. தணிக்கையாண்டில் இந்நிறுவனத்திற்கு செலவுச்சீட்டு எண் 1644/13.03.2011 ன்படி ரூ.1,00,000/-ம், செலவுச்சீட்டு எண் 2033/30.04.2011 ன்படி ரூ.2,00,000/-ம், செலவுச்சீட்டு எண் 2365/23.06.2011 ன்படி ரூ.80,000/-ம் ஆக மொத்தம் ரூ 3,80,000/- பட்டுவாடா செய்யப் பட்டுள்ளது.

இந்நிலையில் Trade channel – Chennai நிறுவனம், திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு முகவரியிட்ட கடிதம் நாள் இல்லை – (திருக்கோயிலில் பெறப்பட்டது நாள் 2.7.10) – ல், இறுதிக்கட்ட படப்பிடிப்பு முடிந்ததாகவும், முதல் ப்ரிவியூ கட்டிங் முடிந்ததாகவும், பணியாணையின் படி ஒப்புதல் அளித்துள்ள வரிவடிவம் சம்மந்தப் பட்ட அனைத்து படப்பிடிப்புகளும் முடிந்ததாகவும், திருப்பணி இணைஆணையர் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளதாகவும், தங்களுக்கு மூன்றாம் தவணைத் தொகையினை வழங்க ஆணை செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்விவரங்கள் 2.7.10 ல் திருக்கோயில் செயல் அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும், இணை ஆணையர் /செயல் அலுவலர் ந.க. 3460/2009 யு4 நாள் 21.12.10 குறிப்பில் Trade channel – Chennai நிறுவனத்திற்கு ஏன் தாக்கீது அனுப்பப் பட்டதென்ற விவரம் தணிக்கையில் அறியப் படவில்லை.

மேலும் Trade channel – Chennai நிறுவனத்தினரின் கடிதப்படி குறும்படம் எடுக்கும் பணி 100 % முடிக்கப் பட்ட நிலையில், முதற் கட்டமாக பெறப்பட்ட முன்பணம் போக எஞ்சிய தொகையை மேற்படி நிறுவனர் கோராமல் விட்டதற்கான காரணங்களும் தணிக்கையில் அறியப் படவில்லை.

ஏற்கெனவே Trade channel – Chennai நிறுவனத்தினரால் குறும்படம் எடுக்கும் பணி 100 % முடிக்கப் பட்ட நிலையில், சென்னையை சேர்ந்த விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனத்திற்கு எதன் அடிப்படையில் ரூ 3,80,000/- செலவில் இப்பணியினை முடித்து வழங்க முன்வந்ததாகத் தெரிவித்து ஆணையர் அனுமதி பெறப்பட்டது, என்னென்ன பணிகளை Trade channel – Chennai நிறுவனம் செய்யவில்லை, அப்பணிகளை செய்ய ஆகும் செலவிற்கான Break up details விவரம் ஆகிய விவரங்களை கோப்பிலிருந்து அறியப் படவில்லை.

மேலும் சென்னையை சேர்ந்த விசாலாட்சி பிலிம்ஸ் என்ற நிறுவனத்தால் என்னென்ன பணிகள் இறுதியாக மேற்கொண்டன என்பதையும், எடிட்டிங் முடித்து இறுதி செய்யப் பட்ட DVD மாஸ்டரும், திருக்கோயிலுக்குத் தேவையான அதன் பிரதிகளும் திருக்கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டனவா என்பதையும், கோப்புக்கள் வாயிலாக அறியப் படவில்லை. மேலும் இந்நிறுவனத்தினரால் குறும்படம் தயாரிப்பு தொடர்பாக என்னென்ன ஆவணங்கள் ஒப்படைக்கப் பட்டன, அவைகளுக்கான இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டனவா எனவும் தணிக்கையில் அறியப்படவில்லை.

Trade channel – Chennai நிறுவனம் இணை ஆணையர் – திருப்பணி அவர்கள் வசம் ஒப்படைத்த குறும்படம் தொடர்பான எடிட்டிங் முடித்து இறுதி செய்யப் பட்ட DVD மாஸ்டரும், திருக்கோயிலுக்குத் தேவையான அதன் பிரதிகளும் திருக்கோயில் வசம் பெறப்பட்டனவா, அதற்கான இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டனவா, எனவும் தணிக்கையில் அறியப் படவில்லை.

Trade channel – Chennai பணிகளை முடிக்காத நிலையிலும், டெண்டர் இரத்து செய்யப் பட்ட நிலையிலும், அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்பணம் ரூ 2,62,000/- ஐ இணை ஆணையர்/செயல் அலுவலர் கடிதம் 22.11.10 ஐ தொடர்ந்து சட்டப்படி வசூலிக்க இதுகாறும் தொடர் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப் படவில்லை.

ஆதலின் இது குறித்து இலாகா பூர்வமாக ஆய்வு செய்து, இழப்பு கண்டறியப் படின், இழப்பு நிர்ணயம் செய்யப் பட்டு, இழப்பு பொறுப்பான நபர்/நபர்களால் ஈடு செய்யப் பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிகவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப் படுகிறது.

33) **நகர் புற காலிமனை – பொன்மேனி கிராமம் சர்வே எண் 140/12 ல் உள்ள 0.02 செண்ட் இடம் – பல இலட்சம் மதிப்புள்ளது – பசலி 1398 க்கு பின்னர் கேட்பு எழுப்பப்படவில்லை –தணிக்கையாண்டில் நிலுவை வசூலிக்கப் பட்டுள்ளது – இடம் திருக்கோயிலின் சுவாதீனத்தில் உள்ள விவரம் உறுதி செய்யப் படவில்லை – கடுங்குறைபாடுகள்**

35)

இத்திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் மனைகள் பலவகை கேட்புப் பதிவேட்டின்படி மதுரை நகர், பொன்மேனி கிராமம் என்ற இடத்தில் சர்வே எண். 140/12–ல் 0.02 செண்ட் இடமானது 1370–ம் பசலி சோமசுந்தரம் பிள்ளை என்பவருக்கு குத்ததகைக்கு விடப்பட்டுள்ளதாக பதியப்பட்டுள்ளது. 1398–ம் பசலியில் சுப்ரமணியன் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும், 1398–ம் பசலிக்கு பின்னர் இந்த இடத்திற்கு கேட்பு எழுப்பப்படவில்லை. (புஞ்சை ரொக்கம் கேட்பு பதிவேடு வ.எண் 46)

இது சம்பந்தமாக விசாரித்ததில் இருக்கைப் பணியாருக்கு விபரம் ஏதும் தெரியவில்லை. இந்த இனத்தில் கீழ்க்கண்ட விபரப்படி குத்தகை நிலுவையாக இருந்ததை தணிக்கையாண்டில் வசூலிக்கப் பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளது. நிலுவை விபரம் பின்வருமாறு:

குத்தகைதாரர் பெயர்	பசலி	பாக்கி ரூ–பை
சோமசுந்தரம் பிள்ளை	1370	60–00
	1372	22–50
	1374	20–00
	1386	20–00
	1392	40–00
சுப்ரமணியன்	1398	60–00

இப்பொருள் தொடர்பாக கீழ்க்கண்ட வினாக்கள் தணிக்கையில் எழுப்பப்பட்ட போது போதிய சரியான விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

1) இந்த நிலுவைக் குத்தகை யாரிடமிருந்து வசூலிக்கப் பட்டது.
2) இந்த இடம் பசலி 1399 லிருந்து பசலி 1420 வரை யார் பொறுப்பில்இருந்து வந்தது.
3) பசலி 1398 வரை நிலுவையாக இருந்த தொகை மட்டுமே வசூலிக்கப் பட்டுள்ளதே தவிர, பசலி 1399 முதல் 1420 முடிய வாடகை கேட்பு எழுப்பப் பட்டு ஏன் வாடகை நிலுவை வசூலிக்கப் படவில்லை .
4) தற்போது திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ்தான் உள்ளதா.
5) பல இலட்சம் பெறுமான இந்த இடம் திருக்கோயிலின் பாதுகாப்பின் கீழ் கொணரப் பட்டுள்ளதா.

மேற்கண்ட வினாக்களுக்கு தக்க பதில்கள் தரப்படாத நிலையில், இந்த இடம் திருக்கோயிலின் சுவாதீனத்தில் உள்ளதா என ஐயுறப்படுகிறது. ஆதலின் நகர் புற நிலமாகவும், பல இலட்சம் மதிப்புள்ளதாகவும், உள்ள இந்த இடத்தினை ஆய்வு செய்து, திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் இந்த இடம் கொணரப்பட்டு, பாதுகாக்கப் பட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

59

34). **<u>பிரசாத விற்பனை – உப கோயில்களில் பிரசாத விற்பனை – வெள்ளி மற்றும் ஞாயிறு தவிர இதர நாட்களில் தினக்கூலி பணியாளர்கள் நியமனம் – மறு பரிசீலனை செய்யப்படலாம்.</u>**

36)

இத்திருக்கோவிலிலிருந்து பிரசாதம் தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. பிரசாத விற்பனை மூலம் கணிசமான தொகை லாபமாகப் பெறப்படுகிறது.

இத்திருக்கோயிலில் தயாரிக்கப்படும் பிரசாதம், இத்திருக்கோயில் மட்டுமின்றி, இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட உபகோயில்களில் வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய கிழமைகளில் மட்டும் தோராயமாக ரூ 4,000/– முதல் ரூ 4,500/– வரை பிரசாதம் விற்பனை செய்யப்படுகின்றன. இதர நாட்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ200/– முதல் ரூ400/– வரை பிரசாதம் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால் தினந்தோறும் பிரசாதம் விற்பனை செய்ய ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் நாள் ஒன்றுக்கு, இரண்டு பணியாளர்கள் வீதம் நான்கு தினக்கூலி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

உப கோயில்களில் வெள்ளி மற்றும் ஞாயிறு கிழமைகளில் மட்டும் அதிக எண்ணிக்கையில் பிரசாதம் விற்பனை நடைபெறும் நிலையில் . இந்த இரு தினங்களுக்கு மட்டும் தினக்கூலி பணியாளர்களை இப்பணிக்கு பணியமர்த்தப்படலாம் என்றும், இதர நாட்களில் பிரசாத விற்பனை குறைவாக இருப்பதனை கருத்தில் கொண்டு சார்புள்ள திருக்கோயில் பணியாளர்களைக் கொண்டே பிரசாத விற்பனை பணியையும் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படலாம்.

இதனால் இந்த தினக்கூலி பணியாளர்களுக்கு ஞாயிறு மற்றும் வெள்ளி தவிர, இதர நாட்களுக்கு வழங்கப்படும் சம்பளச் செலவு கணிசமாக குறையக்கூடும். தேவைப்படின் இந்த தினக்கூலி பணியாளர்களை திருக்கோயிலின் வேறு அத்யாவசியப் பணிகளில் ஈடுபடுத்தப்படலாம் எனவும் தணிக்கையில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே இது குறித்து பரிசீலனை செய்து, தேவைக்கேற்ப இத்தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

35)

37)

உபகோயில் – அபிஷேக கட்டணச் சீட்டுக்கள் விற்பனை – அபிஷேகப் பொருட்கள் பிரதான திருக்கோயிலிருந்து வழங்கப்பட்டு அபிஷேக கட்டணம் திருத்தியமைக்கப்படலாம் – ஒரு கருத்தாய்வு

இத்திருக்கோயிலின் உபகோயில்களில் அபிஷேக கட்டணச் சீட்டு விற்பனை அமுல் படுத்தப்பட்டு வருவாய் பெறப்படுகிறது. தணிக்கை யாண்டில் இத்திருக்கோயிலின் அபிஷேக கட்டணச்சீட்டுகள் விற்பனை மூலம் பெறப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு.

வ, எண்	திருக்கோயில் பெயர் அருள்மிகு	அபிஷேக கட்டணம்	விற்பனையான சீட்டுகள்	பெறப் பட்ட வருவாய்
1.	மாரியம்மன் திருக்கோயில்	5.00	2254	11,270/-
2	ஆதி சொக்கநாதர் திருக்கோயில்	5.00	4884	24.420/-
3	முக்தீஸ்வரர் திருக்கோயில்	5.00	3605	18.025/-
4	முக்தீஸ்வரர் திருக்கோயில்	20.00	330	6.600/-
5	தென் திருவாலய திருக்கோயில்	5.00	4321	21.605/-
6	திருவாப்புடையார் திருக்கோயில்	5.00	3186	15.930/-
7	திருமறைநாதர் திருக்கோவில்	20.00	838	16.760/-
	மொத்தம்			1.14.610/-

மேற்படி திருக்கோயில்களில் பெரும்பான்மையான நேர்வுகளில் அபிஷேகத்திற்கான பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொகை யினை சார்புள்ள திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் / பூசாரிகள் வசம் பக்தர்களால் வழங்கப்படுகின்றன. பக்தர்களிடமிருந்து பெறப்படும் தொகை தொகை திருக்கோயில் வாரியாக வேறுபடுகிறது.

பிரதான திருக்கோயிலில் மளிகைப் பொருட்கள் மற்றும் அபிஷேகச்சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பொது சரக்கறையில் இருப்பாக வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், உப திருக் கோயில்களுக்கு அபிஷேகத்திற்கு தேவையான சாமான்களை பிரதான திருக்கோயிலிலிருந்து கொள்முதல் செய்து, பொது சரக்கறையில் இருப்பாக வைக்கப்பட்டு, உப திருக்கோயில்களில் இருந்து தேவைப் பட்டியல் பெற்று வழங்கப்படும் முறை நடைமுறைப்படுத்தப்படின் சிறப்பாக அமையும் என்பதுடன், பக்தர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் .

ஆகவே, தற்போது உபகோயில்களில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள அபிஷேக கட்டணத்திற்கான சீட்டின் முகமதிப்பினை மாற்றியமைத்து, அபிஷேகப் பொருட்களையும் திருக்கோயிலிலிருந்தே வழங்கப் படும் முறை அமுல்படுத்தப்படின் திருக்கோயிலின் நலனுக்கு உகந்ததாக அமையும் என தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது குறித்து தக்க பரிசீலனை செய்து, ஆணையரின் அனுமதி பெற்று செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்,

36). 38) **உபகோயில் - அருள்மிகு தென்திருவாலாய திருக்கோயில் காணிக்கை பதிவேடு - தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை - குறைபாடுகள்**

இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு தென் திருவாலாய திருக்கோயில் தணிக்கையாண்டில் காணிக்கையாக வரப்பெற்ற உபய பரிவட்டங்கள் சாத்துப்படி கட்டணமாக பரிவட்டம் 1க்கு ரூ10/- வீதம் 240 பரிவட்டங்களுக்கு ரூ2,400/- வரவாகப் பெறப்பட்டுள்ளது,

தணிக்கையாண்டிற்கான பரிவட்ட இருப்புப் பதிவேடு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. பெறப்பட்ட பரிவட்டங்கள் பிரதான திருக்கோயிலின் ஒப்படைக்கப்பட்டதா என்கிற விவரமும் தணிக்கைக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும், பசலி 1420ல் பெறப்பட்ட உபய பரிவட்டங்கள் 240ம் திருக்கோயிலில் இருப்பில் இல்லை என்றும், அதற்கான இருப்புப் பதிவேடுகள் ஏதும் இருப்பில் இல்லை என்றும் தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது.

இவைகளை பரிசீலனை செய்யும் போது. பசலி 1420ல் வரவாகப் பெறப்பட்ட உபய காணிக்கை பரிவட்டங்கள் 240ம் திருக் கோயிலின் இருப்பில் இல்லை என்பதையும், அதற்கான இருப்புப் பதிவேடுகள் இல்லை என்பதையும், பிரதான திருக்கோயிலில் இப்பரிவட்டங்கள் ஒப்படைக்கப்படவில்லை என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

ஆதலின் பசலி 1420ல் வரவாகப் பெறப்பட்டு திருக்கோயிலின் இருப்பில் இல்லாத 240 பரிவட்டங்களுக்கான மதிப்பு பரிவட்டம் 1க்கு சுமார் ரூ 100/- வீதம் 24,000/-மும் தணிக்கைத்தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

இப்பொருள் குறித்து தக்க விசாரணைகள் மேற்கொண்டு, இழப்பு ஏதும் இருப்பின், இழப்பு நிர்ணயம் செய்யப்பட்டு அவ்விழப்பினை பொறுப்பான நபர் / நபர்களால் ஈடு செய்யப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

37) **<u>குடியிருப்பு – திருக்கோயிலுக்கு சொந்தமான மதுரையில் அமைந்துள்ள குடியிருப்பு எண் 6/பி3 திருநெல்வேலி உதவி ஆணையராக இருந்த திரு.ஆர்.பச்சையப்பனுக்கு ஒதுக்கீடு செய்தது – தற்போது திண்டுக்கல் உதவி ஆணையராக உள்ள நிலையில் குடியிருப்பினை தொடர்வதற்கு திருந்திய உத்தரவு பெறப்படவில்லை – குறைபாடுகள்</u>**

39)

திருநெல்வேலி உதவி ஆணையராக இருந்த திரு.ஆர்.பச்சையப்பனுக்கு அவரது மகளின் மருத்துவ சிகிச்சையினை கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்கு சொந்தமான மதுரையில் அமைந்துள்ள 6/பி3 என்ற குடியிருப்பினை அரசு வாடகை விதிகளின்படி ஒதுக்கீடு செய்ய இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அனுமதி அளிக்கப்பட்டதையடுத்து, அவருக்கு மேற்கண்ட குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருந்து வருகிறார்.

அவர் திருநெல்வேலியிலிருந்து மாறுதல் செய்யப்பட்டு 18.01.2011 முதல் திண்டுக்கல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருவதால், இந்த குடியிருப்பில் தொடர்ந்து வசித்து வருவதற்கு திருந்திய உத்தரவுகள் ஆணையரிடமிருந்து பெறப்படவில்லை. உரிய உத்தரவுகள் பெறப்படவேண்டும்.

அத்துடன் இவர் திண்டுக்கல்லுக்கு மாறுதல் செய்யப்பட்ட நாளிலிருந்து திண்டுக்கல்லில் பெறப்பட்டுவரும் வீட்டுவாடகைப்படியின் அடிப்படையில் வாடகை செலுத்தி வருகிறார்.

குடியிருப்பு மதுரையில் அமைந்துள்ளதால் மதுரைக்கு தகுதியான வீட்டு வாடகை படியினடிப்படையில் வீட்டு வாடகை பிடித்தம் செய்யப்படவேண்டுமா என்பது குறித்தும் ஆணையரிடம் தெளிவுரை பெறப்படவேண்டும்.

Ⓧ

எனவே, இக்குறைபாடுகளை களைய, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

Ⓧ மேலும் இவர் தற்போது தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் [illegible] பணிபுரிந்து வரும் நிலையில், திருந்திய உத்தரவுகள் பெறப்படவும், கோவைக்கு அனுமதிக்கப்பட்ட தேதியின் அடிப்படையாக பிடித்தம் பெறப்படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

62

38) **கடைவாடகை–பொது ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டது–நியாய வாடகை நிர்ணயிக்கப்படவில்லை–ஏலநிபந்தனைப்படி 3 ஆண்டுகள் முடிவுற்ற பிறகும் வாடகை மறுநிர்ணயம் செய்யப்படவில்லை–2003–ம் ஆண்டு முதல் வாடகை உயர்வு செய்யப்படவில்லை–பெரும் வருவாய் இழப்பு–கடுங்குறைபாடு.**

அ. இத்திருக்கோயிலுக்கு சொந்தமான 88 கீழ ஆவணி மூல வீதி என்ற விலாசத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் வணிகவளாகம் என்ற பெயரில் கீழ்தளத்தில் பத்து கடைகளும், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் கிழக்கு மற்றும் மேற்கு என 4 பெரிய கடைகளும் கட்டப்பட்டு, அவற்றில் கீழ்க்கண்ட விபரப்படி கீழ்தளத்தில் உள்ள 9 கடைகள் மற்றும் முதல் தளத்தில் கீழ் பக்கம் உள்ள கடைகள் பொது ஏலம் மூலம் அதிக நன்கொடை கொடுத்த நபர்களுக்கு திருக்கோயில் உதவி கோட்டப் பொறியாளர் அறிக்கைப்படியான இணை ஆணையர் /செயல் அலுவலர் பரிந்துரையின்படி தரைதளம் கட்டிடங்களுக்கு சதுர அடி 1–க்கு ரூ. 80–00 வீதமும், முதல் மற்றும் 2–ம் தளங்களுக்கு சதுர அடி 1–க்கு ரூ.50–00 வீதமும் வாடகை வசூலிக்கலாம் என்ற ஆணையர் உத்தரவுப்படி வாடகைக்கு விடப்பட்டது.

ஆணையர் உத்தரவு எண் ஒ.மு. 68335/2000 நாள். 29.09.200 மற்றும்

மூ.மு. 88198/2001 நாள். 20.09.2011

ஆ. ஏல நிபந்தனையின்படி, வாடகைக்கு விடப்பட்ட நாள் முதல் 3 வருடங்கள் முடிந்தவுடன் வாடகைதாரர்கள் கடைகளை திருக்கோவில் வசம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் 3 வருடங்கள் முடிவடைந்தவுடன் வாடகைதாரர்கள் கடைகளை திருக்கோவில் வசம் ஒப்படைக்கவில்லை. திருக்கோவிலில் இருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பழைய வாடகைதாரர்களே மேற்படி கடையை தொடர்ந்து அனுபவித்துக் கொள்வதற்கு உத்தரவு ஏதும் திருக்கோவிலில் இருந்து கொடுக்கப்படவில்லை. மேலும், இந்த வாடகைதாரர்களிடமிருந்து வாடகைக்கு விடப்பட்ட போது நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையே தற்போதும் வசூலிக்கப்பட்டு வருகிறது. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை உயர்வு செய்யப்படவில்லை. ஏல நிபந்தனையின்படி வாடகைதாரர்களிடமிருந்து வாடகை ஒப்பந்தப்பத்திரம் எழுதிப்பெறாததால் வாடகைதாரர்களும் கண்டுகொள்ளாமல் உள்ளனர்.

இ. வாடகைக்கு விடப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுகள் முடிந்த பின்னர் புதிய வாடகை எப்படி நிர்ணயம் செய்வதென்றும் ஏல நிபந்தனையில் குறிப்பிடப்படவில்லை. மேற்படி கடைகளை பழைய வாடகைதாரர்களுக்கே வாடகைக்கு விடுவதற்கும், வாடகை எப்படி உயர்த்துவது என்பதற்கும் உரிய வழிகாட்டுதல்கள் வேண்டி ஆணையரின் அனுமதிக்கும் இதுவரை விண்ணப்பிக்கப்படவில்லை.

ஈ. இக்கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கப்படவில்லை. திருக்கோயில் உதவி கோட்டப் பொறியாளரின் அறிக்கைப்படியான இணை ஆணையர் /செயல் அலுவலரின் பரிந்துரையின்போரில் ஆணையர் அனுமதி வெற்று நிர்ணயிக்கப்பட்ட வாடகையே அமுலில் உள்ளது. இந்நிலையில் ஆணையரால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை அடிப்படையிலேயே 17.07.2000–01.07.2003, 17.07.2003–16.07.2006, 17.09.2006–16.07.2009 மற்றும் 17.07.2009–31.01.2012 வரை முந்தைய வாடகையில் 15 சதவீத அடிப்படையில் உயர்வு செய்து வசூலிக்க 10.02.2012 தேதியில் பிரிவு எழுத்தரால் குறிப்புரை வரையப்பட்டு 19.02.2012 தேதியில் இணை ஆணையர் /செயல் அலுவலரின் ஒப்புதல் பெறப்பட்டதோடு கோப்பு நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. தோன்றல் மூலம் புதிதாக துவக்கப்பட்டுள்ள இக்கோப்பிற்கு கோப்பு எண்ணும் பெறப்படவில்லை.

உ. கீழ்க்காணும் விபரப்படி வாடகைப் பாக்கி வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

வ.எண்	கடை எண் விபரம்	வாடகைதாரர் பெயர்	மாத வாடகை ரூ	வாடகை காலம்	1419 ம் பசலி முடிவில் பாக்கி ரூ
01.	கடை எண் 1	எஸ். போஸ்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	இல்லை
02.	கடை எண் 2	எம். பாலசுப்ரமணியன்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	120268–00
03.	கடை எண் 3	ஆர். ராமராஜன்	1728--00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	116–00
04.	கடை எண் 4	என். சதீஸ்குமார்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	1844–00
05.	கடை எண் 5	எஸ். மணிபிரகாஷ்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	1844–00
06.	கடை எண் 6	எஸ். போஸ்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	1844–00
07.	கடை எண் 7	எஸ். பூபதி	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	1728–00
08.	கடை எண் 8	எஸ். வரதராஜன்	1728	29.09.2000 முதல் 28.09.2003 வரை	9836–00
09.	கடை எண் 9	எஸ். நாகராஜன்	1728–00	29.09.2000 முதல் 28.09.2003 வரை	10368–00
10.	முன்பக்க கடை	ஏ.ஆர். ராஜ்குமார்	2000–00	20.09.2001 முதல் 19.09.2004 வரை	6272–00
11.	முதல் தளம் கிழக்குப் பக்கம்	சி. வெங்குட்டுவன்	8575–00	விபரம் தெரியவில்லை	154350–00

வரிசை எண் 2 மற்றும் 11 ல் உள்ள நபர்களின் பெயரில் பாக்கி அதிகம் உள்ளதால், உடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். வாடகை வசூலிக்க இயலாவிடில் பொறுப்பான நபர்களிடமிருந்து தொகை ஈடு செய்யப்படவேண்டும்.

நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படாமலும், வாடகை நிர்ணயம் தொடர்பாக ஆணையரின் அறிவுரைகள் பெற முயற்சிகள் எடுக்கப்படாமலும், 2003–ம் ஆண்டு முதல் வாடகை மறுநிர்ணயம் குறித்து தக்க தீர்வு ஏற்கத்தக்கதல்ல.

தொடர் வருவாய் இழப்பு குறித்த இத்தடை தக்க நடவடிக்கைக்காக ஆணையரின் தனிக்கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

65

39). 41)

<u>கடை வாடகை(வெளிக்கடை) – ராயகோபுரம் கடைகள் பொது ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டது – வாடகை உயர்த்தப்படவில்லை – கோப்பு தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை – கடுங்குறைபாடு</u>

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான கீழ ஆவணி மூல வீதியில் உள்ள ராயகோபுரம் என்று அழைக்கப்படும் இடத்தில் வடக்கு பக்கம் 3 கடைகளும் தெற்கு பக்கம் 4 கடைகளும் பொது ஏலம் மூலம் கீழ்கண்ட நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் கடை எண் 2 ன் வாடகைதாரர் மு. கணேசன் என்பவருக்கு மட்டும் அரசாணை எண் 456 ன்படி புதிய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. மற்ற 6 நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்ட நாளில் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையே கேட்பாக எழுப்பப்பட்டு வருகிறது. (கேட்புப் பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 177 – 183)

கடை எண்	வாடகைதாரர் விவரம்	வாடகை ரூபாய்
கடை எண் 1	என்,எஸ், ஜி. நீலகண்டன்	83100/-
கடை எண் 2	மு.கணேசன்(நியாயவாடகைநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)	31320/-
கடை எண் 3	வி, சுகுமார்	50256/-
கடை எண் 4	கே.பி,ஏ. பலராமன்	50256/-
கடை எண் 1	வி. சுப்ரமணியன்	50544/-
கடை எண் 2	பி. இளங்கோ	70476/-
கடை எண் 3	செல்வி	109800/-

இது தொடர்பான கோப்பு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படாததால், இந்தகடைகளின் வாடகைதாரர்களுக்கு என்ன நிபந்தனைகள் உள்ளன என்பதை தணிக்கையில் அறிய இயலவில்லை. இந்த கடைகளைப் பழைய வாடகைதாரர்களுக்கே வாடகைக்கு விடுவதற்கும் வாடகை எப்படி உயர்த்துவது என்பதற்கும் உரிய வழிகாட்டுதல்கள் ஏற்படுத்தப்பட்டு ஆணையரின் அனுமதியுடன் வாடகையை உயர்த்தி, நிலுவைகளுடன் வாடகையை வசூலிக்கப்பட உரிய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

X 66

40). **<u>சில்லரைக் குத்தகை –நிபந்தனையின் படி ஏலத்தொகையினை முழுமையாக செலுத்தாமல் பகுதி, பகுதியாக செலுத்தப் பட்டது மற்றும் குறைபாடுகள்.</u>**

42)

இத்திருக்கோயிலில் பல்வேறு உரிமங்கள் டெண்டர்கள்/ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் பெறப்படுகிறது. தணிக்கையாண்டில் பல்வேறு உரிமங்கள் ஏலத்தில் விடப்பட்டு ரூ 85,67,577/– வருவாயாக பெறப் பட்டுள்ளது.

ஒவ்வொரு இனத்திற்கும் அதிக தொகை கேட்ட ஏலதாரர்/ டெண்டர்தாரர் – க்கு ஏலம் உறுதி செய்யப் பட்ட உடன் ஏல நிபந்தனைகளின் படி ஏலத்தொகை முழுவதையும் திருக்கோயிலில் செலுத்த வேண்டும். ஆனால் தணிக்கையாண்டில் ஏலத்தொகை முழுவதையும் செலுத்தாத நேர்வில் ஏலதாரார்கள் ஏலத் தொகையினை பகுதி, பகுதியாக செலுத்திட அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஏலதாரர்கள் ஏலத் தொகையினை பகுதி/பகுதியாக பல்வேறு நேர்வுகளில் செலுத்த அனுமதிக்கப் பட்ட நிலையில், சில ஏலதாரர்கள் ஓரிருமாதங்களுக்குள்ளும், சில ஏலதாரர்கள் பலமாதங்களும், பகுதி/ பகுதியாக ஏலத் தொகையினை செலுத்தியுள்ளனர். விவரம் பின்வருமாறு.

வ. எண்	உரிமம் விவரம்	குத்தகை செலுத்திய விவரம்	குத்தகை தொகை
1	பசுமடம் அகத்திக்கீரை	03.06.2010 முதல் 07.01.2011 முடிய 11 நேர்வுகள்	4,50,000.00
2	தெற்கு கோபுரம் பூஜை பொருள்	10.06.2010 முதல் 29.10.2010 முடிய 4 நேர்வுகள்	8,31,000.00
3	ஆதி சொக்கநாதர் கோயில் பூஜை பொருள்	24.05.2010 முதல் 24.02.2011 முடிய 9 நேர்வுகள்	5,05,000.00
4	மாரியம்மன் கோயில் பூஜை பொருள்	24.05.2010 முதல் 16.07.2010 முடிய 8 நேர்வுகள்	7,77,777.00

மேற்கண்டவாறு ஏலதினத்தன்று ஏல நிபந்தனைப்படி ஏலத் தொகை முழுவதையும் வசூலிக்காமல் பகுதி/பகுதியாக ஏலத் தொகையினை வசூலித்துள்ளதை தணிக்கையில் ஏற்கும்படியாக இல்லை.

ஆதலின் மேற்குறிப்பிட்டவாறு ஏலத் தொகையை பகுதி/பகுதியாக வசூலித்ததற்கான காரணங்களை விளக்கி ஆணையரின் பின்னேற்பு அங்கீகாரம் பெறப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

41). 43)

வெளிக்கடை – குடியிருப்பு – தெப்பக்குளம் தென்கரை – இத்துறையின் முன்னாள் உதவி ஆணையர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய வாடகை நிலுவை – வசூலிக்கப்படவில்லை – கடுங்குறைபாடுகள்

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் தென் கரையிலுள்ள கீழ்கண்ட விபரப்படியான குடியிருப்புகளில் அதனெதிரே தெரிவிக்கப்பட்ட விபரப்படி வசித்து வந்த இத்துறையினை சார்ந்த முன்னாள் உதவி ஆணையர்களால் பல வருடங்களாக வாடகை பாக்கி செலுத்தப் படாத நிலையில் தணிக்கையாண்டின் முடிவில் கீழ்க்கண்ட விவரப்படி வாடகை நிலுவையாக உள்ளது.

வ. எண்	வெளிக்கடை கேட்புப் பதிவேடு	குடியிருப்பு முகவரி	வாடகைதாரர் பெயர் திருவாளர்கள்	பாக்கி ரூ பை
01.	அடையாள குறியீடு எண் 283	6 பி2, தெப்பக்குளம் தென்கரை	வே.பால சுப்ரமணியன் உதவி ஆணையர்	34,560–00
02.	அடையாள குறியீடு எண் 285	6 பி2, தெப்பக்குளம் தென்கரை	ஜி. இராமமூர்த்தி உதவிஆணையர்	17,048–00

இந்நிலுவையை வசூலிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட திரு வே.பாலசுப்ரமணியன் மற்றும் திரு ஜி.இராமமூர்த்தி ஆகியோாகள் இத்துறையில் உதவி ஆணையர்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களாவார்கள்.

இந்த பாக்கித் தொகையினை சம்மந்தப்பட்ட முன்னாள் உதவி ஆணையர்களிடமிருந்து உடன் வசூலிக்கப்பட வேண்டும்.

வசூலிக்க இயலாத பட்சத்தில், இதனை திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி உரிய காலத்திற்குள் வாடகையினை வசூலிக்கத் தவறிய பொறுப்பான நபர் /நபர்களிடமிருந்து இத்தொகையினை வசூலித்து திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படல் வேண்டும்.

42). <u>முன்பணம் - தணிக்கையாண்டில் பணியாளர்களுக்கு திருக்கோயில் பணிகளுக்காக வழங்கப் பட்ட முன்பணம் ரூ 1,55,699.75/- நிலுவையாக உள்ளது – திரும்பப் பெறப்படல் வேண்டும் –கடுங்குறைபாடுகள்.</u>

44)

இத்திருக்கோயிலில் பேணப் பட்டு வரும் முன்பணப் பதிவேட்டின் படி திருக்கோயில் பணிகளுக்காக பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட முன்பணம் ரூ 2,11,887.75 நிலுவையாக உள்ளது. இதில் தணிக்கை யாண்டில் இத் திருக்கோயில் பணிகளுக்காக பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட முன்பணம் பணி முடிந்தவுடனேயே ஈடு செய்யப் படாமல் கீழ்க்கண்ட விவரப்படி ரூ 1,55,699.75/–நிலுவையாக உள்ளது. விவரம் பின்வருமாறு.

வ எண்.	செ.சீ எண்/ நாள்	பணியாளர் பெயர் திருவாளர்கள்	விவரம்	தொகை ரூ பை	கூடுதல் ரூ பை
1.	211/02.08.10	நா.ஜெயபிரகாஷ்	ஆவணி உற்சவம்	13800/-	
2.	2162/23.05.11	நா.ஜெயபிரகாஷ்	அம்மன் உற்சவம்	500/-	
3.	2164/23.05.11	நா.ஜெயபிரகாஷ்	வைகாசி உற்சவம்	1000/-	15300/-
4.	241/06.08.10	எஸ்.கணேசன்	ஆவணி உற்சவம்	40000/-	
5.	1509/24.02.11	எஸ்.கணேசன்	உண்டியல் சாப்பாடு	10000/-	
6.	1721/21.03.11	எஸ்.கணேசன்	கொழுக்கட்டை	9132.75	
7.	1764/29.03.11	எஸ்.கணேசன்	கொழுக்கட்டை	9157/-	
8.	1775/31.03.11	எஸ்.கணேசன்	உண்டியல் சாப்பாடு	10000/-	
9.	1943/26.04.11	எஸ்.கணேசன்	கொழுக்கட்டை	9132/-	
10.	1958/26.04.11	எஸ்.கணேசன்	உண்டியல் சாப்பாடு	10000/-	
11.	2092/04.05.11	எஸ்.கணேசன்	கொழுக்கட்டை	9161/-	
12.	2143/17.05.11	எஸ்.கணேசன்	கொழுக்கட்டை	9161/-	115743.75
13.	453/07.09.10	சி.விஜயகுமார்	விநாயக சதுர்த்தி		500/-
14	1452/18.02.11	க.கண்ணன்	பிளக்ஸ் போர்டு		22156/-
15.	1551/02.03.11	ஆதித்யஞானம்	மின் ஆய்வு கட்டணம்		2000/-
			கூடுதல்		1,55,699.75

திருக்கோயில் பணிகளுக்காக அலுவலகப் பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கப்பட்டு பணிகளை மேற்கொள்ள சட்ட விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை. எனினும் அவசிய அவசரம் கருதி தவிர்க்க இயலாத நிலையில் முன்பணம் வழங்கப்பட்டிருப்பின் அதனை உடன் சரிக்கட்டுச் செய்யப் பட்டிருக்கப் பட வேண்டும். சுமார் இரண்டு ஆண்டுகளாக இந்த முன்பணம் சரிக்கட்டுச் செய்யப் படாத நிலையில், முன்பணம் வழங்கப்பட்டதற்கான பணிகள் மேற்கொள்ளப் படாத நிலையில்தான் இந்த முன்பணம் சரிக்கட்டுச் செய்ய இயலவில்லை எனத் தணிக்கையில் கருத நேரிடுகிறது.

மேலும் மேற்கண்ட பணிகளை செய்ய பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கிய இணை ஆணையர்/செயல் அலுவலரின் பணிக் காலத்திற்குள்ளாகவே உரிய சரிக்கட்டு பட்டியலை பணியாளர்கள் சமர்ப்பித்து முன்பணம் சரிக்கட்டு செய்யப் படாத நிலையிலும். முன்பணம் வழங்கப் பட்ட நோக்கம் நிறைவேற்றப் பட்டதை முன்பணம்

69

வழங்கிய இணை ஆணையர்/செயல் அலுவலரால் தற்போது சரிபார்த்து/ உறுதி செய்து உரிய சான்று வழங்க இயலாத நிலையினையும், மிகவும் காலங்கடந்து விட்ட நிலையினையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

அத்துடன் வ.எண். 1 முதல் 12 வரை உள்ள இனங்களில் முதலில் வழங்கப் பட்ட முன்பணம் சரிக்கட்டு செய்யப்படாமலேயே, அதே பணியாளருக்கு அடுத்த முன்பணம் வழங்கப் பட்டுள்ளதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுவதுடன் மேற்கண்டவாறு வழங்கப் பட்ட முன்பணம் ஈடு செய்வது குறித்து இதுகாறும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை என்பதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

ஆதலின் மேற்கண்ட விவரப்படி பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் ரூ 1,55,699.75 ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது. இச் செலவு திருக்கோயிலுக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பாகக் கருதி பொறுப்பான நபர் அல்லது நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

43) **முன்பணம் – தணிக்கையாண்டிற்கு முன்னர் திருக்கோயில் பணியாளருக்கு வழங்கப் பட்ட முன்பணம் ரூ 56,188/- நிலுவையாக உள்ளது – திரும்பப் பெறப்படல் வேண்டும் –கடுங்குறைபாடுகள்**

45)

இத்திருக்கோயிலில் பேணப் பட்டு வரும் முன்பணப் பதிவேட்டின் படி திருக்கோயில் பணிகளுக்காக பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட முன்பணம் ரூ 2,11,887.75 நிலுவையாக உள்ளது. இதில் தணிக்கை யாண்டிற்கு முன்னர் இத் திருக்கோயில் பணிகளுக்காக பணியாளர் களுக்கு வழங்கப் பட்ட முன்பணம் பணி முடிந்தவுடனேயே ஈடு செய்யப் படாமல் கீழ்க்கண்ட விவரப்படி ரூ ரூ 56,188/-நிலுவையாக உள்ளது. விவரம் பின்வருமாறு.

வ எண்.	செ.சீ எண்/ நாள்	பணியாளர் பெயர்	விவரம்	தொகை ரூ பை	கூடுதல் ரூ பை
		திருவாளர்கள்			
1.	1033/10.01.06	நா.ஜெயபிரகாஷ்	பயண முன்பணம்		5,000/-
2.	1237/23.02.06	த.விஜயரகுநாதன்	மகாசிவராத்திரி நாட்டியாஞ்சலி		13,500/- O/C
3.	237/06.08.07	எஸ்.மூக்குச்சாமி	மின்வைப்புத்தொகை	7500/-	
4.	237/06.08.07	எஸ்.மூக்குச்சாமி	மின்வைப்புத்தொகை	2275/-	
5.	237/06.08.07	எஸ்.மூக்குச்சாமி	TNEB க்கு செலுத்த	7500/-	17,275/-
6.	விவரமில்லை	விஜயகுமார்	திருவாப்புடையார் விநாயகர் சதுர்த்தி	500/-	
7.	விவரமில்லை	விஜயகுமார்	சுவாமி புறப்பாடு	500/-	
8.	விவரமில்லை	விஜயகுமார்	விநாயகர் சதுர்த்தி	500/-	1,500/-
9.	விவரமில்லை	கே.கண்ணன்	ப 1414 சித்திரை 9ம்நாள்திருநாள்		2,160/-
10.	விவரமில்லை	மண்டல வைப்பு நிதி மேலாளர்	3/06 இபிளப் சந்தா		2,322/-
					41,757/-
11.	பசலி 1414 க்கு முன்னர் பணியாளர்களுக்கு பல்வேறு நேர்வுகளில் வழங்கப்பட்டமுன் பணநிலுவை				14,431/-
			கூடுதல்		56,188/-

திருக்கோயில் பணிகளுக்காக அலுவலகப் பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கப்பட்டு பணிகளை மேற்கொள்ள சட்ட விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை. எனினும் அவசிய அவசரம் கருதி தவிர்க்க இயலாத நிலையில் முன்பணம் வழங்கப்பட்டிருப்பின் அதனை உடன் சரிக்கட்டுச் செய்யப் பட்டிருக்கப் பட வேண்டும். பல ஆண்டுகளாக இந்த முன்பணம் சரிக்கட்டுச் செய்யப் படாத நிலையில், முன்பணம் வழங்கப்பட்டதற்கான பணிகள் மேற்கொள்ளப் படாத நிலையில் இந்த முன்பணம் சரிக்கட்டுச் செய்ய இயலவில்லை எனத் தணிக்கையில் கருத நேரிடுகிறது.

மேலும் மேற்கண்ட பணிகளை செய்ய பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கிய இணை ஆணையர்/செயல் அலுவலரின் பணிக் காலத்திற்குள்ளாகவே உரிய சரிக்கட்டு பட்டியலை பணியாளர்கள் சமர்ப்பித்து முன்பணம் சரிக்கட்டு செய்யப் படாத நிலையினையும்.

முன்பணம் வழங்கப் பட்ட நோக்கம் நிறைவேற்றப் பட்டதை முன்பணம் வழங்கிய இணை ஆணையர்/செயல் அலுவலரால் தற்போது சரிபார்த்து/ உறுதி செய்து உரிய சான்று வழங்க இயலாத நிலையினையும், மிகவும் காலங்கடந்து விட்ட நிலையினையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

அத்துடன் வ.எண். 3 முதல் 8 வரை உள்ள இனங்களில் முதலில் வழங்கப் பட்ட முன்பணம் சரிக்கட்டு செய்யப்படாமலேயே, அதே பணியாளருக்கு அடுத்த முன்பணம் வழங்கப் பட்டுள்ளதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுவதுடன் மேற்கண்டவாறு வழங்கப் பட்ட முன்பணம் ஈடு செய்வது குறித்து இதுகாறும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை என்பதையும் தணிக்கையில் சுட்டிக் காட்டப் படுகிறது.

ஆதலின் இத்திருக்கோயில் பணிகளுக்காக பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு மேற்கண்ட விவரப்படி நிலுவையாக உள்ள முன்பணம் ரூ 56,188/- ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது. இச் செலவு திருக்கோயிலுக்கு ஏற்பட்டுள்ள கூடுதல் செலவாகவும், நிதி இழப்பாகவும் கருதி பொறுப்பான நபர் அல்லது நபர்களால் ஈடு செய்யப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

44) முன்பணம் – பண்டிகை முன்பணம் நிலுவை –பணியாளர்களின் விவரம் இடம் பெறவில்லை மற்றும் குறைபாடுகள்.

(46)

அ) திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து பெறப்படவேண்டிய பண்டிகை முன்பண நிலுவை

இத்திருக்கோயிலில் பேணப் பட்டு வரும் பேணப் பட்டு வரும் முன்பணப் பதிவேட்டில் பண்டிகை முன்பணத் தலைப்பின் கீழ் இத்திருக்கோயில் நிதியிலிருந்து இத்திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட பண்டிகை முன்பணம் ரூ 85,300/– நிலுவையாக உள்ளது. இதில் தணிக்கை யாண்டிற்கு முன்னர் வழங்கப் பட்ட முன்பண நிலுவை ரூ 6,700/– ம் அடங்கும். விவரம் பின்வருமாறு.

வ.எண்.	விவரம்	தொகை ரூ பை
1.	பசலி 1406ல் வழங்கப் பட்ட முன்பண நிலுவை	800.00
2.	பசலி 1407ல் வழங்கப் பட்ட முன்பண நிலுவை	1,400.00
3.	பசலி 1410ல் வழங்கப் பட்ட முன்பண நிலுவை	900.00
4.	பசலி 1418ல் வழங்கப் பட்ட முன்பண நிலுவை	2,600.00
5.	பசலி 1419ல் வழங்கப் பட்ட முன்பண நிலுவை	1,000.00
	கூடுதல்	6,700.00

மேற்கண்டவாறு நிலுவையாக வைக்கப் பட்டுள்ள தொகை யாரிடமிருந்து பிடித்தம் செய்யப் படல் வேண்டும் என்பதற்கான விவரங்கள் முன்பணப் பதிவேட்டில் பதிவு செய்யப் படாத நிலையில், இந்த நிலுவைத் தொகையினை யாரிடமிருந்து பிடித்தம் செய்யப் பட வேண்டும் என்ற விவரத்தினை பதிவேடுகள் வாயிலாக தணிக்கையில் அறிய இயலவில்லை.

ஆதலின் முன் பசலி ஆவணங்களிலிருந்து உரிய விவரங்கள் சேகரிக்கப் பட்டு, நிலுவைதாரர்களின் பெயர்கள் முன்பணப் பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டு, உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு நிலுவையை வசூலித்திடும் பொருட்டு இத்தொகை ரூ 6,700/– ம் தணிக்கை மறுப்பின் கீழ் வைக்கப் படுகிறது.

ஆ) அயல்பணியாளர்களிடமிருந்து பெறப்படவேண்டிய பண்டிகை முன்பண நிலுவை

இத்திருக்கோயிலில் பேணப் பட்டு வரும் முன்பணப் பதிவேட்டில் பண்டிகை முன்பணத் தலைப்பின் கீழ் இத் திருக்கோயில் நிதியிலிருந்து அயல் பணியாளர்களுக்கு வழங்கப் பட்ட பண்டிகை முன்பணம் ரூ 1,400/– நிலுவையாக உள்ளது. விவரம் பின்வருமாறு.

வ.எண்.	செ.சீ எண்/நாள்	விவரம்	தொகை ரூ பை
1.	545/22.09.09	2009–10 க்கான நிலுவை	200.00
2.	688/13.10.10	2010–11 க்கான நிலுவை	1,200.00
		கூடுதல்	1,400.00

மேற்கண்டவாறு நிலுவையாக வைக்கப் பட்டுள்ள தொகை யாரிடமிருந்து பிடித்தம் செய்யப் படல் வேண்டும் என்பதற்கான விவரங்கள் முன்பணப் பதிவேட்டில் பதிவு செய்யப் படாத நிலையில், இந்த நிலுவைத் தொகையினை யாரிடமிருந்து பிடித்தம் செய்யப் பட வேண்டும் என்ற விவரம் தணிக்கையில் அறிய இயலவில்லை.

ஆதலின் முன் பசலி ஆவணங்களிலிருந்து உரிய விவரங்கள் சேகரிக்கப் பட்டு, நிலுவைதாரர்களின் பெயர்கள் பதிவு செய்யப் பட்டு, உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு நிலுவையை வசூலித்திடும் பொருட்டு இத்தொகை ரூ 1,400/- ம் தணிக்கை மறுப்பின் கீழ் வைக்கப் படுகிறது.

இ) திருமண முன்பணம் நிலுவை – வசூலிக்கப் படல் வேண்டும்

இத்திருக்கோயில் பணியாளர் திரு வீரமணி என்பவருக்கு வழங்கப் பட்ட திருமண முன்பணத்தில் ரூ 7849/- நிலுவையாக உள்ளது. இப்பணியாளர் இறந்து விட்டதால் பிடித்தம் செய்ய இயலவில்லை எனத் தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது. இந்த விவரங்களை ஆணையாளருக்குத் தெரிவித்து தக்க அறிவுரைகள் பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

ஈ) முன் பணபதிவேட்டில் நபர் வாரியான விவரம் பதிவு செய்யப் படவில்லை.

இத்திருக்கோயிலில் பேணப் பட்டு வரும் முன் பணப் பதிவேட்டில் பண்டிகை முன்பணத் தலைப்பின் கீழ் முன்பணம் வழங்கப் பட்ட விவரத்தினையும், முன்பணம் பிடித்தம் செய்யும் விவரத்தினையும் நபர் வாரியாக பதிவு செய்யப் படாமல், வழங்கப்பட்ட முன்பணத்தையும், மாதந்தோறும் பிடித்தம் செய்யப் படும் தொகையையும் ஒட்டு மொத்தமாக குறிப்பிடப்பட்டு கூடுதல் கணக்கீடு செய்யப் பட்டுள்ளது. ஆதலின் முன் பணம் வழங்கிய நபர்களின் விவரமும், அவர்களிடமிருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப் படும் தொகை விவரமும் முன்பணப் பதிவேடு வாயிலாக தணிக்கையில் அறிய இயலவில்லை. மேலும் பசலி முடிவில் யாரிடமிருந்து எவ்வளவு தொகை பிடித்தம் செய்யபடும் பொருட்டு நிலுவையாக வைக்கப் பட்டுள்ளன போன்ற விவரங்களைத் தணிக்கையில் அறிய இயலவில்லை.

ஆதலின் இக்குறைபாட்டினை களைந்து முன்பணப் பதிவேட்டினை முறையாக பேணப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

45). <u>புத்தகங்கள் –இந்துமத இணைப்பு விளக்கம் மற்றும் சைவமும் வைணவமும் – இத்திருக்கோயிலிலிருந்து அச்சிட்டு பிற திருக்கோயில்களுக்கு அனுப்பியது – தொகை பெறப்படவில்லை – குறைபாடுகள்.</u>

47)

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் ந.க.63226/2007 இசட்3 நாள் 23.10.07 மற்றும் இது தொடர்பான குறிப்புகளில் இந்து மத இணைப்பு விளக்கம் மற்றும் சைவமும் வைணவமும் ஆகிய புத்தகங்களை இத்திருக்கோயில் நிதியிலிருந்து அச்சிட்டு, தேவைக்கேற்ப, விற்பனைக்காக பிற திருக்கோயில்களுக்கு அனுப்பி வைத்து அதற்கான தொகையை பெற்று திருக்கோயில் கணக்கில் வரவாக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, இத்திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கண்ட புத்தகங்களை அச்சிட்டு கீழ்கண்ட திருக்கோயில்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது. ஆனால் இத்திருக்கோயில்களிலிருந்து பெறப்படவேண்டிய தொகை ரூ 5,87,000/– இதுவரை பெறப்படாமல் உள்ளது. விவரம் பின்வருமாறு (கோப்பு எண்,4432/07)

வ.எண்	திருக்கோயில் பெயர்	தொகை ரூபை
1	ஆணையர் அலுவலகம், சென்னை	7,000/–
2	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில். சேலம்	2,00,000/–
3	நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி	40,000/–
4	அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்	2,00,000/–
5	சுப்ரமணியசுவாமி திருக்கோயில் , மருதமலை	20,000/–
6	மாசாணியம்மன் திருக்கோவில் ,ஆனைமலை	20,000/–
7	வனபத்ரகாளியம்மன்திருக்கோவில், தேக்கம்பட்டி	20,000/–
8	விநாயகர் திருக்கோவில் ,ஈச்சனாரி	20,000/–
9	பட்டீஸ்வரர் திருக்கோவில், பேரூர்	20,000/–
10	அவிநாசிலிங்கேஸ்வரர்திருக்கோவில், அவினாசி	8,000/–
11	அமணலிங்கேஸ்வரர் திருக்கோவில்,திருமூர்த்திமலை	8,000/–
12	வெள்ளியங்கிரியாண்டவர் திருக்கோயில், பூண்டி	8,000/–
13	சித்திவிநாயகர், காந்திபுரம்	4,000/–
14	சங்கமேஸ்வரர் திருக்கோவில் , கோட்டை	4,000/–
15	மாரியம்மன் திருக்கோவில், கருவலூார்	4,000/–
16	காரணவிநாயகர் திருக்கோயில், மத்தம்பாளையம்.	4,000/–
	மொத்தம்	5,87,000/–

பிற திருக்கோயில்களிலிருந்து மேற்கண்ட விவரப்படி பெறப்பட வேண்டிய நிலுவைத்தொகை ரூ 5,87,000/–மும் தணிக்கை தடையின் கீழ் வைக்கப்படுகிறது.

இத்தொகை ரூ 5,87,000/–ஐ பெற்று திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்பட தக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

46). **பரிவட்ட காணிக்கை – காணிக்கை இரசீதுகளில் பரிவட்டங்களின் அசல் விலை குறிப்பிடப் படுவதில்லை – சாத்துப்படிக்கு வழங்கப்படும் காணிக்கை புடவைகளுக்கு வரிசை எண்களுடன் கூடிய அம்மன் திருவுருவம் பதிக்கப்பட்ட (Hollowgram Sticker) பயன்படுத்தப்படலாம் – ஒரு கருத்தாய்வு** (48)

அ) பரிவட்டங்களின் அசல் விலை குறிப்பிடப் படுவதில்லை

பிரதான திருக்கோயிலில் அம்மனுக்கு அதிக எண்ணிக்கையில் புடவைகள் காணிக்கையாக பெறப் படுகின்றன. பெறப்படும் காணிக்கை பரிவட்டங்களுடன் கடைக்காரரிடமிருந்து பெறப்படும் அசல் இரசீதுகள் பெரும்பான்மையான நேர்வுகளில் இணைக்கப் படுகின்றன. அதன் மூலம் காணிக்கையாக வழங்கப்படும் பரிவட்டங்களின் அசல் விலையை அறியக் கூடும்.

இருப்பினும், இப்புடவைகளுக்கான மதிப்பினை உபயதாரர்களுக்கு வழங்கப்படும் காணிக்கை இரசீதுகளில் பதிவு செய்யப் படுவதில்லை. இந்த காணிக்கை பரிவட்ட புடவைகளை திருக்கோயில் அலுவலகத்தில் ஒப்படைக்கப் படுவதற்கு முன்னர் இப்புடவைகளுக்கான மதிப்பினை உள்துறை கண்காணிப்பாளரால் நிர்ணயிக்கப் படுவது நடைமுறையில் உள்ளதாக தணிக்கையின் போது அறியப் பட்டது. அவ்வாறு நிர்ணயிக்கப் படும் மதிப்பு காணிக்கை பரிவட்ட புடவையின் அசல் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காக உள்ளதையும் தணிக்கையின் போது அறியப்பட்டது. இது சரியான நடைமுறையாக தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

காணிக்கை கொடுத்த நபர்களுக்கு வழங்கும் இரசீதுகளில், காணிக்கையாக கொடுக்கப் பட்ட இனங்களுக்கான கொள்முதல் இரசீது இருப்பின் அதன் அசல் மதிப்பும், கொள்முதல் இரசீது இல்லாத நேர்வுகளில் அசல் மதிப்பிற்கு சரியான தோராய மதிப்பும், குறிப்பிடப்பட்டு காணிக்கை இரசீது வழங்குவதே ஆரோக்கியமான நிர்வாகத்திற்கு உகந்ததாக அமையும்.

இக்குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

ஆ) சாத்துப்படிக்கு வழங்கப்பட்ட புடவைகளே சாத்துப்படி செய்து திரும்பப் பெறப்பட்டன என்பதை உறுதி செய்திடும்பொருட்டு புடவைகளுக்கு வரிசை எண்களுடன் கூடிய அம்மன் திருவுருவம் பதிக்கப்பட்ட (Hollowgram Sticker) பயன்படுத்தப்படலாம்

இத்திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்படும் புடவைகளின் விவரம் கணினியில் பதிவு செய்யப்பட்டு பார் கோடு இணைக்கப்பட்டு அம்மனுக்கு சாத்துபடிக்காக வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் புடவைகள் அம்மனுக்கு சாத்தப்பட்டு, சாத்தப்பட்ட அனைத்து புடவைகளையும் ஒன்றாக சேர்த்து அன்றைய தினமோ,

மறுநாளோ, சில நேர்வுகளில் ஓரிரு தினங்கள் தாமதமாகவோ உள்துறை அலுவலகத்திற்கு திரும்பக் கொடுக்கப்படுகின்றன.

அம்மனுக்கு சாத்துபடிக்காக வழங்கப்பட்ட காணிக்கைப் புடவைகள் தான் அம்மனுக்கு சாத்துபடி செய்யப்பட்டு மீண்டும் உள்துறை அலுவலகத்திற்கு திரும்பக் கொடுக்கப்பட்டன என்பதை உறுதி செய்ய தக்க ஆதாரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

hologram வரிசை எண்களுடன் கூடிய அம்மன் திருவுருவம் பதிக்கப்பட்ட (~~Hollowgram~~ Sticker) களை காணிக்கையாகப் பெறப்பட்ட புடவைகளின்மீது அம்மனுக்கு சாத்துபடிக்காக வழங்கப்படுவதன் மூலம், இக்குறைபாடு களையப்பட ஏதுவாக அமையும்.

இதனை நடைமுறை படுத்துவதன் மூலம் காணிக்கையாகப் பெறப்பட்டு வழங்கப்பட்ட புடவைகளே சாத்துபடி செய்யப்பட்டு மீண்டும் உள்துறை அலுவலகத்தில் திரும்பப் பெறப்பட்டன என்பதையும், சாத்துபடி செய்யப்பட்ட புடவைகள் வரிசை எண் வாரியாக திரும்பப் பெறப்பட்டன என்பதை உறுதி செய்திடவும், காணிக்கையாகப் பெறப்பட்டு சாத்துபடி செய்யப்பட்ட புடவைகளை மாற்றிட இயலாத நிலை ஏற்படும் என்பதனையும் தணிக்கையில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பரிசீலனை செய்து, பரிவட்ட காணிக்கை இரசீதுகளில் பரிவட்டங்களின் அசல் விலை குறிப்பிடப்படவும், சாத்துப்படிக்கு வழங்கப்படும் காணிக்கை புடவைகளுக்கு வரிசை எண்களுடன் கூடிய அம்மன் திருவுருவம் பதிக்கப்பட்ட (Holo ~~Hollow~~gram Sticker) பயன்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

47). **திருக்கோயிலின் ரொக்க குறிப்பேடு,ரொக்க பேரேடு, தயாரித்தல் மற்றும் ஆகியன கணினி மூலம் மேற்கொள்ளப் படுகின்றன – ரொக்க குறிப்பேடு, ரொக்க பேரேடு ஆகியன வரையறுக்கப் பட்ட படிவத்தில் வடிவமைக்கப் படவில்லை மற்றும் குறைபாடுகள்**

49)

இத்திருக்கோயிலில் ரொக்கக் குறிப்பேடு, ரொக்கப் பேரேடு, ஆகியன கணினி மூலம் தயாரிக்கப்படுகின்றன. ரொக்கக் குறிப்பேடு மற்றும் பேரேடு வரையறுக்கப் பட்ட படிவத்தில் இல்லை. இவைகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டாலும் உதாரணத்திற்கு சில இனங்களை மட்டும் இதன் பால் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு கீழே குறிப்பிடப் படுகின்றன.

ரொக்க குறிப்பேட்டில் 'Ledger Folio' எண்ணை குறிப்பிட வழி வகை செய்யப் படவில்லை. ஆதலின் ரொக்கக் குறிப்பேட்டின் பெறப்பட்ட வரவினமோ, அல்லது மேற்கொள்ளப் பட்ட செலவினவோ ரொக்கப் பேரேட்டின் எந்த பக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்பதை அறிய இயலவில்லை.

ரொக்கக் குறிப்பேட்டில் வரவினங்களையும், செலவினங்களையும், பிரதான தலைப்பு மற்றும் உள் தலைப்பு குறிப்பிட்டு பதிவு செய்யப் படாத நிலையில், பெறப்பட்ட வரவினங்களும், மேற்கொள்ளப் பட்ட செலவினங்களும் எந்த பிரதான தலைப்பின் கீழ் உள்ளன என்பதை அறிய இயலவில்லை.

ரொக்கக் குறிப்பேட்டில் Inner column –இடம் பெறாத நிலையில் பெறப்படும் பல்வேறு வரவுகள் மற்றும் செலவுகளை நேரடியாக வரவு மற்றும் செலவு தலைப்பின் கீழ் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு கணக்கீடுகளை எளிதல் கையாளும் வண்ணம் அமையவில்லை. இது கணிதவியல் நடைமுறைகளுக்கு முரணானதாக அமைந்துள்ளது.

ரொக்கக் குறிப்பேட்டில் Inner column –இடம் பெறாத நிலையில், ரொக்கக் குறிப்பேட்டில் செலவுகள் தனித்தனியே இடம் பெறுவதால், பல்வேறு செலவுகள் ஒன்று சேர்க்கப் பட்டு ஒரு காசோலை வழங்கப்படும் நேர்வுகளில் வங்கி சிட்டையை ரொக்கக் குறிப்பேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்த்திட இயலவில்லை. இதுவும் கணிதவியல் நடைமுறைகளுக்கு முரணானதாக அமைந்துள்ளது.

அதே போன்று பொது நிதி, கட்டளை நிதி, நில ஆர்ஜித ஈட்டுத் தொகை, பொதுக் கணக்கில் உள்ள திருப்பணி நிதி, அன்னதான முதலீடு நிதி, தனியே பேணப்படும் திருப்பணி நிதி என அனைத்து இனங்கள் மூலமாக பெறப்படும் வரவு மற்றும் செலவுகளை சார்புள்ள வரவு மற்றும் செலவு தலைப்பின் கீழ் பிரிக்கப்படாமல் பதிவு செய்யப்படுகிறது. இவைகளின் இன வாரி விவரங்களை பிரித்து அறிவதில் மிகவும் சிரமம் ஏற்படுவதை தவிர்க்க இயலாத நிலையில் உள்ளது.

மேலும் பல்வேறு குறைகளுடன் கையாளப்பட்டு வரும் தற்போதுள்ள மென்பொருளில் கணிதவியலில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு படிவங்கள் மாற்றியமைக்கப் பட்டு கையாளப் படாவிடின் எதிர்காலத்தில் இத்திருக்கோயிலின் கணக்குகளில் பல்வேறு தவறுகள் ஏற்படுவதை தவிர்க்க இயலாத நிலை ஏற்படக் கூடும எனத் தணிக்கையில் கருதப்படுகிறது. ஆதலின் இது குறித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

48) **<u>உண்டியல் – சுவாமி சன்னதி – அர்த்த மண்டபத்தில் உண்டியல்கள் நிறுவப் படலாம் – அன்னதான உண்டியல் நிறுவப் பட்டுள்ள இடம் மாற்றி அமைக்கப் பட்டு அவ்விடத்தில் பிரதான திருக்கோயில் உண்டியல் நிறுவப்படலாம் – ஒரு கருத்தாய்வு</u>**

50)

அ) இத்திருக்கோயிலில் பெரும்பாலும் அனைத்து சன்னதிகளிலும் உண்டியல்கள் நிறுவப் பட்டுள்ளன. இந்த உண்டியல்கள் மாதந்தோறும் திறந்து எண்ணி கணக்கீடு செய்யப் படுகின்றன. தணிக்கையாண்டில் பிரதான திருக்கோயிலில் உண்டியல் மூலம் ரூ 4,40,00,680.50 வருவாயாக பெறப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலின் சுவாமி சன்னதியில், அர்த்த மண்டபத்தில் அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் சிறப்பு தரிசன கட்டணச் சீட்டு பெற்று வழிபாடு செய்து வருகின்றனர். அர்த்த மண்டபத்திற்கு வந்து வழிபாடு செய்யும் பக்தர்கள் தங்கள் ரொக்க காணிக்கைகளை சுவாமிக்கு செலுத்துவதற்கு வசதியாக அர்த்த மண்டபத்தில் உண்டியல்கள் நிறுவப் படவில்லை.

ஆதலின் சுவாமி சன்னதியில் அர்த்த மண்டபத்திற்கு வழிபாடு செய்ய வரும் பக்தர்கள் சுவாமிக்கு தங்கள் ரொக்கக் காணிக்கைகளை செலுத்துவதற்கு சிரமப் படுவதாக தணிக்கையின் போது அறியப் பட்டது.

ஆதலின் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அர்த்த மண்டபத்தில் சுவாமி திருவுருவத்தை மறைக்காத வகையிலும், அர்ச்சகர்கள் நடைபாதைக்கு இடையூறு வராத வகையிலும், பக்தர்கள் எளிதாக, வசதியாக தங்கள் ரொக்கக் காணிக்கைகளை சுவாமிக்கு செலுத்தும் வகையில் இரண்டு நகரும் உண்டியல்கள் நிறுவப்படலாம் எனத் தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறு சுவாமி சன்னதியில் அர்த்த மண்டபத்தில் கூடுதலாக இரண்டு நகரும் உண்டியல்கள் நிறுவப்படின் பக்தர்களிடம் அதிக வரவேற்பு இருக்கும் என்பதுடன், திருக்கோயிலின் நலனுக்கு உகந்ததாகவும் அமையும் எனத் தணிக்கையில் கருதப் படுகிறது.

எனவே, இப்பொருள் குறித்து தக்க பரிசீலனை செய்து, இலாகாவின் அனுமதி பெற்று கூடுதல் உண்டியல்கள் நிறுவப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

ஆ) பிரதான திருக்கோயிலில் அம்மன் சன்னதி நுழைவு வாயிலில் இத்திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கான உண்டியல் நிறுவப்பட்டுள்ளன. பிரதான திருக்கோயிலில் நுழைந்தவுடன், அம்மன் சன்னதி நுழைவு வாயிலில் இந்த அன்னதான உண்டியல் நிறுவப் பட்டுள்ளதால், பெரும்பான்மையான பக்தர்கள் பிரதான திருக்கோயிலுக்கு ரொக்கக் காணிக்கை செலுத்துவதாக எண்ணி, இந்த அன்னதான உண்டியலில் தங்கள் ரொக்கக் காணிக்கைகளை செலுத்தி விடுகின்றனர்.

79

மேலும் இந்த உண்டியலில் செலுத்தப் படும் ரொக்க காணிக்கை இத்திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்தப் படுவதாக வெளி மாநில பக்தர்கள் அறியும் வகையில் ஆங்கிலத்தில் அல்லது பிரதான வெளி மாநில மொழிகளில் செய்தி வெளியிட்டு, போர்டுகள் ஏதும் நிறுவப்படவில்லை. ஆதலின் வெளி மாநில பக்தர்கள் இந்த உண்டியலில் பிரதான திருக்கோயிலுக்கான தங்கள் பிரார்த்தனை காணிக்கைகளை செலுத்தி விடுகின்றனர்.

அன்னதான திட்டத்திற்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் ரொக்க காணிக்கைகளை செலுத்தும் வகையில் இந்த உண்டியல் இடம் மாற்றி நிறுவப்பட்டு, அந்த இடத்தில் பிரதான திருக்கோயில் உண்டியலை நிறுவுவதன் மூலம் பிரதான திருக்கோயிலுக்கு ரொக்க காணிக்கையினை பிரார்த்தனையாக செலுத்த நினைக்கும் பக்தர்களுக்கு உதவியாக அமையும் என்பதுடன் பிரதான திருக்கோயிலின் ரொக்க உண்டியல் வருவாயில் ஏற்படும் தொய்வும் தவிர்க்கக் கூடும்.

எனவே, இப்பொருள் குறித்து தக்க பரிசீலனை செய்து, இத்திருக்கோயிலின் அன்னதான உண்டியலை இடம் மாற்றி நிறுவப்படவும், அன்னதானத் திட்டத்திற்காக ரொக்க காணிக்கை செலுத்த விரும்பும் பக்தர்கள் மட்டுமே பயன் படுத்தும் வகையில் இந்த அன்னதான உண்டியல் நிறுவப்படவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

49) உண்டியல் – தணிக்கையாண்டில் திறக்கப்பட்ட உண்டியல்கள் – அறங்காவலர் குழுத் தலைவர் கலந்துக்கொள்ளாதது மற்றும் குறைபாடுகள்

51) அ) உண்டியல் திறப்பில் அறங்காவலர்குழு தலைவர் கலந்து கொள்ளவில்லை – அவரின் பிரதிநிதி கலந்து கொண்டதற்கு அனுமதி பெறப்படவில்லை – குறைபாடுகள்

இத்திருக்கோயிலில் மாதந்தோறும் உண்டியல் திறந்து கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தணிக்கையாண்டில் உண்டியல் திறப்பின் மூலம் ரூ 4.97.28.529/– வருவாயாகப் பெறப்பட்டுள்ளது. இத்திருக் கோயிலின் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டினை பரிசீலனை செய்ததில் இத் திருக்கோயில் உண்டியல் திறப்பில் இத்திருக்கோயிலின் அறங்காவலர் குழு தலைவர் கலந்து கொள்ளாததையும், அவர் சார்பில் அவரின் பிரதிநிதி கலந்து கொண்டு உண்டியல் பகிர்மானப்பதிவேட்டில் கையொப்பம் இட்டுள்ளதையும் தணிக்கையின் போது கண்டறியப்பட்டது.

1959ம் வருட இந்து சமய அறநிலையச் சட்டம் 22 பிரிவு 116(2)(27) ன் கீழ் இயற்றப்பட்ட விதிகளிலும், அரசாணை எண். 1231 வணிகவரி மற்றும் அறநிலையத்துறை நாள் 21.10,75 ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவிலும், உண்டியல் திறப்பில் அறங்காவலர் குழு தலைவர் கலந்துக் கொள்ள வேண்டியதை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்திருக்கோயிலின் அறங்காவலர் குழு தலைவர் உண்டியல் திறப்பில் கலந்து கொள்ளாததை தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் அறங்காவலர் குழுத் தலைவரின் சார்பில் அவரது பிரதிநிதி திரு வேதாச்சலம் / திரு ஆதிநாராயணன் கலந்துக்கொண்டு உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு ஆணையரின் சிறப்பு அனுமதி ஏதும் பெறப்படவில்லை.

ஆ) உண்டியல் பகிர்மானப்பதிவேட்டில் அறங்காவலர் குழு தலைவரின் பிரதிநிதி கையொப்பம் இடப்படவில்லை – குறைபாடுகள்.

தணிக்கையாண்டில் 28.07.2010, 30.08.2010, 29.09.2010, 27.12.2010, 30.12.2010, 31.01.2011, 30.3.2011, மற்றும் 28.04.2011 ஆகிய நாட்களில் நடைபெற்ற உண்டியல் திறப்பின் போது இத்திருக்கோயிலின் அறங்காவலர்குழுத் தலைவருக்குப் பதிலாக அவரின் பிரதிநிதி திரு.வேதாச்சலம் / திரு,ஆதிநாராயணன் கலந்து கொண்டதாக உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவுகள் உள்ளன.

ஆனால் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் அறங்காவலர் குழுத் தலைவரின் பிரதிநிதியின் கையொப்பம் ஏதுமில்லை.

இ) உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் அறங்காவலர் குழு தலைவர் / பிரதிநிதி கலந்து கொண்டதாக பதிவுகள்/கையொப்பம் இல்லை.

தணிக்கையாண்டில் 28.06.2011 அன்று நடைபெற்ற உண்டியல் திறப்பில் இத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் / அவரின் பிரதிநிதி யாரும் கலந்து கொண்டதாக உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவுகள் ஏதும் இல்லை.

மேலும் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் அறங்காவலர் குழுத் தலைவர்/ அவரின் பிரதிநிதியின் கையொப்பம் ஏதும் இல்லை.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும். தக்க நடவடிக்கை களுக்கும் கொண்டு வரப்படுகிறது.

50) **உண்டியல் – உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் அயல்நாட்டு நோட்டுகள் / நாணயங்கள் வரவு விவரம் பதிவுசெய்யப் படவில்லை – வரவாக்கப் பட்ட இந்திய மதிப்புத் தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை மற்றும் குறைபாடுகள்**

52)

அ) இத்திருக்கோயிலில் மாதந்தோறும் உண்டியல் திறந்து கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. உண்டியலில் கணிசமான அளவில் அயல்நாட்டு நாணயங்களும் அதிக எண்ணிக்கையில் அயல் நாட்டு நோட்டுகளும் வரவாக பெறப்படுகின்றன. பல்வேறு நேர்வுகளில் பெறப்பட்ட அயல் நாட்டு நோட்டுக்கள் / நாணயங்கள் வரவு விவரம் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் , தனியே பதிவேடு பேணி அதில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

உண்டியல் பகிர்மானப்பதிவேட்டில் உண்டியல் திறப்பின் மூலம் பெறப்பட்ட அனைத்து வரவுகளும் பதிவு செய்யப்படல் வேண்டும். ஆனால் தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட தேதிகளில் திறக்கப்பட்ட உண்டியலில் பெறப்பட்ட அயல்நாட்டு நோட்டுக்கள்/ நாணயங்கள் விவரம் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் அதற்கென பேணப்பட்டு வரும் பதிவேட்டில் மட்டும் பதிவு செய்து,இவைகளுக்கான இந்திய மதிப்புத் தொகையினை மதுரையை சேர்ந்த சுகால் பைனான்ஸ் பி.லிட்., என்ற நிறுவனத்தினரிடமிருந்து பெற்று வரவாக்கப் பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு.

வ. எண்	உண்டியல் திறப்புநாள் பதிவேடு பக்கம்	பலவகை ரசீது எண்	அயல் நாட்டு நோட்டுகள்/ காசோலைகள் மாற்றி வரவு	பலவகை ரசீதுஎண்	அயல் நாட்டு நாணயங்கள் மாற்றி வரவு
1	30.08.10/ 50	1824	3366.00	1904	58746.00 1596.00
	30.08.10/ 50	95167 95168	101.00 100.00 (காசோலை)	1904	58746.00 1596.00
2	29.09.10/ 52	95212	63794.00	95213	2464.00
3	30.11.10/ 60	4515	53213.00	95317	5022.00
4	27.12.10/ 62	5432	75640.00	---	---
5	31.01.11/ 65	6392	122278.00	95382 95424	3083.00 2100.00

மேற்கண்ட விவரப்படி வரவாக பெறப்பட்ட அயல்நாட்டு நோட்டுக்கள்/நாணயங்கள் விவரம் ஏன் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவுசெய்யப் படவில்லை என்பதை தணிக்கைக்கு விளக்கப் படவில்லை. மேலும் பெறப்பட்ட அனைத்து அயல்நாட்டு நோட்டுக்கள்/நாணயங்களும் பேணப்பட்டுள்ள தனிப்பதிவேட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளதா என்பதையும் தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை. மேற்கண்ட விவரப்படி வரவாக்கப்பட்ட அயல் நாட்டு நோட்டுக்கள் மற்றும் நாணயங்களுக்கான இந்திய மதிப்பிற்கு, நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட Bank Advice copy, அவைகளின் Exchange rate ஆகிய விவரம் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட வரவின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

82

51) 53) <u>உண்டியல் - அயல்நாட்டு நோட்டுகள் / நாணயங்கள் - வரவாக்கப் பட்ட இந்திய மதிப்புத் தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை மற்றும் குறைபாடுகள்</u>

தணிக்கையாண்டில் கீழ்க்கண்ட தேதிகளில் திறக்கப்பட்ட உண்டியலில் பெறப்பட்ட அயல் நாட்டு நாணயங்கள் / நோட்டுக்களுக்கான இந்திய மதிப்புத் தொகையினை மதுரையை சேர்ந்த சுகால் பைனான்ஸ் பி.லிட்., என்ற நிறுவனத்திடமிருந்து பெற்று திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு.

வ. எண்	உண்டியல் திறப்பு நாள்/ பதிவேடு பக்கம்	பலவகை ரசீது எண்	அயல் நாட்டு நோட்டுகள்/ காசோலைகள் மாற்றி வரவு	பலவகை ரசீதுஎண்	அயல் நாட்டு நாணயங்கள் மாற்றி வரவு
1	28.07.10/ 48	909	49017.00	95131 95135	254.00 3759.00
2	28.10.10/ 55	3699	27671.00	-	-
3	28.02.11/ 67	8011	39645.00	95435	1589.00
4	30.03.11/ 69	8584	32030.00	95494	2185.00
5	28.04.11/ 72	8829	22368.00	---	---
6	26.05.11/ 74	9622	33819.00	1963	1622.00
7	28.06.11/ 76	10535	90743.00	-	-

மேற்கண்ட விவரப்படி வரவாக்கப்பட்ட அயல் நாட்டு நோட்டுக்கள் மற்றும் நாணயங்களுக்கான இந்திய மதிப்பிற்கு நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட Bank Advice copy,அவைகளின் Exchange rate விவரம் ஆகியன தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படவில்லை.

மேலும் இதற்கென பேணப்பட்டுள்ள தனி பதிவேட்டில் எந்தெந்த நாட்டு நாட்டுக்கள் /நாணயங்கள் மாற்றப்பட்டு எவ்வளவு தொகை வரவாகப் பெறப்பட்டன, பெறப்பட்ட அயல்நாட்டு நோட்டுக்கள் /நாணயங்கள் அனைத்தும் மாற்றப்பட்டு விட்டனவா, என்கிற விவரம் பதிவு செய்யப் படாத நிலையிலும், மேற்கண்ட விவரப்படி அயல்நாட்டு நோட்டுக்கள்/நாணயங்கள் மாற்றப் பட்டு வரவாக்கப்பட்டதன் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிகவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது.

52) 54) <u>உண்டியல் – உண்டியல் மூலம் 30.10.90 முதல் 29.6.10 முடிய பெறப் பட்ட அயல்நாட்டு நாணயங்கள் விற்பனை செய்யப் பட்டது – வரவாக்கப் பட்ட தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை – குறைபாடுகள். (ந.க. 2200/2010, & 32/2011)</u>

இத்திருக்கோயிலின் உண்டியலகள் மூலம் 30.10.90 முதல் 29.6.10 முடிய பெறப்பட்ட அயல் நாட்டு நாணயங்களுக்கான இந்திய மதிப்புத் தொகையினை மதுரையை சேர்ந்த சுகால் பைனான்ஸ் பி.லிட்., என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்யப் பட்டு கீழ்க்கண்ட விவரப்படி ரூ 1,50,000/-வரவாக பெறப்பட்டுள்ளது. அறங்காவலர் குழுத் தீர்மானம் எண். 433 நாள் 9.9.10. விவரம் பின்வருமாறு:

வ.எண்	பலவகை இரசீது எண்/நாள்	தொகை ரூ பை
1	91545/06.7.10	14262
2	95075/15.7.10	60000
3	92178/26.7.10	25738
4	95101/31.7.10	40000
5	95102/31.7.10	10000
	மொத்தம்	150000

தணிக்கையில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்பட்டன.

1) எந்தெந்த அயல்நாட்டு நாணயங்கள் எவ்வளவு மாற்றப் பட்டன,
2) அயல் நாட்டு நாணயங்கள் மாற்றப்பட்ட நாளில் நிலவிய Exchange rate விவரம் என்ன,
3) மேற்படி நிறுவனத்திடமிருந்து வரவாக்கப் பட்ட தொகைக்கு பெறப்பட்ட Advice copy,
4) மேற்படி காலத்தில் பெறப்பட்ட அயல்நாட்டு நாணயங்கள் அனைத்தும் மாற்றப்பட்டு விட்டனவா,
5) மாற்றப்படாத அயல் நாட்டு நாணயங்கள் ஏதுமிருப்பின் அதன் விவரம்,
6) மேற்படி காலத்தற்கான அயல்நாட்டு நாணயங்கள் இருப்பு விவரப்பதிவேடு,
7) அயல் நாட்டு நாணயங்களுக்கான இந்திய மதிப்புத் தொகையினை ஒரு தேதியில் செலுத்தாமல், பல்வேறு தேதிகளில் சிறிது,சிறிதாக செலுத்தப் பட்டுள்ள நிலையிலும், மொத்தம் செலுத்தப் படவேண்டிய தொகை தணிக்கையில் அறியப் படாத நிலையிலும், பெறப்படவேண்டிய தொகை முழுவதுமாக பெறப்பட்டதா,

ஆகியன குறித்தான விவரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படாத நிலையில் அயல் நாட்டு நாணயங்கள் மாற்றப் பட்டு பெறப்பட்டுள்ள வரவின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிகவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது.

53) **உண்டியல் – உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் கிழிந்த நோட்டுக்கள் (Soiled Notes) பெறப்பட்டதாக பதிவுகள் இல்லை — கிழிந்த நோட்டுக்கள் மாற்றி வரவாக்கப் பட்டது மற்றும் குறைபாடுகள்.**

55)

தணிக்கையாண்டில் இத்திருக்கோயில் மாதந்தோறும் உண்டியல் திறந்து கணக்கீடு செய்யப் படுகிறது. தணிக்கையாண்டில் திறந்து கணக்கீடு செய்யப் பட்ட உண்டியலில் இருந்து பலமாற்று பொன்னினங்கள், வெள்ளி இனங்கள், பிரதமை தகடுகள், அயல் நாட்டு நோட்டுக்கள், அயல் நாட்டு நாணயங்கள், பித்தளை சாமான்கள் ஆகியன காணிக்கையாக பெறப்பட்டுள்ளன. ஆனால் ஒரு உண்டியல் திறப்பின் போது கூட கிழிந்த நோட்டுக்கள் (Soiled Notes) பெறப் பட்டதாக உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் பதிவுகள் ஏதும் இல்லை. இதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றே தணிக்கையில் கருதப்படுகிறது.

ஒவ்வொரு முறை உண்டியல் திறப்பின் போதும் பல இலட்சம் உண்டியல் வருமானமாக பெறப்படும் நிலையில், கிழிந்த நோட்டுக்கள் (Soiled Notes) ஏதும் பெறப்படவில்லை என்கிற கூற்றை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

மேலும் தணிக்கையாணடில் 27.6.07, 31.7.07 மற்றும் 29.8.07 ஆகிய நாட்களில் நடைபெற்ற உண்டியல் திறப்பின் போது பெறப்பட்ட கிழிந்த நோட்டுக்கள் (Soiled Notes) மாற்றப்பட்டு பலவகை இரசீது எண். 93914/28.9.10 ன்படி ரூ 13,130/- ம், 8/2010, 11/2010 மற்றும் 12/2010 ஆகிய மாதங்களில் பெறப்பட்ட கிழிந்த நோட்டுக்கள் (Soiled Notes) மாற்றப் பட்டு பலவகை இரசீது எண். 95434/11.3.11 ன்படி ரூ 1,144/- ம், ஆக மொத்தம் ரூ 14,274/- வரவாக பெறப்பட்டுள்ளன.

செலவாணியாகாத நோட்டுக்கள் பதிவேடு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படாத நிலையில் தணிக்கையாண்டிற்கு முன்னர் பெறப்பட்டு தணிக்கையாண்டின் ஆரம்பத்தில் மாற்றப்படாமல் இருந்த கிழிந்த நோட்டுக்கள் விவரமும், தணிக்கையாண்டில் வரவாக்கப்பட்டது போக இன்னமும் மாற்றப்படவேண்டிய கிழிந்த நோட்டுகள் ஏதும் எஞ்சியுள்ளனவா என்கிற விவரமும், தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் தணிக்கையாண்டில் உண்டியல் பகிர்மானப் பதிவேட்டில் கிழிந்த நோட்டுக்கள் குறித்தான பதிவுகள் ஏதும் மேற்கொள்ளப் படாத நிலையிலும், கிழிந்த நோட்டுக்கள் பதிவேடு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படாத நிலையிலும், தணிக்கையாண்டில் 8/2010, 11/2010 மற்றும் 12/2010 ஆகிய மாத உண்டியல் திறப்பின்போது கிடைக்கப்பெற்ற செலவாணியாகாத நோட்டுக்கள் மாற்றப்பட்டு பலவகை இரசீது எண். 95434/11.3.11 ன்படி வரவாக்கப் பட்ட தொகை ரூ 1144/- ம் சரித்தன்மையை தணிக்கையில் அறிய இயலவில்லை. அத்துடன் 8/2010, 11/2010 மற்றும் 12/2010 மாத உண்டியல் திறப்பில் பெறப்பட்ட செலவாணியாகாத நோட்டுக்கள் மாற்றப்படும் நாள் வரை யார் பொறுப்பில் இருந்தன, இவைகள் ஏன் உடனுக்குடன் மாற்றப்பட்டு

திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்படவில்லை எனவும் தணிக்கைக்கு விளக்கப்படவில்லை.

மேலும் தணிக்கையாண்டில் 7/2010, 10/2010 முதல் 11/2010 முடிய மற்றும் 1/2011 முதல் 6/2011 முடியவுள்ள காலத்தில் திறக்கப்பட்ட உண்டியல் திறப்புகளின் போது கிழிந்த/ செலவாணியாகாத நோட்டுக்கள் ஏதும் பெறப்பட்டு அவைகள் யார் பொறுப்பிலும் உள்ளனவா, இவைகள் ஏன் உண்டியல் பகிர்மானப் பதிவேடு மற்றும் கிழிந்த/செலவாணியாகாத நோட்டுக்கள் பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்யப்படாமல் தனிப்பட்ட பணியாளர் பொறுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன போன்ற வினாக்களும் தணிக்கையில் எழுகிறது.

எனவே,

1) செலவாணியாகாத நோட்டுக்கள் பதிவேட்டினை தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படுவதற்கும்,

2)உண்டியல் பகிர்மானப்பதிவேட்டில் இது தொடர்பாக பதிவுகளை ஏன் மேற்கொள்ளப் படுவதில்லை என்பதற்கும்,

3)இன்னமும் மாற்றப்படாமல் செலவாணியாகாத நோட்டுக்கள் உள்ளனவா என்பதற்கும்,

4)ஒரு சில மாதங்களுக்கில் மட்டுமே செலவாணியாகாத நோட்டுக்கள் மாற்றப்பட்டு வரவாக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய மாதங்களில் பெறப்பட்ட செலவாணியாகாத நோட்டுக்கள் யார் பொறுப்பில் உள்ளன, இவைகள் ஏன் இதுகாறும் மாற்றப்படவில்லை என்பதற்கும்,

உரிய நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும், குறைபாடுகள் நிவர்த்திக்கப்படவும், உரிய விவரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படவும், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

54) 56) <u>ஏலம் – பழைய இரும்பு / மரச் சாமான்கள் ஏலம் – ஏலப் பதிவேடு தாக்கல் செய்யப் படவில்லை – வரவின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை – குறைபாடுகள்</u>

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் பழைய இரும்பு / மரச் சாமான்கள் பொது ஏலத்தில் விடப்பட்டு கீழ்கண்ட விவரப்படி வரவாக்கப்பட்டுள்ள விவரம் ரொக்க பேரேடு வாயிலாக அறியப்படுகிறது – விவரம் பின்வருமாறு

வ எண்	பலவகை ரசீது எண் / நாள்	விவரம்	தொகை ரூ பை
1	96220 / 03.12.2010	முக்தீஸ்வரர் கோயில் பழைய மரச் சாமான் ஏலம்	1,260.00
2	96221 / 03.12.2010	முக்தீஸ்வரர் கோயில் பழைய இரும்புச் சாமான் ஏலம்	10,120.00
3	96940 / 27.12.2010	இரும்பு ஏலம் எடுத்த வகைக்கு	14,790,00
4	95405 / 18.02.2011	முக்தீஸ்வரர் கோயில் – கும்பாபிஷேகத்தின் போது பிரித்து எடுத்து வைக்கப்பட்ட பழைய இரும்புச் சாமான் (20.10.2010 – ஏலம் ஒத்திவைக்கப்பட்டது. 09.11,2010 – ஏலம் கோரிய நபர் பொருட்களை எடுத்துக்கொள்ள வில்லை – பின்னர் ஏலதத்தில் விடப்பட்டதற்கு ஆதாரம் இல்லை.	15,000,00
5	95407 / 18.02.2011		19,000,00
6	95408 / 18.02.2011		40,000,00
7	98523 / 25.02.2011		27,138,00
8	367 / 07,04,2011	கூடல் செங்குளம் தென்னை மரம் தேங்காய் விற்பனை	4,240,00

மேற்கண்ட இனங்கள் பொது ஏலத்தில் விடப்பட்டு ஏலத் தொகை வரவாக்கப்பட்டுள்ள விவரம் இத்திருக்கோயிலில் பேணப்பட்டுள்ள ரொக்க பேரேடு வாயிலாக அறியப்படுகிறது.

இவ்வினங்கள் பொது ஏலத்தில் விடப்பட்டதற்கான ஏலப் பதிவேடு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. ஆதலின் வரவாக்கப்பட்ட தொகையின் சரித்தன்மையை தணிக்கையில் அறிய இயலவில்லை.

இப்பொருட்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட கோப்பு எண் 357 / 2008 / E2 வின் வாயிலாக சரியான விவரங்கள் அறிய இயலவில்லை. மேற்கண்ட ஏலங்கள் ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டதற்கான விவரங்களும் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே இக்குறைபாடுகள் ஆணையரின் தனிக்கவனத்திற்கும் தக்க நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுகிறது.

55) <u>மின் கட்டணம் – கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு – தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை – கடும்குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலுக்கு சொந்தமாக பல்வேறு கடைகள் / கட்டிடங்கள் உள்ளன. இந்த கடைகள் / கட்டிடங்களுக்கான மின் கட்டணம் திருக்கோயிலிலிருந்து செலுத்தப்பட்டு பின்னர் மின்வாரியத்தால் நிர்ணயிக்கப்படும் ரேட்டின் அடிப்படையில் மாதம்தோறும் மின்கட்டணக் கேட்பு எழுப்பப்பட்டு வாடகைதாரர்களிடமிருந்து மின்கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

தணிக்கையாண்டிற்கான மின் கட்டண கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் தணிக்கையாண்டில் வாடகைதாரர்களிடமிருந்து மின்கட்டணமாக ரூ.18,82,766/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டண கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு பேணப்படாத நிலையில் பெறப்பட்டுள்ள மின் கட்டண வரவினை தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை.

பசலி 1419 க்கிற்கான மின் கட்டண கேட்பு வசூல் நிலுவைப் பதிவேடு முடிக்கப்படாததால், பசலி 1420 – க்கான இப்பதிவேடு முடிக்க இயலவில்லை என தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது.

எனவே, பசலி 1420ல் பெறப்பட்ட மின் கட்டண வரவினையே பசலி 1420 க்கு கேட்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு தணிக்கை முடிக்கப்பட்டது.

பசலி 1418 ன் முடிவில், பல வாடகைதாரர்களிடமிருந்து ரூ.7,33,411.20 நிலுவையாகவுள்ள நிலையில் கடந்த இரண்டாண்டுகளாக இப்பதிவேடு முடிக்கப்படாமல் இருப்பது தணிக்கையில் ஏற்கும்படியாக இல்லை.

உடனடியாக இப்பதிவேடு முடிக்கப்பட்டு நிலுவையாகவுள்ள மின் கட்டணத்தை வசூலிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது.

56) **<u>மனை வாடகை – வாடகைதாரர்கள் பெயரில் அதிகளவில் நிலுவை உள்ளது – நிலுவையை வசூலிக்க சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை – கடுங்குறைபாடுகள்</u>**

58)

இத்திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் பலவகை கேட்புப் பதிவட்டின் படி இத்திருக்கோவிலுக்கு சொந்தமான காலிமனைகளில் வாடகைதாரர்களாக உள்ளவர்களில் கீழ்கண்ட வாடகைதாரர்கள் பெயரில் அவர்களுக்கெதிரே தெரிவிக்க விபரப்படி அதிகளவு வாடகை பாக்கி உள்ளது. இந்த வாடகைத்தாரரிமிருந்து வாடகை பாக்கியை வசூலிக்கவோ அல்லது அவர்களை வெளியேற்றவோ எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. சம்மந்தப்பட்ட வாடகைதாரர்கள், தங்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கும் வகையில் அவ்வப்போது சிறிய தொகையை செலுத்தி வருகின்றனர் .

வ. எண்	மனை வாடகை கேட்பு பதிவேடு அடையாள குறியீட்டு எண்.	வாடகைதாரர் பெயர்	ஆண்டு 1-க்கு கேட்பு ரூ	பசலி 1420 முடிவில் பாக்கி ரூ
01.	785	சிவக்குமார்	88368/-	208272.60
02.	788	கதிரேசன்	8244/-	58395.40
03	789	ராஜேந்திரன்	37944/-	301562.40
04.	790	அய்யப்பன்	15912/-	161153-20
05.	792	எஸ். போஸ்	21060/-	164151-00
06.	793	எம். மாதவன்	7272/-	76679-00
07.	794	செ. போஸ்	80748/-	540828-00
08.	799	திருமலை செட்டியார்	9252/-	92725.25
09.	811	சுப்பா நாயுடு	6120/-	57630.00
10.	856	ஆவுடையப்பன்	91200/-	463400.00
11.	858	அருணாச்சலம் செட்டியார்	5856/-	72197.00
12.	863	கலாவதி	24288/-	249999.00
13.	866	சிவகுருநாதன்		249897.00

கணிசமான தொகையை வாடகை நிலுவையாக வைத்திருக்கும் இவ்வாடகைதாரர்களிடமிருந்து வாடகை நிலுவையை வசூலிக்க தணிக்கையாண்டில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

வாடகை பாக்கியை வசூலிக்க உரிய நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். வாடகை பாக்கியை செலுத்த மறுக்கும் வாடகைதாரர்களின் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப் படல் வேண்டும்.

84 பாகம் - 2 (அ)

57) வரவு செலவு திட்டம் - மிகைச் செலவுகள் அங்கீகாரம் பெறப்படவில்லை - குறைபாடுகள்

அ) இத்திருக்கோயிலின் பசலி 1420க்கான உத்தேச வரவு செலவு திட்டம் ஆணையர் மூ.மு.எண் 35280/10 இசட்2 நாள் 29.09.10 ன் படி அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகைக்கும் மிகையாக கீழ்க்கண்ட தலைப்புகளில் செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த மிகைசெலவுகளுக்கு 1959 ம் வருட இந்து சமய அறநிலைய சட்டம் 22 பிரிவு 86(6) ன் படி பின்னேற்பு அங்கீகாரம் பெறப் படவில்லை. ஆதலின் இம்மிகைச் செலவு ரூ 3,42,02,380.30 ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

வ. எண்	தலைப்பு விவரம்	செலவு ரூ பை	அனுமதி ரூ பை	மிகைச் செலவு ரூ பை
1	பணியாளர் சம்பளம்	44964804.00	39300000.00	5664804.00
2	பயணப்படி செலவுகள்	66512.00	50000.00	16512.00
3	விசாரணை கட்டளை அலவன்ஸ்	141186.00	90000.00	51186.00
4	மாநகராட்சி சொத்துவரி	3030541.00	2000000.00	1030541.00
5	சகாயத்தொகை	17328982.00	14000000.00	3328982.00
6	தணிக்கைக் கட்டணம்	6642994.00	4000000.00	2642994.00
7	ஆணையர் பொது நலநிதி	8000000.00	8000000.00	0.00
8	மின்கட்டணம்	4433252.00	3500000.00	933252.00
9	ஜெனரேட்டர் பராமரிப்பு	261989.00	175300.00	86689.00
10	அச்சுக்கூலி	394070.00	325000.00	69070.00
14	வழக்குறைஞர் கட்டணம்	102250.00	50000.00	52250.00
15	உண்டியல் திறப்பு செலவு	120845.00	115000.00	5845.00
16	விளம்பரங்கள்	290574.00	230000.00	60574.00
17	கணிப்பொறி பராமரிப்பு	94053.00	65000.00	29053.00
18	பூஜை படித்தர மற்றும் உற்சவ செலவுகள்	9668285.30	7180000.00	2488285.30
19	கூடல் செங்குளம் பண்ணை	372822.00	30000.00	342822.00
20	கட்டிடம் சில்லரை மராமத்து	2511923.00	800000.00	1711923.00
21	திருக்கோயில் கார் மற்றும் டிராக்டர் பராமரிப்பு	233691.00	200000.00	33691.00
22	புதிய கட்டிடம் கட்டுதலும் பழையன புதுப்பித்தலும்	14619741.00	4000000.00	10619741.00
23	கால் நடைகள் பேணுதல்	742416.00	450000.00	292416.00
24	விற்பனை குங்குமம் கொள்முதல்	200774.00	150000.00	50774.00

25	பிரசாதம் விற்பனை கொள்முதல் செலவு	10079046.00	7000000.00	3079046.00
26	நெய் தீப சாமான்கள் கொள்முதல்	734075.00	200000.00	534075.00
27	பாதுகாப்பு படைவீரர்கள் பங்குத் தொகை	489819.00	250000.00	239819.00
28	இன்னிசை நிகழ்ச்சிகள்	40000.00	30000.00	10000.00
29	பொது விருந்து நடத்துதல்	28102.00	20000.00	8102.00
30	முக்கிய பிரமுகர்கள் வருகை	20311.00	8000.00	12311.00
31	விபூதி தயாரித்தல்	76118.00	60000.00	16118.00
32	அம்மன் சுவாமி உபய அபிசேகம்	952745.00	500000.00	452745.00
33	சுற்று சன்னதி உபய அபிசேகம்	144879.00	100000.00	44879.00
34	சித்தர் பூக்கூடாரம்	387055.00	150000.00	237055.00
35	முக்குறுணி விநாயகர் சந்தனக் காப்பு	34860.00	30000.00	4860.00
36	சுற்று சன்னதிகள் சந்தனக் காப்பு	38550.00	30000.00	8550.00
37	புரோகிதம் தர்ப்பணம் ஈவு	143416.00	100000.00	43416.00
	கூடுதல்			34202380.30

ஆ) அங்கீகரிக்கப் பட்ட வரவு செலவு திட்டத்தில் இடம் பெறாத இனங்களுக்கான செலவுகள் – தனி அனுமதி பெறப் படவில்லை – குறைபாடுகள்

தணிக்கையாண்டிற்கான அங்கீகரிக்கப் பட்ட வரவு செலவு திட்டத்தில் கீழ்க்கண்ட இனச் செலவினங்கள் இடம் பெறவில்லை. இச்செலவுகளுக்கு இலாகாவிடமிருந்து தனி அனுமதி ஏதும் பெறப்படவில்லை. ஆதலின் இச்செலவு தொகை ரூ 7,90,239.00 ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப் படுகிறது.

வ. எண்	தலைப்பு விவரம்	செலவு ரூ பை
1	உற்சவம் இ–தர்சன் செலவுகள்	158500.00
2	உற்சவ கட்டளைகள் படித்தரம்	526030.00
3	முக்தீஸ்வரர் கோயில் மண்டலாபிசேக செலவு	33509.00
4	தகவல் மையம் அமைத்தல்	72200.00
	கூடுதல்	790239.00

58) சொத்துப் பதிவேடு – வருடாந்திர சேர்த்தல் மற்றும் நீக்குதல் பட்டியல் தயார் செய்து அங்கீகாரம் பெறப்படவில்லை – மற்றும் குறைபாடுகள்.

இத்திருக்கோயிலுக்கான சொத்துப் பதிவேடு 1959ம் வருட இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 22 பிரிவு 29–ன் படி தயார் செய்து ஆணையரின் நி,மு. எண் 64167 /90 நாள் 22.10.90 ல் அங்கீரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டப் பிரிவு 30–ன் படி வருடாந்திர சேர்த்தல் மற்றும் நீக்கல் பட்டியல் தயாரித்து ஆணையரின் அங்கீகாரம் பெறப்படவில்லை, சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டு சுமார் 21 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டப்படியால். சட்டப்பிரிவு 31–ன் படி புதியதாக சொத்துப் பதிவேடு தயார் செய்து ஆணையர் அங்கீகாரம் பெறப்படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

திட்டப் பதிவேடு – புதுப்பிக்கப்படவில்லை – குறைபாடுகள்

இத்திருக்கோயிலுக்கான திட்டப் பதிவேடு சென்னை ஆணையரின் நி.மு எண் 22665/92 இசட்2 நாள் 17.7.1992– ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திட்டப் பதிவேடு அங்கீகரிக்கப் பட்டு சுமார் 19 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டப் படியால் தற்கால விலைவாசிளுக்கு ஏற்ப இந்து சமய அறநிலையத் துறையின் சட்டப் பிரிவு 58–ன் படி புதிய திட்டம் தயார் செய்து ஆணையர் அங்கீகாரம் பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,

மேலும் ஆறு கால பூஜை செலவுகளுக்கு ஆணையரின் மூ.மு. எண் 57127/07 இசட் 2 நாள் 22.09.2007–ன் படி நாள் ஒன்றுக்கு ரூ 4326.92 என்ற அளவில் படி புதிய படித்தரத் திட்டம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது,

ஆதலின் அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய திருந்திய திட்டம் தயாரித்து ஆணையர் அங்கீகாரம் பெறப்பட விரைவு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மரப்பதிவேடு – குறைபாடுகள்

இவ்வாலயத்திற்கு சொந்தமான மரங்களின் விபரங்கள் அடங்கிய மரப்பதிவேடு ஆணையரின் ப,மு, எண் 58060/05 நாள் 10.9.05 ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இப்பதிவேட்டின் படியான மரங்களில் பல்வேறு மரங்கள் பட்டுப் போய் விட்டதாகவும், சில மரங்கள் காற்றில் சாய்ந்து விட்டதால் பின் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டதாகவும், தணிக்கையின் போது அறியப்பட்டன. எனவே தற்போதுள்ள மரங்களின் நிலவரத்திற்கேற்ப புதிய மரப்பதிவேடு தயாரித்து ஆணையர் அங்கீகாரம் பெறப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

59) 63

திருக்கோயில் நிலங்களுக்கான தனித்துணை ஆட்சியாளரின் 1 முதல் 15 வரையிலான பதிவேடுகள் இத்திருக்கோயில் மற்றும் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுடன் இணைந்துள்ளது-தனியாக பிரித்து பதிவேடுகள் தயார் செய்யப்படல் வேண்டும் மற்றும் பிற குறைபாடுகள்.

இத்திருக்கோயிலுக்கான 1 முதல் 15 வரையிலான பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு தனித்துணை ஆட்சியாளரால் 27.02.1974 ல் வெளியிடப்பட்டுள்ளது, இதில் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது,

		ஏ-செ
1. நன்செய் நிலம்-		1546-32
2. புன்செய் நிலம்-		1394-81 1.4
	கூடுதல்	2941-13 1.4

இதில் கீழ்காணும் குறைபாடுகள் காணப்பட்டன.

1. தனித்துணை ஆட்சியாளரின் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட நிலங்கள் இத்திருக்கோயிலுக்கும், துணைஆணையர்/செயல் அலுவலர் நிலையில் உள்ள திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கும் சொந்தமானவை, எனவே இத்திருக்கோயிலுக்கு மட்டுமே உரிமையான கட்டிடங்கள், காலிமனைகள் மற்றும் நிலங்கள் மற்றும் கட்டளை நிலங்கள் ஆகியவைகளின் விபரங்கள் அறிய இயலவில்லை, எனவே மேற்கண்ட இனங்களை தனித் தனியேப் பிரித்து தனியாக அறிக்கை மற்றும் 1 முதல் 15 வரையிலான பதிவேடுகளைத் தயாரிக்கப் பட உரிய முன்மொழிவுகள் ஆணையருக்கு சமர்ப்பித்து தக்க மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

2. மேலும். இதில் காணப்பட்டுள்ள குறைபாடுகள் இதுகாறும் நிவர்த்தி செய்யப்படவில்லை. இக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(60) **<u>நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் - மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் - மற்றும் குறைபாடுகள்.</u>**

இத்திருக்கோயிலின் நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களின் இருப்புகளுக்கான விபரங்களை நகை ஆய்வாளர் நகை சரிபார்ப்பு அதிகாரியால் இறுதியாக 22. அன்று மறு மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு அறிக்கை 5.2008 நாள் 22.06.2008-ன்படி வெளியிடப்பட்டு ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு.

முந்தைய மறுமதிப்பீடு/மறுசோதனை மதிப்பீடு விபரம்	தொகை ரூ-பை
1. 1978-ம் ஆண்டு மறுமதிப்பீடு செய்த மதிப்பு	1,09,12,712-00
2. 1984-ம் ஆண்டு மறுசோதனை மதிப்பீடு செய்த மதிப்பு	29,11,292-00
3. 1990-ம் ஆண்டு மறுசோதனை மதிப்பீடு செய்த மதிப்பு	36,11,661-00
4. 1991-ம் ஆண்டு மறுசோதனை மதிப்பீடு செய்த மதிப்பு	1,80,11,912-00
5. 2008-ம் ஆண்டு மறுசோதனை மதிப்பீடு செய்த மதிப்பு	
1. தங்கம் மதிப்பு ரூ 35,16,569.00	
2. பொன் மதிப்பு ரூ 8,11,60,780.00	
3. வெள்ளி மதிப்பு ரூ 1,06,12,390.00	
	12,53,19,739-00
மொத்த மதிப்பு	16,08,33,319-00

கடைசியாக அன்று இத்திருக்கோயிலின் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் மறுசோதனை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் உண்டியல் திறப்பு மூலம், காணிக்கை மூலம் பெறப்பட்ட நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளை மறுசோதனை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

அத்துடன் நகைகள் மறுமதிப்பீடு செய்து பார் 33 ஆண்டுகள் முடிந்து விட்ட நிலையில் இத்திருக்கோயிலின் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளை மறுமதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்:</u>

அ) நகை சரிபார்ப்பு அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குறிப்புரைகளின் பின்வரும் குறிப்புரைகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விபரங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

1. சாத்துப்படிக்காக கொடுக்கப்படும் நகைகளுக்கு தனிப்பதிவேடு பேணப்பட்டு அதில் முறையாக பதிவுகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. பொன் மற்றும் வெள்ளி இனங்களை விவரக்குறிப்புடன் தனித்தனியே இன்வெண்டரி பதிவேடு பேணப்படல் வேண்டும்.

3. காணிக்கை மற்றும் உபயமாக வரப்பெறும் பொன், வெள்ளி இனங்களை உடனுக்குடன் இரசீது போட்டு உரிய பதிவேடுகளில் பதிவுகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>2008 மறுசோதனை மதிப்பீடு அறிக்கை - குறிப்புரை</u>

<u>குறிப்புரை எண் 1 :</u> இக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பொருள்களை (செப்பினால் ஆன தங்க மேல்பூச்சு) மற்றும் உதவி ஆணையர் நகை சரிபார்ப்பு அலுவலரின் தனி மதிப்பீட்டு அறிக்கை எண். 28/03 நாள். 23.06.2003 ன்படி மதிப்பீடு செய்து ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்க

2008 மிற்சேர்க்கை மதிப்பீடும் செய்து கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 28/03 மதிப்பீட்டிற்கான அனுமதி பெறப்பட்ட விபரம் அதனை பெற்று விரைவில் தணிக்கைக்கு தாக்கல் செய்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

<u>குறிப்புரை எண் 8:</u>

பழைய பித்தளை இனங்கள் மற்றும் பழைய வெள்ளி இனங்கள் அதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்று உருக்கி தக்கதங்கம் மற்றும் தக்க வெள்ளி கட்டிகளாக மற்றும் செய்து இனங்கள் அனுமதியுடன் புதிதாக செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>குறிப்புரை எண்.9:</u>

2008ம் ஆண்டு மிற்சேர்க்கை மதிப்பீடும் அ) வெள்ளி இனங்கள் வரிசை எண். 13 ல் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள்

வெள்ளி அம்மன் பெரிய திருவாச்சி -1 மற்றும் கருடவாகனத்தில் கூடியது.

	கி.கிராம்.
பதிவேட்டின்படி எடை -	13360-00
மிற்சேர்க்கை மதிப்பீட்டின் போது எடை	13150-00
குறைவு	210-00

இதற்கான விளக்கம் ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டு ஏற்பளுமதி பெற்றிட வேண்டும். இவ்வாறு எடை குறைவு ஏற்பட்ட இனங்களில் தெரிவிக்கப்பட்ட குறிப்புரைகளின் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய விவரங்களை தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

<u>ஆ) நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் கையாளும் பணியாளர்களிடமிருந்து காப்புத் தொகை பெறப்படல் வேண்டும் - மற்றும் குறைபாடுகள்</u>

இத்திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் அருள்மிகு அம்மன் சுவாமிகளுக்கு சாத்தப்படுகின்ற நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை கையாளுகின்ற பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து உரிய பதிவேடும் கையொப்பம் பெறப்படுகின்றனவா என்பதையும், மேலும் அவைகள் பாதுகாப்பாக பெறப்படுகின்றனவா என்பதையும், அறிய தொடர்புடைய பதிவேடுகள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாததால் சாத்துபடிக்காக வழங்கப்படும் நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள், திரும்ப பெறப்பட்டு உரிய அலுவலர்களால் சரிபார்ப்பு செய்யப்பட்டு, அவைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டது என்பதை தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் சாத்துபடிக்காக கருவறையில் அர்ச்சகர் பட்டர்கள் கையாளுகின்ற நகைகளுக்கும், விலையுயர்ந்த ஆபரணங்களான வைரம் மற்றும் வைடூரியங்களுக்கும் பொறுப்பு தொகை பெறப்பட்டது என்பதையும் அறிய இயலவில்லை.

ஆகவே நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை கையாளுகின்ற நபர்களிடமிருந்து உரிய பொறுப்புத் தொகை பெறப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இக்குறைபாடுகளைக் களைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இ) விற்பனை தங்கக் காசுகள் இருப்பிலிருந்து குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆணையர் ந.க. 71953/10 ஜ2 – 1 நாள் 11.12.2010 ன்படி திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு விற்பனை செய்யப்பட்ட 1600 கிராம் தங்கக் காசுகளை திருக்கோயிலின் மொத்தத் தங்கம் இருப்பிலிருந்து குறைத்துக் கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

61) 65

வருவாய் நிலுவைகள் – வசூலிக்கப்படாமை மற்றும் காலங்கடந்த நிலுவைகளை அறிந்திட போதிய விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படாமை – குறைபாடுகள்

தணிக்கையாண்டின் முடிவில் இத்திருக்கோயிலின் வருவாய் இனங்களில் பின்வருமாறு பெருமளவில் நிலுவைகள் வசூலிக்கப் படாமல் உள்ளன.

இந்நிலுவைகள் குறித்த பசலி வாரி விவரங்களும், ஒவ்வொரு நபரும் கடைசியாக நிலுவையினை செலுத்திய நாள் குறித்த விவரங்களும் இத்திருக்கோயிலின் பலவகை கேட்புப் பதிவேட்டில் குறிப்பிடப் படாமையால் இந்நிலுவைகளில் எவை, எவை எப்பொழுது சட்டப்படி வசூலிக்க இயலாதவாறு காலங்கடந்து விட்டன என்பதையும், அவ்வாறு காலங்கடப்பதற்குப் பொறுப்பானவர் எவரெவர் என்பதையும், தணிக்கையில் கணித்தறிந்து பட்டியலிட்டு இழப்பை வசூலிந்தற்குரிய வழிவகைகளை சுட்டிக்காட்ட இயலவில்லை. நிலுவை விவரம் பின்வருமாறு:

வ.எண்	வருவாயினத் தலைப்பு	30.06.11 ல் நிலுவை ரூ பை
01.	நன்செய் குத்தகை (ரொக்கம்)	671432.14
02.	புன் செய் குத்தகை	118976.50
03.	மனை வாடகை	3416516.23
04.	கடைகள் மற்றும் கட்டிடங்கள் வாடகை	43773649.00
05.	எழுகடல் கடை வாடகை	5197330.90
06.	சில்லறைக் குத்தகை	386462.65
07.	தஸ்திக்	453388.59
08.	பேரிஜ் வஜா	106313.38
09.	கடன் வட்டி	653725.67
10.	டிகிரி பாக்கி	192128.25
11.	சம்மரி தூட்	66156.40
12.	நிலவரி	4638.36
13.	வழக்குச் செலவு	29432.70
14.	டிகிரித் தொகை வட்டி	10859.67
15.	மின் கட்டணம் திரும்ப வசூலித்தல்	733411.20
	கூடுதல்	55814421 64
	நெல் (குவிண்டால்)	7492.98

போதிய விவரங்கள் திருக்கோயிலின் பலவகை கேட்புப் பதிவேட்டில் முழுமையாகக் குறிப்பிடப்பட்டுத் தணிக்கைக்கு காண்பிக்கப் படுவதுடன், வருவாயின நிலுவைகளில் வசூலிக்க இயலாதவாறு காலங்கடந்து விட்டவைகள் எவை, எவை என்பதைக் கண்டறிந்து இவ்வகையில் ஏற்பட்டுள்ள இழப்பிற்குக் காரணமானவர்களிடமிருந்து இவ்விழப்பினை வசூலித்திட வேண்டும்.

கேட்பு பதிவேடுகள் கணினியில் தயாரிக்கப் பட்டு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், ஒவ்வொரு இனத்தின் ஆரம்ப இருப்பு விவரங்கள் பதிவு செய்யப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை. ஆதலின் ஒவ்வொரு இனத்தின் ஆரம்ப இருப்பு பதிவுகள் தணிக்கையில் சரிபார்த்து சான்றளிக்க இயலவில்லை என்பதையும் குறிப்பிடப்படுகிறது.

98

62) **<u>நஞ்சை நிலங்கள் – தானியக் குத்தகைக்கு விடப்பட்டது – பல குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை வசூலிக்கப் படாததால் நிலுவை அதிகமாக உள்ளது – குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரம் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை மற்றும் குறைபாடுகள்</u>**

66

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான பல ஊர்களில் உள்ள நஞ்சை நிலங்கள் தானியக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான இனங்களில் குத்தகை வசூலிக்கப் படவில்லை.

இத்திருக்கோயிலின் நஞ்சை நிலங்களின் தானியக் குத்தகை கேட்பினை பதிவேட்டினை பரிசீலனை செய்ததில், தணிக்கையாண்டில் வ.எண். 2,4,14,15,62,129,132,134,136,205,208 மற்றும் 212 ல் குறிப்பிடப் பட்டுள்ள 12 குத்தகைதாரர்களிடமிருந்து மட்டுமே தணிக்கையாண்டில் 329.37 குவிண்டால் நெல்லுக்குப் பதில் ரொக்கம் வசூலிக்கப் பட்டு ரூ1,52,988/- திருக்கோயில் கணக்கில் வரவாக பெறப்பட்டுள்ளது. எஞ்சிய குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகையினை வசூலிக்க மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

தணிக்கையாண்டின் முடிவில் 7492-98 குவிண்டால் நெல் வசூலிக்கப்படாமல் பாக்கியாக உள்ளது. இந்த நிலுவையை வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்</u>

1) இந்த நிலங்கள் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் இருந்து வருவதை உறுதி செய்யும் வகையில் இந்த நிலங்களுக்கான பட்டா புத்தகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

2) இந்த நிலங்களில் என்ன விளைவிக்கப் படுகின்றன என்பதை அறிந்திடும் வகையில் வருவாய் துறையினரிடமிருந்து உரிய ஆவணங்கள் பெறப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

3) வருவாய் துறையினரிடமிருந்து அடங்கல், சிட்டா நகல்கள் பெறப்பட்டு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

4) இந்த நிலங்களுக்கு கிஸ்து செலுத்தப்பட்டதை அறியும் வகையில் கிஸ்து பதிவேடு பேணப்பட்டு நிலங்கள் வாரியாக கிஸ்து செலுத்தப் பட்டுள்ளதா என்பதைக் கண்காணித்து, தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை.

6) தணிக்கையாண்டில் நெல்லுக்குப் பதில் ரொக்கமாக பெறப்பட்ட இனங்களுக்கு நபர் வாரியாக, பசலி வாரியாக, நெல்லுக்கான குவிண்டால் ரேட் விவரம் குறிப்பிட்டு கணக்கீடு விவரப்பட்டியல் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படாத நிலையில் நெல்லுக்குப் பதிலாக பெறப்பட்ட ரொக்கம் ரூ 1,52,988/-க்கான வரவின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

7) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரங்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில், குத்தகைதாரர்களின்

பெயரில் எழுப்பப்பட்டுள்ள கேட்பின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

8) நிலங்களின் விஸ்தீர்ணத்திற்கேற்ப கேட்பு எழுப்பப் பட்டதை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

9) பதிவேட்டின் படியாக உள்ள பல்வேறு குத்தகைதாரர்கள் இறந்து விட்ட நிலையிலும், அவர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டு வருவதாக தணிக்கையின் போது அறியப் பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஆணையரின் அனுமதி பெற்று உரிய நபர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் படல் வேண்டும்.

10) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை விவரத்தினை கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. ஓராண்டு குத்தகைத் தொகையினை வைப்புத்தொகையாக பெறப்படவில்லை.

11) கேட்புப்பதிவேடு வ.எண். 11 மற்றும் 104 – 214 – ல் குறிப்பிடப் பட்டுள்ள இனங்களில் நிலத்தின் விஸ்தீர்ண விவரம் குறிப்பிடப்படவில்லை.

12)கேட்புப் பதிவேடு வ.எண். 16, 22, 31, 64, 65, 105, 155-157, 160,170,197,210 மற்றும் 214 ல் குறிப்பிடப் பட்டுள்ள இனங்களில் நிலங்களுக்கான சர்வே எண்களின் விவரம் குறிப்பிடப்படவில்லை.

13) தானியக்குத்தகை கேட்புப் பதிவேடு வ.எண் 5, 11, 18, 62, 82, 107–127, 137, 144, 151,152, 154–158, 160, 163–165, 167, 169–177, 179, 184–186, 188, 191–193, 197, 200–201, 210,211, மற்றும் 214 ல் கண்டுள்ள இனங்களுக்கு குத்தகை கேட்பு எழுப்பப்பட வில்லை. இந்த நிலங்கள் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டு அந்த நபர்களின் பெயரில் குத்தகை கேட்பு எழுப்பப் பட்டிருப்பின் அதன் விவரம் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. அல்லது இந்த நிலங்கள் குத்தகைக்கு விடப்படாமலிருப்பின் அதன் விவரமோ, அதற்கான காரணங்களோ கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை.

14) <u>குத்தகைக்கு விடப்படாத நஞ்சை நிலங்கள்</u>

திருக்கோவிலுக்கு சொந்தமான கீழ்கண்ட நஞ்சை நிலங்கள் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்ட விபரப்படி குத்தகைக்கு விடப்படாமல் உள்ளன. குத்தகைக்கு விடப்படாதற்கு உரிய காரணங்கள் தணிக்கைக்கு ஆவணப்பூர்வமாக தாக்கல் செய்யப்படவில்லை. ரொக்கக் குத்தகைக்கு மாற்றம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலத்திற்கு ரொக்கக்குத்தகை எழுப்பப்பட்டுள்ள விபரத்தை தணிக்கையின்போது விளக்கப்படவில்லை. குத்தகைக்கு விடாமல் இருந்தமைக்கு ஆணையரிடமிருந்து பின்னேற்பு பெற்று தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவேண்டும்.

மேலும் மேற்படி நிலங்களை கடைசியாக குத்தகைக்கு எடுத்திருந்த நபர்களின் பெயரில் உள்ள பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. குத்தகை பாக்கியை வசூலிக்கத் தவறிய பொறுப்பான நபரிடமிருந்து நெல்லுக்கான தற்போதைய மதிப்புப்படி தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

வ, எண்	குத்தகைக்கு விடப்பட வேண்டிய இனத்தின் விபரம்	கடைசியாக குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் பெயர். பசலி மற்றும் பாக்கி	குறிப்புரை
1.	சிவகங்கை மாவட்டம் பாட்டம் (கி) 1) ச.எண். 168 2-00 ஏக் 2) ச.எண். 11/1ல் 2-05 ஏ.செ	காளத்தி குடும்பன் பாக்கி 27-36 குவி. கி சின்னபிள்ளை பாக்கி 27-36 குவி.கி	பசலி 1385 முதல் கேட்பு எழுப்பப் படவில்லை பசலி 1385 முதல் கேட்பு எழுப்பப் படவில்லை
2,	இடையப்பட்டி ச.எண். 122/11 0-36 ஏ.செ. ச.எண், 121/7 0-12 ஏ.செ.	பெயர் விபரம் இல்லை பாக்கி 49-55 குவி.கி	பசலி 1377 முதல் கேட்பு எழுப்பப் படவில்லை
3,	வாடிப்பட்டி வட்டம் சோழவந்தான் ச.எண். ஏ. செ 95/1 1-01 92/1 1,60 15 0-85 510/3 0-01 510/4 0-92 513/3 0-74 510/5 0-03	இருளப்பன் அம்பலம் பாக்கி 124-20 குவி.கி	பசலி 1384 முதல் கேட்பு எழுப்பப் படவில்லை. ரொக்கக் குத்தகைக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளது.
4,	வாடிப்பட்டி வட்டம் சோழவந்தான் ச.எண். 99/2 2-61 ஏ.செ.	நாச்சியப்பன் அம்பலம் பாக்கி 164-49 குவி.கி	ரொக்க குத்தகைக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

15) சிவகங்கை மாவட்டம், பதினெட்டாம் கோட்டை என்ற கிராமத்தில் பல சர்வே எண்களில் உள்ள சுமார் 54 ஏக்கர் நஞ்சை நிலம் சுமார் 50 நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இந்த குத்தகைதாரர்களிடமிருந்து எந்த வசூலும் இல்லை. குத்தகை பாக்கியை செலுத்தாததால் பல குத்தகைதாரர்கள் மீது வருவாய் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு குத்தகை பாக்கியை செலுத்துமாறு தீர்ப்பு பெறப்பட்டிருந்தும் பலர் பாக்கியை செலுத்தாமலேயே உள்ளனர். இந்த குத்தகைதாரர் களிடமிருந்து குத்தகையினை வசூலிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களை தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை.

இக்குறைபாடுகளை களையவும், நிலுவையினை வசூலிக்கவும் உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

101

63) <u>நஞ்சை நிலங்கள் – ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டது – பல குத்தகைதாரர் களிடமிருந்து குத்தகை வசூலிக்கப் படாததால் நிலுவை அதிகமாக உள்ளது – குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரம் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை மற்றும் குறைபாடுகள்</u>

67

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான பல ஊர்களில் உள்ள நஞ்சை நிலங்கள் ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான இனங்களில் குத்தகை வசூலிக்கப் படவில்லை.

இத்திருக்கோயிலின் நஞ்சை நிலங்களின் ரொக்கக் குத்தகை கேட்பினை பதிவேட்டினை பரிசீலனை செய்ததில், தணிக்கையாண்டில் வ.எண். 1, 7, 9, 13, 17–18, 20, 24, 26, 28, 30, 33–35, 41, 46, 55, 57, 61, 63–69, 96, 98–100, 104, 118, 119, 121–123, 127–128, மற்றும் 181–221 ல் குறிப்பிடப் பட்டுள்ள குத்தகைதாரர்களிடமிருந்து மட்டுமே தணிக்கை யாண்டில் ரூ 1,54,123/– குத்தகை வசூலிக்கப் பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக பெறப்பட்டுள்ளது.

தணிக்கையாண்டின் முடிவில் ரூ 6,71,432.14 வசூலிக்கப் படாமல் நிலுவையாக உள்ளது. இந்த நிலுவையை வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்</u>

1) இந்த நிலங்கள் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் இருந்து வருவதை உறுதி செய்யும் வகையில் இந்த நிலங்களுக்கான பட்டா புத்தகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

2) இந்த நிலங்களில் என்ன விளைவிக்கப் படுகின்றன என்பதை அறிந்திடும வகையில் வருவாய் துறையினரிடமிருந்து உரிய ஆவணங்கள் பெறப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

3) வருவாய் துறையினரிடமிருந்து அடங்கல், சிட்டா நகல்கள் பெறப்பட்டு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

4) இந்த நிலங்களுக்கு கிஸ்து செலுத்தப்பட்டதை அறியும் வகையில் கிஸ்து பதிவேடு பேணப்பட்டு நிலங்கள் வாரியாக கிஸ்து செலுத்தப் பட்டுள்ளதா என்பதைக் கண்காணித்து, தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

5) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரங்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில், குத்தகைதாரர்களின் பெயரில் எழுப்பப்பட்டுள்ள கேட்பின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

6) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை விவரத் தினை கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. ஓராண்டு குத்தகைத் தொகையினை வைப்புத்தொகையாக பெறப்படவில்லை.

7) பல்வேறு குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை வசூல் செய்யப் படவில்லை. இதற்கான காரணங்கள் எதுவும் தணிக்கைக்கு உட்படுத்தப படவில்லை.

8) நிலங்களின் விஸ்தீர்ணத்திற்கேற்ப கேட்பு எழுப்பப் பட்டதை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

9) பதிவேட்டின் படியாக உள்ள பல்வேறு குத்தகைதாரர்கள் இறந்து விட்ட நிலையிலும், அவர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டு வருவதாக

தணிக்கையின் போது அறியப் பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஆணையரின் அனுமதி பெற்று உரிய நபர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் படல் வேண்டும்.

10) கேட்புப்பதிவேடு வ.எண். 17,236,237, மற்றும் 239 ல் குறிப்பிடப் பட்டுள்ள இனங்களில் நிலங்களுக்கான சர்வே எண்களின் விவரம் குறிப்பிடப் படவில்லை.

11) தானியக்குத்தகை கேட்புப் பதிவேடு வ.எண் 2, 8,16, 71, 72, 92, 94,97, 103, மற்றும் 222-240 ல் கண்டுள்ள இனங்களுக்கு குத்தகை கேட்பு எழுப்பப்பட வில்லை. இந்த நிலங்கள் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டு அந்த நபர்களின் பெயரில் குத்தகை கேட்பு எழுப்பப் பட்டிருப்பின் அதன் விவரம் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. அல்லது இந்த நிலங்கள் குத்தகைக்கு விடப்படாமலிருப்பின் அதன் விவரமோ, அதற்கான காரணங்களோ கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை.

12) ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை விவரங்களை தணிக்கைக்கு உட்படுத்தபடவில்லை.

13) திருக்கோயில் உபயோகத்தில் உள்ள நிலங்களை பயன் தரும் வகையில் திருக்கோயில் நிர்வாகத்தால் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்கிற விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இக்குறைபாடுகளை களையவும், நிலுவையினை வசூலிக்கவும் உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

64) 68 புஞ்சை நிலங்கள் – ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டது – பல குத்தகைதாரர் களிடமிருந்து குத்தகை வசூலிக்கப் படாததால் நிலுவை அதிகமாக உள்ளது – குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரம் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை மற்றும் குறைபாடுகள்

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான பல ஊர்களில் உள்ள நஞ்சை நிலங்கள் ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான இனங்களில் குத்தகை வசூலிக்கப் படவில்லை.

இத்திருக்கோயிலின் நஞ்சை நிலங்களின் ரொக்கக் குத்தகை கேட்பினை பதிவேட்டினை பரிசீலனை செய்ததில், தணிக்கையாண்டில் வ.எண். 2, 6 –11, 13 – 20, 40, 42. 44. 46, 52 – 55, 58, மற்றும் 60 – 87, ல் குறிப்பிடப் பட்டுள்ள குத்தகைதாரர்களிடமிருந்து மட்டுமே தணிக்கை யாண்டில் ரூ 24,177/– குத்தகை வசூலிக்கப் பட்டு திருக்கோயில் கணக்கில் வரவாக பெறப்பட்டுள்ளது.

தணிக்கையாண்டின் முடிவில் ரூ 1,26,501.50 வசூலிக்கப் படாமல் நிலுவையாக உள்ளது. இந்த நிலுவையை வசூலிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிற குறைபாடுகள்

1) இந்த நிலங்கள் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் இருந்து வருவதை உறுதி செய்யும் வகையில் இந்த நிலங்களுக்கான பட்டா புத்தகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

2) இந்த நிலங்களில் என்ன விளைவிக்கப் படுகின்றன என்பதை அறிந்திடும் வகையில் வருவாய் துறையினரிடமிருந்து உரிய ஆவணங்கள் பெறப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

3) வருவாய் துறையினரிடமிருந்து அடங்கல், சிட்டா நகல்கள் பெறப்பட்டு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

4) இந்த நிலங்களுக்கு கிஸ்து செலுத்தப்பட்டதை அறியும் வகையில் கிஸ்து பதிவேடு பேணப்பட்டு நிலங்கள் வாரியாக கிஸ்து செலுத்தப் பட்டுள்ளதா என்பதைக் கண்காணித்து, தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

5) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட குத்தகைப் பத்திரங்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில், குத்தகைதாரர்களின் பெயரில் எழுப்பப்பட்டுள்ள கேட்பின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

6) குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை விவரத்தினை கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. ஓராண்டு குத்தகைத் தொகையினை வைப்புத்தொகையாக பெறப்படவில்லை.

7) பல்வேறு குத்தகைதாரர்களிடமிருந்து குத்தகை வசூல் செய்யப் படவில்லை. இதற்கான காரணங்கள் எதுவும் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

8) நிலங்களின் விஸ்தீர்ணத்திற்கேற்ப கேட்பு எழுப்பப் பட்டதை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

9) பதிவேட்டின் படியாக உள்ள பல்வேறு குத்தகைதாரர்கள் இறந்து விட்ட நிலையிலும், அவர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டு வருவதாக தணிக்கையின் போது அறியப் பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஆணையரின் அனுமதி பெற்று உரிய நபர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் படல் வேண்டும்.

10) கேட்புப்பதிவேடு வ.எண். 12, 44, 45, 47, 49 – 55, 57, 125மற்றும் 126 ல் குறிப்பிடப் பட்டுள்ள இனங்களில் நிலங்களுக்கான சர்வே எண்களின் விவரம் குறிப்பிடப் படவில்லை.

11) கேட்புப் பதிவேடு வ.எண் 2 – 4, 9, 12, 32, 37, 40 – 46, 48 – 57, மற்றும் 88 – 126 ல் கண்டுள்ள இனங்களுக்கு குத்தகை கேட்பு எழுப்பப்பட வில்லை. இந்த நிலங்கள் வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டு அந்த நபர்களின் பெயரில் குத்தகை கேட்பு எழுப்பப் பட்டிருப்பின் அதன் விவரம் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. அல்லது இந்த நிலங்கள் குத்தகைக்கு விடப்படாமலிருப்பின் அதன் விவரமோ, அதற்கான காரணங்களோ கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை.

12) ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை விவரங்களை தணிக்கைக்கு உட்படுத்தபடவில்லை.

13) திருக்கோயில் உபயோகத்தில் உள்ள நிலங்களை பயன் தரும் வகையில் திருக்கோயில் நிர்வாகத்தால் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்கிற விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இக்குறைபாடுகளை களையவும், நிலுவையினை வசூலிக்கவும் உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்

65) **திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைகள், கடைகள், கட்டிடங்கள்- வாடகைதாரர் செலுத்திய வாடகைக்கான கணினி சிட்டைகள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை - கேட்பு பதிவேட்டில் வரவாக்கப்பட்டுள்ள வரவின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை - மற்றும் குறைபாடுகள்**

69

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான மனைகள், கடைகள், கட்டிடங்கள், ஆகியன வாடகைக்கு விடப்பட்டு வருவாய் பெறப்படுகின்றன. இந்த கடைகள், கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் அடிப்படையில் இவைகள் உள்கடை, வெளிக்கடை, புதுமண்டபம், எழுகடல், மனைகள் மற்றும் பணியாளர் குடியிருப்பு என பிரிக்கப் பட்டு கேட்பு பதிவேடு பேணப் பட்டுள்ளன.

உள்கடை, வெளிக்கடை, புதுமண்டபம், மற்றும் மனைகள் ஆகியவற்றிற்கு அரசாணை எண் 353 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.99 உத்திரவின் படி வாடகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த கட்டிடங்களுக்கு சென்ற பசலியில் எழுப்பப்பட்ட கேட்பில் 15 சதவீதம் உயர்வு செய்து, தணிக்கையாண்டில் கேட்பு எழுப்பப்பட்டு வாடகை வசூலிக்கப் பட்டுள்ளது.

தணிக்கையாண்டில் கணினி மூலம் வாடகை வசூலிக்கப் பட்டுள்ளதால், ஒவ்வொரு வாடகைதாரரும் தணிக்கைப் பசலியில் செலுத்திய தொகைக்கான ஒட்டுமொத்த வருடாந்திர கணினி சிட்டைகள் தணிக்கைக்கு உட்படுத்தபடாத நிலையில், உள்கடை, வெளிக்கடை, புதுமண்டபம், எழுகடல், மனைகள் மற்றும் பணியாளர் குடியிருப்பு - க்கான கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டில் வாடகைதாரர் வாரியாக குறிப்பிடப்பட்டுள்ள வரவினை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

அரசாணை எண் 456 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 09.11.07 உத்திரவுப்படி இந்த கட்டிடங்களுக்கான வாடகை பரிசீலனை செய்யப் பட்டு மாற்றப் படவில்லை.

தணிக்கையாண்டில் வாடகை வசூலில் தொய்வு ஏற்பட்டுள்ளது. பல வாடகைதாரர்களிடமிருந்து வாடகை ஏதும் வசூலிக்கப் படவில்லை. பல வாடகைதாரர்களிடமிருந்து கேட்பின் ஒரு பகுதி மட்டுமே வாடகையாக வசூலிக்கப் பட்டுள்ளன. வாடகை செலுத்ததாத வாடகைதாரர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு வாடகை வசூலிக்கப் பட முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

உள்கடை, வெளிக்கடை, புதுமண்டபம், எழுகடல், மனைகள் மற்றும் பணியாளர் குடியிருப்பு - க்கான கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டில் சில நேர்வுகளில் வாடகைதாரர்களின் பெயர்கள் குறிப்பிடப் படாமலும், நிலுவை வாடகையை எந்த நாளிலிருந்து பெறப்படவேண்டுமென்ற விவரம் பதிவு செய்யப் படாமலும், வாடகைதாரர்களிடம் வைப்புத் தொகை பெறப்பட்டதா என்கிற விவரம் குறிக்கப் படாமலும், வாடகைக்கு விடப்பட்ட கடைகள்/கட்டிடங்கள்/மனைகள் வாடகைதாரரால் எவ்வாறு பயன் படுத்தப் படுகின்றன என்பதை குறிப்பிடப் படாமலும் உள்ளன.

எழுகடலில் உள்ள கடைகளில் சில கடைகள் பொது ஏலத்தில் விடப் பட்டும், பொது ஏலத்தில் விடப்பட்ட கடைகளுக்கு பல வருட காலமாக வாடகை உயர்வு செய்து நிர்ணயிக்கப் படாமலும், சில கடைகளுக்கு பல வருடங்களுக்கு முன்னர் நிர்ணயம் செய்யப் பட்ட வாடகையினை பல

ஆண்டுகளாக மாற்றியமைக்கப் படாமலும், சில கடைகளுக்கு அரசாணை எண் 353 தமிழ் வளர்ச்சி,பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.99 ன் படி வாடகை நிர்ணயம் செய்யப் பட்டும், சில கடைகளுக்கு அரசாணை எண் 456 தமிழ் வளர்ச்சி,பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 9.11.07 ன் படி வாடகை நிர்ணயம் செய்யப் பட்டும், ஒரு சீரான முறை பின்பற்றப் படாமல் உள்ளது. மேலும் எழுகடலில் அமைந்துள்ள கடைகள் அனைத்தினையும் ஒருங்கிணைத்து இவ்விவரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஏதும் பேணப் படாத நிலையில், இந்த கடைகளின் வாடகை நிர்ணயம் குறித்து சரியான விவரங்களை தணிக்கையில் அறிய இயலவில்லை. .

__பிற குறைபாடுகள்__

1) தணிக்கையாண்டில் உள்கடை, வெளிக்கடை, புதுமண்டபம், மற்றும் மனைகள் – வாடகைதாரர்கள் அனைவருக்கும் சென்ற பசலி கேட்பில் 15 சதவீதம் வாடகை கேட்பு உயர்வு செய்து நிர்ணயிக்கப் பட்டு, வசூலிக்கப் பட்டுள்ளது. இதற்கு ஆணையர் அனுமதி பெறப் படவில்லை.

2) வாடகைதாரர்களிடமிருந்து வாடகை ஒப்பந்தப் பத்திரம் ஏதும் எழுதி பெறப்படவில்லை.

3) யார் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டுள்ளதோ, அவர்களே வாடகைதாரர்களாக இருந்து வருகிறார்களா என்பதை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

4) இந்த வீடுகளுக்கு மாநகராட்சி வரி செலுத்தப்பட்டதை அறியும் வகையில் வரிகள் செலுத்தும் பதிவேடு பேணப்பட்டு கட்டிடங்கள் வாரியாக வரி செலுத்தப் பட்டுள்ளதா என்பதைக் கண்காணித்து, தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

5) வாடகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வாடகைப் பத்திரங்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படாத நிலையில், வாடகைதாரர்களின் பெயரில் எழுப்பப்பட்டுள்ள கேட்பின் சரித்தன்மையை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

6) வாடகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை விவரத்தினை கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவில்லை. ஓராண்டு வாடகைத் தொகையினை வைப்புத்தொகையாக பெறப்படவில்லை.

7) பல்வேறு வாடகைதாரர்களிடமிருந்து வாடகை வசூல் செய்யப் படவில்லை. இதற்கான காரணங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

8) கட்டிடங்களின் விஸ்தீர்ணத்திற்கேற்ப வாடகை எழுப்பப் பட்டதை உறுதி செய்யும் வகையில் கேட்பு பதிவேட்டில் கட்டிடங்களின் விஸ்தீர்ண விவரம் குறிப்பிடப்படவில்லை.

9) கேட்புப் பதிவேட்டின் படியாக உள்ள பல்வேறு வாடகைதாரர்கள் இறந்து விட்ட நிலையிலும், அவர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டு வருவதாக தணிக்கையின் போது அறியப் பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஆணையரின் அனுமதி பெற்று உரிய நபர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் படல் வேண்டும்.

10) நிலுவை அதிகமாக வைத்துள்ள வாடகைதாரர்களிடமிருந்து நிலுவை வாடகையினை வசூலித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை.

இக்குறைபாடுகளை களையவும், நிலுவையினை வசூலிக்கவும் உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்

66) 70

சில்லரைக்குத்தகை – பல வருடங்களாக நிலுவை ரூ2,28,962.65 – பழைய குத்தகை தாரர்களிடம் நிலுவைகள் வசூலிக்கப் படவில்லை – குறைபாடுகள்.

இத்திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் சில்லரைக் குத்தகை இனங்கள் தொடர்பான கேட்புப் பதிவேட்டினை தணிக்கை செய்ததில் இதற்கு முன்னர் பல பசலிகளுக்கு முன்னர் குத்தகைக்கு எடுத்த நபர்களின் பெயரில் பல வருடங்களாக மொத்தம் ரூ. 2,28,962-65 வசூலிக்கப் படாமல் நிலுவையாக உள்ளன. விவரம் பின்வருமாறு:

வ. எண்	குத்தகை விவரம்	பசலி	நிலுவை தொகை
1	பிரசாத விற்பனை	1387	348.00
2	சுவாமி சன்னதி– வில்வம் விற்பனை	1380-1383	7736.50
3	அம்மன் சன்னதி – எள்விளக்கு விற்பனை	1379-1383	32432.20
4	பத்ரகாளி முன்பு வெண்ணெய் விற்பனை	1381-1385	13516.00
5	காலணி பாதுகாப்பு கட்டணம்	1379-1394	48317.45
6	இரு சக்கர வாகனபாதுகாப்பு	1406	109370.00
7	மாரியம்மன் முடி காணிக்கை		9487.50
8	ஆதி சொக்கநாதர் பூஜைப் பொருட்கள் விற்பனை	1384	2375.00
9	புரோகித கட்டணம்	1379-1381	2150.00
10	மேல் பலன் உரிமம்	1399	205.00
11	மாரியம்மன் கோயில் சில்லரைக்கடை	1381	3000.00
12	பிரதான கோயில் வில்வம் விற்பனை	1373	20.00
13	திருவாப்புடையார் கோயில் பூஜைப் பொருட்கள் விற்பனை	1383	5.00
	கூடுதல்		2,28,962.65

இந்நிலுவைகளில் சில இனங்களில் மட்டும் குத்தகை பாக்கியை வசூலிப்பதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. மற்ற இனங்களில் தெரிவிக்கப்பட்ட பாக்கித் தொகையை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

ஆணையர் சுற்றறிக்கையின்படி குத்தகைத் தொகையானது குத்தகை உரிமம் ஜாரி செய்யப்பட்டவுடன் முழுத் தொகையும் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறில்லாமல் பகுதித் தொகை பெறப்பட்டு பாக்கித் தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. வழக்குத் தொடரப்பட்ட இனங்களில் தொகை ஏதும் வசூலிக்கப்பட்டு வைப்புத் தொகையில் இருந்தால் அதை ஈடு செய்யவும், அவ்வாறில்லை எனில் உடன் சம்மந்தப் பட்டவரிடமிருந்து வசூலிக்கவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இயலாத நிலையில் உரிமக்குத்தகை காலத்திற்குள்ளாகவே உரிமக் குத்தகைத் தொகையினை வசூலிக்கத் தவறிய நபர்/நபர்களை பொறுப்பாக்கி இத்தொகை வசூலிக்கப் பட்டு ஈடு செய்யப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது.

108

67) தஸ்திக். பேரீஜ் மற்றும் மோகினித் தொகை – அரசாணைப் படி உயர்வு செய்யப் படல் வேண்டும் – மற்றும் குறைபாடுகள்

இவ்வாலயத்தில் பேணப்பட்டுள்ள பலவகை கேட்புப் பதிவேட்டினை தணிக்கையின் போது சரிபார்த்ததில். தஸ்திக் மற்றும் பேரீஜ் தலைப்புகளில் பின்கண்ட விபரப்படி தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது.

வ,எண்	பசலி	விபரம்	கேட்பு	30.06.11ல் நிலுவை ரூ பை
1	1420	தஸ்திக்	89,504.17	3,18,359.25
2	1420	பேரீஜ்	15,662.26	75,002.86

தமிழ்நாடு ஜமீன் ஒழிப்புச் சட்டம். தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம். மற்றும் இதர நில சீர்த்திருத்த நடவடிக்கைகளின் போது திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையில் தஸ்திக். பேரீஜ் மற்றும் மோகினித் தொகைகள திருக்கோயில்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டன. நீண்டகாலத்திற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இத்தொகைகள் இன்றைய விலைவாசிக்கேற்ப உயர்த்தப்பட வேண்டுமென்ற இத்துறையின் நீண்ட கால கோரிக்கை குறித்து இந்து சமய அறநிலையத் துறை 2007–2008 ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பரிசீலிக்கப்பட்டு தற்போது வழங்கப்பட்டு வரும் தஸ்திக். பேரிஜ் மற்றும் மோகினித் தொகையினை பத்துமடங்காக உயர்த்தி. வருவாய்த்துறை வட்டாட்சியர்கள் மூலம் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு வழங்கிட அரசாணை (டி) எண், 243 வருவாய் (நி.அ.1,2) துறை நாள், 10.06.2008 ல் ஆணையிடப்பட்டுள்ளது,

இது தொடர்பாக உரிய மேல் நடவடிக்கைகள் எடுத்திட சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் சுற்றறிக்கை ந,க,எண், 37743/07/எம் 3–2 நாள் 15.07.2008 ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது, மேலும் முந்தைய பசலிகளுக்குரிய மேற்காணும் உதவித் தொகைகளை இதுகாறும் பெறாமலிருப்பின் அத்தொகையினையும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து பெறுவதற்கு தனிக்கவனம் செலுத்தி துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் ஆணையரது சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக தக்க மேல் நடவடிக்கைகள் எடுத்து தஸ்திக். பேரிஜ் தொகைகளுக்கான கேட்பினை பத்து மடங்கிற்கு உயர்வு செய்து பெறப்படவும், நிலுவைத் தொகைகளை உடனடியாக பெறப்படவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இத்தலைப்புகளின் கீழ் கணிசமான தொகை நிலுவையாக உள்ளதை தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை. ஆதலின் பெறப்பட வேண்டிய தொகை முழுவதையும் நிலுவையின்றி வசூலித்திட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

68) **பலவகை கேட்புப் பதிவேட்டில் தொடர்ந்து பல பசலிகளாக பாக்கி நிலுவைக்கான கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளது-தொடர்புடைய விபரங்கள் மற்றும் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை குறைபாடுகள்.**

இத்தணிக்கை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள, கேட்பு வசூல் மற்றும் நிலுவைப் பட்டியலில் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் பல பசலிகளாக பாக்கித் தொகைகள் வசூலிக்கப்படாமல் தொடர்ந்து நிலுவையாகக் காண்பிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிலுவை எந்த காலத்திற்குரியது, யாரிடமிருந்து வசூலிக்கப் படல் வேண்டும் என்கிற விபரம் பலவகைக்கேட்புப் பதிவேட்டில் குறிக்கப்படவில்லை. விவரம் பின்வருமாறு:

வ.எண்	தலைப்பு	தொகை ரூ பை
1	நிலவரி	4638.36
2	சம்மரி சூட்	66156.40
	கூடுதல்	70794.76

முன் பசலி ஆவணங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப் பட்டு இந்த நிலுவைக்கான விவரங்களை கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டில் பதிவு செய்யப் படவும், இந்த நிலுவைகளை வசூலிக்கப் படவும் உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

69) 73

பலவகைக் கேட்பு பதிவேடு – விபரமற்ற நிலுவைகள் – குறைபாடுகள்:

இத்திருக்கோவிலில் கடை, கட்டிட, வாடகைக் கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டினை சரிபார்த்த போது விபரமற்ற நிலுவைகள் என்ற தலைப்பின் கீழ் பின் கண்டவாறு தொகை ரூ 2307.42 ல் நிலுவையாக உள்ளன. இந்த விபரமற்ற நிலுவைகள் பதிவேட்டில் தொடர்ந்து குறிப்பிடப் பட்டு வருகிறது. விவரம் பின்வருமாறு:

வ.எண்	ஊர் மற்றும் பெயர்	தொகை ரூ பை
1	படமாத்தூர், இஸ்மாயில்	672.00
2	பிரமனூர் ,ஆண்டி ஆசாரி	128.00
3	தூரக்குடி லட்சுமி அம்மாள்	192.00
4	மாணிக்கம்பட்டி ,பெரிய கருப்பன்	40.00
5	குருந்தம்பட்டு சந்திரமோகன்	4.00
6	திருப்பதி அம்பலம்	64.02
7	பசுமலை அம்பு மண்டபம் இருளாயி அம்மாள்	1124.40
8	வலையங்குளம் வி.கருப்பணன்	32.50
	கே.சீனிவாசன்	9.50
	வைரமணி	5.00
	சண்முகம் பிள்ளை	28.00
	சிவகாமிஅம்மாள்	8.00
	கூடுதல்	2307.42

இந்த விபரமற்ற நிலுவைகளை பதிவேட்டில் தொடர்ந்து குறிப்பிடப் பட்டு வருகிறது. ஆதலின் ஆணையரின் அனுமதி பெற்று,இந்த விபரமற்ற நிலுவைத் தொகையினை கேட்புப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய உரிய விரைவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

70) **நிலங்கள் – திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் – குத்தகை உரிமைப் பதிவேடு – தாக்கல் செய்யப் படவில்லை – குத்தகை ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதி பதிவு செய்யப் படவில்லை மற்றும் குறைபாடுகள்**

அ) நிலக்குத்தகைதாரர்கள அனைவரும் 1961 ம் ஆண்டு பொது அறக்கட்டளைகள் (விவசாய நிலங்களில் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டடத்தின பிரிவு 2(5) – இன் படியான சாகுபடி செய்யும் குத்தகைதாரர்தானா என்பதைப் பரிசீலித்ததற்கு ஆதாரமான குத்தகை உரிமைப் பதிவேடு நகல் பெறப்பட்டு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை. எனவே இத்திருக்கோயில் பதிவேட்டில் குத்தகைதாரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர்களால் திருக்கோயில் நிலங்கள் உள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கையில் பரிசீலிக்க இயலவில்லை. குத்தகை உரிமைப் பதிவேடு நகலினை அரசு வருவாய்த் துறையினரிட மிருந்து பெற்று தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படல் வேண்டும். திருக்கோயில் நிலங்களில் உள் குத்தகைகள் எவையுமிருப்பின் உள் குத்தகைதாரர்களை நேரடிக் குத்தகைதாரர்களாக்கிட, தற்போதுள்ள நடை முறை விதிகளைப் பின்பற்றி, ஆணையரின் அனுமதி பெற்று உரியவாறு முறைப்படுத்தப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

ஆ) நிலக்குத்தகைதாரர்களிடமிருந்து 1961 ம் வருடத்திய பொது அறக்கட்டளைகள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் பிரிவு 21(1) – இல் கண்டவாறு குத்தகைப் பத்திரங்கள் எழுதிப் பெறப்பட்டுத் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை. மேற்கண்ட சட்டப் பிரிவு 21(1) – இன் படி குத்தகைப் பத்திரங்கள் தயாரிக்கப் பட்டு ஒரு பிரதியை வட்டாச்சியர் அலுவலகத்தில் பதிவு செய்திட வேண்டும். குத்தகைச் சீட்டில் கையொப்பம் இட மறுத்திடும் அல்லது காரணமின்றி தாமதிக்கும் குத்தகைதாரரின் குத்தகைச் சீட்டினை தயாரித்துக் குத்தகைதாரர் கையொப்பமிட மறுத்துவிட்டாரா அல்லது காரணமின்றி தாமதப் படுத்து கின்றனரா என்பதைக் குறிப்பிட்டு பத்திரங்கள் வட்டாச்சியர் அலுவலகத்தில் பதிவு செய்வதுடன், 1961 – ஆம் வருடத்தய தமிழ்நாடு பொது அறக் கட்டளைகள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) விதிகளில் விதி எண் 21(4) – இன் படி வட்டாச்சியர் அலுவலத்தில் குத்தகைப் பத்திரம் பதிவு செய்தமைக்கென வழங்கப்படும் சான்றிதழ் களையும் பதிவு செய்யப் பட்ட குத்தகைப் பத்திரத்தினையும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படல் வேண்டும்.

71)
75

<u>நன்செய்(தானியம்) - கட்டளை நிலம் குத்தகைக்கு விடப்பட்டது - குத்தகை வசூல் இல்லை - நிலுவைகள் வசூலிக்கப்பட வேண்டும்- குறைபாடுகள்</u>

தர்மவர்த்தனி அம்மாள் கட்டளை என்ற கட்டளைக்குரிய, வாடிப்பட்டி தாலுகா கல்லணை கிராமத்தில் பல சர்வே எண்களில் உள்ள 11-67 ஏ,செ. நஞ்சை நிலம் (நன்செய் தானியம் கேட்புப்பதிவேடு வ.எண். 207) வருடம் 1க்கு 53 குவிண்டால் என்ற வீதத்தில் வீரணன் அம்பலம்/ வீரபத்திர அம்பலம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1420-ம் பசலி முடிவில் இந்த குத்தகைதாரரிடமிருந்து மட்டும் 1115-90 குவிண்டால் நெல் பாக்கி உள்ளது. 1395ம் பசலி முதல் குத்தகை ஏதும் வசூல் செய்யப் படவில்லை.

இது தொடர்பாக விசாரித்ததில், குத்தகைதாரர் திரு. வீரணன் அம்பலம் இறந்துவிட்டதாகவும். அவருடைய வாரிசுகள் மற்றும் உறவினர்கள் என சுமார் 8 நபர்கள் தற்போது மேற்படி நிலத்தை அனுபவித்து வருவதாகவும், அவர்கள் தங்கள் பெயரில் ரசீது வழங்கினால் குத்தகையை செலுத்துவதாக தெரிவிப்பதாகவும் தணிக்கையின்போது விளக்கப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கும், ஆணையரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளுக்குட் பட்டும், ஆணையர் அனுமதி பெற்று உரிய நபருக்கு பெயர் மாற்றம் செய்து உத்திரவுகள் பெறப்படவும், நிலுவையினை வசூலிக்கவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

72) **நஞ்சை நிலங்கள் – ரொக்க குத்தகைக்கு விடப்பட்டவை – நகர்புற நிலங்களாக உள்ளதால். குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலங்களை திருக்கோவில் வசம் கொண்டு வந்து ஆக்கிரமிப்பு ஏற்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.**

அ) பெரியகுளம் தாலுகா. தெண்கரையில் டவுண் சர்வே எண், 3485–ல் 18 செண்ட். ச,எண்.3486ல் 37 செண்ட் ச,எண், 3487ல் 15 செண்ட் ஆக மொத்தம் 70 செண்ட் நஞ்சை நிலமானது (நன்செய் ரொக்கம் கேட்புப் பதிவேடு வ.எண் 2) சேகர் மற்றும் காரணமூர்த்தி என்ற இரு நபர்களுக்கு ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இந்த இடமானது டவுண் சர்வே எண்ணில் நகர்ப்புற நிலமாக உள்ளதால், இவ்விரு நபர்களின் பெயரை உழவடை தாரர்களின் பதிவேட்டிலிருந்து நீக்கவும் நிலத்தை திருக்கோவில் வசம் கொண்டுவருவதற்காகவும் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது,

வழக்கில் தீர்ப்பு வரும் வரையில் மேற்படி நிலத்தில் ஆக்கிரமிப்பு அல்லது கட்டிடம் ஏதும் கட்டப்படாமல் இருக்கும் வகையில் அவ்வப்போது ஸ்தல ஆய்வு செய்து பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆ) மதுரை வடக்கு வட்டம். பரவை கிராமத்தில் சர்வே எண், 103/1 ல் உள்ள 1–44 ஏக்கர் செண்ட் நஞ்சை நிலமானது (நன்செய் ரொக்கம் கேட்புப் பதிவேடு வ.எண் 102) கோ, கணேசன் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ588/–க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது, இந்த இடமானது மதுரையின் நகர்புற எல்லையில் உள்ளது, மேலும் இங்கு விவசாயம் எதுவும் நடைபெறுவதாக தெரியவில்லை, எனவே இந்த இடத்தை ஸ்தல ஆய்வு செய்து, குத்தகையை ரத்து செய்து குத்தகைதாரரை வெளியேற்றிடவும், இடத்தை திருக்கோவில் வசம் கொண்டு வந்து பாதுகாத்திடவும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இ) மதுரை தெற்கு வட்டம். பொன்மேனி கிராமம் சர்வே எண், 95.4ல் உள்ள 1–24 ஏக்கர் செண்ட் நஞ்சை நிலம் (நன்செய் ரொக்கம் கேட்புப் பதிவேடு வ.எண் 93) மீனாட்சி அம்மாள் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ244/–க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது, இந்த நிலம் உள்ள இடமானது தற்போது நகர்புறமாகிவிட்டது. மேலும் இந்த இடத்தில் தற்போது விவசாயம் ஏதும் நடைபெறவுமில்லை, சுமார் 1 கோடி மதிப்புள்ள இந்த இடத்தை ஸ்தல ஆய்வு செய்து. குத்தகையை ரத்து செய்து. குத்தகைதாரரை வெளியேற்றிடவும். இடத்தை திருக்கோவில் வசம் கொண்டு வந்து பாதுகாத்திடவும் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஈ) மதுரை மாவட்டம் பூவக்குடி கிராமத்தில் சர்வே எண், 216–ல் 54 செண்ட் மற்றும் சர்வே எண் 5/2ல் 38 செண்ட் ஆக மொத்தம் 92 செண்ட் (நஞ்சை நிலமானது நன்செய் ரொக்கம் கேட்புப் பதிவேடு வ.எண் 97) குத்தகைக்கு விடப்படாமல் திருக்கோவில் வசம் உள்ளது, இந்த இடத்தினை சுற்றிலும் அருகிலும் உள்ள நிலங்கள் வீட்டடி காலிமனைகளாக்கப்பட்டுள்ளதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது, இந்த இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் முள்வேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்,

73) <u>நஞ்சை ரொக்கக் குத்தகை–குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் பகுதி இடம் சாலைக்காக கையகப்படுத்தப்பட்டது–பழைய குத்தகைத் தொகையே கேட்பாக எழுப்பப்பட்டு வருவது–கேட்பு மாற்றப்பட வேண்டும்.</u>

திருமங்கலம் வட்டம், வேங்கடசமுத்திரம் கிராமம் சர்வே எண். 32–ல் 1–98 ஏக்கர் செண்ட்டு நஞ்சை நிலமானது. மங்கையர்கரசி மற்றும் டி.ஆர். சதாசிவம் ஆகியோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 780–00 வீதம் ரூ 1560/– க்கு ரொக்கக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1419–ம் பசலி முடிவில் ரூ.12336/– பாக்கி உள்ளது. இந்த நிலத்தின் ஒரு பகுதி இடம் 8180 சதுர மீட்டர் நிலமானது சாலை அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டு அதற்கு இழப்பீடாக ரூ. 138268–00 பசலி 1417 ல் பெறப்பட்டுள்ளது.

ஒரு பகுதி இடமானது சாலைக்காக கைப்பற்றப்பட்ட பின்னரும் குத்தகைதாரர்களுக்கு பழைய குத்தகையே கேட்பாக எழுப்பப்பட்டு வருகிறது.

கையகப்படுத்தப்பட்ட இடம் போக மீதம் உள்ள நிலத்திற்கு கேட்பு மாற்றியமைக்கவும் மேற்படி குத்தகைதாரர்கள் பெயரில் உள்ள பாக்கியை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

74) **<u>நன்செய் (ரொக்கம்) திருச்சி மாவட்டம் , மணப்பாறை வட்டம் , புத்தா நத்தம் கிராமத்தில் உள்ள நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் – ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கை – ஆணையரின் உத்திரவு செயல்படுத்தப்படவில்லை – குறைபாடுகள்</u>**

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், புத்தா நத்தம் கிராமத்தில் சர்வே எண். 449/3 ல் இவ்வாலயத்திற்கு சொந்தமாக 2.81 ஏக்கர் நன்செய் நிலம் (நன்செய் – ரொக்கம் கேட்பு பதிவேடு வ.எண். 234) உள்ளன. (செ.அ. ந.க எண் 1705 / இ2 / 92) இந்நிலங்களை புத்தா நத்தம் மற்றும் கருப்பூரிலுள்ள 17 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பாளர்களையே குத்தகைதாரர்களாக அங்கீகரிக்கவும், (சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிப்பில் உள்ளதாக தெரிகிறது) புன் செய் ஏக்கர் 1 க்கு ரூ 100 /– வீதமும், நன்செய் ஏக்கர் 1 க்கு ரூ 200/– வீதமும், குத்தகைத் தொகையாக வசூலிக்க செயல் அலுவலரின் ந.க. 705/92 இ2 நாள் 19.12.01 ல் கருத்துருக்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. தொடர் நடவடிக்கை விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

ஆணையரின் ந,க,எண் 26537/06 எம் 1 நாள் 28.06.06 ல் ச.பி 78 /79 படி ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப் பட்டிருந்தும் ஆணையரின் உத்திரவுகள் செயல்படுத்தப்படவில்லை.

மேலும் தாமதமின்றி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவும், மேற்படி நிலம் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் கொணரப்படவும், உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

75) மேல்மகசூல் உரிமம் மற்றும் புஞ்சை நிலங்கள் (ரொக்கம்) குத்தகை - குத்தகைக்கு விடப்படவில்லை - ஆணையர் விலக்கனுமதி பெறப்படவில்லை - குறைபாடுகள்

இத்திருக்கோவிலின் பேணப்பட்டு வரும் பலவகை கேட்புப் பதிவேட்டினை தணிக்கை செய்ததில் கீழ்கண்ட விபரப்படியான் மேல்மகசூல் உரிமங்கள் மற்றும் புஞ்சை நிலம் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு. ஏலம் கேட்க யாரும் முன்வராததால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.பின்னர் ஏலத்தில் விடப்படவில்லை. விவரம் பின்வருமாறு.

வ, எண்	குத்தகைக்கு விடப்பட வேண்டிய இனத்தின் விபரம்	ஏல நாள் மற்றும் மறு ஏல நாள்	குறிப்புரை
1.	சிவகங்கை மாவட்டம். காரைக்குடி வட்டம் குருந்தம்பட்டு கிராமம் 270 பனை மற்றும் அரண்மனை புளியமரம் 1 ஆகியவற்றின் மேல்பலன் உரிமம் 1418-1420-ம் பசலிகளுக்கு (F 1418 MDR S.NO. 59)	ஏலம் நாள் 16-09-2008	ஏலம் கேட்க யாரும் முன்வராததால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
2.	கூடல் செங்குளம் பண்ணையிலுள்ள 186 பனைமரங்களின் மேல் மகசூல் உரிமம் 1418-1420 பசலிகளுக்கு	ஏலம் நாள் 18-12-2009	ஏலம் கேட்க யாரும் முன்வராததால் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
3.	திருவாதவூர் திருக்கோவில் நந்தவனம் மேல்பலன்		பசலி 1394 முதல் குத்தகைக்கு விடப்பட வில்லை.
4.	திருவாதவூர் திருக்கோவில் சுவாமி சன்னதி மேல்பலன்		பசலி 1397 முதல் குத்தகைக்கு விடப்படவில்லை.
5.	திருவாதவூர் திருக்கோவில் அம்மன்சுவாமி நந்தவன மேல்பலன்		பசலி 1413 முதல் குத்தகைக்கு விடப்படவில்லை.
6.	திருவாதவூர் அம்மன் சன்னதி மேல்பலன்		பசலி 1394 முதல் குத்தகைக்கு விடப்படவில்லை.
7.	ஸ்ரீவைகுண்டம் வட்டம் அனியாபரநல்லூர் மேல்பலன்		பசலி 1401 முதல் குத்தகைக்கு விடப்படவில்லை.
8.	திருவாப்புடையார் திருக்கோவில் புளியமரம் 13		மேற்பலன் இல்லாததால் குத்தகைக்கு விட ஏலம் நடத்தப்படவில்லை.
9.	மதுரை வடக்கு வட்டம் நாயக்கன்பட்டி கிராமம் புளி 2 பனை 13		1418ம் பசலி வரை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. பின்னர் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
10.	காரைக்குடி வட்டம் குருத்தம்பட்டு கிராமம் ச.எண.703/2 16-00 ஏ.செ. ச,எண், 804/4 1-95 ஏ.செ. (F 1418 MDR S.NO. 58)		1397 முதல் குத்தகைக்கு விடப்படவில்லை. சரியான விபரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இந்த இனங்கள் வருவாய் ஈட்டப்படும் வகையில் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

76) **புஞ்சை நிலங்கள்(ரொக்கம்) - பல வருடங்களாக குத்தகைக்கு விடப்படவில்லை - போதிய விபரங்கள் இல்லை - குத்தகைக்கு விடப்படாமைக்கு ஆணையர் அனுமதி பெறப்பட வில்லை - குறைபாடுகள்**

திருச்சுழி வட்டம். தச்சனேந்தல் கிராமத்தில் கீழ்கண்ட சர்வே எண்களில் உள்ள மொத்த நிலம் 2-11 ஏ.செ. (புஞ்சை நிலங்கள் (ரொக்கம்) கேட்புப் பதிவேடு வ.எண். 9) புஞ்சை நிலம் பசலி 1386க்கு பிறகு குத்தகைக்கு விடப்படவில்லை.

ச.எண். 173/3	0-09 ஏ.செ
ச.எண். 228/1	0-21 ஏ.செ
ச.எண். 193/3	1-81 ஏ.செ
மொத்தம்	2-11 ஏ.செ

மேற்படி இடம் குத்தகைக்கு விடப்படாமல் உள்ளதற்கான காரணத்தை கேட்டதில். இந்த இடம் தொடர்பான கோப்பு இல்லை. உடன் இந்த இடத்தை பார்வையிட்டு மேற்படி இடம் தற்போது யார் வசம் உள்ளது என்பதை கண்டறிந்து அனுபவித்து வரும் நபரிடமிருந்து உரிய குத்தகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோன்று ச.எண். 99 / 4 -ல் உள்ள 17-26 ஏ.செ. இடமானது (புஞ்சை நிலங்கள் (ரொக்கம்) கேட்புப் பதிவேடு வ.எண். 32) கடைசியாக 1414-ம் பசலியில் தனுஷ்கோடி என்பவருக்கு ரூ 1300/-க்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது, அதன்பின்னர் இந்த இடத்தினை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும் குத்தகைக்கு எடுக்க யாரும் முன்வராததால், இந்த இடமானது பலவருடங்களாகவே குத்தகைக்கு விடாமல் திருக்கோவில் வசம் உள்ளது. தணிக்கையாண்டிலும் இந்த நிலத்தை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் ஏதும் பெறப்பபடவில்லை. இதற்கு ஆணையரின் ஏற்பாணை பெறப்படவில்லை.

மேலும் இந்த இடத்தினை குத்தகைக்கு எடுத்த நபர்களிடமிருந்து கீழ்கண்டவாறு குத்தகைத் தொகை வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

குத்தகைதாரர் பெயர்	பசலி	பாக்கி ரூ பை
1) சுப்பையா நாயக்கர் (லேட்) பொன்ராஜ் மற்றும் பாப்புராஜ்	1387 - 1403	ரூ517-50 வீதம் 8,797-50
2) தனுஷ்கோடி	1417	1,300-00
		10,097.50

இந்த நிலுவையை வசூலிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பிற குறைபாடுகள்

1) குத்தகைக்கு விடப்படாத புஞ்சை நிலங்கள்

வ, எண்	குத்தகைக்கு விடப்பட வேண்டிய இனத்தின் விபரம்	கடைசியாக குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் பெயர். பசலி மற்றும் பாக்கி	குறிப்புரை
1.	கே, புதுப்பட்டி சர்வே எண் பரப்பளவு ஏ.செ 10.4 4-80 13.2 4-00 3.8 1-87	பி, பாண்டியன் என்ற அறஞ்செழியன் பசலி 1417 பாக்கி ரூ7,030/- (கேட்பு பதிவேடு வ.எண். 2)	நிலம் திருக் கோவிலின் நேரடி பொறுப்பில் உள்ளது. ஏலம்விடப்படவில்லை. இந்த நிலங்களை பயன் பாட்டிற்கு உட்படுத்தி வருவாய் பெறத்தக்க உரிய வழிவகைகள் ஆராயப்படல் வேண்டும்.
2.	விருதுநகர் வட்டம் சீனியாபுரம் கிராமம் ச.எண். 99.4ல் உள்ள 17-26 ஏ.செ. புஞ்சை நிலம் 1418-1420-ம் பசலிகளுக்கு ரொக்க குத்தகை	தனுஷ்கோடி பசலி 1414 பாக்கி ரூ 1.300/- (கேட்பு பதிவேடு வ.எண். 32)	நிலம் கோவில் வசம் உள்ளது.
3.	பாவாலி கிராமம் 43-53 ஏ.செ.	அழகர்சாமி பசலி 1409 பாக்கி ரூ1,251/- (கேட்பு பதிவேடு வ.எண். 37)	ஏலம் கேட்க யாரும் முன்வராததால் ஏலம் ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. பின்னர் தணிக்கையாண்டிலும் ஏலம் விடப் படவில்லை.இந்த நிலங்களை பயன் பாட்டிற்கு உட்படுத்தி வருவாய் பெறத்தக்க உரிய வழிவகைகள் ஆராயப்படல் வேண்டும்.

மேற்கண்ட இனங்கள் 1420-ம் பசலியில் குத்தகைக்கு விடாமல் இருந்ததற்கு ஆணையரின் விலக்கனுமதி பெறப்படவில்லை. குத்தகைக்கு விடப்படாமைக்கான காரணத்தை தெரிவித்து விலக்கனுமதி பெறப்பட்டு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவும் பழைய குத்தகைதாரர்கள் பெயரில் உள்ள பாக்கியை வசூலிக்கவும் தக்க நடவடிக்கைகள

77) நில எடுப்பு – மானா மதுரை வட்டம் – பிரமனூர் கிராமம் –பிரமனூர்– அச்சங்குளம் இணைப்பு சாலை அமைக்க திருக்கோயில் மூலம் கையகப் படுத்துதல் – சதுர .அடி. எண் 372 / 4 பி.ல். 0.09.0 . 370/ 2 ல் / 022.50 பரப்பளவு மதிப்பு ரூ. 14999 /– நிர்ணயம் – 50 சதவீதம் உயர்த்தி தரக் கோருதல் – சம்மதக் கடிதம் பெற்று – உயர்த்திய தொகையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் . சிவகங்கை மாவட்டம் . மானாமதுரை வட்டம் . நமனூர் கிராமத்தில் சதுர.அடி .எண் 372/4 ' பி ல்' 0.09.0 ஏக்கர், 370/2 ல் 0.22.50 ஏ, உள்பட மொத்தம் 109 ஏக்கர் நஞ்சை நிலங்கள் உள்ளன.

மேற்படி நிலங்களில் சதுர .அடி .எண் 372 /4 பி - ல் 0.090 ஏக்கர் மற்றும் 370 /2 ல் 0.22.50. ஏக்கர் நிலங்களை. பிரமுனூர் அச்சங்குளம் இணைப்பு சாலையாக அமைக்க,மாவட்ட வருவாய்த் துறையினரால் கையகப்படுத்தப்பட்டு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

இத்திருக்கோவில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது தொடர்பாக, சிவகங்கை மாவட்ட வருவாய்த் துறையினரால், திருக்கோயிலிருந்து, மறுப்பின்மை சான்று கோரி விண்ணப்பிக்கப்பட்டு, தொடர்டந்து ஆணையருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரின் கடிதத்தில், வருவாய்த்துறையினரால் கையகப்படுத்தப்பட்டு சாலை அமைக்கப்பட்ட இத்திருக்கோவில் நிலத்திற்கு, கீழ்க்கண்டவாறு மதிப்பு ரூ. 14999/– என நிர்ணயம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்	சதுர அடி எண் ஏக்கர் சென்ட்	பரப்பு ஏக்கர் சென்ட்	மதிப்பு ரூ.பை	கூடுதல் மதிப்பு ரூ.பை	தொகை ரூ.பை
01.	372 /4 "பி"	0.09.0	ஏக்கர் 1 க்கு ரூ. 20000.00 1ஏக்கருக்கு ரூ. 494	494 X 0.090	4446.00
02.	370/ 2	0.22.50	ஏக்கர் 1 க்கு ரூ. 20000.00 1ஏக்கருக்கு ரூ.469	469 X 0.22.5	10553.00
				கூடுதல்	14999.00

இதன் அடிப்படையில், மறுப்பின்மை சான்று வழங்கக் கோரி, ஆணையருக்கு அனுப்பப்பட்டதில், ஆனணயர் கடிதத்தில், வருவாய் துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்ட மதீப்பிட்டு தொகையில் 50% உயர்வு செய்து வழங்க, வருவாய்துறையினரிடம் சம்மதக் கடிதம் பெற்று வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது வரையில், சம்மதக்கடிதம் கிடைக்கப்பெறவில்லை, எனவே, சிவகங்கை மாவட்ட வருவாய் துறையினரிடம் இருந்து கையகப் படுத்தப்பட்டுள்ள திருக்கோயில் நிலத்திற்கு மாவட்ட வருவாய் துறை நிர்ணயித்த மதிப்பில் 50 % உயர்வு செய்து வழங்க சம்மதக் கடிதம் பெறவும் ஆணையரிடமிருந்து மறுப்பின்மை சான்று பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

78) **திருக்கோவில் நிலங்கள்–குத்தகைக்கு விடப்பட்ட நிலங்கள் தவிர மீதமுள்ள நிலங்களின் தற்போதைய நிலவரம் கண்டறிந்து அவற்றின் மூலம் வருமானம் கிடைத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்**

இத்திருக்கோவிலில் பேணப்பட்டுள்ள சொத்துப் பதிவேடு பக்கம் எண். 126–ன்படி 748.50 ஏக்கர் செண்ட் நன்செய் 435–68 1/2 ஏக்கர் செண்ட் புன்செய் என மொத்தம் 1184–18 1/2 ஏக்கர் செண்ட் நிலங்கள் பல இடங்களில் உள்ளன.

இந்நிலங்களில் இத்திருக்கோவிலில் பேணப்பட்டுள்ள பலவகை கேட்புப் பதிவேட்டின்படி கேட்பு எழுப்பப்பட்டுள்ள நிலங்களை தவிர மீதமுள்ள நிலங்களின் தற்போதைய நிலவரத்தை கண்டறிந்து குத்தகைக்கு விடப்படாமல் இருப்பின்அவற்றை குத்தகைக்கு விடுவதற்கோ அல்லது அந்நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் பாதுகாக்கப் படவோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் ஆணையர் சீராய்வுக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப்படும் புள்ளி விபரங்களில் இத்திருக்கோவிலுக்கு சொந்தமான 52–19 ஏக்கர் செண்ட் நன்செய் 144–81 ஏக்கர் செண்ட் புன்செய் ஆக மொத்தம் 197 ஏக்கர் நிலங்கள் சுமார் 128 நபர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களை மீட்டு திருக்கோயில் வசம் கொண்டு வர தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

79) **வில்வ அர்ச்சனை மானிய நிலம் – மானியதாரர்களால் வில்வம் வழங்கப்படவில்லை – மானிய நிலங்கள் மீட்கப்பட வேண்டும் – குறைபாடுகள்**

83

இவ்வாலயத்தில் நடைபெறும் வில்வ அர்ச்சனைக்குத் தேவையான வில்வம் வழங்கும் பணிக்காக சிலைமலைப்பட்டியில் சர்வே எண் 302/2 ல் 2.08 ஏக்கர் புன்செய் நிலமும், மதுரை தெற்கு சமபங்குடியில் 2.19 ஏக்கர் புன்செய் நிலமும் ஆக மொத்தம் 4.27 ஏக்கர் நிலங்கள் மானியமாக விடப்பட்டுள்ளன. ஆனால் மானியதாரர்கள் திருக்கோவிலுக்கு வில்வம் சப்ளை செய்வதில்லை. தணிக்கைப் பசலியாண்டில் அர்ச்சனைக்குத் தேவையான வில்வம் விற்பனை செய்யும் உரிமம் குத்தகைக்குவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அர்ச்சனைக்குத் தேவையான வில்வம் விலைக்கு வாங்கப்படும் போது அர்ச்சனைக்குத் தேவையான வில்வம் கொடுப்பதற்காக மானியம் விடப்பட்ட 4.27 ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் மானியதாரர்களால் அனுபவிக்கப்பட்டு வருவது முறையன்று.

மேலும் இந்நிலங்கள் யாவும் மானியதாரர்கள் வசம் தான் உள்ளதா அல்லது வெளிநபர்களுக்கு கிரயமாகவோ. அடமானமாகவோ. ஒத்தியாகவோ ஏதேனும் வில்லங்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதா என்பதைத் தணிக்கையில் அறிய இயலவில்லை. எனவே. திருக்கோவில் நிர்வாகத்தினர் தல ஆய்வு மேற்கொண்டு நிலங்கள் எவையும் வில்லங்கங்களுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம் 30/63 பிரிவு 21 (7) (ஆ) க்கிணங்க திருக்கோயில் மானிய நிலங்களைக் கோவில் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மானியமாக நிலங்கள் விடப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படாத நிலையில் மானிய நிலங்களை உரியவர்களிடமிருந்து மீட்டு திருக்கோயில் வசம் கொண்டு வந்து பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1) சம்பக்குடி கிராம நிலங்கள் சதுர அடி எண் – 31/1 ல் உள்ள நன்செய் 2.19 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துதல் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்களையறிய ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. இது காறும் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் கொணரப் படவில்லை.

2) சிலைமலைப் பட்டியில் கண்டுள்ள புன் செய் 2.08 ஏக்கர் நிலங்கள் சென்னை, உயர்நீதிமன்றம் எல் டி.ஏ 46/77 நாள் – 01.07.2000 தேதிய தீர்ப்பின்படி இவ்வாலயத்திற்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் பெறப்பட்டுள்ளது.

ஆதலின் வ.எண். 1ல் கண்டுள்ள நிலத்தினை திருக்கோ[illegible] சுவாதீனத்தின் கீழ் கொணரப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள[illegible] வேண்டும்.

80) 84

வில்வ அர்ச்சனை மானிய நிலங்கள் - கட்டளை நடைபெறாததால் பட்டா கோயில் பெயருக்கு மாற்றியது - எல்லீஸ் நகர் குடியிருப்புக்கு நிலம் கையகப்படுத்தியது - கட்டளைதாரர் பெயரிலும் முதலீடு குறைபாடு -

மாடக்குளம் கிராமம் புல எண்- 4 / 3 ~~ல் 1.97~~ ஏக்கர் நிலம் வில்வ அர்ச்சனைக்கு மானியமாக விடப்பட்டவையாகும் கட்டளைததாரர் கட்டளையை செய்யாததும் 1963 ஆம் ஆண்டு சில கொடை நிலம் சட்ட விதிகளின்படி திரு. கல்யாணசுந்தரம் என்பவருக்கு பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து மனு செய்து திருக்கோயில் பெயருக்கு Inam tribunal பட்டா வழங்கியது சென்னை. உயர்நீதிமன்றமும் இதை உறுதி செய்தது. திரு.கல்யாண சுந்தரம் உச்ச நீதிமன்றத்தில் சென்னை, நீதிமன்ற திர்ப்பினை எதிர்த்து வழக்கு எண்- 2660 & 2661 ல் மேல் முறையீடு செய்து தள்ளுபடி ஆகியுள்ளன.

இந்நிலையில் . எல்லீஸ்நகர் குடியிருப்பிற்காக 1.97 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு தொகையாக ரூ. 73252.80 (award no 4/82- 83) நாள் 28.04.82 ல் கோமதியம்மாள் மகன் கல்யாணசுந்தரம் என்ற செல்லப்பா பெயரிலும் .கோவில் பெயரிலும் நீதிமன்றத்தி ல் பிரிவு 31(2) ன் வைப்புத் தொகையாக உள்ளது. (சென்ட் 1 க்கு ரூ.295.45 வீதம்) மதுரை கூடுதல் நீதிமன்றத்தில் laop 19/88 ல் 1.97 ஏக்கர் நிலத்திற்கு சதுர அடி 1 க்கு ரூ.30/- வீதம் வழங்கத் தொடரப்பட்ட வழக்கில் 05.02.97 ல் கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. 2வது கோரிக்கையாளருக்கு (கோவில்) கூடுதல் இழப்பீட்டு தொகையாக ஒரு சென்டிற்கு ரூ.1500/- வீதம் 1.97 ஏக்கருக்கு ரூ.295500/- ம் இத்தொகையின் பேரில் ஆறுதல் தொகை 30% வீதம் ரூ.88650/- மேலும் 4(1) அறிவிப்பு நாளான 04.04.79 முதல் தீர்வம் அளித்த 28.04.82 வரை 295500 ன் பேரில் 12 % வீதம் ஒரு தொகையாக ரூ. 108711/- ம் ஆக மொத்தம் ரூ. 492861/- ல் கோரிக்கையாளர் பெற்றுக் கொண்ட தொகை ரூ. 73252/- போக மீதித் தொகையை அரசு கோரிக்கையாளருக்கு கொடுக்க வேண்டமெனவும், இந்த மீதித் தொகைக்கு தீர்வம் அழிக்கப்பட்ட நாளான 28.04.82 முதல் ஒராண்டு காலத்திற்குள் 9% வட்டியுடன் செலுத்தி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், மேலும் இன்றிலிருந்து ஒராண்டு காலத்திற்குள் மேற்படி தொகையை வட்டியுடன் இந்நீதிமன்றத்தில் செலுத்தி வைக்கத் தவறினால் , தவறும் நாள்முதல் தொகை செலுத்தும் நாள் வரை 15% வட்டியுடன் செலுத்தி திர்க்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மதுரை சார்பு நீதிமன்றத்தில் நிலம் கைப்பற்றுகை மனு எண் 91/84ல் 10.01.97ல் நீதிபதி வழங்கிய தீர்ப்புரையில் அருள்மிகு மீனாட்சிசுந்தரரேசுவரர் கோவிலுக்குத்தான் இழப்பீடு தொகை வட்டியுடன் வழங்க வேண்டுமென உத்திரவிடப்பட்டிருந்தும் இது காணும் தொகை பெறப்படவில்லை.

விரைவில் தொகையை பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

81) 85 **திருக்கோயில் நிலங்கள் வேளாண் நிலங்கள் – நியாயக்குத்தகை பெறுவது – தொடர்பாக ஆணையரின் சுற்றறிக்கையில் கண்ட அறிவுரைகள் கடைபிடிக்கப்பட்டு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்யப்படவில்லை – குறைபாடுகள்**

வேளாண் நிலங்களுக்கு நிர்ணயிக்கப்படும் குத்தகை ஐந்து ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும். அதன் பிறகு குத்தகையை திருத்தி அமைக்க வருவாய் நீதிமன்றங்களில் விண்ணப்பித்துக் கொள்ள த.நா. குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை) சட்டம் 1959 ம் பிரிவு எண் – 6 ஆனது நில சொந்தக்காரர்களுக்கு வழிவகை செய்கிறது.

இது தொடர்பாக திருக்கோயிலுக்கு சொந்தமான வேளாண் நிலங்களுக்கு நியாயக் குத்தகை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆணையரது சுற்றறிக்கை ந.க.எண் – 56344/93/வி2 நாள்– 20.04.94 ல் பின் கண்ட விபரப்படியான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1. திருக்கோயில் செயல் அலுவலர்கள் குத்தகையை திருத்தி அமைக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான இனங்களில் வருவாய் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்யவும்.

2. திருக்கோயிலுக்குரிய வேளாண் நிலங்களுக்கு கிராம நிர்வாக அதிகாரிகளிடமிருந்து அடங்கல் நகல் பெற்று சாகுபடி செய்யப்படும் பயிருக்கேற்ப குத்தகையை திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்.

3. ஒவ்வொரு பசலிக்கும் குத்தகைதாரர் வாரியாக அடங்கல் நகல் கிராம நிர்வாக அலுவலர்களிடம் பெற்று தனித்தனியாக கோப்பு பராமரிக்கவும் .

4. இனி வரும் காலங்களில் 5 ஆண்டுகளுக்கொருமுறை வேளாண் நிலங்களுக்கு குத்தகையை திருத்தியமைக்க வருவாய் நீதிமன்றங்களில் மனுதாக்கல் செய்யவும் அனைத்து நிர்வாக அலுவலர்களுக்கும் ஆணையரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாலயத்தில் நிலங்கள் தொடர்பாக பணிகளை செய்வதற்காக ஒரு இருக்கைப்பணியாளரும் (MDR பேணிட) அதனை கண்காணிக்க ஒரு கண்காணிப்பாளரும் (அயல் பணியில்) உள்ளனர். இருந்தும் மேற்கண்ட விபரப்படியான ஆணையரின் அறிவுரைகள் கடைபிடிக்கப்பட்டு நியாய குத்தகை நிர்ணயம் செய்யப்பட வில்லை. பல ஆண்டுகளாக கேட்புத் தொகையில் மாற்றமே இல்லை. எனவே இது தொடர்பாக தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் .

உரிய நடவடிக்கைக்காக இத்தடை ஆணையரின் தனிக் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

82) புன் செய் மற்றும் நிலங்கள் – சிறிய பரப்பளவு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டவை – நிலங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்து அதற்கேற்ப கேட்பு எழுப்பப்பட வேண்டும் – குறைபாடுகள்

திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் குத்தகைக் கேட்பு பதிவேட்டை பரிசீலித்ததில், சுமார் 50 சென்டுக்கும் குறைவான பரப்பளவுள்ள நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் குத்ததைக்கு விடப்பட்டிருப்பது அறியப்பட்டது. 50 சென்ட்டுக்கும் குறைவான நிலத்தில் விவசாயம் செய்வதென்பது தற்போதைய சூழ்நிலையில் இயலாத காரியம் ஆகும். அவ்வாறு குறைந்த பரப்பளவு கொண்ட இடங்களை குத்தகைக்கு எடுத்துள்ள நபர்கள் அவ்விடத்தை விவசாயத்திற்கு பயன்படுத்தாமல் வேறு ஏதாவது விவசாயமில்லாத காரணத்திற்காக வைத்திருக்கலாம். இடத்திற்கான குத்தகையை செலுத்திவிட்டு நாளடைவில் மேற்படி இடத்தை குடியிருப்பாக மாற்றவும் முயற்ச்சிக்கலாம்.

கோச்சடை பகுதியில் தற்போது விவசாயம் நடைபெறவில்லை. அப்பகுதியிலுள்ள நிலங்களில் பெரும்பாலானவை தற் போது வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

ஆதலின் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களை நேரில் ஆய்வு செய்து அந்த இடங்கள் தற்போது யாரால், எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை கண்டறிந்து அதற்கேற்றாற் போல் கேட்பு எழுப்பப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

125

83) உழவடைக் குத்தகை உரிமம் மாடக்குளம் கிராமம் (மதுரை டவுன்) சர்வே எண். 177/1 ஏ ல் 0.26 ஏக்கர், 171/பி 5 ல் 2.37 ஏக்கர், நிலம்–பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்

87

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான மதுரை தெற்கு வட்டம் மாடக்குளம் கிராமத்திலுள்ள நிலங்களை குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

உழவடைதாரர்களின் உழவடை உரிமத்தை ரத்து செய்யக் கோரி இவ்வலுவலக ந.க.எண். 4/18/2005 /இ2 நாள்/ 27.05.2005–ல் மனு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவின் மீது, பல விசாரணைகள் நடந்த நிலையில். மதுரை தெற்கு வட்டாட்சியர் ப.மு.டி.ஆர். எண். 3/2005 நாள் 15.09.2005 ல் கண்ட தீர்ப்புரையில் திரு. அழகர்சாமி கோனார் என்பவருக்கு மட்டும் (சர்வே எண். 171/1 ஏ–0.26. 171/பி 5–0.37 ஆக மொத்தம் 0.63 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு மட்டும்) உழவடை உரிமம் இரத்து செய்து உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் மீது நடைபெற்ற விசாரணையில் மற்ற இரண்டு எதிர் மனுதாரர்கள் ஆஜராகாத நிலையில். அவர்களுக்கும் உழவடை உரிமம் இரத்து செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும், மேற்படி வழக்கின் தற்போதைய நிலைக் குறித்தும் தெரிவிக்க, மதுரை (தெற்கு வட்டம்) வட்டாட்சியாரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி 2.63 ஏக்கர் புஞ்சை நிலத்தில். ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படா வண்ணம் தடுக்கும் பொருட்டு மேற்படி நிலத்தினைச் சுற்றி கல் ஊன்றி முள் கம்பி வேலி போட்டு பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்கவும், மதுரை தெற்கு வட்டாட்சியரிடமிருந்து இதர இரண்டு நிலங்களுக்கு உழவடை உரிமம் இரத்து செய்து, தீர்ப்புரையைப் பெறப்படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

186

84) **<u>மாலை கட்டும் பணி மானியம் - மானிய தாரர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு சேவைக்கு என தொகை நிர்ணயம் செய்தது - தொகை வசூலிக்கப்படவில்லை - சேவை நடைபெற்ற விபரமில்லை கோப்புகள் தாக்கல் செய்யப்படவில்லை.</u>**

இத்திக்கோவிலில் அருள்மிகு மீனாட்சி அம்மன் மற்றும் அருள்மிகு சுந்தரரேசுவரருக்கு, மாலை கட்டும் பணிக்கென, வண்டியூர் கிராமம். புல எண் - 250/4 ல் உள்ள 1.43 ஏக்கர் நிலம் திருமதி நாகம்மாள் என்பவருக்கு விடப்பட்டுள்ளது. ஆனால் இனாம் ஒழிப்புச் சட்டப்படி இவருக்கு பட்டா வழங்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் சேவைக்கென, ஒரு தொகையினை திருக்கோவிலுக்கு திருமதி. நாகம்மாள் செலுத்தவேண்டுமெனவும். மாலைகட்டும் பணியை திருக்கோயிலிலேயே செய்து வர வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டதாகத் தணிக்கைக்குத் தெரிவிக்கப்பட்டது. இதில் கீழ்க் கண்ட குறைபாடுகள் உள்ளன.

01. இந்த சேவைக்கான தொகை ஏதும், தணிக்கைப் பசலிகளில் வசூலிக்கப்பட வில்லை.
02. மேற்படி சேவை நடைபெற்றதற்கு ஆதாரங்கள் ஏதும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

மேலே கண்ட குறைபாடுகளினால், மாலை கட்டும் பணிக்கென தொகை ஏதும் பெறப்படாத நிலையில் அப்பணி நடைபெறுவதில்லை எனத் தணிக்கையில் கருதப்படுகிறது. எனவே மேற்படி நிலத்தை மீட்டு திருக்கோவில் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் எந்தக் காலம் முதல் சேவை தொகை வசூலிக்கப்படவில்லையோ, அதிலிருந்து நாளது தேதி வரை பெறப்பட வேண்டிய தொகையினைக் கணக்கிட்டு மானியதாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். அல்லது வசூல் செய்யத்தவறிய நபர்களிடமிருந்து இத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

85) <u>திருக்கோவில் வசம் உள்ள இடங்கள்–அதிக விலை மதிப்புள்ளவை– ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும்.</u>

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான இடங்கள் தற்போது குத்தகைக்கு விடப்படாமல் திருக்கோவில் வசம் உள்ளன. இந்த இடங்கள் அதிக மதிப்புள்ளவையாகும்.விவரம் பின்வருமாறு:

வ. எண்	இடத்தின் விபரம்	சர்வே எண்	இடத்தின் பரப்பளவு ஏ–செ	இடத்தின் தற் போதைய தோராய மதிப்பு ரூ	இடம் தற்போது பயன்படுத்தப் பட்டு வரும் விபரம்
01	கீழ் மதுரை, மீனாட்சிபுரம் (அனுப்பானடி) (மதுரை நகர்)	TS No 2334 TS No198 TS No 2357 மொத்தம்	0–31 0–40 1–65 2–36	2.36 கோடி	தென்னை மற்றும் வாழை மரங்கள் நடப்பட்டு திருக்கோவில் பராமரிப்பில் உள்ளது
02.	கோச்சடை (மதுரை நகர்)	கோச்சடை தோப்பு	2–70	2.70 கோடி	தென்னைந் தோப்பாக திருக்கோவில் பராமரிப்பில் உள்ளது
03.	எஸ். ஆலங்குளம் (மதுரை புறநகர்)	20 /2 39/4 மொத்தம்	0–61 0–29 0–90	1.80 கோடி	திருக்கோவில் வசமுள்ளது. இடம் காலியாக உள்ளது
04.	மதுரை புறநகர்		164–16	41 கோடி	கூடல் செங்குளம் பண்ணை என்ற பெயரில் திருக்கோவில் வசமுள்ளது
05.	விளாங்குடி மதுரை புறநகர்		11–60	2.90 கோடி	பனை மரம் 46. புளிய மரம் 71. நாவல் மரம் 5 உள்ளது. திருக்கோவில் வசமுள்ளது. காலி இடத்தில் வளரும் சீமை கருவேல்செடி கள் அவ்வப் போது பொது ஏலத்தில் விற்கப் படுகிறது.

இந்த இடங்களில் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் உரிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

86) **திருக்கோயில் நிலம் - வருவாய் ஆவணங்களில் தனி நபர் பெயரில் இருத்தல் - திருக்கோயில் பெயருக்கு மாற்ற மூல ஆவணங்கள் கோருதல் - மதுரை வடக்கு (வட்டம்) விளாங்குடி கிராமம் - ஆவணங்களின் நகல்களை பெற்று, தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்**

மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், விளாங்குடி கிராமத்திலுள்ள கீழ்க்கண்ட நிலங்கள் இத்திருக்கோயிலுக்கு, குருசாமி சாஸ்திரிகள் என்பவரால் உச்சிக்காலக் கட்டளைக்கு வழங்கப்பட்டதாகக் கோப்பிலிருந்து தெரிய வருகிறது.

இந்நிலம், 28.08.1940ல், குருசாமி சாஸ்திரிகள் அவர்களிடம் இருந்து, ஆர்.எஸ்.நாயுடு என்ற இத்திருக்கோயிலின் நிர்வாக அதிகாரி காலத்தில், இத்திருக்கோயிலுக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது மேற்படி நிலம் இத்திருக்கோவில் அனுபவத்திலுள்ளது. திருக்கோவிலிருந்து நிலவரியும் செலுத்தப்பட்டு வருகிறது.

வ.எண்	சதுர அடி எண்	பரப்பு ஏக்கர்/செண்ட்
01.	566	12.97
02.	567	1.09
03.	568	1.59
04.	569	1.55
05.	592	1.67
	கூடுதல்	18.87

ஆனால் மேற்படி நிலங்கள் வருவாய்த்துறை ஆவணங்களில் வெங்கட்ராம அய்யர் மகன் கேசவ அய்யர் என்ற பெயரில் உள்ளது. திருக்கோயிலுக்கு மாற்றப்பட்டது தொடர்பான பதிவானது, மதுரை JL SR No. 11 டாக்குமெண்ட் எண் 4317140 புத்தகம் 1 வால்யூம் 1043 பக்கம் 140 முதல் 146 ல் பதியப்பட்டுள்ளது.

தனி நபர் பெயரிலிருந்து, இத்திருக்கோவில் பெயருக்கு வருவாய் ஆவணங்களின் உரிமை மாற்றம் இது நாள் வரை செய்யப்பட வில்லை. எனவே மேற் குறிப்பிட்ட ஆவணங்களில் நகல்களை சம்பந்தப்பட்ட சார்பதிவாளரிடமிருந்து பெற்று, ஆவணங்களில் தகுந்த திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

87) <u>நிலம் – கையகம் – திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் – பருவஞ்சி கிராமம் –தேசிய நெடுஞ்சாலை எண் 45 பி நான்கு வழிப்பாறை –பல எண் 302 / 1 பி – ல் 1701 சதுர மீட்டர் –ஆர்ஜிதம் செய்யப்பட்டது– நில இழப்பீட்டுத் தொகை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்</u>

திருச்சி மாவட்டம், மணப் பாறை வட்டம், பருவஞ்சி கிராமத்தில் இத்திருக்கோவிலுக்குச் சொந்தமாக உள்ள சதுர. எண் 3021 ல் 1701 சதுர. மீட்டர் புஞ்சை நிலம் தேசிய நெடுஞ்சாலை எண் 45 பி நான்கு வழிப்பாதை விஸ்தரிப்புக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகக் கோப்பிலிருந்து தெரிய வருகிறது.

மேற்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கான இழப்பிட்டுத் தொகையும் புலத்திலுள்ள கிணற்றிக்கான இழப்பீட்டுத் தொகையும் இது நாள் வரை திருக்கோவிலுக்கு வழங்கப்படவில்லை. இழப்பீட்டுத் தொகை கோரி, இவ்வாலய இந்து சமய அறநிலையத் துறை, நி/அ கடிதம் ந.க.எண் 2506/04 /இ2 நாள் 01.11.07 ல் திருச்சிராப்பள்ளி, தேசிய நெடுஞ்சாலை, நில மெடுப்பு தனி மாவட்ட வருவாய் அலுவலருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை விவரங்களை தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

மேலும் காலதாமதமின்றி விரைவு நடவடிக்கைகள் மேற்கொண்டு இழப்பீட்டுத் தொகை பெறப்படல் வேண்டும்.

88) **கட்டளை நிலங்கள் – தனி நபர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது – திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்**

இத்திருக்கோயிலுக்கு பூசைச் செலவுகள் மற்றும் ஆவணி மூலம் திருவிழா மண்டகப்படி நடத்த வேண்டும் என்ற நிபந்தனைப்படி, மேற்படி ஊழியம் (சர்வீஸ்) செய்வதற்காக, புதுக்கோட்டை (மா) திருமயம் (வ) கானாயூர் கிராமத்திலுள்ள, மாங்காளிப்பட்டியில் புல எண்கள் 707 ல் மொத்தம் 34.50 ஏக்கர் நஞ்சை நிலமும், ஊழியதாரர் (சர்வீஸ் தாரர்) திரு.ராமச்சந்திர முதலியார் என்பவருக்கு விடப்பட்டுள்ளது.

மேற்படி நிலங்களை, முதலியாரின் வாரிசுகள் நில உரிமை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், தங்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், மேற்படி நிலங்களை கோவில் சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ள / ச.பி. 41 ன் கீழ் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியருக்கு, இவ்வலுவலக, இந்து சமய அற நிலையத்துறை, கெ.அ.ந.க. 3117/05/இ2/07.04.08 ல் விண்ணப்பிக்கப் பட்டுள்ளது.

மேற்படி நிலங்கள் விற்பனை குறித்து , எந்த விதமான பதிவுகளும் செய்ய வேண்டாம் என முறையே மாவட்டப்பதிவாளர் காரைக்குடி, புதுக் கோட்டை மாவட்டம்,திருமயம் தாலுகா பொன்னமராவதி சார் பதிவாளருக்கு இணை ஆணையரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஊழியதாரர் திரு.ராமசந்திர முதலியார் இறந்து விட்டபடியாலும், மேற்படி ஊழியமும் தற்போது நடைபெறாத காரணத்தினாலும், மேற்படி நிலத்தினை திருக்கோயில் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யும் பொருட்டு, காலஞ்சென்ற திரு. ராமசந்திர முதலியார் என்பவரின் வாரிசுதாரர்கள் விபரத்தினையும் மற்றும் அவர்களது முகவரி முதலான விபரங்களையும் வட்டாட்சியரிடமிருந்து பெற்று வழங்க புதுக்கோட்டை உதவி ஆணையாளர் இவ்வலுவலக 3117/05/இ2 நாள் 12.08.08ல் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

கட்டளை நிலங்கள் தனி நபர் பெயரிலுள்ளதை திருக்கோயில் பெயருக்கு மாற்ற புதுக்கோட்டை மாவட்ட RDO கோர்ட்டில் ச.பி 41 ல் consumption petition தாக்கல் செய்ய,வழக்கறிஞர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கினைத் துரிதப்படுத்தி, நிலங்களை திருக்கோயில் சுவாதினத்தில் எடுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

89) **கட்டளைகள் – நடைபெறாத கட்டளைகளுக்கான சொத்துக்களை திருக்கோவில் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்**

இத்திருக்கோயிலுக்கான அங்கீகரிக்கப் பட்ட சொத்துப் பதிவேடு பக்கம் 141 முதல் 156 முடிய இத்திருக்கோவில் மற்றும் இதன் உபகோவில்களில் நடைபெறவேண்டிய கட்டளைகள் (நித்திய படித்தரம் மற்றும் திருவிழா) மற்றும் அதற்குரிய சொத்துக்கள் மற்றும் கட்டளைகள் யாரால் ஏற்படுத்தப்பட்டன போன்ற விபரங்கள் உள்ளன,

சொத்துப்பதிவேட்டில் இடம் பெற்றுள்ள கட்டளைகளில் சில கட்டளைகள் மட்டும் இத்திருக்கோவில் மற்றும் இதன் உபகோவில்களில் நடைபெற்று வருகிறது. சில கட்டளைகளுக்குரிய சொத்துக்கள் திருக்கோவில் வசம் இருப்பதால் அக்கட்டளைகள் திருக்கோவில் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன. பெரும்பாலான கட்டளைகள், கட்டளை சொத்துக்களை அனுபவித்து வரும் நபரால் நபர்களால் நேரிடையாக நடத்தப்பட்டு வருவதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டன.

கட்டளை சொத்துக்களை அனுபவித்து வரும் நபர்களால் கட்டளைகள் நடத்தப்பட்டு வரப்படுமாயின், அக்கட்டளை சொத்துக்கள் மூலம் பெறப்படும் வருவாய் கட்டளை ஷரத்துக்கேற்ப செலவு செய்யப் படுகிறதான என்பதை கண்காணித்து உறுதி செய்யப் படுவதுடன், கண்காணிப்பு பதிவேடு பேணப்பட்டு தக்க பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு உரிய சான்று வழங்கப் படல் வேண்டும்.

அத்துடன் சொத்துப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை களில், நடைபெறாத கட்டளைகள் விபரம் சரியாக தெரியாததால், நடைபெறாத கட்டளைகள் விபரத்தினை தெரியப்படுத்துமாறு திருக்கோவில் உள்துறை கட்டளை கணக்கர் மற்றும் உபகோவில் பேஷ்காரிடம் கோப்பு எண், 4813/ 2007 ஈ3–ல் விவரம் கேட்கப்பட்டு நிலுவையாக உள்ளது . இக்கோப்பில் கடைசியாக 22.08.2008 அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அதன்பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. கோப்பில் தொடர் நடவடிக்கை எடுத்து நடைபெறாத கட்டளைகள் விபரம் சேகரித்து, அக்கட்டளைகள் கட்டளைதாரர்களை கொண்டு கட்டளை ஷரத்துக் கேற்ப நடைபெறுவதற்கோ, இயலாத நிலையில், அக்கட்டளைகளுக்கான சொத்துக்களை திருக்கோவில் வசம் கொண்டுவரப்பட்டு, திருக்கோவிலின் மூலம் அக்கட்டளைகள் கட்டளை ஷரத்திற்கேற்ப நடத்தப்படுவதற்கோ உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகளை களைய உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

90) கட்டிட வாடகை – ரூ 14400/- கட்டிட வாடகை வரவாக பெறப்பட்டுள்ளது – கேட்பு வசூல் நிலுவைப் பதிவேட்டில் கேட்பு எழுப்பப் படவில்லை – குறைபாடுகள்

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் பலவகை இரசீது எண். 95100 / 31.7.10 ன்படி ரூ 14,400/- திருமால் கந்தசாமி என்பவரிடமிருந்து கட்டிட வாடகை வரவாக பெறப்பட்டுள்ளது. ஆனால் கேட்பு வசூல் நிலவைப் பதிவேட்டில் இக்கட்டிடத்திற்கான கேட்பு ஏதும் எழுப்பப் படவில்லை. இது குறித்து கேட்ட போது திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டிடத்தில் குடியிருப்பவர் செலுத்தியுள்ளதாவும், இந்த கட்டிடம் குறித்து வழக்கு நடைபெற்று வருவதாகவும், வழக்கு நடைபெற்று வரும் நிலையில், கேட்பு எழுப்பப் படவில்லை என்றும், அக்கட்டிடத்தில் மூன்று கடைகள் உள்ளதாகவும், அதில் உள்ள ஒரு வாடகைதாரரால் இத்தொகை செலுத்தப்பட்டுள்ளதென்றும் தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

இக்கட்டிடம் குறித்து என்ன வழக்கு நடைபெற்று வருகிறது, இந்த நபரை வாடகைதாரராக கருதப்படலாமா, கருதப் படலாமென்றால் அவரை வாடகைதாரராக கருதி தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப் படாமல் உள்ளதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்தது தணிக்கைக்கு விளக்கப் படவில்லை.மேலும் வழக்கு குறித்தான ஆவணங்கள் எதுவும் தணிக்கைக்கு உட்படுத்தப் படாத நிலையில், வழக்கு குறித்து சரியான விவரங்கள் தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் தற்போது செலுத்தப் பட்டுள்ள வாடகை எந்த காலத்திற்கானது, மாத வாடகை எவ்வாறு கணக்கீடு செய்யப் பட்டுள்ளது, இந்த வாடகைதாரரிடமிருந்து இன்னமும் வசூலிக்கப் படவேண்டிய நிலுவை வாடகைத் தொகை என்ன, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாடகை பெறப்பட்டுள்ளதற்கு ஏதேனும் சிறப்பு காரணங்கள் உள்ளனவா, வழக்குறைஞரின் அபிப்பராயம் பெறப்படாமல் வாடகை பெறப்படலாமா ஆகிய வினாக்களுக்கு உரிய பதில் தணிக்கையின் போது தெரிவிக்கப் படவில்லை.

ஆதலின் இக் குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

(X) 133

91) <u>கடை வாடகை (வெளிக்கடை) - கடை பெயர் மாற்றம் செய்யப்பட்டது - 20 மாத வாடகை விடுபட்டுள்ளது - வசூலிக்கப்பட வேண்டும்- கோப்பு எண் 2978/95 இ4</u>

95

<u>ஆணையர் உத்தரவு எண் செ.மு.ந.க.53695/2008எம்1நாள் 26-07-09</u>

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான கட்டிடங்களில் 14,தெற்கு சித்திரை வீதி என்ற முகவரியுள்ள கடையானது, கே.எஸ். சுப்ரமணியன் மற்றும் ஜெயலெட்சுமி (2 பெயரில்) என்ற இரு நபர்களுக்கு 3 பெயர்களில் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இவர்கள் நியாய வாடகைப்படி நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை செலுத்தாததால் வாடகையை வசூலிக்கவும், கடையை திருக்கோவில் வசம் கொண்டு வரவும் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த கடையை நடத்தி வந்த ஆர், பி, மோகன்ராம் என்பவர் "விஜய் ஜவுளி ஸ்டோர்" என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார். (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 158) மேற்படி கடையை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறும் திருக்கோவில் நிர்வாகம் தெரிவிக்கும் தொகையை செலுத்துவதாகவும் தெரிவித்து கடிதம் கொடுத்ததையடுத்து அறங்காவலர் குழுவில் விவாதிக்கப் பட்டு 1-7-98 முதல் செலுத்தப்பட வேண்டிய வாடகை பாக்கி, நீதிமன்ற செலவுத் தொகையாக ரூ10,000/-, 10 மாத வாடகை முன்பணம், நன்கொடை என மொத்தம் ரூ10 லட்சம் செலுத்தினால். கடையை பெயர் மாற்றம் செய்து தர ஆணையருக்கு பரிந்துரைக்கப்படும் என கடைக்காரரிடம் தெரிவித்ததின் பேரில் அவரும் அத்தொகையை செலுத்த சம்மதம் தெரிவித்ததால் பெயர் மாற்றம் செய்ய ஆணையருக்கு விண்ணப்பிக்கப் பட்டதில், மேற்படி தொகையுடன் அன்னதான திட்டத்திற்கு 1 லட்சம் ஆக மொத்தம் ரூ 11 லட்சத்தை பெற்றுக் கொண்டு கடையை பெயர் மாற்றம் செய்து தர ஆணையர் செ.மு.ந.க. 53695/2008 எம் 1 நாள் 26.07.09-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆணையர் உத்தரவில் பெயர் மாற்றம் செய்து தரப்படும் நாள் முதல் அரசாணை எண்,456 - ன்படி நியாய வாடகை நிர்ணயம் செய்து கடைதாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் எனவும் 3 வருடங்களுக்கு ஒருமுறை வாடகை உயர்த்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆணையர் உத்தரவுப்படி திரு ஆர்,பி. மோகன்ராம் என்பவரிடம் ரூ 11 லட்சம் பெறப்பட்டு, வாடகை ஒப்பந்தப்பத்திரம் பெறப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பசலி 1420 ல் மேற்படி ஆர்.பி. மோகன்ராம் பெயரில் 12 மாத வாடகையாக ரூ 152100/- கேட்பு எழுப்பப் பட்டுள்ளது. தணிக்கையாண்டின் முடிவில் திரு ஆர்.பி. மோகன்ராம் என்பவரிடமிருந்து ரூ 106229/- வசூலிக்கப் படாமல் நிலுவையாக வைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பான கோப்பை பரிசீலித்ததில், பழைய வாடகையானது (அரசாணை எண் 353ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகை - ஆணையருக்கு விண்ணப்பித்த போது வரை) 1.7.98 முதல் 31.07.2007 வரைக்கான காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளதும், 01.08.2007 முதல் 30.06.09 வரைக்கான வாடகை கணக்கில் சேர்க்கப்படாமல் உள்ளதும் அறியப்பட்டது. விடுபட்டுள்ள 8/2007 முதல் 06/2009 வரைக்கான வாடகை (4500 X 20 மாதம்) ரூ 90,000/- மேற்படி கடைக்காரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியதுடன், நிலுவைத் தொகையினையும் வசூலிக்கப்படல் வேண்டும்.

92) <u>வெளிக்கடை – விளம்பர போர்டுகள் – வாடகை வதூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளன – நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்</u>

இத்திருக்கோயிலைச் சார்ந்த, அருள்மிகு மாரியம்மன் கோவில் தெப்பக்குளத் தருகே, பின் கண்ட விபரப்படி, விளம்பர போர்டுகள் நிறு வியதில் தொகை ரூ 7043.00 வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளன. விவரம் பின்வருமாறு:

வ. எண்	விபரம்	தொகை ரூ.பை
01.	தெப்பக்குளம் சதர்ன் சூயில்ஸ் போர்டு	1350.00
02.	மாரியம்மன் தெப்பக்குளம் தென்மேற்குப்பகுதி 16ம் கால் மண்டபம், மேல்பகுதி மாலன் விளம்பர போர்டு	2030.00
03.	மாரியம்மன் தெப்பக்குளம் எம்.எஸ்.ஏ சோலைநாட்டரசன்	600.00
04.	சிவன் சோப் தெப்பக்குளம்.	750.00
05.	பி.ஆர். சி செட் தெப்பக்குளம்	115.00
06.	அட்வர் ஏஜென்ஸி கீழச்சித்திரைவீதி	720.00
07.	சவ்வாஸ் விளம்பர போர்டு தெப்பக்குளம் வடக்கு	688.00
08.	சதர்ன்ஸ் சூயில்ஸ் – தென்சரகம்	390.00
09.	ஹாசிமுசா புது மண்டபம்	400.00
	கூடுதல்	7043.00

இவற்றை வசூலிக்க நிர்வாக நீதியாக. எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கேட்பு வசூல் நிலுவை பதிவேட்டில் மேற்படி விளம்பரங்கள் எந்த பசலிகளில் செய்யப்பட்டது என்ற விபரம் பதியப்படவில்லை.

நிலுவைகளை வசூலிக்க விரைவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

136

93) <u>வெளிக்கடை - பாண்டியன் மினி சூப்பர் மார்க்கெட் - கடை காலி செய்யப்பட்டது - வாடகை நிலுவை - வசூலிக்கப் படவில்லை -கட்டிடம் வருவாய் ஏதுமின்றி காலியாக வைக்கப்பட்டுள்ளது - தொடர் வருவாய் இழப்பு மற்றும் குறைபாடுகள்.</u>

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான. கதவு எண் 182, தானப்ப முதலி தெரு என்ற விலாசத்தில் உள்ள கட்டிடமானது, பாண்டியன் மினி சூப்பர் மார்க்கெட் என்ற கூட்டுறவு அங்காடிக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. திருக்கோவிலில் இருந்து அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட வேண்டும் என அரசு உத்தரவிட்டதையடுத்து,மேற்சொன்ன கடை காலிசெய்யப்பட்டு 11.05.07 முதல் அர்ச்சகர் பயிற்சி பள்ளி நடத்தப்பட்டு வந்தது. தற்போது அர்ச்சகர் பயிற்சிப்பள்ளி நடைபெறாததால், மேற்படி கட்டிடமானது திருக்கோவில் பொறுப்பில் உள்ளது. (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 158)

மேற்படி பாண்டியன் மினி சூப்பர் மார்க்கெட் காலி செய்யப்படும் போது வாடகை பாக்கி ரூ 6,60,656-00 இருந்துள்ளது. இந்த வாடகை பாக்கியை வசூலிக்க வழக்கு தொடரப் பட்டுள்ளதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது. வழக்கு தொடர்பான கோப்புகள், ஆவணங்கள், பதிவேடுகள் ஏதும் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படாத நிலையில் வழக்கு குறித்தான விவரங்கள் தணிக்கையில் அறியப் படவில்லை. இக்கடையின் தலைமை அலுவலகம், மதுரை பேலஸ் ரோட்டில் செயல்பட்டு வருகிறது. வாடகை பாக்கியை வசூலிக்க தேவையான விரைவு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் தணிக்கையாண்டில் இக்கட்டிடத்தை காலியாக வைக்கப் பட்டதற்கான காரணங்களை விளக்கி ஆணையரிடமிருந்து உரிய உத்திரவுகள் பெறப் படவில்லை. இக்கட்டிடத்தை வருவாய் ஈட்டத் தக்க வகையில் பயன் படுத்திடவும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

இக் குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டுவரப் படுகிறது.

94) <u>வெளிக்கடை - மதுரை சித்த வைத்திய சங்கம் - அரசாணை எண் 456ன்படி திருத்திய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை - வாடகை பாக்கி அதிகம் உள்ளது - நியாய வாடகை நிர்ணயம் செய்யவும் வாடகை பாக்கியை வசூலிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்</u>

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான. மதுரை மேற்கு வாசல் பகுதியில் டிராவலர்ஸ் பங்களா அருகில் உள்ள கட்டிடமானது மதுரை சித்த வைத்திய சங்கத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்திற்கு மாதம் 1க்கு ரூ 1,500/- வீதம் வாடகை கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 233)

1420-ம் பசலி முடிவில் ரூ 4.08.938-00 வாடகை பாக்கி உள்ளது, இந்த வாடகை பாக்கியை வசூலிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

95) 99 அ) **வெளிக்கடை – கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டது – சட்டப்பிரிவு 78ன்கீழ் வழக்கு தொடரப்பட்டு இடம் திருக்கோவில் வசம் உள்ளது – வாடகை பாக்கி உள்ளது – வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான 90–B. யானைக்கல் என்ற முகவரியிலுள்ள கட்டிடம் எஸ் பழனிச்சாமி என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது, வாடகைதாரர் சரியாக வாடகை செலுத்தாததால். சட்டப்பிரிவு 78ன் கீழ் வழக்கு தொடரப்பட்டு, மேற்படி கட்டிடம் தற்போது திருக்கோவில் வசம் கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி வாடகைதாரர் பெயரில் 1420–ம் பசலி முடிவில் ரூ 5,36,460/– வாடகை நிலுவையாக உள்ளது. (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 259)

அரசாணை எண். 456ன்படி திருத்திய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டபடி திருத்திய வாடகை கணக்கிட்டு பாக்கித் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், பாக்கித் தொகை வசூலாகாத நிலை ஏற்படின், குறித்த காலத்தில், வாடகையை வசூலிக்க தவறிய பொறுப்பான நபரிடமிருந்து மேற்படி தொகை ஈடு செய்யப்பட வேண்டும்,

~~96~~ 100) **வெளிக்கடை – கதவு எண் 30 சிம்மக்கல் – வாடகை பாக்கி அதிகமாக உள்ளது – உடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான கதவு எண் 30 சிம்மக்கல் என்ற முகவரியிலுள்ள கட்டிடமானது குணசேகரன் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது, 1420–ம் பசலி முடிவில் மேற்படி வாடகைதாரரின் பெயரில் ரூ 5,53,270/– வாடகை பாக்கி உள்ளது, (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 275) 1420–ம் பசலியில் இந்த வாடகைதாரர் வாடகை எதுவும் செலுத்தவில்லை. இவரிடமிருந்து வாடகை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அரசாணை எண், 456ன்படி திருத்திய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டபடி திருத்திய வாடகை கணக்கிட்டு பாக்கித் தொகையை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், பாக்கித் தொகை வசூலாகாத நிலை ஏற்படின், குறித்த காலத்தில், வாடகையை வசூலிக்க தவறிய பொறுப்பான நபரிடமிருந்து மேற்படி தொகை ஈடு செய்யப்பட வேண்டும்,

96) **<u>வெளிக்கடை - குடியிருப்பு - வாடகைக்கு விடப்பட்டது - வாடகைதாரரை வெளியேற்றவும் பாக்கியை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- குறைபாடுகள்</u>**

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான 43, மேலச்சந்தைப்பேட்டை தெரு என்ற முகவரியிலுள்ள குடியிருப்பானது பிச்சுமணி அய்யர் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது, (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 262) 1420-ம் பசலி முடிவில் ரூ 2,01,676/-வாடகை பாக்கி உள்ளது. அவரிடமிருந்து வாடகையை வசூலிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் காலதாமதமின்றி உடன் உரிய நடவடிக்கை எடுத்து நிலுவையாக உள்ள வாடகையினை வசூலிக்கப்பட வேண்டும்.

(8)

97) வெளிக்கடை – குடியிருப்பு – திருக்கோவில் வசம் உள்ளது – பழைய வாடகைதாரர் பெயரில் பாக்கி உள்ளது – பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – குறைபாடுகள்

காலியாக உள்ள குடியிருப்புகள் மற்றும் பழைய வாடகைதாரர்கள் பெயரில் உள்ள வாடகை பாக்கி விபரம்

வ, எண்	குடியிருப்பு முகவரி	கடைசியாக குடியிருந்த நபரின் பெயர்	வாடகை பாக்கி	குறிப்புரை
1.	சங்கீத விநாயகர் கோவில் தெரு	ஆர், பஞ்சவர்ணம்	6,136/–	காலியாக உள்ளது
2.	சங்கீத விநாயகர் கோவில் தெரு	சுப்பையா சேர்வை	152/–	–ஷை–
3.	சங்கீத விநாயகர் கோவில் தெரு	பழனி யம்மாள்	1,140/–	– ஷை –
4.	45. கோபால கொத்தன் தெரு	எஸ், பி, ஆங்கன்	77,541/– 60458 ...	குடியிருப்பினை காலி செய்து விட்டு சாவியை தபாலில் அனுப்பி விட்டார்
5.	44. மேலச்சந்தை பேட்டை தெரு	கே,எம்,பால சுப்ர மணியன் அய்யர்	91,853/–	காலியாக உள்ளது
6.	44. மேலச்சந்தை பேட்டை தெரு	கோபால்ராவ்	1,14,252/–	காலியாக உள்ளது
7.	44. மேலசந்தை பேட்டை தெரு	சேஷம்மாள் ஸ்ரீ	1,84,756/–	மேற்படி
8.	44. மேலசந்தை பேட்டை தெரு	ரெங்கையர் ஸ்ரீ	1,73,272/–	மேற்படி
9.	43. மேலசந்தை பேட்டை தெரு	வெங்கட நாராயண அய்யர்	94,212/–	மேற்படி
10.	44. மேலசந்தை பேட்டை தெரு	ராஜம்மாள்	1,05,187/–	மேற்படி
11.	44. மேலசந்தை பேட்டை தெரு	வெங்குலட்சுமி அம்மாள்	1,74,608/–	மேற்படி
12.	44. மேலசந்தை பேட்டை தெரு	மீனாட்சி யம்மாள்	1,46,240/–	மேற்படி
13.	44. மேலசந்தை பேட்டை தெரு	தெரிய வில்லை	இல்லை	மேற்படி
14.	44. மேலசந்தை பேட்டை தெரு	கணேசய்யர்	1,12,781/–	மேற்படி
15.	44. மேலசந்தை பேட்டை தெரு	இல்லை	இல்லை	மேற்படி
16.	44. மேலசந்தை பேட்டை தெரு	திருவேங்கடத் –தைய்யங்கார்	1,06,924/–	மேற்படி
		மொத்தம்	13,89,654/–	

தணிக்கையாண்டில் இக்கட்டிடங்கள் காலியாக வைக்கப் பட்டதற்கான காரணங்களைத் தெரிவித்து ஆணையரின் அனுமதி ஏதும் பெறப் படவில்லை. கட்டிடங்களை வாடகைக்கு விடப்படவும் தணிக்கையாண்டில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை. (கேட்பு பதிவேடு (வெளிக்கடை) அடையாள குறியீடு எண் 254,255,256,258,263-272)

ஆதலின் தற்போது அமுலில் உள்ள விதிகளுக்குட்பட்டு வாடகை நிலுவையை வசூலிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதுடன், இந்த குடியிருப்புகளை திரும்பவும் வாடகைக்கு விடப்பட்டு வருவாய் ஈட்டப் படவும், திருக்கோயிலுக்கு ஏற்பட்டு வரும் தொடர் வருவாய் இழப்பு களையப் படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

Form No. 5. அசல் C No. 70036

அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி - 2

MISCELLANEOUS RECEIPT

தேதி: 18/8/12

Received From

இன்னாரிடமிருந்து B. THIYAGARAJAN.

VADUGA PALAYAM, KULLAIPALAYAM (VIA)

ELLIS NAGAR (P.O) DHARAPURAM.

the sum of Rs 562/2 ([illegible])

in kind வஸ்துக்கள் [illegible]

for the Purpose of

இன்ன காரியத்திற்காக [illegible]

[illegible]

[illegible]

கணக்கர் 18/8/12 உதவி ஆணையர் / செயல் அலுவலர்

செலுத்துபவர் கையெழுத்து கண்காணிப்பாளர்

98) 103 **வெளிக்கடை - குடியிருப்பு-தெப்பக்குளம் தென்கரை-பழைய வாடகைதாரர் பெயரில் அதிகமான வாடகை நிலுவை உள்ளது -வசூலிக்கப்படவில்லை - கடுங்குறைபாடுகள்**

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் தென் கரையிலுள்ள கீழ்கண்ட விபரப்படியான குடியிருப்புகளில் அதனெதிரே தெரிவிக்கப்பட்ட விபரப்படி வசித்து வந்த நபர்களின் பெயரில் பல வருடங்களாக பாக்கி உள்ளது,

வ. எண்	வெளிக்கடை கேட்புப் பதிவேடு	குடியிருப்பு முகவரி	வாடகைதாரர் பெயர் திருவாளர்கள்	பாக்கி ரூ பை
01.	அடையாள குறியீடு எண் 277	6 பி4, தெப்பக்குளம் தென்கரை	எஸ். கண்ணன் (வழக்கறிஞர்)	82,321-00
02.	அடையாள குறியீடு எண் 283	6 பி2, தெப்பக்குளம் தென்கரை	வே.பாலசுப்ரமணியன் உதவி ஆணையர்	34,560-00
03.	அடையாள குறியீடு எண் 285	6 பி2, தெப்பக்குளம் தென்கரை	ஜி. இராமமூர்த்தி உதவிஆணையர்	17,048-00

இந்நிலுவையை வசூலிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. வரிசை எண். 2 மற்றும் 3 -ல் உள்ள திரு. வே. பாலசுப்ரமணியன் மற்றும் திரு ஜி.இராமமூர்த்தி ஆகியோர் இத்துறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

இந்த பாக்கித் தொகையினை சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து உடன் வசூலிக்கப்பட வேண்டும். வசூலிக்க இயலாத பட்சத்தில், இதனை திருக்கோயிலுக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகக் கருதி உரிய காலத்திற்குள் வசூலிக்கத் தவறிய பொறுப்பான நபர், நபர்களிடமிருந்து இத்தொகையினை வசூலித்து திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படல் வேண்டும்.

இக்குறைபாடு ஆணையரின் தனி கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

99) <u>வெளிக்கடை கேட்பு – இணை ஆணையர் அலுவலகம் இயங்கி வருதல் – வாடகை வசூலிக்கப்படவில்லை – குறைபாடுகள்</u>

இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான கதவு எண். 1. மேலச்சித்திரை வீதியில் உள்ள கட்டிடத்தில் இத்துறையின் மதுரை. இணை ஆணையர் அலுவலகம் இயங்கி வருகிறது. இக்கட்டிடத்திற்கு கேட்புப்பதிவேடுபடி ஆண்டொன்றுக்கு ரூ 98400–00 கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. (வெளிக்கடை கேட்பு பதிவேடு அடையாள குறியீட்டு எண் 154) பல வருடங்களாக வாடகை வசூலிக்கப்படாமல் உள்ளது. வாடகை வசூலிப்பது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. பசலி ~~1418~~ 1420 முடிவில் இவ்வலுவலகத்தின் பெயரில் ~~ரூ 9,75,850–00 பாக்கி உள்ளது~~. இத்தொகையை வசூலிக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

105/00) <u>கீழ ஆவணி மூலவீதியில் உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் வணிக வளாகத்தில் இத்துறை தணிக்கை அலுவலர் அலுவலகங்கள் செயல்பட்டு வருதல்-வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்கப்படவில்லை-நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.</u>

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான கட்டிடங்களில் கீழ ஆவணி மூல வீதியில் உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் வணிக வளாகத்தில் இத்துறை தணிக்கை அலுவலகங்களான. துணை தலைமைத் தணிக்கை அலுவலர் அலுவலகம். மண்டலத்தணிக்கை அலுவலர் அலுவலகம் மற்றும் உதவித் தணிக்கை அலுவலர் அலுவலகம் ஆகியவை ஆகஸ்ட் 2008-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இக்கட்டிடங்களுக்கு நாளது தேதி வரை அரசு அலுவலகங்களுக்குரிய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை.

இக்கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்து, வாடகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

101) <u>மனை வாடகை – ராணி தங்கச்சியார் தோப்பு – பல வருடங்களாக வாடகை வசூல் இல்லை – குறைபாடுகள்</u>

மதுரை நகர். கல்பாலம் ரோடு டவுண் சர்வே எண்.1403/1–ல் சுமார் 13,392 சதுரஅடி (124 x 108 சதுர அடி) இடம் இத்திருக் கோவிலுக்கு சொந்தமானதாக உள்ளது. இந்த இடம் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதின் மூலம் இந்த இடம் திருக்கோவில் வசம் கொண்டு வரப்பட்டுள்ளது. திருக்கோவில் வசம் இந்த இடத்தை கொண்டு வரும் போதே சுமார் 53 நபர்கள் நிரந்தர வீடு கட்டி குடியிருந்து வந்துள்ளனர். திருக்கோவில் வசம் கொண்டு வந்தவுடன் அந்த இடத்தில் வசித்து வருபவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு பரப்பு இடத்தில் உள்ளனர் என்பதை அளந்து அதற்கேற்ப அவர்களுக்கு மனை வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. திருமலைராயர் படித்துறை, ராணி தங்கச்சியார் தோப்பு என்ற பெயரில் கேட்புப் பதிவேட்டில் 53 நபர்கள் பெயரில் ஆரம்பத்தில் கேட்பு எழுப்பபட்டுள்ளது.

தற்போது 50 நபர்கள் பெயரில் (மனை வாடகை கேட்புப் பதிவேடு அடையாள குறியீடு எண் 802 முதல் 853 முடிய) வருடம் 1க்கு ரூ 98,640–00 வீதம் கேட்பு எழுப்பப்பட்டு, தணிக்கையாண்டு 1420–ம் பசலி முடிவில் ரூ 6,97,295.34 வாடகை நிலுவையாக உள்ளது.

பல வருடங்களாக இந்த மனை வாடகைதாரர் களிடமிருந்து வாடகை எதுவும் வசூலிக்கப் படவில்லை. பல்வேறு காரணங்களால் இவர்களிடமிருந்து வாடகை வசூலிக்க இயலவில்லை எனத் தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி இடத்தினை திருக்கோவில் வசம் எடுத்த போது இருந்த நபர்களில் பெரும்பாலோர் வேறு நபர்களிடம் வீட்டினை விற்று விட்டதாகவும் தணிக்கையின் போது அறியப் பட்டது. ஆதலின் திருக்கோவிலுக்கு தொடர் வருவாய் இழப்பை ஏற்படுத்தி வரும் இக்குறைபாட்டினை நிவர்த்திக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனிக் கவனத்திற்கும் தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டு வரப்படுகிறது.

146

102) <u>மனை வாடகை – ராயகோபுரம் – காலிமனை வாடகைக்கு விடப்பட்டது – வாடகை காலம் முடிந்தபின்னர் வாடகை உயர்வு செய்யப் படாமல் ஆணையர் அனுமதியின்றி பழைய வாடகைதாரருக்கே மீண்டும் வாடகைக்கு விடப்பட்டது – தொடர் வருவாய் இழப்பு – குறைபாடுகள் . (கோப்பு எண் 1527 /2000 எ3)</u>

107

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான ராயகோபுரம் பகுதியில் டவுன் சர்வே எண், 1326ல் உள்ள 200 சதுர அடி காலிமனையானது ஆணையர் எண். ஓ.மு. எண்,90719/2001 நாள் 26-02-2002ன்படி மாதம் ஒன்றுக்கு ரூ 1800/- வீதம் 15-12-2001 முதல் 14-12-2004 முடியவுள்ள காலத்திற்கு என், மணிச்செல்வம் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மேற்படி வாடகை காலம் முடிவதற்கு முன்பாக வாடகைதாரர், அந்த இடத்தை தனக்கு மீண்டும் வாடகைக்கு விடவேண்டும் எனவும் பழைய வாடகைத் தொகையில் 50 சதவீதம் உயர்த்தி தருவதாகவும் தெரிவித்து விண்ணப்பித்ததை அடுத்து என்.மணிச்செல்வம் என்பவருக்கே மீண்டும் 3 ஆண்டுகளுக்கு (15-12-2004 முதல் 14-12-2007 முடிய) வாடகைக்கு விடுவதற்கு அறங்காவலர் குழு தீர்மானம் எண், 134 நாள் 17-01-2005 மற்றும் 487 நாள் 03-11-05 நிறைவேற்றப்பட்டு ஆணையர் அனுமதிக்கு திருக்கோவில் இணை ஆணையர் /செயல் அலுவலர் ந,க,எண், 1527/2000 எ3 நாள் 19-01-05 மற்றும் 27-05-05ல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது, ஆணையர் அனுமதி இதுவரை வரப் பெறவில்லை, இவருக்கு பழைய வாடகையே கேட்பு எழுப்பப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. புதிய வாடகைக்காலமான 3 ஆண்டுகள் 14-12-2007 அன்று முடிவடைந்து அடுத்த 3 ஆண்டுகளும் நிறைவடைந்துவிட்ட நிலையில் ஆணையர் அனுமதி இதுவரை வரப்பெறவில்லை. கோப்பிலும் தொடர் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. என். மணிச்செல்வம் என்பவரே அந்த இடத்தை இது காறும் அனுபவித்து வரும் நிலையில் 2007 முதல் நாளது தேதி வரை அவர் அந்த இடத்தை அனுபவித்து வருவதற்கு ஆணையர் அனுமதி பெறப்படவும், 15-12-2004 முதல் வாடகைத் தொகையை உயர்த்தி நாளது தேதி வரை நிலுவையுடன் வாடகை வசூல் செய்யப்படவும் உரிய துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இக் குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கும், தக்க நடவடிக்கைகளுக்கும் கொண்டுவரப் படுகிறது.

103) <u>மனை வாடகை – வாடகைதாரர்கள் பெயரில் அதிகளவில் நிலுவை உள்ளது – நிலுவையை வசூலிக்க சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை – கடுங்குறைபாடுகள்</u>

இத்திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் பலவகை கேட்புப் பதிவேட்டின் படி இத்திருக்கோவிலுக்கு சொந்தமான காலிமனைகளின் வாடகைதாரர்களாக உள்ளவர்களில் கீழ்கண்ட வாடகைதாரர்கள் பெயரில் அவர்களுக்கெதிரே தெரிவிக்க விபரப்படி அதிகளவு வாடகை பாக்கி உள்ளது. இந்த வாடகைத்தாரரிமிருந்து வாடகை பாக்கியை வசூலிக்கவோ அல்லது அவர்களை வெளியேற்றவோ எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. சம்மந்தப்பட்ட வாடகைதாரர்கள், தங்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருக்கும் வகையில் அவ்வப்போது சிறிய தொகையை செலுத்தி வருகின்றனர் .

வ. எண்	மனை வாடகை கேட்பு பதிவேடு அடையாள குறியீட்டு எண்.	வாடகைதாரர் பெயர்	ஆண்டு 1-க்கு கேட்பு ரூ	பசலி 1420 முடிவில் பாக்கி, ரூ
01.	785	சிவக்குமார்	88368/-	208272.60
02.	788	கதிரேசன்	8244/-	58395.40
03	789	ராஜேந்திரன்	37944/-	301562.40
04.	790	அய்யப்பன்	15912/-	161153-20
05.	792	எஸ். போஸ்	21060/-	164151-00
06.	793	எம். மாதவன்	7272/-	76679-00
07.	794	செ. போஸ்	80748/-	540828-00
08.	799	திருமலை செட்டியார்	9252/-	92725.25
09.	811	சுப்பா நாயுடு	6120/-	57630.00
10.	856	ஆவுடையப்பன்	91200/-	463400.00
11.	858	அருணாச்சலம் செட்டியார்	5856/-	72197.00
12.	863	கலாவதி	24288/-	249999.00
13.	866	சிவகுருநாதன்		249897.00

கணிசமான தொகையை வாடகை நிலுவையாக வைத்திருக்கும் இவ்வாடகைதாரர்களிடமிருந்து வாடகை நிலுவையை வசூலிக்க தணிக்கையாண்டில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

வாடகை பாக்கியை வசூலிக்க உரிய நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும். வாடகை பாக்கியை செலுத்த மறுக்கும் வாடகைதாரர்களின் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப் படல் வேண்டும்.

147

104) <u>மனை – வாடகை – மனைகள் வாடகைக்கு விடப்படவில்லை – பலவகைக் கேட்புப் பதிவேட்டில் . மனையின் சதுர அடி விபரம் குறிப்பிடப்படவில்லை – ஆணையரின் விலக்கனுமதி பெறப்பட வில்லை –குறைபாடுகள்</u>

அ) இத்திருக்கோவிலில், தணிக்கைப் பசலியில் / கீழ்க்கண்ட மனைகள் வாடகைக்கு விடப்படாமல் காலியாக உள்ளன. இங்ஙனம் காலியாக உள்ளமைக்கு ஆணையரின் விலக்கனுமதி உத்திரவு ஏதும் பெறப்பட்டுத் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

மேலும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாப்பு செய்யவும் பழைய வாடகைதாரர்கள் பெயரில் உள்ள நிலுவைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வ.எண்	காலியாக உள்ள இடம் இருக்கும் விபரம்	இறுதியாக வாடகைக்கு இருந்த நபர் திரு /திருமதி	நிலுவை ரூ –பை
01.	திருமலைராயர் படித்துறை காலியிடம்	முத்தம்மாள்	494–00
02.	ராயகோபுரம் பகுதி	காவேரி சேர்வை 6.11.2003 3532 சதுர அடி (வழக்கு)	2299–50
03.	145 வடக்கு மாசி வீதி	எஸ். நாராயணன் செட்டியார் 27.09.2003 546–30 சதுர அடி (வழக்கு)	545–00
04.	145 வடக்கு மாசி வீதி	எஸ். நாராயணசாமி பிள்ளை 1590 சதுரஅடி (வழக்கு)	12152–00
05.	தெற்கு மாசி வீதி	மல்லி சுப்ரமணிய அய்யர் 670.35 சதுர அடி (வழக்கு)	3812–14
06.	தெப்பக்குளம் அருள்மிகு மாரியம்மன் கோவில் வடக்கு பக்க காலியிடம்	600 சதுர அடி பெயர் விபரமில்லை.	600–00
07.	தெற்குமாசி வீதி	முத்தழகுப் பிள்ளை விபரமில்லை	340–00
08.	அருள்மிகு கடம்பவனேசுவரர் திருக்கோவில்	ஏ. கந்தசாமி பிள்ளை 136 சதுர அடி	300–00
09.	அருள்மிகு கடம்பவனேசுவரர் திருக்கோவில்	ஏ. கந்தசாமி பிள்ளை 581 சதுர அடி	5250–00
10.	மதுரை டவுன் ராணி தங்கச்சியார் தோப்பு	அப்பாத்துரைத் தேவர்	54–00
11.	மதுரை டவுன் ராணி தங்கச்சியார் தோப்பு	சின்ன வீரணன் 245.80 சதுர அடி	72–00

மேற்கண்டவற்றில் வரிசை எண். 2, 3, மற்றும் 4 –ல் தெரிவிக்கப்பட்ட பழைய வாடகைதாரர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நிலுவையாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வழக்குகளைத் தொய்வின்றி நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

105) **காலிமனை வாடகை - திருமலைராயர் படித்துறையில் 1564 சதுரஅடியில் அமைந்துள்ள இராஜபரமேஸ்வரி நடுநிலைப்பள்ளி 01.06.08 முதல் வேறு கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால் . தற்போது காலியாக உள்ள இடத்தை பாதுகாப்பில் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-வாடகை பாக்கி தொகை ரூ 249897/- ஐயும் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்**

110

அ) மதுரை நகரின் மையப்பகுதியில் திருமலைராயர் படித்துறையில் 1564 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இராஜபரமேஸ்வரி நடுநிலைப்பள்ளிக்கு மாத வாடகை கேட்பாக ரூ 2581 /- வீதம் வாடகை கேட்பு எழுப்பப்பட்டு வந்தது.

இப்பள்ளியின் செயலர் இத்திருக்கோவில் இணை ஆணையருக்கு எழுதியுள்ள தனது கடிதம் நாள் 02.06.08 ல் கடிதப்படி பள்ளியின் கட்டிட உரிமம் பெறுவதற்கு வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டதில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லாததால் கட்டிட உரிமம் தர இயலாது என விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. கட்டிட உரிமம் இல்லாமல் பள்ளியை நடத்த இயலாது என்பதால் பள்ளியை காலி செய்வதாக தெரிவித்து 01.06.2008 அன்று மேற்படி இடத்தை திருக்கோவில் வசம் ஒப்படைத்துள்ளார்.

மதுரை நகரின் மையப்பகுதியில் அமையப் பெற்றுள்ள 1564 சதுர அடி பரப்புள்ள இக்காலியிடத்தை துறை அனுமதியுடன் பாதுகாத்திட தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆ) பலவகை கேட்புபதிவேட்டில் இப்பள்ளியின் பெயரில் நிலுவையாக ரூ 2.49.897 /- உள்ளது. (மனைகள் கேட்பு பதிவேடு அடையாள குறியீட்டு எண் 866) இந்நிலுவைத் தொகையை வசூலிக்க நாளது தேதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இந்நிலுவைத் தொகையினை இப்பள்ளியின் செயலாளர் திரு.சிவகுருநாதன் செட்டியார் என்பவரிடமிருந்து வசூலித்திட சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

106) <u>எல்லீஸ் நகர் குடியிருப்பு – திருக்கோயில் இடத்தினை அரசு கையகப்படுத்தியது – இழப்பிடுத்தொகை குறைவு – நீதிமன்றத்தீர்ப்பின் படி இழப்பீடுத் தொகை பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' – குறைபாடு – (கோப்பு எண் 701 / 82)</u>

மதுரை நகர். எல்லீஸ் நகர் குடியிருப்புக்காக பின்கண்ட விபரப்படியான 58002 ச.அ. நிலங்கள் அல்லது 1.33 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

ச.எண்	ச.அ
1598 / 3	3175
1599 / 2 ஏ	38216
1601 / 3	9836
1603 / 3	6775
மொத்தம்	58002

மொத்தம் 58002 ச.அடிகள் (அ) 1.33 ஏக்கர் / கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு ச.அ. 1 க்கு / 2 வீதம் ரூ. 140221.45 ஐ (Award No : 2/80–81 நாள் / 25.02.81) பின் கண்ட விபரப்படி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை எதிர்ப்புடன் (with protest) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிலங்களின் மதிப்பு (58002 ச.அ ரூ 2. 2)	ரூ116004.00
15 % ஆறுதல் தொகை	ரூ 17400.60
மொத்தம்	ரூ133404.60
4 % வட்டி கையகப்படுத்தப்பட்ட 12.08.79 முதல்	ரூ 6816.85
ஆக மொத்தம்	ரூ140221.45

மேற்படி தொகை வழங்கியதை ஆட்சேபித்து மதுரை நடுவர் நீதிமன்றத்தில் LAOP 19 / 82 மற்றும் 111 / 82 ல் வழக்குத் தொடர்ந்து சதுர அடிக்கு ரூ 3.00 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ் ஆளுமை நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து ச.அ 1 க்கு ரூ 10/ வீதம் வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல். செய்யப்பட்டுள்ளது.

தனியார் நிலத்திற்கு இதே கீழ் ஆளுமை நீதிமன்றம் LAOP 401/83 ல் சதுர அடி 1 க்கு ரூ 10 வீதம் என நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய கட்டணமாக ரூ 223360.75 செலுத்தப்பட்டுள்ளது. 17.09.86 ல் பின் கண்ட விபரப்படியான தீர்ப்புரை பெறப்பட்டுள்ளது.

அரசு இந்த கோரிக்கையாளருக்கு கூடுதல் இழப்பீட்டுத் தொகை சதுர அடி 1 க்கு ரூ 10வீதம் 58002 சதுர அடிக்கு ரூ 580020/- ம் அதற்கு ஆறுதல் தொகையாக 30 % வீதம் ரூ 114006/- ம் மேலும் 4(1) அறிவிப்பு நாள் 24.01.79 விருந்து தீர்ப்பு அளிக்கப்பட்ட நாள் வரை (25.02.81 வரை) நில வர மதிப்பின் மேல் ஒரு தொகையாக ஆண்டொன்றிக்கு 12% வீதமும் கோரிக்கையாளர் ஏற்கனவே பெற்ற தொகை ரூ 140221.25 போக மீதத் தொகை தர வேண்டும்.

மேற்படி மீதித் தொகை இன்றிலிருந்து ஓராண்டு காலத்திற்குக் கொடுக்கப்படுமாயின் அதற்கு தீர்வலர் தீர்பளித்த நாளிலிருந்து தொகை வைப்பீடு செய்யும் நாள் வரை ஆண்டுக்கு 9 % வட்டியும் தவறின் இந்த தொகைக்கு இந்த ஓராண்டு முடிவடையும் நாளிலிருந்துத் தொகை செலுத்தப்படும் நாள் வரை 15 % வட்டியும் சேர்த்து கோரிக்கையாளருக்கு (கோவிலுக்கு) தரப்பட வேண்டுமெனவும், செலவுத் தொகை ரூ 2011.50 ம் தரப்படவேண்டுமெனவும் உள்ளது.

இத்தீர்ப்பினை எதிர்த்து நிலங்கள் கையகப்படுத்தும் தனி தாசில்தார் ஏ.எஸ் 1043/88 வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளார். வழக்கின் தற்போதைய விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

தற்போது இந்நிலத்தின் மதிப்பு ஆயிரக்கணக்கில் உயர்ந்துள்ள நிலையில் சட்ட வல்லுநர்களின் கருத்தறிந்து இழப்பீட்டு தொகையினை மார்க்கெட் நிலவரப்படி பெறுவதற்கு வாய்ப்பிருப்பின் அதற்கேற்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

107) எழுகடல் வணிக வளாகம்–ஆக்கிரமிப்புதாரராக அறிவித்து வழக்கு தொடரப்பட்டது – குறைபாடுகள்

எழுகடல் வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடை வாடகைதாரர்கள் வாடகையை செலுத்தாததாலோ அல்லது கடையை காலி செய்துவிட்டதாலோ வாடகைதாரரை வெளியேற்றி கடையை திருக்கோவில் வசம் கொண்டு வரும் பொருட்டு, சம்மந்தப்பட்ட கடைக்காரர்கள் மீது சட்டப்பிரிவு 78–ன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வ.எண்	கடைஎண்	வாடகைதாரர் பெயர்	1420 ம் பசலி கேட்பு	பாக்கி ரூ பை
01.	A 13	கிருஷ்ணவேணி	12120.00	106515.00
02.	A 42	என். சலீம்	9720.00	45180.00
03.	B 46	டாக்டர் ஏ. நடராஜன்	12120.00	116298.00
04.	B 64	எல். கதிரவன்	9720.00	78057-00

சட்டப்பிரிவு 78 ன் கீழ் வழக்கு தொடரப்பட்ட பின்னரும் மேற்கண்ட கடைகளுக்கு 1418 ம் பசலியில் தவறான கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. இதில் வரிசை எண். 1, 3, 4 ஆகிய 3 கடைகளை திருக்கோவில் வசம் கொண்டு வர இணை ஆணையரால் உத்தரவிடப்பட்டு கடைகளை திருக்கோவில் வசம் எடுத்துக் கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளதாவும், வரிசை எண், 2–ல் உள்ள கடைக்கான வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் முன் பசலி தணிக்கை அறிக்கை வாயிலாக அறியப்படுகிறது. இது குறித்தான விவரங்கள் தற்போதைய தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

தணிக்கையாண்டில் A 13 மற்றும் B 46 கடைகளின் வாடகைதாரர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டுள்ளன. ஆனால் அவர்களிடமிருந்து வாடகை ஏதும் வசூலிக்கப் படவில்லை. அந்த வாடகைதாரர்களிடமிருந்து முறையே ரூ 1,06,515/– மற்றும் ரூ 1,16,298/– வாடகை வசூலிக்கப் படாமல் நிலுவையாக உள்ளன.

இதே நேரத்தில் A 42 மற்றும் B 64 கடைகளின் வாடகைதாரர்களின் பெயரில் கேட்பு எழுப்பப் பட்டு வாடகை வசூலிக்கப் பட்டுள்ளன. அந்த வாடகைதாரர்களிடமிருந்து முறையே ரூ 45,180/– மற்றும் ரூ 78,057/– வாடகை வசூலிக்கப் படாமல் நிலுவையாக உள்ளன.

A 42 மற்றும் B 64 கடைகள் திருக்கோயில் வசம் உள்ளனவா அல்லது வாடகைதாரர்களின் வசம் உள்ளனவா என்கிற விவரம் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை. வாடகையை செலுத்தாத கடைக்காரர்களை நேரில் சந்தித்து வாடகையை வசூல் செய்யவோ, வசூலில் தொய்வு ஏற்படும் போது வாடகையை செலுத்துமாறு நோட்டீஸ் அனுப்பி சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவோ இல்லை.

இக்குறைபாடுகளைக் களையப்பட வேண்டியதுடன், இந்த வாடகை பாக்கியை வசூலிக்க சட்டப்படியான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

108) **<u>எழுகடல் தொடர் அங்காடி – தெப்பக்குளத்தில் 157 கடைகள் கொண்ட அங்காடி ரூ 97 லட்சம் செலவில் கட்டப்பட்டது – 46 கடைகள் காலியாக இருந்து வருவது – கடைகளை நடத்த வியாபாரிகள் யாரும் முன்வராதது – தொடர் வருவாய் இழப்பு – கட்டுமான செலவின் தற்போதைய மதிப்பு சுமார் ரூ 5 கோடி – அதிக வாடகை நிலுவையாக உள்ளது – கடுங்குறைபாடு</u>**

113

எழுகடல் தொடர் அங்காடி கட்டுதல் மதிப்பீடு தொகை	ரூ 97 லட்சம்
நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதி	ஆணையர் ந.க.எண் 35495 /79 ஒய் 1
நாள் டெண்டர் அனுமதி	12.05.87 அரசு ஆணை எண் 926 (வருமானவரிமற்றும்அறநிலையத்துறை) நாள் 14-08-88
டெண்டர் தொகை	ரூ93-92 லட்சம்
டெண்டர்தாரர்	தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகம், சென்னை.

இத்திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட எழுகடல் தெப்பக்குளத்தில் மேற்கண்ட விபரப்படி அனுமதி பெறப்பட்டு 157 கடைகள் கொண்ட எழுகடல் தொடர் அங்காடி 1991-ல் கட்டி முடிக்கப்பட்டது. கட்டுமானப்பணிகள் முடிவடைந்ததும், கடைகளை வாடகைக்கு விடுவதற்கு 1992-ல் டெண்டர் கோரப்பட்டதில் , 66 கடைகளுக்கு மட்டும் டெண்டர் வரப்பெற்றது. இதுதவிர அரசு நிறுவனங்கள் 22 கடைகளை வாடகைக்கு எடுத்துக் கொள்ள சம்மதம் தெரிவித்தும், டெண்டர் அல்லாமல் 3 கடைகளும் ஆகமொத்தம் 91 கடைகள் வாடகைக்கு விடப்பட்டன. மேற்படி 91 கடைகளில் 42 கடைகள் மட்டுமே 1992 ல் இயங்கி வந்தன. 42 கடைகள் திறக்கப்படவேயில்லை. ஒட்டு மொத்தமாக 1992 ல் 115 கடைகள் காலியாகவே இருந்துள்ளது.

1987 லிருந்து 1991 வரை சுமார் 94 லட்சம் முதலீட்டில் கட்டப்பட்ட மேற்படி அங்காடியிலிருந்து எதிர்பார்த்த அளவு வாடகை மூலம் வருவாய் கிட்டவில்லை. எவ்வித தொலைநோக்கு சிந்தனையின்றி, கடைகள் அனைத்தும் ஏறக்குறைய, ஒரே பரப்பளவு கொண்ட கடைகளாக கட்டப்பட்டதாலும், அங்காடியானது வெளியில் தெரியாத வண்ணம், முன்புறம் மற்ற கடைகளால் மறைக்கப்பட்டு உள்ளதாலும், வங்கி மற்றும் பெரிய அளவில் வியாபாரம் செய்பவர்களுக்கு வாடகைக்குவிட இயலாமல் போயிற்று.

மேலும் இந்த அங்காடி ஆரம்பிக்கப்பட்ட போது இருந்த அடிப்படை வசதியான கழிப்பறை வசதி, தண்ணீர் வசதி ஆகியவை தற்போது எள்ளவும் இல்லை. வாடகைக்கு இருப்போர் தங்களது செலவிலேயே தண்ணீர் வசதி செய்து கொண்டும், கட்டண கழிவறைகளை உபயோகித்தும் வருகின்றனர். அடிப்படை வசதிகளை செய்து தருவதற்க்குக்கூட திருக்கோயில் நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

திருக்கோவிலின் தெப்பக்குளமானது எவ்வித பரிகாரம் செய்யப்படாமலும், வாஸ்து சாஸ்திர பின்ப்பற்றப்படாமலும் கடைகள் கட்டப்பட்டதால், இங்கு வியாபாரம் செய்வதற்கு வியாபாரிகள்

தயங்குவதாகவும், இவ்வளாகத்தில் கடை நடத்தியவர்களில் பெரும்பாலானோர், நஷ்டம் ஏற்ப்பட்டு கடைகளை காலிசெய்துள்ளதாகவும் மறைமுகமாக பேசப்பட்டு வருகிறது.

தற்போது இந்த எழுகடல் தொடர் அங்காடியில் 123 கடைகள் செயல்பட்டு வருகிறது. பெரும்பாலான கடைகள் திறக்கப்படவில்லை. இந்த 123 கடைகளில் 12 கடைகள் மீது சட்டப்பிரிவு 78 ன்கீழ் வழக்கு தொடரப்பட்டு அதில் 8 கடைகள் ஆக்கிரமிப்பு என அறிவிக்கப்பட்டு திருக்கோவில் வசம் கொண்டு வர உத்தரவிடப்பட்டுள்ளது. (ஏ 13. ஏ 30. ஏ 58. பி 34. பி 41. பி 42. பி 46. பி 64) ஏ 42, ரு 57, ரு 59, ரு 61 ஆகிய கடைகள் மீதான வழக்கு நிலுவையிலுள்ளன.

34 கடைகள் வாடகைக்கு விடப்படாமல் திருக்கோவில் வசம் உள்ளது. வாடகைக்கு விடப்பட்டுள்ள கடைகளில் பெரும்பாலானவை திறக்கப்படவில்லை. அதிலும் பாதிக்கு மேற்பட்டவை குடோன்களாகவே உள்ளன. திருக்கோவிலில் பேணப்பட்டு வரும் பலவகைக் கேட்புப் பதிவேட்டின்படி. 1420-ம் பசலி முடிவில், வாடகை பாக்கியாக மட்டும் ரூ 51,97,330.90 உள்ளது.

1991-ல் 94 லட்சம் என்பது தற்போதைய மதிப்புக்கு சுமார் 5 கோடியாகும். இவ்விதம் அங்காடி கட்டாமல் மேற்படி தொகை வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருப்பின், திருக்கோவில் நிர்வாகத்திற்கு எவ்வித பணிப்பளுவுமின்றி வட்டியாகவே சுமார் 5 கோடி கிடைத்திருக்கும். அங்காடி கட்டி செலவு செய்ததால், எதிர்பார்த்த அளவில் இன்றி, திருக்கோவில் நிதி தேவையில்லாமல் முடக்கப்பட்டதாகவே தணிக்கையில் கருத வேண்டி யுள்ளது.

திருக்கோயிலின் நிதி முடக்கப்பட்டும், தொடர் வருவாய் இழப்பை ஏற்படுத்தியும் திருக்கோவிலுக்கு பெரும் சவாலாக உள்ள இக்குறைபாட்டை நிவர்த்திக்கும் பொருட்டு, ஆணையரின் தனிக்கவனத்திற்கு இக்குறைபாடு கொண்டு வரப்படுகிறது.

114

109) எழுகடல் தொடர் அங்காடி – கடைகள் வாடகைக்கு விடப்பட்டது – கடைகள் திறக்கப்படவில்லை – வாடகைத்தாரர்கள் திருக்கோவில் வசமும் ஒப்படைக்கவில்லை – திறக்கப்படாத கடைகளுக்கு வாடகை கேட்பு எழுப்பப்பட்டது– கடைகளை வழக்கு தொடர்ந்து திருக்கோயில் வசம் கொண்டு வந்தது – வாடகையை வசூலிக்க வழக்கு தொடர்ந்ததால் வழக்குச் செலவு வசுலாகவில்லை – திருக்கோவிலுக்கு பெரிய அளவில் வருவாய் இழப்பு – வசூலிக்க இயலாமல் உள்ள வாடகை சுமார் ரூ29 இலட்சத்தை தள்ளுபடி செய்ய விண்ணப்பித்தது – கடுங்குறைபாடு :

இந்த அங்காடி துவக்கப்பட்ட போது (1992ம் வருடம்). கடைகளை டெண்டர் மூலம் வாடகைக்கு எடுத்தவர்களில் கடை நடத்தியவர்கள் மற்றும் கடைகளை திறக்காமல் இருந்தவர்கள் என பாரபட்சமின்றி அனைவருக்கும் டெண்டர் நிபந்தனைப்படி மாதமாதம் வாடகை கேட்பு எழுப்பப்பட்டது. கடையை நடத்தியவர்களில் பெரும்பாலானோர் பகுதி வாடகையை வாடகையை மட்டும் செலுத்தியதாலும், கடையை நடத்தாதவர்கள் வாடகையை செலுத்தாததாலும் பெரிய அளவில் வாடகை நிலுவை ஏற்பட்டது. டெண்டர் நிபந்தனைபடி வாடகை செலுத்தாமல் உள்ளவர்கள், வாடகையை பாக்கி வைத்திருப்பவர்கள் மற்றும் கடை நடத்தாமல் உள்ள நபர்களிடமுள்ள கடைகளை திருக்கோவில் வசம் கொண்டு வரவும், பாக்கியை வசூல் செய்யவும் வழக்கு தொடரப்பட்டு, பல கடைகள் திருக்கோவில் கட்டுபாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடை நடத்தியவர்களில் சிலர் நஷ்டம் ஏற்ப்பட்டதால், எவ்வித தகவலும் தெரிவிக்காமல் கடையை காலி செய்துவிட்டு, கடையை திருக்கோவில் வசம் ஒப்படைக்ககாமல் சென்றுவிட்டனர். இவ்வாறு எவ்வித தகவலும் இல்லாமல் உள்ள கடைகளை திருக்கோவில் வசம் கொண்டு வர வழக்கு தொடரப்பட்டு, கடைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்விதம் கடை நடத்தாதவர்கள், வாடகை சரி வர செலுத்தாதவர்கள், கடையைஅடைத்துவிட்டுச்சென்றவர்கள் என சுமார் 53 நபர்கள் பெயரில் வாடகை பாக்கித் தொகை ரூ18.03 லட்சம் மற்றும் இவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குச் செலவுத் தொகை ரூ10.74 லட்சம் சேர்த்து மொத்தம் சுமார் ரூ28.77 லட்சம் 31-06-2003 அன்று நிலுவையாக உள்ளது.

கடை நடத்தாதவர்கள் மற்றும் வாடகையை சரியாக செலுத்தாதவர்களை அவ்வவ்போது கண்காணித்து உரிய நேரத்தில் அவர்களிடமிருந்து வாடகையை வசூலிக்கவோ அல்லது அவர்களை வெளியேற்றி கடையை திருக்கோவில் வசம் கொண்டு வரவோ நடவடிக்கை எடுத்திருந்தால் இவ்வளவு பாக்கி ஏற்ப்பட்டிருக்காது. ஆனால் திருக்கோவில் நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் உரிய நேரத்தில் எடுக்காமல் இருந்ததுடன். வழக்கு போடப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டில் மட்டும் இருந்துள்ளது.

உரிய நேரத்தில் வாடகையை வசூலிக்காமலும், வாடகை வசூலாகாதற்கான காரணத்தை ஆராயாமலும் காலத்தாழ்த்திவிட்டு, திடீரென்று 16-01-2004 அன்று திருக்கோவிலின் இணை ஆணையர் செயல் அலுவலர் தன்னுடைய ந.க.எண். 4534.02 எ3 நாள் 16-01-2004-ம் தேதிய விண்ணப்பத்தில். வாடகை பாக்கி ஏற்ப்பட்டதற்கான காரணத்தை விளக்கி

156

அதை இனிமேல் வசூலிக்க இயலாத நிலை உள்ளதாகவும். எனவே பாக்கித் தொகை ரூ 28.77 லட்சத்தை தள்ளுபடி செய்வதற்கு அனுமதிக்குமாறும் விண்ணப்பித்துள்ளார்.

பலவகை கேட்பு பதிவேட்டில், வாடகைக்கு விடப்பட்டுள்ள கடைகளுக்கு பிரதிமாதம் வாடகை கேட்பு எழுப்பப்பட்டு வந்ததாலும், வாடகை பாக்கி வைத்திருப்பவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டதால், இழப்பு ஏற்பட்டு வருவதாக நேரிடையாக தணிக்கை அறிக்கையில் தடை எழுப்பபடாமல், வாடகை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தடைகள் எழுப்பப்பட்டுள்ளது.

தற்போது தள்ளுபடி செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரிந்தவுடன், சம்மந்தப்பட்ட கோப்பினை வரவழைத்து ஆராய்ந்ததில், தவறான கேட்புகள் எழுப்பப்பட்டிருப்பதும், வாடகைதாரர்கள் கடையை காலி செய்துவிட்டு சென்றுள்ளதும் சிலர் வேறு நபர்களுக்கு கடையை ஒப்படைத்துள்ளதும் தணிக்கைக்கு உரிய விபரங்கள் தெரிவிக்கப்படாமல் இருந்ததும் அறியப்பட்டது.

<u>குறைபாடுகள்</u>

1. திறக்கப்படாத கடைகளை வாடகைக்கு நபர்களை அணுகி, காரணத்தை அறிந்து கடையை திருக்கோவில் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து வேறு வியாபாரிகளுக்கு வாடகைக்கு விடாமல் இருந்தது நிர்வாக குறைபாடாகும்.
2. கடையை காலிசெய்துவிட்ட விபரம் கண்டிப்பாக அருகில் உள்ள கடைக்காரர்களுக்கும் வாடகை வசூல் எழுத்தருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இவ்விபரத்தை வாடகை வசூல் எழுத்தர் மூலமாகவோ, வாய்மொழியாகவோ இணை ஆணையருக்கும் சம்மந்தப்பட்ட எழுத்தருக்கும் தெரிவிக்கவில்லை. இதனால் காலி செய்யப்பட்ட கடைகளுக்கும் தொடர்ச்சியாக வாடகை கேட்பு எழுப்பப்பட நேர்ந்துள்ளது.
3. இரண்டு மாதங்களுக்கு மேல் வாடகை செலுத்தாமல் உள்ள கடைகாரர்களை வெளியேற்ற எவ்வித சட்ட நடவடிக்கைகளும் உடனுக்குடன் எடுக்காமல், அவர்களை தொடர்ந்து கடை நடத்த அனுமதித்ததலும் காலந்தாழ்த்தி நடவடிக்கை எடுத்தாலும் வாடகை பாக்கி உயர்ந்துள்ளது.
4. வாடகைதாரர்களிடம், ஆணையரின் சுற்றறிக்கைபடி ஒரு வருட வாடகைத் தொகையை வைப்புத்தொகையாக வசூலிக்காததும் பாக்கி ஏற்பட காரணமாகும்.

மேற்கண்ட நான்கு வழிகாட்டுதலை பின்பற்றிருந்தால், இவ்வளவு வாடகை பாக்கி ஏற்பட்டிருக்காது. ஆனால் இணை ஆணையர் நிலையில் உள்ள இத்திருக்கோவிலில், முதுநிலை கணக்கு அலுவலர், அயல்பணி கண்காப்பாளர்கள் மற்றும் அயல்பணி ஆய்வர்கள் என அனுபவம்வாய்ந்த பல பணியாளர்கள் பணிபுரிந்தும் உரிய நேரத்தில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கோப்பினை ஆராய்ந்ததில் அதில் கூறப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில் ரூ28.77 லட்சம் வசூலிக்க இயலாத நிலுவையாக மாறியுள்ளது அறியப்பட்டது. இவ்விழப்பிற்கு நிர்வாக குறைபாடு தான் காரணம் என தெளிவாக தெரிகிறது.

இழப்புக்கு நிர்வாக குறைபாடு காரணமாக இருக்கும் இக்குறைபாட்டின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு ஆணையரின் தனிக்கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

110) <u>பொதுக் கணக்கில் பெறப்பட்ட அன்னதான முதலீடு வட்டிரூ 27,265/- அன்னதான திட்ட கணக்கிற்கு மாற்றப் படல் வேண்டும் – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலின் அன்னதான திட்டத்திற்காக வங்கியில் முதலீடு செய்யப் பட்ட முதலீடுகளுக்கான வட்டி ரூ 27,265/- ஐ தவறுதலாக இத்திருக்கோயிலின் பொதுக்கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளன. இந்த வட்டி வரவினை ரொக்கப் பேரட்டில் முதலீடுகளுக்கான வட்டி தலைப்பின் கீழ் வரவாக்கப்பட்டுள்ளன.

அன்னதானத் திட்டத்திற்கென தனியே ரொக்க குறிப்பேடு, ரொக்கப் பேரேடு, முதலீடு பதிவேடு ஆகியன பேணப்பட்டு வரும் நிலையில், தவறுதலாக பொதுக் கணக்கில் வரவாக்கப் பட்ட இத்திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்கான முதலீடு வட்டி ரூ 27265/- ஐ அன்னதானத் திட்ட கணக்கிற்கு மாற்றம் செய்யப் படல் வேண்டும்.

இக்குறைபாட்டினை களைய தக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

111) <u>சில்லரைக் குத்தகை - காஞ்சன மாலையம்மன் திருக்கோயில் -பூஜை பொருட்கள் விற்பனை உரிமம் - பொது ஏலம் கோரப்படாத நிலையில் வருவாய் ஈட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை - குறைபாடுகள்.</u>

தணிக்கையாண்டில் காஞ்சன மாலையம்மன் திருக்கோயில் பூஜை பொருட்கள் விற்பனை உரிமம் 14.05.2010, 27.05.2010, 21.06.2010. 29.06.2010 மற்றும் 06.08.2010 ஆகிய தேதிகளில் பொது ஏலத்தில் விடப்பட்டபோது ஏலம் யாராலும் கோரப்படாத நிலையில் ஏலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.பின்னர் இந்த உரிமம் பொது ஏலத்தில் விடப் படவில்லை.

பின்னர் இவ்வுரிமத்தை பொது ஏலத்தில் விட திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வுரிமத்தை ஆணையர் அனுமதி பெற்று தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விட்டு வருவாய் ஈட்டப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வுரிமம் பொது ஏலத்தில் விடப்படாததற்கான காரணங்களை விளக்கி ஆணையரின் ஏற்பாணையும் பெறப்படவில்லை. உரிய காலத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால், திருக்கோயிலுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆதலின் இவ்வுரிமத்தின் மூலம் தணிக்கையாண்டில் வருவாய் ஈட்டப்படாமைக்கு ஆணையரின் பின்னேற்பு அங்கீகாரம் பெறப்படவேண்டும்.

<u>பிறகுறைபாடுகள்.</u>

1) தணிக்கையாண்டில் மீன்பாசி குத்தகை உரிமையினை 24.02.2011ல் திரு.ஆ.கிருஷ்ணன் எனபவருக்கு ரூ.40,200/- க்கு பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த ஏலத்தினை பதிவு செய்து ஆணையரிடமிருந்து உத்தரவுகள் பெறப்படவில்லை.

இக்குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

159

112) **<u>மரங்களின் மேற்பலன் உரிமம் – தணிக்கையாண்டில் குத்தகைக்கு விடப்படவில்லை – குத்தகைக்கு விடாததற்கு ஆணையரின் அனுமதி பெறபடவில்லை –</u>**

117

இவ்வாலயத்திற்கு சொந்தமான பின் கண்ட விபரப்படியான இடங்களில் உள்ள மரங்களின் மேற்பலன் உரிமங்கள் தணிக்கைப் பசலியாண்டுகளில் குத்தகைக்கு விடப்படவில்லை. பல முறை ஏலத்திற்கு விடப்பட்டும். ஏலம் கேட்டு யாரும் முன் வராமையால் ஏலங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மேலும் கேட்புப் பதிவேட்டில் கேட்புகள் எழுப்பாமலிருக்க அறங்காவலர் குழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இருப்பினும் ஆணையரின் பின்னேற்பு உத்திரவுகள் பெறப்படவில்லை.

வ.எண்	இருப்பிட விபரம்	மரங்களின் விபரம் எண்ணிக்கை
01.	மதுரை வடக்கு விளாங்குடி 11,60 ஏக்கர்	பனை மரங்கள் – 46 நாவல் – 5 புளிய மரம் 71
02.	திருவாதவூர் கோவில்	தென்னை மரங்கள் – 57 மாமரம் – 1

வரிசை எண் ஒன்றில் உள்ள இனத்திற்கு 1418ம் பசலி 1420ம் பசலி முடியவுள்ள காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு 10-06-09. 23-11-09. 29-12-09. 15-04-10 மற்றும் 25-05-10 ஆகிய தேதிகளில் ஏலமிட்டும் யாரும் குத்தகைக்கு எடுக்க முன்வராததால் குத்தகைக்கு விடப்படவில்லை.

வ.எண்- 1 ல் உள்ள 11.60 ஏக்கர் நிலங்களும் . மதுரையில் புறநகர் பகுதியாய் அமைந்துள்ள விளாங்குடியில் உள்ள நிலங்களாகும். தற்போது இந்நிலத்தின் மதிப்புத் தொகை செண்ட் 1 க்கு குறைந்த பட்ச மதிப்புத் தொகை ரூ1 லட்சம் வீதம் கணக்கிட்டால் கூட 11.60 ஏக்கர் நிலங்களுக்கும் மொத்த மதிப்புத் தொகை ரூ. 11 கோடிக்கும் அதிகமான மதிப்பில் உள்ளது, எனவே இந்நிலத்தினை குத்தகைக்கு விடப்படாத நிலையில் துறை அனுமதியுடன். யாரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆ) மேற்கண்ட விபரப்படி வ.எண் 1 மற்றும் 2 ல் உள்ள மரங்களின் மீதான மேற்பலன் உரிமங்கள் குத்தகைக்கு விடப்படாத நிலையில் அம்மரங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற தேங்காய். நுங்கு. புளி போன்ற இனங்கள் எவ்விதத்தில் பயன் கொள்ளப்பட்டது. என்பதற்கு ஆவணப் பூர்வமாக விளக்கப்படவில்லை. இதில் இழப்பு ஏதும் கண்டறியப்படின் இவ்விழப்பு கணக்கிடப்பட்டு, இதற்கு காரணமான பொறுப்பான நபரிடமிருந்து அவ்விழப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

113) **<u>உபகோயில் - வடக்குவாசல் அருள்மிகு அனுமார் கோயில் - பூஜைப் பொருட்கள் மற்றும் பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் - பொது ஏலத்தில் விடப்படலாம் - குறைபாடுகள்</u>**

118

இத்திருக்கோயிலின் உபகோயிலான வடக்குவாசல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயிலில் தற்போது அர்ச்சனை சீட்டு விற்பனை மட்டும் அமுல் படுத்தப்பட்டு அதன் மூலம் தணிக்கையாண்டில் ரூ 21,990/- வருவாயாக பெறப்பட்டுள்ளது. கூடுதல் கட்டணச் சீட்டுக்கள் அமுல்படுத்தலாமென தனியே இத்தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் இத்திருக்கோயிலில் பூஜைப் பொருட்கள் மற்றும் பூக் கடை வைத்துக் கொள்ளும் உரிமம் பொது ஏலம் மூலம் விடப்படின் இத்திருக்கோயிலின் பக்தர்களிடையே நல்ல வரவேற்பு இருக்கும் என்பதுடன் திருக்கோயிலின் நலனுக்கு உகந்ததாகவும், வருவாய் ஆதாரத்தினை பெருக்கும் வகையிலும் அமையும் எனத் தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

ஆதலின் இலாகாவின் அனுமதி பெற்று, இந்த உரிமங்களை பொது ஏலத்தில் விடப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

161

118 அ)
113 ஆ)

<u>மண்டகப்படி கட்டணம் – அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயில் – பசலி 1420ல் மண்டகப்படி கட்டணம் – வரவுகள் இல்லை – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலின் உப கோயிலான அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயிலின் பசலி 1420ல் நடைபெற்ற உற்சவத்தின் போது மண்டகப் படி கட்டணமாக வரவுகள் ஏதும் இல்லை.

ஆனால் பசலி 1421ல் அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயில் உற்சவத்தின் போது மண்டகப் படி கட்டணமாக கீழ்கண்ட விவரப்படி ரூ4.000/– பெறப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

வ,எண்	பலவகை ரசீதுஎண்/நாள்	தொகை ரூ,பை
1	13301/ 18,01,2012	1,000.00
2	13302/ 20,01,2012	1,000.00
3	13303/ 20,01,2012	1,000.00
4	13304 /2001,2012	1,000.00
	மொத்தம்	4,000.00

ரூ 4000/-

பசலி 1421ல் மேற்கண்ட விவரப்படி ரூ 4,000/– மண்டகப்படி கட்டணமாகப் பெறப்பட்டுள்ள நிலையில், பசலி 1420ல் இவ்வின வரவுகள் ஏதும் பெறப்படாததற்கு சரியான காரணங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

இதிலிருந்து இவ்வின வரவுகள் பசலி 1420 லும் பெறப்பட்டிருக்கக்கூடும் என்றும், இவைகள் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப்படவில்லை என்றும், தணிக்கையில் ஐயுறப்படுகிறது. ஆதலின் குறைந்த பட்சம் இத்தொகை ரூ 4,000/– சென்ற பசலியிலும் பெறப்பட்டிருக்கக் கூடும். ஆனால் இத்தொகை திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் படவில்லை எனக் கருதி, குறைந்த பட்ச நிதி இழப்பாக இத்தொகை ரூ 4,000/ம் தணிக்கைத் தடையின் கீழ் வைக்கப்படுகிறது.

எனவே. இது குறித்து தக்க விசாரணைகள் மேற்கொண்டு இழப்பு கண்டறியப்படின், இழப்பு நிர்ணயம் செய்யப் பட்டு, இழப்பு பொறுப்பான நபர் / நபர்களால் ஈடு செய்யப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

114) <u>கட்டணச் சீட்டுக்கள் – உபகோயில்களில் புதிய கட்டணச் சீட்டுக்களின் விற்பனை அமுல் படுத்தப் படலாம் – ஒரு கருத்தாய்வு</u>

இத்திருக்கோயிலின் உபகோயில்களில் கீழ்க்கண்ட விவரப் படியான கட்டணச் சீட்டுக்களின் விற்பனை அமுல் படுத்தப் பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு:

வ.எண்	திருக்கோயில் விவரம்	அமுலில் உள்ள கட்டணச் சீட்டு	பெறப்பட்ட வருவாய்
1.	அருள்மிகு செல்லத்தம்மன் கோயில்	அர்ச்சனை உபய பரிவட்டம்	5082/- 700/-
2.	அருள்மிகு ஆஞ்சநேயர் கோயில், வடக்குவாசல்	அர்ச்சனை	21990/-

மேற்கண்ட விவரப்படி அமுல் படுத்தப் பட்டுள்ள கட்டணச் சீட்டுக்களுடன் இத்திருக்கோயில்களில் கீழ்க்கண்ட விவரப்படியான கட்டணச் சீட்டுக்களை அமுல்படுத்தப் படலாம் எனத் தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது. விவரம் பின்வருமாறு.

1) அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயிலில் அபிசேகக் கட்டணச் சீட்டு விற்பனையும்,

2) அருள்மிகு வடக்கு வாசல் ஆஞ்சநேயர் கோயிலில்

1) திருமஞ்சனம்

2) வடைமாலை

3) வெள்ளிக் கவசம் சாத்தப்படி – ஆகிய இனங்களுக்கு கட்டணச் சீட்டு விற்பனையும் அமுல் படுத்தப் படலாமெனவும்,

இதுகாறும் கட்டணச் சீட்டு விற்பனை அமுல் படுத்தப்படாத

3) அருள்மிகு காலபைரவர் திருக்கோயிலில்

1) அர்ச்சனை

2) நெய் தீப விற்பனை

3) மிளகு தீப விற்பனை (4) சந்தனகாப்பு – ஆகிய இனங்களுக்கு கட்டணச் சீட்டு விற்பனையும் அமுல் படுத்தப் படலாமெனவும்,

மேற்கண்ட விவரப்படியான கட்டணச் சீட்டுக்களை அமுல் படுத்தப் படின் திருக்கோயிலின் வருவாய் உயர்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதென்பதுடன், பக்தர்களிடையே அதிக வரவேற்பு இருக்கும் என்றும் தணிக்கையில் கருதப்படுகிறது.

ஆதலின் இலாகா அனுமதி பெற்று, மேற்கண்ட கட்டணச் சீட்டுக்களின் விற்பனை அமுல்படுத்தப் பட்டு, திருக்கோயிலின் வருவாய் ஆதாரத்தினை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

115) 120 **உபகோயில் - கட்டணச்சீட்டுக்கள் - படிவம் 23 - பேணப்படவில்லை - மற்றும் குறைபாடுகள் .**

இத்திருக்கோயிலின் உபகோயில்களின் கட்டணச்சீட்டு விற்பனை தொடர்பாக கீழ்கண்ட குறைபாடுகள் காணப்பட்டன.

1)இத்திருக்கோயிலின் உபகோயில்களில் கட்டணச்சீட்டு விற்பனை அமுல்படுத்தப் பட்டுள்ளன. கட்டணச் சீட்டு விற்பனைக்கு பிரதானமான படிவம் 23 இத்திருக்கோயில்களில் பேணப்படவில்லை.

2) கட்டணச்சீட்டு விற்பனை குறித்து மாதாந்திர விற்பனைப் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. கட்டணச் சீட்டு விற்பனை பட்டியல் தயாரிக்கப் பட்டு பிரதான திருக்கோயிலுக்கு அனுப்பப் படவில்லை. இதனால் உபகோயில்களில் கட்டணச் சீட்டு விற்பனை தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறதா என்பதை பிரதான திருக்கோயிலில் கண்காணிக்கும் வாய்ப்பு இல்லை.

3)உபகோயில்களிலிருந்து தேவைப்பட்டியல் ஏதும் சமர்ப் பிக்கப்படாமல் கட்டணச்சீட்டு, விற்பனைக்கு பெற்றுச் செல்லப்படுகிறது. இதனால் முன்னர் வழங்கப்பட்ட கட்டணச்சீட்டுகள் முழுமையாக விற்பனை செய்யப்பட்டு விட்டனவா என்றும், எவ்வளவு சீட்டுக்கள் இருப்பில் உள்ளன என்றும். அறியப்படாமலேயே விற்பனைக்கு கட்டணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இம்முறை தவிர்க்கப்பட்டு தேவைக்கேற்ப கட்டணச்சீட்டுக்கள் வழங்கப்படவேண்டும்.

4) உப கோயில்களில் தினந்தோறும் கட்டணச்சீட்டு விற்பனை குறித்தான பதிவேடு படிவம் 23. படிவம் 24, பேணப்படுவதில்லை. தணிக்கையின் போது தண்டலை வைத்து படிவம் 23 மட்டும் எழுதி தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட்டது. இது தவறான நடைமுறையாகும். நாள்தோறும் படிவம் 23. 24 எழுதப்பட்டு அவைகள் பிரதான திருக்கோயிலின் கண்காணிப்பாளர் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

5) உப கோயில்களில் விற்பனையாகும் கட்டணச்சீட்டுக்களின் அடிக்கட்டைகள் மாதந்தோறும்/ குறுகிய கால இடைவெளியில் பிரதான திருக்கோயிலில் ஒப்படைப்பதில்லை. அடிக்கட்டைகளை தாமதமின்றி பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கப்படுவது உறுதி செய்யப் படவேண்டும்.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

164

116) 121 **<u>அன்னதானத் திட்டம் – உபகோயிலில் வசூலிக்கப்படும் கட்டணம் – பிரதான திருக்கோயிலில் செலுத்தப்பட்ட பிறகு இரசீது வழங்கப்படுகிறது – உடனுக்குடன் இரசீது வழங்கப் படல் வேண்டும் – குறைபாடுகள்.</u>**

இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில் அரசாணையின் படியிலான அன்னதானத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. அன்னதானத்திட்டத்திற்காக பக்தர்களிடமிருந்து பெறப்படும் தொகைக்கு உடனடியாக இரசீது வழங்கப்படாமல் பிரதான திருக்கோயிலில் செலுத்திய பின்பு இரசீது வழங்கப்படுவதாக தணிக்கையின் போது அறியப்பட்டது.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பக்தர்கள் வழங்கும் தொகைக்கு உடனடியாக இரசீது தர இயலாமல் உள்ளது. இதனால் பல நிர்வாக குறைபாடுகள் ஏற்பட ஏதுவாகும்.

எனவே, அன்னதானத் திட்டத்திற்கு பக்தர்களால் வழங்கப்படும் தொகைக்கு உடனுக்குடன் சார்புள்ள திருக்கோயிலிலிருந்து இரசீதுகள் வழங்கப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

116) <u>அன்னதானத் திட்டம் – உபகோயிலில் வசூலிக்கப்படும் கட்டணம் – பிரதான திருக்கோயிலில் செலுத்தப்பட்ட பிறகு இரசீது வழங்கப்படுகிறது – உடனுக்குடன் இரசீது வழங்கப் படல் வேண்டும் – குறைபாடுகள்.</u>

121

இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில் அரசாணையின் படியிலான அன்னதானத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது. அன்னதானத்திட்டத்திற்காக பக்தர்களிடமிருந்து பெறப்படும் தொகைக்கு உடனடியாக இரசீது வழங்கப்படாமல் பிரதான திருக்கோயிலில் செலுத்திய பின்பு இரசீது வழங்கப்படுவதாக தணிக்கையின் போது அறியப்பட்டது.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பக்தர்கள் வழங்கும் தொகைக்கு உடனடியாக இரசீது தர இயலாமல் உள்ளது. இதனால் பல நிர்வாக குறைபாடுகள் ஏற்பட ஏதுவாகும்.

எனவே, அன்னதானத் திட்டத்திற்கு பக்தர்களால் வழங்கப்படும் தொகைக்கு உடனுக்குடன் சார்புள்ள திருக்கோயிலிலிருந்து இரசீதுகள் வழங்கப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

146

118) 123 **பரிவட்டங்கள் – உபய காணிக்கை பரிவட்டங்கள் – பட்டு பரிவட்டம் இருப்பு விவரப் பதிவேடு பேணப்படவில்லை – வரவு விற்பனை குறித்த பதிவேடு பேணுதல் – மற்றும் பிற குறைபாடுகள்.**

இத்திருக்கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்படும் புடவைகளின் விவரம் கணினியில் பதிவு செய்யப்பட்டு பார் கோடு இணைக்கப்பட்டு அம்மனுக்கு சாத்துபடிக்காக வழங்கப்படுகின்றன. அம்மனுக்கு சாத்துபடி செய்யப்பட்ட புடவைகள் பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப் படுகின்றன. தணிக்கையாண்டில் உபய காணிக்கையாக பெறப்பட்ட பரிவட்டங்களின் வரவு, விற்பனை மற்றும் விவரம் பின் வருமாறு:

உபய காணிக்கை பரிவட்ட விபரம்	எண்ணிக்கை
பசலி 1420ல் ஆரம்ப இருப்பு	1635
பசலி 1420 ல் பெறப்பட்ட வரவு	
1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் உள்துறை மூலம் வரவு	7307
2. சுற்றுக் கோயில் மூலம் வரவு	842
தணிக்கையாண்டில் பெறப்பட்ட வரவு	8149
மொத்தம்	9784
பசலி 1420செலவு விபரம்	
1. பரிவட்ட ஏலம் விற்பனை	3172
2. நிதி வசதியில்லாத ஆலயங்களுக்கு வழங்கியது	2300
செலவு கூடுதல்	5472
இறுதி இருப்பு (9784 – 5472)	4312
இறுதி இருப்புக்கான இன வாரி விவரம்	
நூல் சேலைகள் மற்றும் வேஷ்டிகள்	2314
பாலிஸ்டர் இனங்கள்	1089
பட்டு துண்டுகள் –6, பட்டு சேலைகள் – 826, பட்டு வேஷ்டிகள் – 77 ஆக மொத்தம்	909

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் அம்மனுக்கு சாத்துப்படி செய்ய அதிக எண்ணிக்கையில் புடவைகள் பெறப்பட்டுள்ளன. அவைகளில் பட்டுப் புடவைகளும் அடங்கும். தணிக்கையாண்டில் பட்டுத் துண்டுகள் – 18ம், பட்டு சேலைகள் –1830 ம், பட்டு வேஷ்டிகள் – 166 ம், ஆக மொத்தம் 2014 இனங்கள் வரவாக பெறப்பட்டுள்ளன. இவைகளில் ஏலத்தில் விடப் பட்ட இனங்கள், முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்ட இனங்கள் போக தணிக்கையாண்டின் முடிவில மேற்குறிப்பிடப் பட்டுள்ள விவரப்படி 909 பட்டு இனங்கள் இருப்பில் உள்ளதாக கணக்கீடு வாயிலாக அறியப்படுகிறது.

பட்டுப் பரிவட்டங்களுக்கான இருப்புப் பதிவேடு தனியே பேணப்படாத நிலையிலும், பட்டுப் புடவைகளுக்கான இருப்பினை தனியே பீரோவில் வைத்து பராமரிக்கப் படாத நிலையிலும், மேற்கண்ட இனங்களை தணிக்கையின் போது இருப்பு சரிபார்ப்பு செய்ய இயலவில்லை.

மேலும் பட்டுப் புடவைகள் சரியான முறையில் பராமரிக்கப் படவோ, பாதுகாப்பாக வைக்கப் படவோ இல்லை. இந்தப் புடவைகளும் பிற நூல் மற்றும் பாலிஸ்டர் இனங்களுடன் ஒட்டு மொத்தமாக வைக்கப் படுகின்றன.

பட்டுப் பரிவட்டங்களுக்கான இருப்புப் பதிவேடு பேணப்பட்டு, பட்டு இனங்கள் தர வாரியாக பிரிக்கப் பட்டு தகுந்த முறையில், பாதுகாக்கப் படவும், மிகவும் விலை உயர்ந்த இனங்கள் இருப்பின் அவ்வினங்களின் பராமரிப்பில் மேலும் கவனம் செலுத்தப் படவும், பட்டுப் பரிவட்டங்களின் இருப்பினை அவ்வப்போது உயர் அலுவலர்களால் இருப்பு சரிபார்ப்பு செய்யப் படவும், அவைகள் முறையாக பராமரிக்கப் படும் விவரம் உறுதி செய்யப் படவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>பிறகுறைபாடுகள்</u>

1. ஆணையரின் சுற்றறிக்கை எண். 14412/77 செல் நாள். 28.10.1977 ன்படி பரிவட்டத்தின் மதிப்பு விபரங்கள், ரசீதுகள் மற்றும் இருப்புப் பதிவேட்டில் பதியப்படவில்லை.

2. மேற்கண்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரைப்படி உபயமாக வரப்பெற்ற பரிவட்டங்கள் இரட்டைப்பூட்டு முறையில் வைத்து பாதுகாக்கப் படவில்லை.

3. செலவு விபரத்தில் பரிவட்ட ஏலம் விற்பனை 3172 இனங்களில் முன்பசலி இருப்பான பழைய இனங்களுக்கான பதிவேடுகளில். ஏல விற்பனை தொடர்பான இனங்களில் வரிசை எண்கள் மட்டுமே சுழிக்கப் பட்டுள்ளன. ஆனால் உரிய விற்பனை நாள் மற்றும் தொகை விபரம் குறிக்கப் படவில்லை. மேலும் பலவேறு நேர்வுகளில் விற்பனையான பரிவட்டங்கள் விபரம் அலுவலக பதிவேட்டில் சுழிக்கப் படாமல் உள்ளன. இதனால் இறுதி இருப்பு குறித்தான விவரங்களைத் தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

4. சன்னதிகளில் சாத்தப்படும் பரிவட்டங்கள் அந்தந்த நாட்களில் அர்ச்சகர்களிடமிருந்து பெறப்பட்டு வரவிற்கேற்ப ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப் பட்டு உரிய பதிவேடுகளில் சான்றிடப் படவில்லை. மேலும் சாத்துப்படி செய்து வழங்கப்பட்ட புடவைகள் காலதாமதமாகவே பரிவட்டங்களுக்கான எழுத்தரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

5. தணிக்கையாண்டில் உபகோயில்களில் உபய காணிக்கையாக பெறப்பட்ட பரிவட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கவில்லை. இதற்கான கண்காணிப்புப் பதிவேடு தனியே பேணப்படாத நிலையில், எந்தெந்த திருக்கோயில்களிலிருந்து, எந்த நாளில், எத்தனை பரிவட்டங்கள், பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கப் பட்டன, ஒப்படைக்கப் படவேண்டிய பரிவட்டங்கள் எத்தனை என்கிற விவரங்களை தயார் நிலையில் அறிய இயலவில்லை.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

மேலும் பட்டுப் புடவைகள் சரியான முறையில் பராமரிக்கப் படவோ, பாதுகாப்பாக வைக்கப் படவோ இல்லை. இந்தப் புடவைகளும் பிற நூல் மற்றும் பாலிஸ்டர் இனங்களுடன் ஒட்டு மொத்தமாக வைக்கப் படுகின்றன.

பட்டுப் பரிவட்டங்களுக்கான இருப்புப் பதிவேடு பேணப்பட்டு, பட்டு இனங்கள் தர வாரியாக பிரிக்கப் பட்டு தகுந்த முறையில், பாதுகாக்கப் படவும், மிகவும் விலை உயர்ந்த இனங்கள் இருப்பின் அவ்வினங்களின் பராமரிப்பில் மேலும் கவனம் செலுத்தப் படவும், பட்டுப் பரிவட்டங்களின் இருப்பினை அவ்வப்போது உயர் அலுவலர்களால் இருப்பு சரிபார்ப்பு செய்யப் படவும், அவைகள் முறையாக பராமரிக்கப் படும் விவரம் உறுதி செய்யப் படவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>பிறகுறைபாடுகள்</u>

1. ஆணையரின் சுற்றறிக்கை எண். 14412/77 செல் நாள். 28.10.1977 ன்படி பரிவட்டத்தின் மதிப்பு விபரங்கள், ரசீதுகள் மற்றும் இருப்புப் பதிவேட்டில் பதியப்படவில்லை.

2. மேற்கண்ட சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரைப்படி உபயமாக வரப்பெற்ற பரிவட்டங்கள் இரட்டைப்பூட்டு முறையில் வைத்து பாதுகாக்கப் படவில்லை.

3. செலவு விபரத்தில் பரிவட்ட ஏலம் விற்பனை 3172 இனங்களில் முன்பசலி இருப்பான பழைய இனங்களுக்கான பதிவேடுகளில். ஏல விற்பனை தொடர்பான இனங்களில் வரிசை எண்கள் மட்டுமே சுழிக்கப் பட்டுள்ளன. ஆனால் உரிய விற்பனை நாள் மற்றும் தொகை விபரம் குறிக்கப் படவில்லை. மேலும் பலவேறு நேர்வுகளில் விற்பனையான பரிவட்டங்கள் விபரம் அலுவலக பதிவேட்டில் சுழிக்கப் படாமல் உள்ளன. இதனால் இறுதி இருப்பு குறித்தான விவரங்களைத் தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

4. சன்னதிகளில் சாத்தப்படும் பரிவட்டங்கள் அந்தந்த நாட்களில் அர்ச்சகர்களிடமிருந்து பெறப்பட்டு வரவிற்கேற்ப ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப் பட்டு உரிய பதிவேடுகளில் சான்றிடப் படவில்லை. மேலும் சாத்துப்படி செய்து வழங்கப்பட்ட புடவைகள் காலதாமதமாகவே பரிவட்டங்களுக்கான எழுத்தரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

5. தணிக்கையாண்டில் உபகோயில்களில் உபய காணிக்கையாக பெறப்பட்ட பரிவட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கவில்லை. இதற்கான கண்காணிப்புப் பதிவேடு தனியே பேணப்படாத நிலையில், எந்தெந்த திருக்கோயில்களிலிருந்து, எந்த நாளில், எத்தனை பரிவட்டங்கள், பிரதான திருக்கோயிலில் ஒப்படைக்கப் பட்டன, ஒப்படைக்கப் படவேண்டிய பரிவட்டங்கள் எத்தனை என்கிற விவரங்களை தயார் நிலையில் அறிய இயலவில்லை.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

119) **<u>குங்குமம் விற்பனையில் தொய்வு – விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும் – குறைபாடுகள்.</u>**

அ)இத்திருக்கோவிலில் குங்குமம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு 40 கிராம் அளவுள்ள பாக்கெட்டுகளாக அடைக்கப்பட்டு 1 பாக்கெட் ரூ 5/– வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குங்கும விற்பனை பசலி தோறும் குறைந்துள்ளது. விவரம் பின்வருமாறு:

குங்குமம் விற்பனை தொகை பசலி வாரியாக (ரூபாயில்)											
1409	1410	1411	1412	1413	1414	1415	1416	1417	1418	1419	1420
594730/-	435764/-	367240/-	288000/-	266405/-	208435/-	147950/-	147950/-	139300/-	256320/-	278360/-	142755/-

குங்குமம் விற்பனைத் தொடங்கிய பசலி 1409–ல் குங்கும விற்பனை மூலம் பெறப்பட்ட வருவாய் ரூ 594730/– ஆகும். பின்னர் குங்கும விற்பனையில் தொய்வு ஏற்பட்டுள்ளதை மேற்கண்ட ஒப்பீடு வாயிலாக அறியப் படுகிறது.

இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள பெரும்பாலான கடைகளில் மதுரையில் தயாரிக்கப்பட்ட தாழம்பூ குங்குமம் என்ற பெயரில் அமோகமாக விற்பனை செய்யப்பட்டும், வெளியூர்களுக்கும் விற்பனைக்காக கடைக்காரர்களால் அனுப்பப்பட்டும்,வருகிறது. தனியார் கடைகாரர்கள் பயனடையும் பொருட்டு, திருக்கோவிலின் குங்குமம் விற்பனை ஊக்குவிக்கப்படாமல் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டிருக்கலாம் என தணிக்கையில் ஐயம் எழுகிறது.

தயாரிப்புக்கு செலவாகும் தொகையை போன்று சுமார் 1 × மடங்கு (150 %) இலாபம் தரக்கூடிய இக்குங்குமம் விற்பனை, பசலி தோறும் குறைந்து வருவது யாராலும் கண்காணிக்கப்படவில்லை. குங்குமம் விற்பனையை அதிகரிக்கும் வகையில், "திருக்கோவிலில் குங்குமம் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது" என்ற விபரத்தை பக்தர்கள் அறியும் வகையில் திருக்கோவில் வளாகத்தில் ஆங்காங்கே விளம்பர போர்டுகள் வைக்கப் படவும், திருக்கோவில் சார்பில் குங்குமம் விற்பனை செய்யும் இடங்கள் கண்காணிக்கப்படவும் வேண்டும்.

ஆ) குங்குமம் விற்பனை தொடர்பான விற்பனை எழுத்தரால் பேணப்பட்டு குங்குமம் வரவு செலவு மற்றும் இருப்பு விபரப் பதிவேடு முறையாக பேணப்படவில்லை. மேலும் உள்துறை கண்காணிப்பாளரால் குங்குமம் விற்பனை தொடர்பாக அவ்வவ்போது ஆய்வு செய்து விற்பனை குறைந்து வருவதை சுட்டிக்காட்டப்படவில்லை.

இ) விற்பனை எழுத்தரிடம், குங்குமம் இருப்பு சரியாக உள்ளதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்து குறைபாடுகள் சுட்டிக்காட்டப் படவில்லை. இணை ஆணையர் / செயல் அலுவலருக்கும் இது தொடர்பாக எவ்வித அறிக்கையும் கண்காணிப்பாளரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதிக இலாபம் தரக்கூடிய குங்குமம் விற்பனையை பெருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தணிக்கையாண்டில் டெண்டர் படிவம் விற்பனை செய்யப் பட்டபோது வசூலிக்கப் பட்ட விற்பனை வரி ரூ 678/- ம், பல்வேறு பணிகளின் போது பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி ரூ 11,512/- ம் சார்புள்ள துறைக்கு செலுத்தப் படாமல் உள்ளன. விவரம் பின்வருமாறு.

வ. எண்	இரசீது எண்	விவரம்	தொகை ரூ பை
விற்பனை வரி			
1		12/10 முதல் 5/11 முடிய விற்பனை செய்யப் பட்ட டெண்டர் படிவங்களுக்கான விற்பனை வரி	678/-
வருமான வரி			
2	96278/06.12.10	29.10.10 பழைய இரும்பு ஏலம்	8004/-
3	96824/22.12.10	எழுகடல் வணிக வளாகம் - வாகன வசூல் உரிமம்	2530/-
4	97285/07.01.11	பழைய மரச்சாமான்கள் ஏலம்	805/-
5	98160/04.02.11	பழைய மரச்சாமான்கள் ஏலம	173/-
		கூடுதல்	11512/-

மேற்கண்ட விவரப்படி பிடித்தம் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள விற்பனை வரி ரூ 678/- ம், வருமான வரி ரூ 11,512/- ம், சார்புள்ள துறைக்கு செலுத்தப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>பிறகுறைபாடுகள்</u>

1) விற்பனை வரி தொடர்பாக பொறியியல் பிரிவில் பேணப் படவேண்டிய விற்பனை வரி பிடித்தம் விவரப் பதிவேடு பேணப்படவில்லை.

2) திருக்கோயிலில் பொறியியல் பிரிவிலிருந்து மேற்கொள்ளப் படும் வேலைகளுக்கு (Works) பட்டியல் படி பணம் பட்டுவாடா செய்யப் படும் போது பிடித்தம் செய்யப் படும் வருமான வரிக்கு, பொறியியல் பிரிவில் உரிய பதிவேடு பேணப்பட்டு, ஒவ்வொரு பணிக்கும் எவ்வளவு தொகை வருமான வரியாக பிடித்தம் செய்யப்பட்டது என்றும், அவை சார்புள்ள துறைக்கு செலுத்தப் பட்டுள்ளதா என்றும் கண்காணிக்கப் படவில்லை.

3) பிற பணிகளுக்கு பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொடர்பாக ஒருங்கிணைந்த வருமான வரி பிடித்தம் விவரப்பதிவேடு பேணப் பட்டு, பிடித்தம் செய்யப் பட்ட தொகை முழுவதுமாக சார்புள்ள துறைக்கு செலுத்தப் பட்டுள்ளதா எனக் கண்காணிக்கப் படவில்லை.

வருமானவரி பிடித்தம் செலுத்தும் பதிவேடு (செலவு) முறையாக பேணப்பட்டுள்ள நிலையில், வருமானவரி பிடித்தம் மற்றும் விற்பனை வரி பிடித்தம் (வரவு) குறித்தான பதிவேடுகளும் முறையாக பேணப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

பெறப்பட்ட பணவிடை அஞ்சல் முழுவதும் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டதன் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

அனுப்பப் பட்ட பணவிடை அஞ்சல்கள் எந்த நோக்கத்திற்காக, யாரால், எவ்வளவு அனுப்பப் பட்டுள்ளது என்பதை அறியும் வண்ணம் பணவிடை அஞ்சல்களுடன் பெறப்படும் செய்திக் குறிப்பு பதிவேட்டில் பல்வேறு நேர்வுகளில் ஒட்டப் படவில்லை. (உ.ம் 11.11.10 அன்று பெறப்பட்ட பணவிடை அஞ்சல் தொகை ரூ 1,000/-)

<u>பிற குறைபாடுகள்:</u>

1) பணவிடை அஞ்சல் பதிவேட்டில் தொடர் எண்கள் இடப்பட வில்லை.

2) பணவிடை அஞ்சல் பதிவேட்டின் படி பெறப்பட்ட மொத்த கூடுதல் வரவு கணக்கிடப் படாத நிலையில் ரொக்கப் பேரேட்டின் படி வரவாக்கப் பட்டுள்ள தொகையுடன் சரிபாரத்திட இயலவில்லை.

3) பெறப்பட்ட பணவிடை அஞ்சல் வரவுகள் அனைத்தும் ரொக்கப் பேரேட்டில் பணவிடை அஞ்சல் தலைப்பின் கீழ் வரவாக்கப் படாமல் பிற தலைப்புகளின் கீழும் வரவாக்கப் பட்டுள்ளன. அனைத்து பணவிடை அஞ்சல் வரவுகளும் ரொக்கப் பேரேட்டில் பணவிடை அஞ்சல் தலைப்பின் கீழ் கொணரப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகளைக் களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

170

122 127 <u>உபகோவில்கள்–வருமானம் வரப்பெறவில்லை வருமானம் கிடைத்திடும் வகையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.</u>

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலுக்கு மொத்தம் 20 உபகோவில்கள் இருப்பதாக இத்திருக்கோவிலின் சொத்துப் பதிவேட்டின் மூலம் அறியப்பட்டது. இந்த உபகோயில்களுக்கான அன்றாட செலவினங்கள். மின்கட்டணம் மற்றும் பணியாளர்கள் சம்பளம் ஆகியவை இத்திருக்கோவிலில் இருந்து செலுத்தப்படுகின்றன. மேற்படி உபகோவில் களில் கீழ்க்கண்ட திருக்கோவில்களில் இருந்து வருமானம் எதுவும் பெறப்படவில்லை.

<u>வருமானம் வராத திருக்கோவில்கள் விபரம்</u>

1. சித்தி விநாயகர் திருக்கோயில். நாகமலை புதுக்கோட்டை.
2. கடம்பவனேஸ்வரர் திருக்கோவில். சுடுதண்ணீர் வாய்க்கால் தெரு.
3. பரிபூர்ண விநாயகர் திருக்கோவில். சுடுதண்ணீர் வாய்க்கால் தெரு.
4. மகாகணபதி ஆலயம். சுண்ணாம்பூர். மேலூர்.
5. பிடாரியம்மன் திருக்கோவில். திருவாதவூர்.
6. காலபைரவர் திருக்கோவில். தெப்பக்குளம். மற்றும் கீழ ஆவணிமூலவீதி.
7. விநாயகர் திருக்கோவில். எழுகடல் தெரு.

வருமானம் வரப்பெறாத இத்திருக்கோவில்களுக்கு சொத்துக்கள் ஏதும் உள்ளதா என்பதை கண்டறிந்து அதன் மூலம் வருமானம் கிடைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், மேலும் இத்திருக்கோவில்களில் உண்டியல் இல்லை எனில் உரிய அனுமதியுடன் உண்டியல் நிறுவவும் கட்டணச் சீட்டுக்கள் நடைமுறைப்படுத்திட முடியும் எனில் உரிய அனுமதி பெற்று கட்டணச் சீட்டுகள் விற்பனையை நடைமுறைப்படுத்திடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்</u>

1) மேலும் வருமானம் வரப்பெறுகின்ற உபகோவில்களில். அங்கு நடத்தப்படும் சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாவின் போது வசூலிக்கப்படும் அனைத்து தொகைகளும் விடுதலின்றி திருக்கோவில் கணக்கில் அவ்வப்போது வரவாக்கப் படுகின்றனவா என்பதையும் கண்காணித்திட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2) அருள்மிகு காலபைரவர் திருக்கோவில், கீழ ஆவணி மூலவீதி மற்றும் மாரியம்மன் திருக்கோவில் அருகிலுள்ளது ஆகியவற்றில் தேய்பிறை அஷ்டமி, இராகுகாலம் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அபிசேகம் மற்றும் பரிகார பூஜைகள் அதிகளவில் நடைபெறுகின்றன. ஆனால் அவற்றுக்கு உரிய கட்டணங்கள் எதுவும் வசூலிக்கப்படாமல் உள்ளன. அந்த நேரங்களில் பக்தர்கள் வழங்கும் காணிக்கை மற்றும் காணிக்கைப் பொருள்கள் கோவில் கணக்கில் கொண்டு வரப்படுவதில்லை. இவ்விரு திருக்கோவில்களிலும் அபிசேகம் மற்றும் சிறப்புப் பூஜைகளுக்கு இலாகாவின் அனுமதி பெறப்பட்டு உரிய கட்டணச் சீட்டுகள் அமுல்படுத்திடப்பட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

1123) 128 **கட்டணம் - ஆலய வழிகாட்டி உரிமம் புதுப்பித்தலுக்கான கட்டணம் - ஆணையர் அனுமதி பெறப்படவில்லை - குறைபாடுகள்**

தணிக்கையாண்டில் ஆலய வழிகாட்டி உரிமக் கட்டணமாக ரூ 43,000/- பெறப்பட்டுள்ளது. பசலி 1420 க்கு ஆலய வழிகாட்டி உரிம புதுப்பித்தல் கட்டணமாக ரூ 25,000/- ம், பசலி 1421 க்கு ஆலய வழிகாட்டி உரிம புதுப்பிக்க கட்டணமாக ரூ 18,000/- ம், ஆக ரூ 43,000/- பெறப்பட்டு இதற்கென பேணப்பட்டு வரும் பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஆனால் இவ்வாறு ஆலய வழிகாட்டி உரிமக் கட்டணம் வசூலிக்கப் பட்டதற்கு ஆணையரிடமிருந்து உத்திரவுகள் ஏதும் பெறப்படவில்லை. ஆதலின் உரிய விவரங்களைத் தெரிவித்து ஆணையரின் அனுமதி பெறப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

124) 129 **திருக்கல்யாண மண்டபம் - வாடகை நிர்ணயம் - அனுமதி பெறப்படவில்லை- குறைபாடுகள்**

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் பழைய திருமண மண்டபத்தை வாடகைக்கு விடப்பட்டு கீழ்க்கண்ட விவரப்படி ரூ 10,000/- வருவாயாக பெறப்பட்டுள்ளது. விவரம் பின் வருமாறு

வ.எண்	பலவகைஇரசீது எண் / நாள்	விவரம்	தொகை
1	97620/19.1.11	திருக்கோயில் பக்தர்கள் பேரவை	5,000/-
2	1632/26.5.11	பரத நாட்டிய அரங்கேற்றம்	5,000/-
		கூடுதல்	10,000/-

மேற்கண்ட விவரப்படி திருமண மண்டபத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யப் பட்டு, வசூலிக்கப் பட்டதற்கு இலாகாவின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை.

ஆதலின் உரிய விவரங்களைத் தெரிவித்து ஆணையரின் அனுமதி பெறப் பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

125)
130

காசாக்கப் படாத காசோலைகள் – திருக்கோயில் கணக்கில் வரவுவாக்கப் பட்டுள்ளன – உரிய விவரங்கள் தாக்கல் செய்யப் படவில்லை – குறைபாடுகள்.

தணிக்கையாண்டில் கீழ்க்கண்ட விவரப்படி காசாக்கப் படாத காசோலைகள் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டுள்ளன. விவரங்கள் பின்வருமாறு:

வ.எண்.	பலவகை இரசீது எண்/நாள்	காசோலை எண் மற்றும் நாள்	தொகை ரூ பை
1	1250/10.8.10	260054/13.03.09	3,694/-
2	1251/10.8.10	261080/19.05.09	1,200/-
3	1252/10.8.10	261083/19.05.09	495/-
4	1253/10.8.10	262136/16.06.09	3,438/-
5	1366/10.8.10	001444/10.02.10	1,45,019/-
6	1225/10.8.10	001434/18.01.10	1,600/-
7	1711/30.12.10	75700/5.04.10	2,500/-
8	3596/30.10.10	262186/27.06.09	10,000/-
		கூடுதல்	1,67,946/-

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் வ.எண் 7 ல் கண்டுள்ள காசோலை உரிய நபர் பெற்றுச் செல்லாததால் வரவாக்கப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. காசோலையும் தாக்கல் செய்யப் பட்டு தணிக்கையின் போது விவரங்கள் சரிபார்க்கப் பட்டன.

வ.எண். 5 ல் குறிப்பிடப்பட்ட காசோலை இத்திருக்கோயிலின் முன்னாள் கண்காணிப்பாளர் திரு பச்சையப்பன் என்பவரின் விடுப்பூதியம் மற்றும் ஓய்வூதிய சந்தா தொடர்பானது என்பதையும்,

வ.எண். 6 ல் குறிப்பிடப்பட்ட காசோலை இத்திருக்கோயிலின் கள்வர் எச்சரிக்கை மணி அமைக்கும் பணி தொடர்பானது என்பதையும்,

வ.எண். 8 ல் குறிப்பிடப்பட்ட காசோலை இத்திருக்கோயிலின் பூப்பல்லக்கு கட்டளைதாரர் தொடர்பானது என்பதையும்,

ரொக்கப் பேரேட்டில் உள்ள பதிவுகள் வாயிலாக அறியப் படுகிறது.

இந்த காசோலைகள் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு அவர்களால் காசாக்கப் படாத நிலையில் திருக்கோயில் கணக்கில் வரவாக்கப் பட்டதா அல்லது இந்த காசோலைகள் உரிய நபர்களுக்கு வழங்கப் படவில்லையா என்கிற விவரமும் காசோலைகளை உரிய நபர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் மற்றும் காசோலைகளை இருப்பில் வைக்கப்பட்டிருப்பின் இருப்பிலுள்ள காசோலைகளையும் தணிக்கைக்கு சரிபார்த்தலுக்கு உட்படுத்தப் படவில்லை.

மேலும் வரவாக்கப் பட்ட காசோலைகளுக்கு புதியதாக காசோலைகள் வழங்கப்பட்டிருப்பின் அதன் விவரமும், இப்பொருள் குறித்து உரிய பதிவேடுகள் பேணப்பட்டு கண்காணிப்பு செய்யப் பட்ட விவரமோ தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

ஆதலின் இக்குறைபாடுகளைக் களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

(13) 126) **திருமண மண்டப கட்டணத்திற்கு சேவைவரி வசூலித்தது – உரிய துறைக் கணக்கில் செலுத்தப்படவில்லை – குறைபாடுகள்**

தெப்பக்குளம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் உள்ள திருமண மண்டபத்தில் சுபநிகழ்ச்சிகள் நடத்த 1 நாள் வாடகையாக ரூ.1000/- ம் அதற்கு சேவை வரியாக ரூ.50/- ம் வசூலிக்கப்படுகிறது. தணிக்கையாண்டில் சேவை வரியாக ரூ 400/- வசூலிக்கப்பட்டு வைப்புத் தொகையில் இருப்பில் உள்ளது.

இந்த சேவை வரியான மத்திய அரசின் கலால் மற்றும் சுங்கவரித்துறைக்கு (custom & excise department) செலுத்தப்பட வேண்டும். அதுவும் சேவைவரி வசூலிக்கப்பட்ட மறு மாமத்திலேயே செலுத்தப்பட வேண்டும். ஆனால் இத்திருக்கோவிலில் இச்சேவைவரி வசூலிக்க ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நாளது தேதி வரை வசூலான தொகை இத்துறை கணக்கில் செலுத்தப்படாமல் உள்ளது.

உடன் மேற்படி துறையை தொடர்பு கொண்டு வசூலிக்கப்பட்ட தொகையை உரிய தலைப்பில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

127) 132 ***திருப்பணிக் கணக்குகள் – தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படல் வேண்டும் – குறைபாடுகள்***

இத்திருக்கோயிலில் 03.11.06 ல் ஒரு திருப்பணி கணக்கு துவக்கப் பட்டு பேணப் பட்டு வருகின்றன. இத்திருப்பணி கணக்கில் 30.06.2011 வரை கீழ்க்கண்ட விவரப்படி வரவு செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு.
(கோப்பு எண் 1164/09 அ3)

வ.எண்.	காலம்	வரவுகள் ரூ பை	செலவுகள் ரூ பை
1	03.11.06முதல் 30.06.09 முடிய	5,37,65,311.62	4,74,68,605.00
2	01.07.09 முதல் 30.06.010முடிய	2,91,28,968.00	3,28,40,660.00
3	01.07.10 முதல் 30.06.11 முடிய	1,92,85,102.30	2,04,18,502.00
	30.06.2011ல் இறுதி இருப்பு ரொக்கம்		0.00
		வங்கி	14,51,614.92

இந்த திருப்பணிக் கணக்கினை விரைவில் தணிக்கைக்கு உட்படுத்தப் பட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

175

128) 133

<u>அயல்பணியாளர்கள் – விடுப்பு கால சம்பள பங்கு மற்றும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை – செலுத்தியது மற்றும் குறைபாடுகள்</u>

அ)தணிக்கையாண்டில் இத்திருக்கோயில் நிதியிலிருந்து கீழ்க்கண்ட விவரப்படி அயல்பணியாளர்களுக்கான விடுப்புகால சம்பள பங்குத் தொகை செலுத்தப் பட்டுள்ளது.

வஎண்	செசீஎண் நாள்	பெயர் விவரம்	காலம்	தொகை
1	914/18.11.10	திரு க.இராஜ மாணிக்கம்	20.8.09 முதல் 31.7.10 முடிய	76,271/-
2	915/18.11.10	செஅ நிலை 1		33,934/-
		கூடுதல்		1,10,205/-

<u>குறைபாடுகள்</u>

1) அயல் பணியில் பணியில் இருந்த அலுவலர்கள் அனைவருக்கும் விடுப்பு கால சம்பள பங்கு மற்றும் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை விடுதலின்றி செலுத்தப் பட்டதா என்பதை கண்டறிய உரிய பதிவேடுகள் பேணப் படவில்லை.

<u>ஆ)அயல் பணியாளர்களுக்கு விடுப்பு சம்பளம் வழங்கியது – தாய் துறையிலிருந்து திரும்பப் பெறப்படல் வேண்டும் – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலில் பணியாற்றும் அயல்பணி ஆய்வர்களுக்கு வழங்கப்படும் விடுப்பு சம்பளம் தொடர்பாக கண்காணிப்பு பதிவேடு ஒன்று பேணப்படாததுடன் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்பட்ட விடுப்பு சம்பளம் கணக்கிடப்பட்டு தாய் துறையிலிருந்து திரும்ப பெறப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

விரைவில் இது நாள் வரை அயல்பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட விடுப்பு சம்பளம் கணக்கிடப்பட்டு தாய் துறையிலிருந்து திரும்பப் பெறப்பட ஆக்க பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் கண்காணிப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டு விபரங்கள் பதிவு செய்து சான்றளிக்கப்படவும் வேண்டும்.

இக்குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

176

129) **<u>பணிப்பிரிவு – பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்ட திருக்கோயில் பணியாளர்கள் – பணிநீக்க காலம் வரன்முறை செய்யப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப் படவில்லை – குறைபாடுகள்.</u>**

134

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலின் கீழ்க்கண்ட பணியாளர்கள் பல்வேறு காரணங்களுக்காக பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். விவரம் பின்வருமாறு.

வ. எண்	பணியாளர் பெயர் மற்றும் பதவி	பணி நீக்கம் செய்யப்பட்ட நாள்	பணி நீக்கம் விலக்கிக் கொள்ளப் பட்ட நாள்	குறிப்புரை
1	திரு.அழகர்சாமி. வாட்ச்மேன்	02.04.2008	24.05.2011	இறுதி உத்திரவு பெறப்பட வில்லை
2	ஐயம்பெருமாள் உதவியாளர்	23.03.2010	---	வழக்கு நடைபெற்று வருகிறது.
3	அழகர் ராஜா பதிவறை எழுத்தர்	18.01.10	12.09.10	பணிப்பதி – வேடு தாக்கல் செய்யப்பட வில்லை.
4	நாகலெட்சுமி தூர்வை	12.01.2011	22.06.2011	பணி நீக்க காலம் வரன்முறை செய்யப் பட வில்லை
5	கணேசன் தூர்வை	25.10.2010	06.07.2011	பணிநீக்க காலம் வரன்முறை செய்யப்பட வில்லை

வ.எண் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் குறித்து ஆணையாளரிடமிருந்து பெறப்படவுள்ள உத்திரவுகளுக்கிணங்க இறுதி உத்திரவுகள் பிறப்பிக்கப் படல் வேண்டும்.

வ.எண் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் குறித்து அரசு வழக்குரைஞரிடம் சட்ட ஆலோசனை பெற்று ஆணையாளரிடமிருந்து தக்க உத்திரவுகள் பெறப்பட்டு அதற்கேற்ப செயல் படல் வேண்டும்.

வ.எண் 3 மற்றும் 4 ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் பணி நீக்க காலம் வரன் முறை செய்யப்பட்டு உத்திரவுகள் பிறப்பிக்கப்படல் வேண்டும்.

இது குறித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

177

130 அ) 135

பணிப்பிரிவு - திருக்கோயில் பணியாளர்களுக்கான சம்பளப் பட்டியல் தயாரித்தது - குறைபாடுகள்

தணிக்கையாண்டிற்கு தாக்கல் செய்யப்பட்ட பணியாளர்களின் சம்பளப்பட்டியலை பரிசீலனை செய்தபோது கீழ்க்கண்ட குறைபாடுகள் தணிக்கையின் போது காணப்பட்டன. விவரம் பின்வருமாறு.

1. சம்பளப்பட்டியலில் பெரும்பாலான பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டமைக்கு சான்றாக ஒப்புதல் பெறப்படவில்லை.

2. ஒவ்வொரு பதவியிலும் உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை விவரம், அதற்கான காலமுறை ஊதிய விவரம் ஆகியன சம்பள பட்டியலில் இடம் பெறவில்லை.

3. சம்பளம் பெறப்பட்டதற்கு ஆதாரமாக சில பணியாளர்கள் சம்பளப் பட்டியலில் ஆங்கிலத்தில் கையொப்பம் இட்டுள்ளனர். தமிழில் கையொப்பமிட தக்க அறிவுரை வழங்கப்படவேண்டும்.

4. அகவிலைப்படி நிலுவை, விடுப்பு ஊதிய நிலுவை மற்றும் இதர நிலுவைகள் வழங்கிய விவரங்களை சார்புடைய மாத சம்பள பட்டியலில் பதிவு செய்யப்பட்டு உரிய அலுவலரின் ஒப்புதல் பெறப்படவில்லை.

5) பணியாளர்கள் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக தணிக்கையாண்டில் ரூ 56,030/- பிடித்தம் செய்யப்பட்டு வங்கிக்கு அனுப்பப் பட்டுள்ளது. இதற்கு முறையான ஒப்புதல் பெறப்படல் வேண்டும். உரிய பதிவேடு பேணப்பட்டு கண்காணிக்கப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

130 (இ)

135 (ஆ)

திருக்கோயில் பணியாளர்கள் – இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளுக்கு முன் தேதியிட்டு துறைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கான முன் ஊதிய உயர்வு வழங்கி நிலுவைச் சம்பளம் வழங்கியது– ஆணையர் பின்னேற்பாணை பெறப்படல் வேண்டும் – குறைபாடுகள்.

இத்திருக்கோயிலின் பதிவறை எழுத்தர் பதவியில் இருந்த ~~கீழ்க்கண்ட~~ ஒன்பது பணியாளர்கள், தங்களுக்கு பணியில் இளையவர்களாக இருந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு பல்வேறு நேர்வுகளில் திருக்கோயிலில் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு அளித்ததைச் சுட்டிக்காட்டி அவரவர்களுக்கு பணியில் இளையவர்களுக்கு பதவி உயர்வு அளித்த நாளிலிருந்து தாங்களுக்கும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப் படவேண்டுமென சென்னை, உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் 1497/05, 1561/05 மற்றும் 968/06 ன்படி வழக்கு தொடுத்து 22.1.09 ல் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஆணையர் மூ.மு. 2268/08 இசட்2 நாள் 15.2.10 உத்திரவில் மேற்கண்ட பணியாளர்களுக்கு அவரவர்களுக்கு பணியில் இளையவர்களுக்கு இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப் பட்ட நாளிலிருந்து, இந்த ஒன்பது பணியாளர்களையும் இளநிலை உதவியாளர்களாக கருதி உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆணையர் உத்திரவின் படி இணை ஆணையர்/செயல்அலுவலர் ந.க. 707/99 ஆ1 நாள் 19.2.10 – உத்திரவில் மேற்கண்ட பணியாளர்களுக்கு ஆணையர் உத்திரவில் குறிக்கப்பட்ட நாளிலிருந்தே இளநிலை உதவியாளர்களாக கருதி உத்திரவிடப்பட்டுள்ளது. ஆணையர் உத்திரவில் பணப்பயன் குறித்தான குறிப்புகள் ஏதும் இடம் பெறவில்லை.

பணியாளர்கள் எந்த தேதியில் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்து கொண்டார்கள் என்கிற விவரம் கோப்பினில் இல்லை. இருப்பினும் ஆணையர் உத்திரவின் அடிப்படையில் திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரால் 19.2.10 ல் வழங்கப் பட்ட உத்திரவிற்கு பின்பே 19.2.10, அதன் பின்னர் தான் இப்பணியாளர்கள் அனைவரும் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்து பணியாற்றியிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

இருப்பினும் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாளுக்கும் முன் தேதியிட்டு துறைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கான முன் ஊதிய உயர்வு வழங்கி நிலுவைச் சம்பளம் கணக்கீடு செய்து செலவுச் சீட்டு எண் 411/30.8.10 ன்படி ரூ 1,45,847/- ரொக்கச் செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு அறங்காவலர் குழுவின் ஒப்புதல் ஏதும் பெறப்படவில்லை.

ஆதலால் அவர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாளிலிருந்து தான், அதாவது 19.2.10 அல்லது அதற்குப் பின்பே துறைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கான முன் ஊதிய உயர்வு வழங்கி நிலுவைச் சம்பளம் ரொக்கமாக பெற்று வழங்கப் பட வேண்டும்.

இந்நிலையில் பணியாளர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாளுக்கு முன் தேதியிட்டு துறைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கான முன் ஊதிய உயர்வு வழங்கி நிலுவைச் சம்பளம் வழங்கப் பட்டுள்ள செயல் அடிப்படை விதிகளுக்கு முரணானதாகும்.

19.2.10 அன்று இப் பணியாளர்கள் அனைவரும் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்ததாகக் கருதி, துறைத் தேர்வு மற்றும் மற்றும் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றதற்கு முன் தேதியிட்டு வழங்கப்பட்ட நிலுவை சம்பளத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட நிலுவைச் சம்பளத்திற்கு ஆணையரின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

180

131)
136

<u>பயணப்படி – முகாம் பயணப் படி வழங்கியது – குறைபாடுகள்</u>

இத்தணிக்கையாண்டில் பணியாளர்களின் பயணபட்டியல் வகைக்காக கீழ்க் கண்ட விபரப்படி செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வ.எண்	பசலி	பணியாளர் பயணப்படி செலவுத் தொகை ரூ பை	அயல் பணியாளர் பயணப்படி செலவுத் தொகை ரூ பை
1	1420	48385-00	18127-00

<u>பின் கண்ட விபரப்படியான குறைபாடுகள் தணிக்கையின் போது கண்டறியப்பட்டன.</u>

1. பயணப்படிட்டியல்கள் சரிபார்க்க வருகைப்பதிவேடுகள் தணிக்கை முடிவு நாள் வரை தரப்படவில்லை. இதனால் பயணப்பட்டியலில் முகாம் சென்றதாக தரப்பட்ட விபரங்களின் சரித்தன்மையினை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

2. பயணப்பட்டியங்களுக்கான நிதி ஒதுக்கீடு (Allotment) பதிவேடு தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை.

3. இயக்கப்பதிவேடு பேணப்பட்டும் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை.

4. ஆணையர் அலுவலகம் போன்ற வெளியிடத்தில் அமையப் பெற்ற அலுவலகங்களுக்கு சென்று வந்தமைக்கு வருகைச் சான்று பெறப்பட்டு பெரும்பாலான இனங்களில் இணைக்கப்படவில்லை.

5. இரண்டு மூன்று மாதங்களுக்கு சேர்த்து பயணப்பட்டியல்கள் தரப்படுகின்றன. அதே போல ஒவ்வொரு மாதத்திலும் பயணம் மேற்கொள்கின்ற பொழுது அவ்வப்பொழுது பல பயணப்பட்டியல்கள் தரப்படுகின்ற நிலையில் உள்ளன. இது பயணப் படி விதிமுறைகளுக்கு முரணானதாகும்.

6. வரையறுக்கப்பட்டவாறு அரசு போக்குவரத்து கழக பேருந்துகளில் பெறப்படும் பஸ் கட்டணம் கோரப்படாமல், கூடுதலான கட்டணத்தில் தனியார் பேருந்துகளில் பயணம் செய்ததாக கட்டணம் கோரப்பட்டு அனுமதிக்கப் பட்டுள்ளன. பயணப் படி விதிகளுக்கு உட்பட்டு பயணப்படி அனுமதிக்கப் படவேண்டும்.

7. சென்னை போன்ற இடங்களுக்கும், 160 கி.மீ க்கும் அதிகப்பட்ட இடங்களுக்கு பயணம் மேற்கொள்கின்ற நிலையில் ஒவ்வொரு 24 மணி நேரம் கால இடைவெளியில் (incidental changes) கோரப்படாமல் 24 மணிநேரத்திற்குள் பயணத்தை முடித்து திரும்பும் நிலையிலும் ஒவ்வொரு பயணத்திற்கும் 2 incidental changes கோரப்படுகிறது, இது பயணப்படி விதிகளுக்கு முரண்பட்டது. தவிர்க்கப்பட வேண்டும்.

8. பணியாளர்கள் முகாம் பணி மேற்கொள்ளவதற்காக வழங்கப்பட்ட இணை ஆணையர் / செயல் அலுவலரின் உத்திரவு நகல்கள் பயணப்பட்டியலுடன் இணைக்கப்படவில்லை,

இக்குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

132) 137

<u>செலவுகள் – பூஜை படித்தரம் மற்றும் திருவிழா செலவுகள் – கட்டுப் படுத்தப் படல் வேண்டும் – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலுக்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டு சுமார் 19 ஆண்டுகளுக்கும் மேலாகி விட்ட நிலையில் இது காறும் திட்டப் பதிவேடு புதுப்பிக்கப் படவில்லை. வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப் பட்ட தொகைக்கும் மிகையாக செலவுகள் செய்யப் பட்டுள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப் பட்ட மிகைச் செலவுகளுக்கு ஆணையரின் சிறப்பு அனுமதி ஏதும் பெறப்படவில்லை. திட்டம் புதுப்பிக்கப் படாத நிலையில் கீழ்க்கண்ட விவரப்படி மேற்கொள்ளப்பட்ட பூஜைச் செலவுகளை சரிபார்க்க இயலவில்லை. விவரம் பின்வருமாறு.

வ.எண்	தலைப்பு	தொகை ரூ பை
1	பூஜை– திருவிழா செலவுகள்	84,13,301.30
2	உற்சவ கட்டளைகள்	5,26,030.00

திட்டம் புதுப்பிக்கப் பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டு, அங்கீகரிக்கப் பட்ட திட்டப் படி செலவுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும் என்பதுடன், கொள்முதல் செய்யப் பட்ட பொருட்களுக்கு இனவாரியாக அனைத்து நிலைகளிலும் உரிய இருப்புக் கணக்குகள் பேணப் படவும், ஆண்டுதோறும் அதிகரித்து வரும் இவ்வினச் செலவுகள் கட்டுப்படுத்தப் படவும், தக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகள் ஆணையரின் தனி கவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது.

138 83) **படித்தர சாமான்கள் – உபகோயில்களுக்கு வழங்கியது – இருப்புக் கணக்கு பேணப்படவில்லை – குறைபாடுகள்**

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலிலிருந்து உபகோயில்களுக்கு படித்தர சாமான்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இத்திருக்கோயிலின் அருகாமையிலுள்ள திருக்கோயில்களுக்கு வாரம் ஒரு முறையும், சற்று தொலைவிலுள்ள திருக்கோயில்களுக்கு மாதம் ஒரு முறையும் படித்தர சாமான்கள் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

இதில் கீழ்கண்ட குறைபாடுகள் காணப்பட்டன

அ) கீழ்கண்ட திருக்கோயில்களிலிருந்து மாதம் தோறும் தேவைப்பட்டியல் பெறப்பட்டு படித்தர சாமான்கள் வழங்கப்படுகின்றன.

1) அருள்மிகு திருமறைநாதசாமி திருக்கோயில், திருவாதவூர்
2) அருள்மிகு மகாகணபதி திருக்கோயில், சுண்ணாம்பூர்
3) அருள்மிகு ஐயம்பொழில் ஈஸ்சரர் திருக்கோயில், ஆமூர்
4) அருள்மிகு தெய்வநாயகி திருக்கோயில், கொந்தகை
5) அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயில், நாகமலை புதுக்கோட்டை

பிரதான திருக்கோயிலிலிருந்து பெறப்படும் படித்தர சாமான்களுக்கு சார்புள்ள கோயில்களில் உரிய இருப்புக் கணக்கு பேணப்படுவதாக தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால், மேற்படி திருக்கோயில்களில் பேணப்பட்ட இருப்புக் பதிவேடுகள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. இப்பதிவேடுகள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவேண்டும். மாதந்தோறும் பிரதான திருக்கோயிலின் கண்காணிப்பாளரின் பார்வைக்கு உட்படுத்தப் படல் வேண்டும்.

ஆ) கீழ்கண்ட திருக்கோயில்களுக்கு வாரம் தோறும் படித்தர சாமான்கள் வழங்கப்படுகின்றன.

1) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம்
2) அருள்மிகு தென்திருவாலய திருக்கோயில், தெற்கு மாசி வீதி
3) அருள்மிகு வீரபத்திரர் திருக்கோயில், தெற்கு மாசி வீதி
4) அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயில், தெப்பக்குளம்
5) அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர்
6) அருள்மிகு ஆதிசொக்கநாதர் திருக்கோயில், சிம்மக்கல்
7) அருள்மிகு வடக்கு வாசல் ஆஞ்சநேயர் திருக்கோயில்
8) அருள்மிகு செல்லத்தம்மன் திருக்கோயில், வடக்கு மாசி வீதி
9) அருள்மிகு பிள்ளையார் திருக்கோயில், சுடுதண்ணீர் வாய்க்கால் ரோடு

பிரதான திருக்கோயிலிலிருந்து பெறப்படும் படித்தர சாமான்களுக்கு சார்புள்ள கோயில்களில் உரிய இருப்புக் கணக்கு பேணப்படவில்லை.

தேவைப்பட்டியல் பெறப்பட்டு படித்தர சாமான்கள் வழங்கப்படவில்லை.தேவைப்பட்டியல் பெறப்பட்டு படித்தர சாமான்கள் வழங்கப்படவேண்டும். பெறப்பட்ட படித்தர சாமான்களுக்கு சார்புள்ள கோயில்களில் உரிய இருப்புக் கணக்கு பேணப்படவேண்டும். இருப்புப் பதிவேட்டினை மாதந்தோறும் பிரதான திருக்கோயிலின் கண்காணிப் பாளரின் பார்வைக்கு உட்படுத்தப் படல் வேண்டும்.

எனவே, இக்குறைபாடுகளை களைய, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

134) ## திருவிழா – மளிகை சாமான்கள் கொள்முதல் – இனவாரி இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை – குறைபாடுகள்

இவ்வாலயத்தில் பேணப்பட்டுள்ள படித்தரச் சாமான்கள் தொடர்பான இருப்புப் பதிவேடுகளை தணிக்கையின் போது சரிபார்த்ததில். திருவிழாவினை முன்னிட்டு, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயில் மற்றும் அதன் சுற்றுக் கோவில்கள் ஆகியவற்றிற்கு மளிகை சாமான்கள் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன. இவ்வாறு திருவிழாவிற்கு வாங்கப்படும் மளிகை சாமான்களுக்கு இருப்பு மற்றும் உபயோகக் கணக்கு ஏதும் எழுதப்படாமல், கடைக்காரர் பில் மற்றும் பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனத்தின் பின்புறம் அல்லது பதிவேட்டில் இப்பொருள் களின் விபரங்கள் எழுதப்பட்டு ஒரே வரியில் திருவிழாவிற்கு பயன் படுத்தப் பட்டது என பதிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இணை ஆணையர் / செயல் அலுவலரின் நிலையிலுள்ள இவ்வாலயத்தில் இது போன்று ஒரே வரியில் செலவுச் சீட்டின் பின்புறத்திலோ, பதிவேட்டின் ஒரே பக்கத்திலோ உபயோகப்படுத்தப்பட்டது என எழுதப்படாமல், பதிவேடுக்ளில் பொருட்களின் விபரங்களை இன வாரியாக எழுதி இருப்பு மற்றும் உபயோக கணக்கு எழுதினால் தான்

1) தேவைக்கேற்ப மளிகைப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதா,
2) திட்டப்படி மளிகைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டதா ,
3) செலவுகள் போக பயன்படுத்தப்படாமல் உள்ள பொருட்களின் இருப்பு விவரம்,
4) இருப்பிலுள்ள பொருட்கள் எவ்வாறு பயன்படுத்தப் பட்டன,

ஆகிய விவரங்களை தணிக்கையில் தயார் நிலையில் அறிய இயலும். மேலும் இவ்விவரங்களை உள்ளடக்கிய இருப்புப் பதிவேடு பேணப்படாத நிலையில், தணிக்கையாண்டில் தேவைக் கேற்ப மளிகைப் பொருட்கள் கொள்முதல் செய்யப் பட்டு, பயன் படுத்தப் பட்டுள்ளனவா என்பதை தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

எனவே இக்குறைபாடுகள் களையப்படும் பொருட்டு, திருவிழாவிற்கு வாங்கப்படும் மளிகை சாமான்களை படித்தர பதிவேட்டில் பதிவு செய்து, திட்டத்தில் உள்ள அளவுகளுக்கேற்ப வழங்கிட தக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

135) 140

திருவிழா செலவுகள் - பெரும்பாலான செலவுகள் உபயதாரர்களால் செய்யப் படுகிறது - உபய தாரர்களின் விபரமடங்கிய கோப்புகள் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை – குறைபாடுகள்

இத்திருக்கோயில் மற்றும் இதன் உபகோயில்களில் பசலிதோறும் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ்களில் பெரும்பாலான செலவுகள் பல்வேறு உபயதாரர்களால் செய்யப்படுவது தணிக்கையின் போது அறியப்பட்டது. திருவிழா தொடர்பாக எந்தெந்த உபயதாரர்களால் என்னென்ன செலவுகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதை அறிவதற்கு ஏதுவாக கோப்புகள் ஏதும் பேணப்படவோ,அவைகளை தணிக்கையின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப் படவோ இல்லை. இத்திருக்கோயிலின் பணியாளர்கள் நேரடியாக உபயதாரர்களை அணுகி, உபயதாரர்கள் மூலம் திருக்கோயிலின் திருவிழா தொடர்பான பல்வேறு செலவுகளை மேற்கொள்வதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் உபயதாரர்களால் உபய செலவுகள் மேற் கொள்வதற்காக தரப்படும் வேண்டுகை விண்ணப்பங்கள் , அவ்விண்ணப்பங்களின் மீது திருக் கோயிலின் இணை ஆணையர் / செயல் அலுவலரால் பிறப்பிக்கப் பட்ட உத்திரவுகள் ஆகிய விவரங்களையும் தணிக்கையில் அறிய இயலவில்லை.

இதனால்,

1) உபயதாரர்கள் பெயர்,முகவரி விவரம்,
2) அவர்களால் என்னென்ன செலவுகள் மேற்கொள்ளப்பட்டது,
3) உபயதாரர்களால் செலவிற்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு,
4) பெறப்பட்ட தொகையில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு,
5) நிகழ்ச்சிகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகையில் மீதமுள்ள தொகை திருக்கோயில் கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளதா, ஆகிய விவரங்களை தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் உபயதாரர்களால் திருவிழா செலவுகளுக்கு தர ஒத்துக் கொண்ட தொகை எவ்வளவு என்பதையும், பெறப்பட்ட தொகை எவ்வாறு செலவு செய்யப் பட்டது என்பதையும், தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

ஆதலின் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இக்குறைபாடு களை களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

185

136) **மண்டல அபிஷேகம் - அருள்மிகு முத்தீஸ்வர் திருக்கோயில் - கட்டண நிர்ணயம் - மண்டல அபிஷேக செலவுகள் - அனுமதி பெறப்படவில்லை - குறைபாடுகள்**

141

இத்திருக்கோயிலின் உப கோயிலான தெப்பக்குளம் அருள்மிகு முத்தீஸ்வரர் திருக்கோயிலில் 09.12,2010 அன்று மகா கும்பாபிஷேகம் நடந்ததை அடுத்து 10.12.2010 முதல் 27.01.2011 முடிய மண்டலாபிஷேகம் நடைபெற்று உள்ளது.

மண்டலாபிஷேகத்திற்கு ரூ 1,500/- கட்டணமாக நிர்ணயம் செய்யப் பட்டு இத்தொகை பலவகை இரசீது மூலம் பெறப்பட்டுள்ளது. தணிக்கை- யாண்டில் மண்டலாபிஷேக கட்டணமாக ரூ 70,500/- வசூலிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு பலவகை இரசீது மூலம் தொகை வசூலிக்கப்பட்டதற்கு ஆணையரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

மண்டலாபிஷேக பூஜைக்கு ரூ 33,509/- செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. மண்டலாபிஷேக பூஜை செலவிற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு ஆணையரின் அனுமதி பெறப்படவில்லை. ஆதலின் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தும் இன்றியமையாதது தானா என்பதை தணிக்கையில் சரி பார்க்க இயலவில்லை.

ஆதலின் மண்டலாபிஷேக கட்டணமாக ரூ1,500/- வீதம் ரூ70,500/- வசூலிக்கப்பட்டு, அதில் மண்டலாபிஷேக பூஜைக்கு ரூ33,509/- செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு உரிய விவரங்கள் சமர்ப்பித்து ஆணையரின் பின்னேற்பு அங்கீகாரம் பெறப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

137) 142

உபய அபிசேகம் – ஒரு அபிசேக காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உபய அபிசேகம் நடைபெறுதல் – சாத்தியமற்ற செலவினங்கள் – தவிர்க்கபடல் வேண்டும் – குறைபாடுகள்

இத்திருக்கோவிலில் கீழ்க்கண்ட நேரங்களில் அம்மன் மற்றும் சுவாமிக்கு அபிசேகம் நடைபெறுகிறது.

காலை	6–30 மணி மற்றும் 10–30 மணி	2 அபிசேகம்
மாலை	4–30 மணி மற்றும் 7–30 மணி	2 அபிசேகம்

இந்த அபிசேக காலங்களில் பக்தர்கள் தங்கள் சொந்த செலவில் அபிசேகம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள், இதற்கு அபிசேக கட்டணமாக (இரு சன்னதிகளுக்கும் சேர்த்து) ரூ1300.00 கட்டணம் வசூலிக்கவும், அதில் கீழ்க்கண்ட விபரப்படி செலவு செய்யவும் ஆணையர் ந.க.எண் 16476 /05 (இசட் 2) நாள் 21.06.2005 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செலவுகள் விபரம்

அபிசேக சாமான்கள்	405–00
பால் தயிர்	130–00
பூமாலை	160–00
நெய்வேத்யம் பிரசாதம் தேங்காய்.பழம்.	150–00
மரியாதை மாலை	70–00
அர்ச்சகர் பங்கு	60–00
மொத்தம்	975–00
திருக்கோவில் பங்கு	325–00
மொத்தம்	1,300–00

அபிசேக காலத்தில் அம்மன் சன்னதியில் நடக்கும் அபிசேகத்தை காண அனுமதியில்லை. சுவாமி சன்னதியில் அபிசேகம் நடப்பதை உபய அபிசேகம் செய்ய கட்டணம் செலுத்திய நபர்கள் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு அபிசேகம் முடிவடைந்ததும். மாலை மரியாதை செய்யப்பட்டு நெய்வேத்யம், தேங்காய் பழம் பிரசாதம் கொடுக்கப்படுகிறது.

மேற்படி அபிசேக காலங்களில் காலை 10–30 மணிக்கும் . மாலை 4–30 மணிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் உபய அபிசேகம் செய்ய கட்டணம் செலுத்துகின்றனர். ஒரு அபிசேக நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் அபிசேகம் செய்ய கட்டணம் செலுத்தினாலும், அப்போது ஒரு அபிசேகத்திற்குரிய அபிசேக சாமான்களும், அலங்கரிக்க ஒரு செட் பூ மற்றும் மாலைகளுமே பயன்படுத்தப்படுகிறது.

எத்தனை அபிசேகத்துக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டதோ அத்தனை அபிசேகத்திற்குரிய அபிசேக சாமான்களையும் பயன்படுத்தி அபிசேகம் செய்ய நேரமும் அதற்கான வாய்ப்புமில்லை. பூ மற்றும் மாலைகளும் ஒரு அபிசேகத்திற்குரியதை தவிர கூடுதலாக அணிவிக்க இயலாத நிலையும் உள்ளது.

ஆனால் இத்திருக்கோவிலில் ஒரு அபிசேக காலத்தில் எத்தனை நபர்கள் அபிசேகம் செய்ய கட்டணம் செலுத்தினரோ அத்தனை

187

அபிசேகத்திற்குரிய செலவுகளும் செய்யப்பட்டதாக செலவு எழுதப்பட்டு வருகிறது. செய்யாத செலவுகளை செலவு செய்தாக கணக்கு எழுதப்படுவது திருக்கோவிலுக்கு இழப்பு ஆகும்.

ஒரு அபிசேக காலத்தில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட உபய அபிசேகங்கள் நடைபெற்றால், உபய அபிசேகம் செயப்பவர்களுக்கு தர வேண்டிய நெய்வேத்ய பிரசாதம், மரியாதை மாலை தேங்காய்,பழம் பிரசாத செலவு மற்றும் அர்ச்சகர் பங்குத் தொகை ஆகியவற்றிற்கான தொகை ரூ 280.00 மட்டும் செலவெழுதப்பட்டு மீதமுள்ள தொகை ரூ 1020/- ஐயும் (ஒரு அபிசேகத் திட்டத்தின் அடிப்படையில்) திருக்கோயில் கணக்கில் செலுத்த உத்திரவிடலாம்.

உபய அபிசேகம் செய்வதில் மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றும் வகையில் உரிய உத்தரவுகளை பிறப்பிக்கும் பொருட்டு இணை ஆணையர் /செயல் அலுவலரின் தனிக்கவனத்திற்கு இக்குறைபாடு கொண்டு வரப்படுகிறது.

138) 143

சித்தர் பூக்கூடாரம் - ஒரே நாளில் பல நபர்கள் பூக்கூடாரம் அமைக்க கட்டணம் செலுத்தியது - தனித்தனியாக பூக்கூடாரம் அமைக்கப்பட்டதாக பங்குத் தொகை வழங்கப் பட்டது - குறைபாடுகள்

இத்திருக்கோவிலில் சுவாமி சன்னதியில் வெளிப்பிரகாரத்தில் துர்க்கையம்மன் சன்னதிக்கு அருகில் சித்தர் சன்னதி உள்ளது. சித்தர் சன்னதியில் பூக்கூடாரம் அமைத்து அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தப்படுகிறது. பூக்கூடாரம் அமைத்து அர்ச்சனை செய்வதற்கு ரூ 500/- கட்டணம் வதூலிக்கப்படுகிறது. இவ்வாறு வதூலிக்கப்படும் கட்டணத்தில் திருக்கோவில் பங்கு ரூ235/- போக மீதம் ரூ 265/- கீழ்க்கண்ட விபரப்படி செலவு செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. (இணை ஆணையர் ந.க.எண் 16476/05 இசட் 2 நாள் 21.06.05)

	ரூ பை
பூக்கூடாரம்	200.00
நெய்வேத்யம்	50.00
தேங்காய் பழம்	15.00

இவ்வாறு சித்தர் பூக்கூடாரம் அமைத்து வழிபாடு நடத்துவதற்கு,பல நாட்களில் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் கட்டணம் செலுத்தியுள்ள விபரமும் சம்மந்தப்பட்ட நாட்களில் கட்டணம் செலுத்தியுள்ள அத்தனை நபர்களுக்கும் தனித்தனியாக பூக்கூடாரம் அமைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டதாக செலவு எழுதப்பட்டுள்ள விபரமும் பேரேடு மற்றும் செலவுச் சீட்டுக்கள் வாயிலாக அறியப்பட்டன.

பூக்கூடாரம் அமைத்தல் என்பது சித்தர் சன்னதியில் பூச்சரங்களை 6 அல்லது 7 வரிசைகளில் பந்தல் வேய்வது போல வரிசையாக கட்டி விடுதல் ஆகும். ஒரு பூக்கூடாரம் அமைத்து அர்ச்சனை செய்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்குவதற்கு சுமார் ஒரு மணி நேரம் ஏற்படும். அடுத்து புதிய பூக்கூடாரம் போடவேண்டுமெனில் பழைய பூக்கூடாரத்தை அகற்றிவிட்டு புதிதாக பூச்சரம் வேய்ந்து கூடாரம் அமைக்க குறைந்தது 1 1/2 மணி நேரம் ஆகலாம். இவ்வாறு பூக்கூடார வழிபாடு என்பது ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வழிபாடுகள் மட்டும் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. சில நாட்களில் 5 க்கும் மேற்பட்ட பூக்கூடார வழிபாடுகள் செய்ய பக்தர்கள் முன்வருவதால், ஏற்கனவே அமைக்கப் பட்ட பூக்கூடாரங்களை அகற்றப் படாமல், அதன் மேலேயே அடுத்த பூக்கூடாரம் நடத்தப் படுவதாக தணிக்கையின் போது தெரிவிக்கப் பட்டது.

ஆனால் தனித்தனியே பூக்கூடாரங்கள் நடந்ததாகவும், அதற்கு செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் உள்ளன. மேலும் அகற்றப்பட்ட பூக்கூடாரங்கள் மீண்டும் பயன்படுத்தப்படவில்லை என்பதற்கு உரிய சான்று பதிவேட்டில் தரப்படவில்லை. பூக்கூடாரப்பூக்களுக்கான பங்குத் தொகை பட்டுவாடா பதிவேட்டினையும், செலவுச் சீட்டுக்களையும் பரிசீலித்ததில், சில நாட்களில் 5 க்கும் மேற்பட்ட பூக்கூடார வழிபாடுகள் நடந்ததாகவும், அதற்கு செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் உள்ளன.

ஆதலின் இது குறித்து தக்க பரிசீலனைகள் செய்து இதனை முறைபடுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

139/ 144

சித்திரைத் திருவிழா திருக்கல்யாண உற்சவம் - ரூ100/- முக மதிப்பு உள்ள நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை அமுல் செய்யப் படலாம் - மற்றும் குறைபாடுகள்.

இவ்வாலயத்தில் பசலிதோறும் சித்திரைத் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் மிக முக்கிய நிகழ்ச்சியாகும். அத்தினத்தன்று திருமண வைபவத்தைக் காண வருகை தரும் பக்தர்களுக்கு சிறப்பு அனுமதி நுழைவு சீட்டு வழங்கப் பட்டு அந்த நபர்களிடமிருந்து தலா ரூ 20/- வீதம் பலவகை இரசீது மூலம் வசூலிக்கப் படுகிறது. இந்த சிறப்பு அனுமதி நுழைவுச் சீட்டுக்கள் வழங்க ஆரம்பித்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே நுழைவுச் சீட்டுக்கள்முழுவதும் விற்பனையாகவிடுகிறது. பலருக்கு சிறப்பு அனுமதி நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்காமல் போகிற நிலை ஏற்படுகிறது.

ஏனெனில், வெள்ளை, நீலம், மற்றும் இளஞ்சிவப்பு வண்ணங்களில் குறைந்த பட்சம் 12,000 இலவச சிறப்பு அனுமதிச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு, அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு விநியோகிக்கப படுகின்றன. இலவச அனுமதி சீட்டுக்கள் அதிக எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப் படுவதால் பல பக்தர்களுக்கு சிறப்பு அனுமதிச் சீட்டுக்கள் வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது.

இந்த அனுமதிச் சீட்டுக்கள் அனைத்தும் உபயமாக அச்சிடப்பட்டு பெறப்படுவதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது. இந்த இலவச அனுமதி சீட்டுக்களை எந்த உபயதாரர் மூலம் அச்சிடப்பட்டு பெறப்பட்டன என்கிற விவரமோ, அந்த உபயதாரர் எவ்வளவு செலவில், எத்தனை இலவச சீட்டுக்கள் அச்சிட்டு வழங்கினார் என்கிற விவரமோ அறியப்படும் வகையில் உரிய பதிவேடுகள் பேணப்பட்டு தணிக்கைக்குத் தாக்கல் செய்யப் படவில்லை.

ஒவ்வொரு வண்ணத்திலும் எத்தனை இலவச அனுமதி சீட்டுக்கள் அச்சிடப்பட்டு பெறப்பட்டன என்கிற விவரமோ, அவைகள் யார், யாருக்கு எத்தனை சீட்டுக்கள் இலவசமாக வழங்கப்பட்டன என்கிற விவரமோ தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

ஆதலின் திருக்கோயிலின் பிரதான உபயதாரர்கள், முக்கிய பிரமுகர்கள், சிறப்பு விருந்தினர்கள், அரசு உயர் அலுவலர்கள், திருக்கோயில் நடைமுறைப்படி அழைக்கப்படும் முக்கிய பிரமுகர்கள், பிற துறை சார்ந்த அலுவலர்கள், ஆன்மீக பெரியோர்கள், திருக்கோயில் நலன் காக்கும் சிறப்பு ஆன்மீக செம்மல்கள், மற்றும் இத்துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் விடுதலின்றி இலவச அனுமதி சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை.

ஆதலின் இலவச சிறப்பு அனுமதி சீட்டுக்கள் வழங்குதலை முறைப்படுத்தப் படவும், அனைவரும் பயனுரும் வகையில் ரூ 100/- முக மதிப்புடன் கூடிய சிறப்பு அனுமதி நுழைவு சீட்டுக்கள் விற்பனையை இலாகாவின் அனுமதி பெற்று அமுல்படுத்தப் படவும், தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப் படுகிறது.

இது குறித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

145 140) **திண்டுமாலை கொள்முதல் - செலவு ரூ 7,15,500/- கொள்முதல் விதிமுறைகள் பின்பற்றப் படவில்லை – குறைபாடுகள்**

இத்திருக்கோயிலில் அம்மன்/சுவாமிக்கு திண்டுமாலைகளைக் கொண்டு அலங்காரம் செய்யப் படுகிறது. தணிக்கையாண்டில் 14.6.10 முதல் 30.4.11 முடிய உள்ள காலத்திற்கு திண்டுமாலை கொள்முதல் செய்த வகைக்காக ரூ 7,15,500/- செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அரசாணை எண் 588 தமிழ் வளர்ச்சி,பண்பாடு மற்றும் அறநிலையத் துறை நாள் 7.12.99 உத்திரவில், ரூ 10,000/- மேற்பட்டு கொள்முதல் செய்யப்படும் இனங்கள் அனைத்தையும் டெண்டர்கள் மூலம் கொள்முதல் செய்யப்படல் வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

ஆனால் தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் திண்டுமாலை கொள்முதல் செய்த வகையில் ரூ 7,15,500/- செலவு மேற்கொள்ளப் பட்ட நிலையிலும் அரசாணை உத்திரவுகள் ஏதும் பின்பற்றப்பட்டு டெண்டர்கள் கோரி பெற்று திண்டுமாலைகள் கொள்முதல் செய்யப் படவில்லை. இதனால் போட்டியின் காரணமாக திருக்கோயிலுக்கு கிடைக்கும் இலாபத்தை திருக்கோயில் இழந்துள்ளது.

மேலும் தணிக்கையாண்டில் திருக்கோயிலுக்கு தேவையான திண்டுமாலைகளை, கொள்முதல் விதிமுறைகள் ஏதும் பின்பற்றப்படாமல், திரு எம். செல்வராஜ் என்பவரிடம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஆணையரின் சிறப்பு அனுமதி ஏதும் பெறப்படவில்லை. அறங்காவலர் குழுவின் தீர்மானம் பெறப்பட்டதா என்கிற விவரமும் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை. திண்டுமாலைக்கான விலை எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டதென்ற விவரமும் தணிக்கையில் அறியப்படவில்லை.

மேலும் திண்டுமாலை கொள்முதல் செய்வதற்கு அங்கீகரிக்கப் பட்ட திட்டத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளதா அல்லது அம்மன்/சுவாமி – க்கு அலங்காரம் செய்திடும் பொருட்டு திண்டுமாலை கொள்முதல் செய்ய தனி அனுமதி ஏதும் பெறப்பட்டுள்ளதா என்கிற விவரமும் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை.

மேலும் இது தொடர்பான கோப்புக்கள் ஏதும் தணிக்கைக்கு தாக்கல் செய்யப் படாத நிலையில் இப்பொருள் தொடர்பாக கூடுதல் விவரங்கள் தணிக்கையில் அறிய இயலவில்லை.

ஆதலின் தணிக்கையாண்டில் விதிமுறைகள் ஏதும் பின்பற்றப் படாமல் திண்டுமாலைகள் கொள்முதல் செய்த வகையில் மேற்கொள்ளப் பட்டதற்கான அவசர, அவசியத்தை விளக்கி, திண்டுமாலை கொள்முதல் செய்த வகையில் மேற்கொள்ளப் பட்ட செலவு ரூ 7,15,500/- க்கும் ஆணையரின் பின்னேற்பு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

146 14)

கட்டணச்சீட்டு – பல்வேறு சேவைகளுக்கான கட்டணம் – கட்டண நிர்ணய உத்தரவு மற்றும் திட்ட அங்கீகாரம் தாக்கல் செய்யப்படவில்லை – குறைபாடுகள்

இத்திருக்கோயிலில் பல்வேறு சேவைகள் நடத்தப்படுகின்றன, தணிக்கையாண்டில் கீழ்கண்ட சேவைகளுக்கு பெறப்பட்ட கட்டணத்திற் – கான உத்திரவுகள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை, மேலும் இச்சேவைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு திட்ட அங்கீகாரம் பெறப்பட்ட விவரம் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை. விவரம் பின்வருமாறு.

வ, எண்	சேவைவிவரம்	சேவை கட்டணம்	மொத்த வரவு	மொத்த செலவு
1	அம்மன் சுவாமி உபய அபிஷேகம்	1300.00	1456300.00	952745.00
2	சுற்று சன்னதி சந்தனகாப்பு	1000.00	110000.00	38550.00 9715.00
3	இதரசன்னதி (முக்குறுணி விநாயகர் சந்தனகாப்பு	2250.00	47250.00	34860.00
4	கொழுக்கட்டை நைவேத்யம்	12500.00	325000.00	155277.00
5	சித்தர் பூகூடாரம்	500.00	836001.00	387055.00
6	இதர சன்னதி உபய அபிஷேகம்	1000.00	123000.00	99146.00 19035.00
7	சுற்று கோயில் உபய அபிஷேகம்	500.00	218900.00	144879.00

மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கான கட்டண நிர்ணய உத்திரவுகள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படாத நிலையில் ஆணையரால் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு உத்திரவுகள் பெறப்பட்டு ள்ளதா என்ற விவரமும், அங்கீகரிக்கப்பட்ட திட்டம் தாக்கல் செய்யப் படாத நிலையில் திட்டப்படி செலவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும், தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் தணிக்கையாண்டில் மேற்குறிப்பிட்ட இனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பல மாதங்களுக்கு பட்டுவாடா செய்யப் படாமல் உள்ள நிலையில் பெறப்பட்ட மொத்த வரவுக்குள்ளாக மொத்த செலவுகள் உள்ளனவா என்றும், இந்த சேவைகளினால் திருக்கோயிலின் பங்கு சதவீதம் எவ்வளவு என்பதையும், தணிக்கையில் அறிய இயலவில்லை.

இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

142) 147 **நெய் தீபம் - நெய் தீப விளக்குகள் தயாரித்தல் - தயாரிக்கப் பட்ட விளக்குகள் மற்றும் உபயோகப் படுத்தப் பட்ட நெய் ஆகியவற்றிற்கு இருப்புக் கணக்குகள் பேணப்படவில்லை - குறைபாடுகள்**

இத்திருக்கோயிலில் நெய் தீபம் விளக்குகள் திருக்கோயிலில் இருந்து தயாரிக்கப் பட்டு விற்பனை செய்யப் படுகிறது. தணிக்கையாண்டில் நெய் தீப விளக்குகள் விற்பனை மூலம் ரூ 46,75,415/- வருவாயாகப் பெறப்பட்டுள்ளது.

நெய் தீப விளக்குகளுக்கான நெய் திருக்கோயிலிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு திருக்கோயிலின் பொது சரக்கறை இருப்பிலிருந்து வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்படுகிறது.

பெறப்பட்ட நெய்யைக் கொண்டு நெய் தீப விள்க்குகள் தயாரிக்கப் பட்டு விற்பனைக்கு வழங்கப் படுகின்றன. நெய் தீப விளக்குகள் விற்பனை செய்யப் பட்டு, விற்பனைத் தொகை திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டு வருகிறது.

பொதுச் சரக்கறையிலிருந்து பெறப்படும் நெய்யைக் கொண்டு நாள்தோறும் எத்தனை நெய் தீப விளக்குகள் தயாரிக்கப் பட்டன, அவைகளில் எத்தனை நெய் தீப விளக்குகள் விற்பனை செய்யப்பட்டன, எத்தனை நெய் தீப விளக்குகள் விற்பனையாகாமல் இருப்பில் வைக்கப் பட்டன, இருப்பில் வைக்கப் பட்ட நெய் தீப விளக்குகள் மறுநாள் விற்பனைக்கு வழங்கப் பட்டதா என்கிற விவரங்களை உள்ளடக்கிய பதிவேடு ஏதும் பேணப்படவில்லை.

ஆதலால் பொது சரக்கறையிலிருந்து ஒவ்வொரு முறையும் பெறப் பட்ட நெய்யைக் கொண்டு எத்தனை நெய் தீப விளக்குகள் தயாரிக்கப் பட்டு விற்பனைக்கு வழங்கப்பட்டன என்கிற விவரம் தணிக்கையில் அறிய இயலவில்லை.

மேலும் விற்பனைக்கு வழங்கப் பட்ட நெய் தீப விளக்குகள் விவரம் ஏதும் பேணப் படாத நிலையில், விற்பனைக்கு வழங்கப்பட்ட நெய் தீப விளக்குகளுக்கான விற்பனைத் தொகை முழுவதுமாக திருக்கோயில் கணக்கில் செலுத்தப் பட்டனவா என்பதையும் தணிக்கையில் அறிய இயலவில்லை.

அத்துடன் நெய் தீப விளக்கு ஒவ்வொன்றும் எத்தனை கிராம் நெய் கொண்டு தயாரிக்கப் பட்டன, பொது சரக்கரையிலிருந்து ஒவ்வொரு முறை பெறப்படும் நெய்யைக் கொண்டு எத்தனை நெய் தீப விளக்குகள் தயாரிக்கப் பட்டன,ஒவ்வொரு நாளும் பயன்படுத்தப் பட்டது போக மீதமான நெய் எவ்வளவு, மீதமான நெய் மறுநாள் நெய் தீப விளக்கு தயாரிக்க பயன் படுத்தப் பட்டனவா போன்ற விவரங்களை அறியும் வண்ணம் உரிய பதிவேடுகள் ஏதும் பேணப் படவில்லை.

ஆதலின் தணிக்கையாண்டில் நெய் தீப விளக்கிற்கு வழங்கப் பட்ட நெய் முழுவதுமாக நெய் தீபம் தயாரிக்க பயன் படுத்தப் பட்டனவா என்பதையும், தயாரித்து விற்பனைக்கு வழங்கப்பட்ட நெய் தீப விளக்குகள் அனைத்திற்கும் விற்பனைத் தொகை திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தப் பட்டனவா என்பதையும், தணிக்கையில் சரிபார்த்திட இயலவில்லை.

இக்குறைபாடுகள் ஆணையரின் கவனத்திற்கு உட்படுத்தப் படுகிறது. இக்குறைபாடுகளை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

143) 148

<u>கட்டணச் சீட்டுக்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டுக் கொடுக்க டெண்டர் கோரியது – ஆண்டு முழுவதற்குமான தேவை குறிப்பிடப்பட்டு டெண்டர் கோரப் படவில்லை –குறைபாடுகள்</u>

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலில் கட்டணச்சீட்டுக்கள் தேவையான பதிவேடுகள், இரசீதுகள், மற்றும் உற்சவ பத்திரிக்கைகள் ஆகியனவற்றை அச்சிட்டுக் கொடுக்க டெண்டர்கள் கோரப்பட்டு, ஆணையர் மு.மு 76539/10 இசட் 2 நாள் 27.01.11 குறிப்பில் ராஜா பிரஸ், மதுரை என்கிற அச்சுக் கூடத்தில் அச்சிட்டுக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

அச்சிடப்படவேண்டிய இனங்களின் அளவு, பக்கம், ஆகிய விவரங்களைக் குறிப்பிட்டும், இனவாரியாக ஒன்றின் ரேட் எவ்வளவு என்றும் குறிப்பிட கேட்டுக்கொள்ளப் பட்டு டெண்டர் கோரப்பட்டு குறைந்த டெண்டரை பரிந்துரை செய்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

ஆண்டு முழுமைக்குமான உத்தேசமான தேவை கணக்கிடப்பட்டு, அச்சிடப்படவேண்டிய இனங்களின் மொத்த எண்ணிக்கை விவரத்தினையும், பிற விவரங்களுடன் குறிப்பிட்டு டெண்டர் கோரப்பட்டு, பெறப்பட்டிருப்பின், தணிக்கையாண்டில் உத்தேசமாக அச்சிடப்படவேண்டிய இனங்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு டெண்டர்தாரரால் குறைந்த ரேட் குறிப்பிடப்பட்டிருக்கவும், போட்டியின் காரணமாக டெண்டர் ரேட் குறைந்திருக்கவும் ஏதுவாகியிருக்கும். இதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் கூடுதல் செலவு தவிர்த்திருக்கக் கூடும்.

ஆதலின் ஆண்டு முழுமைக்கும் உத்தேசமான தேவை கணக்கிடப்பட்டு, அச்சிடப்படவேண்டிய இனங்களின் மொத்த எண்ணிக்கை விவரத்தினையும், பிற விவரங்களுடன் குறிப்பிட்டு டெண்டர் கோரப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

194

144) 149

பிரசாத விற்பனை – பிரசாதம் தயாரித்தல் – தயாரிப்பில் நிர்ணயித்ததை விட அதிகமான எண்ணிக்கை கிடைப்பது – அங்கீகரிக்கப்பட்டத் திட்டத்தின் சரித்தன்மை உறுதி செய்யப்பட்டு உண்மை நிலைக்கேற்ப திருந்திய திட்டம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் – ஆணையர் அறிவுரைகள் பின்பற்றப் படவில்லை – குறைபாடுகள்

அ) கண்டுமுதல் அதிகமாக கிடைப்பதால் திருந்திய திட்டம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்

தணிக்கையாண்டில் இத்திருக்கோயிலேயே பிரசாதங்கள் தயார் செய்யப் பட்டு திருக்கோயில் மூலம் விற்பனை செய்யப் பட்டுள்ளது. பிரசாத விற்பனை மூலம் தணிக்கையாண்டில் ரூ 1,95,21,208/–வருவாயாக பெறப் பட்டுள்ளது.

இத்திருக்கோயில் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பிரசாதங்கள் தயாரிப்பிற்கான பொருட்கள் திட்டம் மற்றும் விற்பனை விலை நிர்ணயம் கீழ்க்கண்ட விவரப்படி ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வ.எண்	பிரசாத விபரம்	அங்கீகார எண் நாள்
1.	சர்க்கரை பொங்கல்	சென்னை ஆணையரின் ஓ.மு.எண் 69852/05 நாள் 3.01.06
2.	புளியோதரை	சென்னை ஆணையரின் ஓ .மு.எண் 69852/05 நாள் 3.01.06
3.	அப்பம்	சென்னை ஆணையரின் ஓ .மு.எண் 69852/05 நாள் 3.01.06
4.	தேன் குழல்	சென்னை ஆணையரின் ஓ.மு.எண் 69852/05 நாள் 3.01.06
5.	வடை	சென்னை ஆணையரின் ஓ.மு.எண் 69852/05 நாள் 3.01.06
6.	லட்டு	சென்னை ஆணையரின் ஓ.மு.எண் 69852/05 நாள் 3.01.06
7.	புட்டமுது	சென்னை ஆணையரின் ஓ.மு.எண் 69852/05 நாள் 3.01.06

தணிக்கையாண்டில் இவ்வுத்தரவுகளின் படி பிரசாதம் தயாரிக்க திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் எடையளவுகளைக் கொண்டு பிரசாதம் தயார் செய்துள்ளதில், இத்தயாரிப்பு திட்டத்தின் படி பெறப்படவேண்டிய கண்டு முதல் எண்ணிக்கையினை விட கூடுதலான எண்ணிக்கையில் பிரசாதம் கண்டு முதல் ஆகியுள்ளதை, தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்பட்ட பதிவேடுகள் மற்றும் இதர ஆவணங்கள் வாயிலாக தணிக்கையின் போது அறியப்பட்டது.

திட்டப்படியான பொருட்களை கொண்டு அதிகப்படியான எண்ணிக்கையில் பிரசாதம் கண்டு முதலாகி எவ்வித ஆவலாதியோ. தரம் மற்றும் எடையளவுகளில் புகாரோ இன்றி, லாபகரமான விற்பனை செய்யப்பட்டு வருவதால், தற்போது தயாரிப்பு நடைமுறைக் கேற்ப பொருட்களுக்கான திட்டம் திருத்தியமைக்கப்பட்டு உத்தரவுகள் பெறப்பட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>ஆ) விற்பனை பிரசாதம் தயாரித்தல் ஆணையர் அறிவுரைகள் பின் பற்றப்படவில்லை</u>

ஆணையரது ந.க.எண் 34593/86/ எச்3 நாள் 12.05.87 ல் திருக் கோயில்களில் பிரசாதம் தயாரித்து விற்பனை செய்வது தொடர்பாக கீழ்க்கண்ட விவரப்படி சில விதிமுறைகள் வகுக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

1)இவ்வுத்திரவில் கண்ட விதி முறைகளின் படி பிரசாதம் தயாரிப்பதற்குத் தேவையான மளிகை பொருட்கள் மாதம் ஒரு கூட்டுறவு அங்காடிகளில் கொள்முதல் செய்யப்பட்டு கண்காணிப்பாளரால் நேரடியாக சரிப்பார்க்கப்பட்டு படித்தர பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பின்னர் பிரசாதம் தயாரிப்பதற்கு பொறுப்பானவரிடம் வழங்கி ஒப்புகை பெறப்பட வேண்டும் என உள்ளது.

ஆனால் இத்திருக்கோவிலில் பிரசாதம் தயாரிப்பதற்குத் தேவையான மளிகை பொருட்கள் படித்தர பொருட்கள் இருப்புப் பதிவேட்டின் மூலம் வரவு கண்காணிக்கப்பட்டு வழங்கப் படாமல் நேரடியாகவே பிரசாதம் தயாரிப்பு பொருட்கள் இருப்புக் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது.

2)மேலும் விதிமுறை எண் 3 ல் பிரசாத தயாரிப்பு பொருட்கள் அதற்கான உள்ள தனி ஸ்டோர் ருமில் இரட்டை பூட்டு முறையில் பாதுக் காக்கப்பட்டு கண்காணிப்பாளர் மற்றும் பிரசாதம் தயாரிப்பு பொறுப்பாளர் வசம் சாவிகள் பேணப்படுதல் வேண்டும்.

ஆனால் இத்திருக்கோயிலின் பிரசாதம் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் பிரசாதம் தயாரிக்குமிடத்தில் உள்ள ஒரு அறையில் வைக்கப்பட்டு பிரசாத தயாரிப்பு பொறுப்பு எழுத்தரால் மட்டுமே பராமரிக்கப்படுகிறது. இரட்டை பூட்டு முறை அமுல் படுத்தப்படவில்லை.

3)விதிமுறை எண் 4 ன்படி மளிகை பொருட்களின் இருப்பு எடை மற்றும் அளவுகள் கண்காணிப்பாளரால் மாதம் இரு முறையோ அல்லது தேவை ஏற்படும் போதோ சரிபார்க்கப்பட்டு, இருப்பில் கூடுதல் இருப்பின் கணக்கில் வரவு வைக்கப்படவும், இருப்பில் குறைவு இருப்பின் பொறுப்பானவரிடமிருந்து அதற்கான தொகை வசூலிக்கப்படவும் வேண்டும்.

ஆனால் தணிக்கையாண்டில் மளிகை பொருட்களின் இருப்பு எடை மற்றும் அளவுகளை கண்காணிப்பாளர் / அலுவலர்களால் நிர்வாக ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

4) விதிமுறை எண் 9ன் படி விற்பனை நிலையங்களில் ஒவ்வொரு பிரசாதத்தின் எடை மற்றும் விலை விபரம் காட்டும் பலகை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இந்நடைமுறை இங்கு பின்பற்றப் படவில்லை.

5)விதி முறை எண் 13 ன் படியான பிரசாதம் தயாரிப்பு பணியிலிருப்போர் விபரப்பதிவேடு (duty register) பேணப்பட வில்லை.

6) விதிமுறை எண் 14 ன் படி ஆய்வு விபரப்பதிவேடு ஒன்று பேணப்பட்டு செயல் அலுவலர் / கண்காணிப்பாளர் சரிபார்க்கப்படவில்லை.

மேலும் ஆணையரின் உத்தரவில் பிரசாதம் தயாரிப்பு மற்றும் விற்பனையில் முறைகேடுகளின்றி கண்காணிக்கும் பொருட்டு இவ்வுரத்திரவில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஒரு தனிப்பதிவேட்டில் பதிந்து பேணப்பட வேண்டும் என உத்திரவிடப் பட்டுள்ளது. ஆனால் இத்தகைய விதி முறை விபரப்பதிவேடு பேணப்படவில்லை.

இக்குறைபாடுகள் களையப்படவும், இனி ஆணையரால் வகுத்தளிக்கப் பட்டவிதி முறைகள் அனைத்தும் விடுதலின்றி பின்பற்றப்படவும், முறைகேடுகள் ஏதும் நடைபெறாமல் கண்-காணிக்கப்படவும், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>இ) பிரசாதம் விற்பனை – தேன்குழல் தயாரிப்பு – திட்ட அனுமதிக்கு மாறான அளவுகளில் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது – குறைபாடுகள்</u>

விற்பனைக்குரிய பிரசாதங்கள் தயாரிப்பு திட்டம் தொடர்பான ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட உத்திரவில் தேன்குழல் தயாரிக்கப்பதற்கு திட்டம் 1 க்கு அரிசி மாவு 800 கிராம் மற்றும் உளுந்த மாவு 200 கிராம் வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தணிக்கையாண்டில் தேன்குழல் தயாரிப்பிற்கு அரிசி மாவு 900 கிராம் (மற்றும்) உளுந்த மாவு 100 கிராம் 50 கிராம் அளவுகளில் பயன்படுத்தப் பட்டுள்ளன. தேன்குழல் உடைவதால் உளுந்தமாவினை திட்டத்தை விட குறைவாக பயன்படுத்துவதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அனுமதிக்கு மாறான அளவில் தயாரிப்பு பொருட்கள் பயன்படுத்தப்பட்டதற்கான காரணங்களை விளக்கி ஆணையரின் பின்னேற்பு பெறப்படவும், தேன்குழல் தயாரிப்பு தொடர்பாக சரியான அளவகளின் படி திட்டம் தயாரித்து ஆணையரது அங்கீகாரம் பெறப்படவும், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

145) <u>தளவாடம் கொள்முதல் – இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை – குறைபாடுகள்</u>

150

தணிக்கையாண்டில் கீழ்க்கண்ட விவரப்படி கொள்முதல் செய்யப்பட்ட பல்வேறு தளவாடங்களுக்கான இருப்புப் பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை

வ.எண்.	செ.சீ.எண்/நாள்	விவரம்	தொகை ரூ பை
1	133/20.09.10	புதிய செல்போன் கொள்முதல் செய்தது	2,000/-
2	1125/20.12.10	புதிய பொலீரோ SLX BS3 வாகனம்	6,41,425/-
3	248-249/11.8.10	ஜெனரேட்டர் கொள்முதல்	13,38,000/-
4	-	தளவாட சாமான்கள்	1,02,394/-
5	-	புதிய வடம் கொள்முதல்	1,12,039/-
6	82/13.7.10	எவர்சில்வர் டிரே	1,122/-
7	199/30.7.10	எவர்சில்வர் டிரே	2680/-

மேற்கண்ட விவரப்படி கொள்முதல் செய்யப் பட்ட தளவாடங்கள் குறித்து நிரந்தர பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளப் படவில்லை.

இக்குறைபாட்டினை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

146) **பொருட்கள் கொள்முதல் - [illegible] நிதி மற்றும் [illegible] - இருப்பு மற்றும் உபயோகம் குறித்த விவரப் பதிவேடு - தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை - குறைபாடுகள்.**

தணிக்கையாண்டில் இந்த நகராட்சியின் [illegible] நிதி பராமரிப்பு மற்றும் [illegible] பராமரிப்பு தொடர்பாக கீழ்க்கண்ட விவரப்படி பல்வேறு அத்தியாவசிய பொருட்கள் கொள்முதல் செய்யப்படும் வகையில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவரம் பின்வருமாறு.

வ.எண்	செலவுச் சீட்டு எண்/நாள்	கொள்முதல் பொருட்கள் விவரம்	மதிப்புத் தொகை ரூ
01.	231/03.08.10 ([illegible])	[illegible]	1683-00
02.	1106/16.12.2010 ([illegible])	[illegible]	5100-00
03.	136/23.07.2010 ([illegible] நிதி)	[illegible]	6863-00
04.	281/13.08.2010 ([illegible] நிதி)	[illegible] - [illegible] 27	6000-00
05.	668/12.10.2010 ([illegible] நிதி)	[illegible] மற்றும் [illegible] பொருட்கள்	5861-00
06.	759/25.10.2010 ([illegible] நிதி)	[illegible]	13336-00

மேற்கண்ட விவரப்படி கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கான இருப்புப் பதிவுகள் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாடு விவரம் ஆகியவை அடங்கிய உரிய பதிவேடு பேணப்படவில்லை. மேலும் அவற்றின் இருப்பு மற்றும் உபயோகம் குறித்த ஆவணங்கள் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

ஆதலின் மேற்படி பொருட்கள் நகராட்சியின் இருப்பு/ உபயோகம் குறித்த சரித்தன்மையினை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

எனவே மேற்படி பொருட்கள் நகராட்சியின் இருப்பு/ உபயோகத்தில் உள்ளன என்பதற்கு ஆதாரமாக சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு உரிய அலுவலரின் ஒப்பம் பெறப்பட்டு தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படல் வேண்டும்.

<u>தளவாடங்கள் கொள்முதல் - இருப்புக்கணக்கில் பதிந்து காண்பிக்கப் படவில்லை – குறைபாடுகள்</u>

பின்வரும் விவரப்படி கொள்முதல் செய்யப் பட்டுள்ள தளவாடச் சாமான்கள் திருக்கோயில் உபயோகத்தில் உள்ளதை உறுதி செய்திட ஏதுவாக இருப்புக் கணக்கில் பதிந்து தணிக்கைக்கு காண்பிக்கப் படவில்லை. இதனால் இவைகள் நிலை குறித்து தணிக்கையில் அறிய இயலவில்லை.

1. <u>பசலி 1420 உற்சவம்</u>

புதிய வடம் கொள்முதல் காயர் போர்டு பில் எண். 5430 நாள் 10.1.2011	ரூ 1,12,039.00	செ.சீ.எண். 1330/28.1.11

2. <u>ஜெனரேட்டர் கொள்முதல்</u>

அ) மெட்ராஸ் பவர் கார்ப்பரேசன் மூலம் ஆயிரம் கால் மண்டபத்திற்கு 125 கே.வி. ஜெனரேட்டர் 2 எண்ணம் பில் எண். 2 நாள் 15.5.2011	ரூ 63,555/-	செ.சீ.எண். 249/11.8.10
	ரூ 12,07,545/-	248/11.8.10
ஆ) ஜென் சர்வீஸ் அண்டு கண்டோரஸ் நிறுவனத்தின் மூலம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு புதிய 10 கே.வி.ஏ டீசல் ஜெனரேட்டர் கொள்முதல் பில் எண்.685/7.2.2011	ரூ 22,187-	செ.சீ.எண். 1909-1910 நாள் 12.4.11
	ரூ 2,30,913/-	செ.சீ 1908 நாள் 12.4.11
வ.எண். 2 ன் மொத்தம்	15,24,200/-	

3. <u>தளவாட சாமான்கள் கொள்முதல்.</u>

அ) 7 லிவர் பூட்டுகள் 20 எண்ணம் 6 லிவர் பூட்டுகள் 20 எண்ணம்	ரூ 13,916/-	செ.சீ.எண்.1122 நாள் 20.12.2010
(ராம்கோ கூட்டுறவு பண்டகசாலை, பில் எண்.13928/29.10.2010)		
ஆ) புதிய தகவல் தொடர்பு மையத்திற்கு சேர்,டேபிள் கொள்முதல் டிவிஎஸ் கூட்டுறவு பண்டகசாலை பில்எண் 840 நாள் 7.1.2011	ரூ 22,551/-	செ.சீ.எண்.1175 நாள் 23.2.2011
இ) திருக்கோயில் உபயோகத்திற்கு தீயணைப்பு சாதனங்கள் கொள்முதல் ஆர்.ஜி.ஆர் பிராஸ் ஏஜென்சீஸ் பில் எண்.1021 நாள் 22.2.2011	ரூ 40,928/-	செ.சீ.எண். 1899 நாள் 12.4.2011
ஈ) பசலி 1420 சித்திரை திருவிழா தேரோட்டம் கயிறு கொள்முதல் காயர் போர்டு பில் எண். 5437 நாள் 11.6.11	ரூ 25,719/-	செ.சீ.எண். 2288 நாள் 11.6.2011
வ.எண். 3ன் மொத்தம்	ரூ 1,02,394/-	

147) 152

பூசாரிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கியது – ஒப்புதல் பெறப்படவில்லை – காசோலைக்கான ஒப்புதல் பெறப்படவில்லை – மற்றும் குறைபாடுகள்.

பூசாரிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கிடும் பொருட்டு, இத்திருக்கோயில் நிதியிலிருந்து 1000 சைக்கிகள்கள் கொள்முதல் செய்யவும், சைக்கிள் 1க்கு ரூ 2776.80 வீதம் ரூ 27,76,800/- பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு அனுப்பிவைக்கவும் ஆணையர் ந.க. 3761/08 சி5 நாள் 23.07.10 ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இத்திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் ந.க. 1449/09 உ.4 நாள் 29.10.10 குறிப்பில் வங்கி காசோலை எண். 01250/2.11.10 ன் வாயிலாக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலருக்கு ரூ 27,76,800/- அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

மதுரை இணை ஆணையர் சரகத்திற்கு 486 சைக்கிள்களும், மயிலாடுதுறை இணை ஆணையர் சரகத்திற்கு 373 சைக்கிள்களும், கோவை இணை ஆணையர் சரகத்திற்கு 104 சைக்கிள்களும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.அதனடிபடையில் சம்மந்தப்பட்ட இணை ஆணையர் களால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் வசம் சைக்கிள்கள ஒப்படைக்கப் பட்டுள்ளன.

தற்போது இருப்பிலுள்ள 37 சைக்கிள்களை திருச்சி உதவி ஆணையர் சரகத்திற்கு வழங்கிட ஆணையர் ந.க. 3761/08 சி5 நாள் 19.9.11 குறிப்பில் உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் ந.க. 1445/09 ஈ1 நாள் 10.9.11 குறிப்பில் ஆணையர் உத்திரவுப்படி இருப்பிலுள்ள 37 சைக்கிள்களை பெற்றுச் செல்ல கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. இதுகாறும் பெற்றுச் செல்லவில்லை.

மதுரை மற்றும் கோவை இணை ஆணையர்களால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் வசம் சைக்கிள்கள் ஒப்படைக்கப்பட்டதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட நபர்கள் இத்திருக்கோயிலிலிருந்து பெறப்பட்ட சைக்கிள்களை சார்புள்ள இணை ஆணையர்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதற்கான சான்று சம்மந்தப்பட்ட இணை ஆணையர் அலுவலகங்களிலிருந்து பெறப்படவில்லை.

மயிலாடுதுறை இணைஆணையரால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் வசம் 373 சைக்கிள்களை இத்திருக்கோயிலிலிருந்து ஒப்படைக்கப்பட்டதாக தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் சைக்கிள்களை அனுமதிக்கப்பட்ட நபர்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் ஏதும் சம்மந்தப் பட்ட நபர்களிடமிருந்து பெறப்படவில்லை.

<u>இதில் காணப்பட்ட குறைபாடுகள்:</u>

1) தொகை பெறப்பட்டதற்கான ஒப்புதலை பழனி திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடமிருந்து பெறப்படவில்லை. உரிய ஒப்புதல் பெறப்படல் வேண்டும்.

2) சரக இணை ஆணையர்களால் அனுமதிக்கப் பட்ட நபர்கள் மூலம் சைக்கிள்களை சரக இணை ஆணையர்கள் பெற்றுக்கொள்ளப் பட்ட விவரத்திற்கான ஒப்புதலை சம்மந்தப்பட்ட சரக இணை ஆணையர் களிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

3) மயிலாடுதுறை இணைஆணையரால் அனுமதிக்கப்பட்ட நபர்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட 373 சைக்கிள்களும் மயிலாடுதுறை இணை ஆணையர் அலுவலகத்தில் பெறப்பட்டதற்கான ஒப்புதலை மயிலாடுதுறை இணை ஆணையாளரிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

4) தற்போது திருக்கோயில் வசம் இருப்பில் உள்ள 37 சைக்கிள்களை திருச்சி உதவி ஆணையர் வசம் ஒப்படைக்க உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

5) சரக இணை ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு சரக இணை ஆணையர்களால் அனுமதிக்கப் பட்ட நபர்கள் வசம் சைக்கிள்கள் ஒப்படைக்கப்பட்ட விவரத்தினை சரக இணை ஆணையாளர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. உரிய விவரங்கள் சரக இணை ஆணையர்களுக்கு தெரிவிக்கப் படல் வேண்டும்.

இக்குறைபாடுகளைக் களைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

148)
153

<u>சிகரங்காவல் (மற்றும்) வாசற்காவல் மிராஸ் பணி ஈட்டுத் தொகை வழங்கியது – அறநிலைய சட்ட விதிகளுக்கு முரணானது – உரிய முறையில் வரன் முறைப்படுத்தப்படல் வேண்டும்– குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலில் சிகரங்காவல் பணிக்கு என விசாரணைதாரர் கட்டளை அலவன்ஸ் எனும் தலைப்பில் மாதம் ஒன்றுக்கு ஆணையர் ப.மு. எண் 2838/2001/இசட்2/29.5.01 ன்படி ரூ.5000.00 என்பதன் அடிப்படையில் பசலி ஒன்றுக்கு ரூ 60,000.00 வழங்கப் பட்டுள்ளது.

சிகரங்காவலர் பணிக்கென பொன்மேனி கிராமத்தில் சுமார் 14 ஏக்கர் நிலம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 18 ம் கோட்டை கிராமம் ஆகியவை மானியமாக வழங்ப்பட்டுள்ளது.

<u>இதில் கீழ்காணும் குறைபாடுகள் காணப்பட்டன</u>

1. கோப்புகளை ஆய்வு செய்த பொழுது 6.12.2004 நாளிட்ட கடிதத்தில் திரு.சோமசுந்தர் எனும் நபர் மேற்படி சிகரங்காவல் பணிக்கான மானிப உரிமை தங்களது வம்ச வழியினருக்கு உரியது என்றும் தற்போது அதனை சம்பளமின்றி செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் கடிதத்தில் விண்ணப்பம் செய்துள்ளார். அந்நபரின் விண்ணப்பம் குறித்து உரிய முறை விசாரணை பற்றிய தகவல்கள் தணிக்கைக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

2. மானிய நிலங்களில் பொன் மேனியில் 13.79 ஏக்கர் நிலம் 5 நபர்களுக்கென நெல் குத்தகைக்கு (52.30குவிண்டால்) விடப்பட்டுள்ளது. (நன்செய் (தானியம்) கேட்புப் பதிவேடு வ.எண். 7,8,9,10 மற்றும் 13) தணிக்கைப் பசலியில் குத்தகை ஏதும் வசூலிக்கப் படவில்லை. பசலியின் முடிவில் நிலுவையாக 853–16 குவிண்டால் நெல் நிலுவையாக உள்ளது. இதனுடைய ரொக்க மதிப்பு குவிண்டால் ரூ 1105–00 வீதம் ரூ 942741–80 ஆகும். இத்தொகை வசூலிக்கப்பட இது காறும் சட்டப்படியான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப் படவில்லை. வழக்கறிஞர் கருத்துரை (ADVOCATE'S OPINION) பெறப்பட்டு, இலாகாவின் அனுமதி பெற்று உடனடியாக சட்ட நடவடிக்கைகள் துவங்கப்பட்டு நிலுவை தொகை முழுமையாக வசூலிக்கப்படல் வேண்டும்.

3. சிவகங்கை மாவட்டத்திலுள்ள பதினெட்டாம் கோட்டை கிராம நிலத்திலிருந்தும் பல ஆண்டுகளாகவே குத்தகை ஏதும் வசூலிக்கப் படாமல் அதிக அளவில் நிலுவை உள்ளது. இந்த நிலுவைகளை வசூலித்திட இது காறும் சட்டபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப் படவில்லை. விரைவில் வழக்கறிஞர் கருத்துரை (ADVOCATE'S OPINION) பெறப்பட்டு, இலாகாவின் அனுமதி பெற்று உடனடியாக சட்டப்படியான நடவடிக்கைகள் துவங்கப்பட்டு நிலுவைத்தொகை முழுமையாக வசூலிக்கப் படல் வேண்டும்.

4. மேலும், இனாம் ஒழிப்பு சட்டப்பிரிவு 23ன் படி, மேற்படி மானியம் புரிய இவர்களுக்கு உரிமையில்லை. மேலும் அறநிலைய சட்டம் 2/71 ன்படி இவர்கள் சிகரங்காவல் பணிக்கு பரம்பரை உரிமை கோர வழிவகை ஏதுமில்லை.

மேற்படி கட்டளை தொடர்பான நிலங்கள் முழுமையாக ஆலய வசம் கொண்டுவரப்பட்டு, வருவாய் பெருக்கவும், நிலுவையாக உள்ள தொகை மற்றும் நெல்லினை வசூலிக்கவும், சிகரங்காவல் பணி முறைகள் உரிய முறையில் வரன் முறை செய்யப்படவும் துரித நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

149) 154 <u>மின் கட்டணம் – மின் கட்டணம் செலுத்தியது – மின்கட்டண இரசீதுகள் செலவுச்சீட்டுடன் இணைக்கப்படவில்லை – குறைபாடு.</u>

தணிக்கையாண்டில், கீழ்கண்ட விவரப்படி செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் சார்புடைய செலவுச்சீட்டுடன் இணைக்கப்படவில்லை. விவரம் பின்வருமாறு.

வ.எண்	செலவுச் சீட்டு எண் / நாள்	மின் கட்டணம் தொகை ரூ பை
01.	73/12.07.2010	1,22,509.00
02.	74/12.07.2010	14,499.00
03.	75/12.07.2010	3,749.00
04.	76/12.07.2010	3,922.00
05.	77/12.07.2010	1,753.00
06.	78/12.07.2010	193.00
07,	493 / 14.09.2010	1,847.00
08,	836 / 03.11.2010	2,606.00
09,	854 / 11.11.2010	1,879.00
10,	1419 / 11.02.2011	10,468.00
11.	1626 / 10.03.2011	335.00
12.	1628 / 10.03.2011	144.71
13.	1629 / 10.03.2011	2,288,00
14.	1630 / 10.03.2011	376,00
15.	1631 / 10.03.2011	15,849.00
16.	1635 / 11.03.2011	3,772.00
17.	1690 / 17.03.2011	1,312.00
18.	1691 / 17.03.2011	542.00

மேற்கண்ட விவரப்படி மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண செலவுகளுக்கு மின்வாரியத்தால் வழங்கப்பட்ட இரசீதுகள் செலவுச்சீட்டுடன் இணைக்கப்படவில்லை.

ஆதலால் இச்செலவுகளுக்கான சரித்தன்மையினை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. உரிய மின்கட்டண இரசீதுகளையோ / இத்தொகை செலுத்தப்பட்டதற்கு மின்வாரியத்திடமிருந்து பெறப்பட்ட சான்றினையோ தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

எனவே, இக்குறைபாடுகளை களைய, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

159) 155 **வழக்குகள் - திருக்கோயிலில் இருந்து தொடரப்பட்ட பல்வேறு வழக்குகள் - திருக்கோயில் சார்பில் காலதாமதமின்றி செயல்பட்டு வழக்குகளை விரைவில் முடிக்கப்படவேண்டும் - குறைபாடுகள்.**

இத்திருக்கோயிலில் இருந்து பல்வேறு தருணங்களில், பல்வேறு காரணங்களுக்காக தொடரப்பட்ட 58 வழக்குகள் தணிக்கையாண்டின் முடிவில் கீழ்க்கண்ட விவரப்படி நிலுவையாக உள்ளன.

வ.எண்	நீதிமன்ற விவரம்	நிலுவையாகஉள்ள வழக்குகளின் எண்ணிக்கை
1	சென்னை உயர்நீதி மன்றம், சென்னை.	9
2	சென்னைஉயர்நீதிமன்றம், மதுரைகிளை.	17
3	மதுரை சார்பு நீதிமன்றம்	9
4	மதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.	14
5	ஆணையர் நீதிமன்றம்	1
6	இணை ஆணையர் நீதிமன்றம்	4
7	வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்	4
	மொத்தம்	58

திருக்கோயில் சார்பில் காலதாமதத்தை தவிர்த்து மேற்கண்ட வழக்குகளை விரைவில் முடிக்க உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

205

151) 156 **ஒண்டி முத்து மேஸ்திரி கட்டளை – கட்டளை நடைபெறவில்லை திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் – மீனாட்சி டாக்கீஸ் மற்றும் மீனாட்சி பாரடைஸ் – திருக்கோயில் வசம் கொண்டுவரப்பட வழக்கு தொடரப்பட்டது. குறைபாடுகள் –**

அ) இத்திருக்கோயிலில் நடைபெறும் ஆவணி மூல உற்சவம் 3 – ம் திருநாள் மண்டகப்படிக்காக ஒண்டி முத்து மேஸ்திரி கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டளைக்கு சொந்தமான மதுரை, தெற்கு வெளி வீதி கதவு எண் 20 (வார்டு எண் 4 – ல் உள்ள 1.28 ஏ. நிலம் திரு. இ.எம்.ஜி.சௌந்திரராஜன் என்பவர் வசம் உள்ளது. இந்நிலையில் கட்டளை சரி வர நடத்தப்படாமல் கட்டளை தாரர் வேறு நபர்களுக்கு கிரயம் செய்து விட்டார். எனவே சொத்தினை திருக்கோயில் வசம் ஒப்படைக்கக்கோரி மதுரை மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் (ஓ.எஸ்.எண் 123/79) வழக்கு தொடரப்பட்டு திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து திரு. சௌந்திரராஜன் சென்னை உயர்நீதிமன்றத்தில் (ஏ.எஸ் 209/79) மேல் முறையீடு செய்தார் இவ்வழக்கிலும் திருக்கோயில் வசம் இடத்தை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. இத்தீர்ப்பினை மறு பரிசீலினை செய்யக்கோரி சீராய்வு மனு (MP எண் 3891/86) தாக்கல் செய்தார்.

இந்நிலையில், ஆணையர் ந.க. 17832/87 நாள் 19.04.90 – ல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அதன்படி 15.07.1995 க்குள் திரு.சௌந்திரராஜன் கிரையத்தொகையாக ரூ. 33 இலட்சம் செலுத்த வேண்டும். திரு. சௌந்திரராஜன் முதல் இரண்டு தவணையாக மொத்தம் ரூ 4 இலட்சம் செலுத்தியுள்ளார். பாக்கி ரூ 29 இலட்சம் செலுத்தவில்லை. ஆணையர் ந.க.எண் 0/07/96–ல் ஆணையர் அலுவலக முன் அனுமதியின்றி எந்த ஒரு தொகையும் பெறக்கூடாதுதென்றும் 13.11.96 கடிதத்தில் தாவா சொத்தினை திருக்கோயில் வசம் கொண்டு வர நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இ.பி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக செ.அ.ந.க. எண் 1465/74 இ 2 நாள் 16.2.94 மற்றும் செ.அ. ந.க. 1465/75 இ 2 நாள் 04.08.96 மூலம் ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கறிஞரின் 03.12.05 அன்றைய கடிதத்தில் இ.பி.111/94 மனு 26.07.94 அன்று " dismissed as not presssed " என உத்தரவாகி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

11 ஆண்டுகளுக்கு முன்னரே நிறைவேற்று மனு தள்ளுபடி ஆன பின்னரும், இன்றும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதாக தவறான தகவல் தந்த வழக்குப் பிரிவு எழுத்தர் மீது செ.அ.ந.க. 4311/2001 இ 4 நாள் 17.02.06 – ல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது திரு.சௌந்திரராஜனின் வாரிசுதாரர்கள் மீது E.P 77/2006 மதுரை சப்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இம்மனுவை விரைவில் முடிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் சி . ஆர் . பி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆறு மாத காலத்திற்குள் வழக்கை முடிக்கும் படி உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. விரைவில் வழக்கு முடிக்கப்பட்டு கட்டளை நிலம் திருக்கோயில் வசம் கொண்டு வரப்படவேண்டும்.

ஆ) ஒண்டி முத்து மேஸ்திரி கட்டளைக்கு சொந்தமான மதுரை தெற்கு வெளிவீதி கதவு எண் 193 இடத்தை கட்டளை தாராகளிடமிருந்து கிரையம் பெற்ற திரு.நல்லதம்பி பிள்ளை திருக்கோயிலுடன் சமாதான உடன்படிக்கைக்கு வராதபடியால் மதுரை மூன்றாவது கூடுதல் நீதிமன்றத்தில் இ.பி எண் 440/90 தாக்கல் செய்யப்பட்டு இடத்தை திருக்கோயில் வசம் கொண்டு வர உத்தரவு பெறப்பட்டுள்ளது.

அதன் படி கீழ் தளம் திருக்கோயில் வசம் கொண்டு வரப்பட்டு ஏற்கெனவே வாடகைதாரர்களாக உள்ளவர்களையே தொடர்ந்து வாடகைதாரர்களாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு சுவாதீனம் எடுக்கப்பட்ட 4 கடைகளில் 2 கடைகளின் வாடகைதாரர்களான கந்தசாமி மற்றும் அன்னக்கொடி ஆகியோர் வாடகை செலுத்தி வருகின்றனர். மற்ற வாடகைதாரர்களான ஜலால் மற்றும் செல்வக்குமார் ஆகியோர் இது வரை வாடகை செலுத்தவில்லை. அவர்களை வெளியேற்றவும் நிலுவைகளை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இ) பல கோடி மதிப்புள்ள இச்சொத்தினைக் கைப்பற்ற வழக்கு பிரிவு எழுத்தர் துரித நடவடிக்கை எடுக்காமலும் கோவிலுக்குப் பாதகமாகத் தீர்ப்பு வெளியான 11 ஆண்டுகளாக கண்டு கொள்ளாமலும் இருந்ததால் தாவா சொத்தினை குத்தகைதாரர்களுக்கே தாரை வார்க்க வழக்கு பிரிவு எழுத்தர் உடந்தையாக இருந்துள்ளார். இவ்விருக்கை பணியாளரான திரு.மனோகரன் வழக்குப் பிரிவு எழுத்தர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு எந்த தொகையும் வழங்கப்படவில்லை. அவரது சேம நல நிதி இருப்புத் தொகை முழுவதையும் பறிமுதல் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே போல் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கத்தவறிய செயல் அலுவலரையும் இதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஈ) திரு . இ . எம் . ஜி. சௌந்திரராஜன் காலமாகிவிட்டார். அன்னாரின் வாரிசுகளை சேர்த்து E.P 77 / 06 - 1 வது சப்கோர்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் மூலம் வாரிசுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, வாரிசுதாரர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இறுதியாக 29.01.08 ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப் படவில்லை. தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு திருக்கோயில் வசம் சொத்தினை கைப்பற்றிட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

உ) ஆவணி மூல உற்சவம் 3 ம் திருநாள் மண்டகப் படிக்காக திரு.ஒண்டிமுத்து மேஸ்திரி என்பவர் மதுரை நகரின் மையப்பகுதியில் 1.38 ஏ பரப்பளவுள்ள இடத்தை கட்டளைச் சொத்தாக வழங்கியுள்ளார். இதில் 1.28 ஏ நிலத்தில் மீனாட்சி டாக்கீஸ் மீனாட்சி பாரடைஸ் என்ற இரு

தியேட்டர்கள் உள்ளன. மீதமுள்ள சென்ட் நிலத்தில் கீழ்க்கண்ட கடைகள் உள்ளன.

கட்டளை நடைபெறாததாலும் கட்டளை சொத்தை பாரா தீனம் செய்ததாலும் கட்டளை வாரிசுதாரர்கள் மற்றும் கிரையம் பெற்ற நபர்கள் மீது மதுரை நடுவர் நீதிமன்றத்தில் ஓ.எஸ் 123/70 வழக்குத் தொடர்ந்து, கோவிலுக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. இத்தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏ. எஸ் 9/80 வழக்குத் தொடரப்பட்டு இவ்வழக்கு 12.02.86 ல் தள்ளுபடி ஆகியுள்ளது. இதனையடுத்து உத்திரவினை மறு பரிசீலினை செய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் கி. எம். பி 3982/86 தாக்கலாகி உள்ளது. ஆணையரின் ந.க.எண் – 17832/87 என் 2 நாள் – 02.05.90 ல் சமாதான உடன்படிக்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி தொகைகள் செலுத்த வேண்டும்.

வ. எண்	கதவு எண்	வாடகைதாரர் பெயர்	செலுத்த வேண்டிய தொகை ரூ.பை	முதல் தவணை ரூ.பை	2 முதல் 5 தவணை வரை தவணைத் தொகை ரூ.பை
1.	16	திரு.கே. ராஜா (எஸ். குழந்தை வேலு பிள்ளை)	68670 –	10000 –	14667 .50
2.	17	திருமதி. மரகத்தம்மாள்	67900 –	10000 –	14475 .00
3.	18	திரு.கே.ரத்தினம்	60760 –	10000 –	12690.00
4.	19	திரு.டி. ராமகிருஷ்ணன்	86170 –	10000 –	19042.50

வ.எண் – 1 முதல் 3 வரையுள்ள நபர்கள் தலா ரூ 10000 /– வீதம் 07.05.90 அன்றும், 4 வது நபர் 15.05.90 அன்றும் ரூ 10000 /– செலுத்தி உள்ளனர். அதன் பின்னர் தொகையேதும் செலுத்தப்படவில்லை. சமாதான உடன்படிக்கை விதிகளை மீறி உள்ளமையால் இவர்களை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற நிறைவேற்று மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். இது வரை நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்படவில்லை.

நிறைவேற்று மனு தாக்கல் செய்து தாவா சொத்திலிருந்து இவர்களை வெளியேற்றி ஆலய வசம் இச்சொத்துகளை கொணர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 18 ஆண்டுகளாகியும், மேற்படி வழக்கின் நபர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்காத செயல் தணிக்கையில் ஏற்கும் படியாக இல்லை.

ஆதலின் மேலும் காலதாமதமின்றி தக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

208

152)
157

<u>மதுரை நகர்புறத்தில் அமைந்துள்ள கே.கே நகரில் சர்வே எண் 15 / 1 ல் உள்ள 0.79 சென்ட் நிலத்திற்கு திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டது – இவ்விடத்தில் பிற நபர்களால் 3700 ச.அ இடத்திலுள்ள பாதையாக பயன்படுத்தி அனுபவித்து வருவது – இவ்விடத்தினை ஆலய வசம் கொண்டு வருவதுடன் தோராயமாக பத்து கோடி மதிப்புலுள்ள 0.79 சென்ட் நிலத்தினையும் பாதுகாக்கப்பட வேண்டும் –குறைபாடுகள்</u>

மதுரை நகரில் அமைந்துள்ள கே.கே நகரில் சர்வே எண் 15/2 ல் (மானகிரி கிராமம்) 0.79 செண்ட் நிலத்திற்கான ரயத்துவாரி பட்டா செட்டில் மெண்ட் தாசில்தார் அவர்களால் இவ்வாலயத்தில் பெயருக்கு வழங்க பட்டத்தினை தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் திருக்கோயில் பெயரில் பட்டா ஏற்பட்டத்தினை உறுதி செய்து தீர்ப்பு பெறப்பட்டதினை தொடர்ந்து, மேற்படி இடத்தின் சுவாதீனத்தினை இவ்வாலத்தில் பெற்றுக் கொள்ள மதுரை நடுவர் நீதிமன்றத்தில, திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பினை பெறப்பட்டு 21.09.05 ம் நாள் தீர்ப்பு நகல் பெறப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை திருக்கோவில் வசம் கொண்டு வரும் பொருட்டு மதுரை 2–வது சப்கோர்ட்டில் இ.பி. 90 / 2006 தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. இவ்வழக்கின் அசல் வழக்கு ஓ.எஸ். 739/88–ல் தொடர்புடைய பிரதிவாதிகள் 3 நபர்கள் இவ்வழக்கினை மறுவிசாரணை செய்யக் கோரி ஐ.ஏ. 681/08 தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது. இந்த 0.79 ஏ.செ இடத்திற்கு திருக்கோவில் பெயரில் பட்டா வழங்குமாறு மதுரை வடக்கு வட்டாட்சியருக்கு மனு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி சர்வே எண்ணில் உள்ள இடத்தினை யாருக்கும் பதிவு செய்யக் கூடாது என பதிவுத் துறைக்கும் எழுதப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு அருகில் வசித்து வரும் கணபதி வகையறாக்கள் திருக்கோவிலுக்கு சொந்தமான இந்த இடத்தில் ஒரு பகுதியை பாதையாக பயன்படுத்தி வருவதாகவும் தெரிகிறது.

மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

வழக்குகளை தொய்வின்றி நடத்தி இடத்தினை திருக்கோவில் வசம் கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

153) 156

மதுரை மாவட்டம் ஆமூர் கிராமம் – வில்வ அர்ச்சனை கட்டளை நிலங்கள் – நில ஆக்கிரமிப்பாளர்களின் விவரம் அறியும் பொருட்டு கோப்பு நிலுவை – விரைவு நடவடிக்கைகள் தேவை – (கோப்பு எண் – 2705/05/இ4

மதுரை மாவட்டம், ஆமூர் கிராமம். வில்வ அர்ச்சனை கட்டளை நிலங்கள் தொடர்பாக மதுரை முதன்மை சார்பு நீதி மன்றத்தில் முதல் வழக்கு 84/1984 ல் இடைக்கால மனு 586/1986 மீதான 17.03.87 தீர்ப்பு திருக்கோயிலுக்குப் பாதகமாக இருந்ததால். சென்னை. உயர்நீதிமன்றத்தில் சி.எம்.ஏ 878/1989 வழக்கு தொடரப்பட்டு 13.06.02 அன்று தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பில் கீழ் ஆளுமை நீதிமன்றத்தில் உத்திரவுகள் நிறுத்தி வைக்கப்பட்டு. மீண்டும் வழக்கைத் தொடர்ந்து நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 25.07.02 ல் வழக்குத் தொடர்ந்து எல்.பி.ஏ 31/03 என்ற எண்ணில் நம்பராகி உள்ளது.

இவ்வழக்கில் வாதாட ஏதுவாக எதிர் மனு தாரர்களின் சரியான முகவரியைத் தெரிவிக்கும்படி 10.03.04 ல் வழக்கறிஞர் கோரியுள்ளார் செயல் அலுவலரின் ந.க.எண் – 2705/05/இ4 நாள் – 29.03.04 ல் ஆமூர் கிராமம் புல எண் – 71/145/160/1 ல் மொத்தம் 11.58 ஏக்கர் நிலத்தினை அனுபவித்து வரும் வாரிசுதாரர்களின் விபரத்தை தெரிவிக்கும் படி திருக்கோயில் வசூல் எழுத்தர் 1 மற்றும் 2 க்கு உத்தரவிடப் பட்டுள்ளது.தொடர் நடவடிக்கை விவரம் இல்லாத நிலையில் நிலுவையாக உள்ளன.

மேலும் இது தொடர்பாக 20.04.04, 06.01.05, 28.02.05, 15.09.05 மற்றும் 14.11.06 லிலும் இறுதியாக 05.02.08 ல் திருக்கோயில் வசூல் எழுத்தர்களுக்கு நினைவூட்டுகள் அனுப்பப்பட்டதில் ஆமூர் கிராமத்திற்குரிய VAO பதவி காலியாக இருப்பதால் பிரதிவாதிகளின் வாரிசுதாரர் களின் விபரமறிவதில் தாமதம் ஏற்பட்டு உள்ளதாக சம்பந்தப்பட்ட எழுத்தரால் கோப்பில் விபரங்கள் பதியப்பட்டுள்ளன.

எனவே, இது தொடர்பாக தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

154) **மதுரை.வடக்கு மாசிவீதி, கதவிலக்கம் எண் – 409 வாடகை செலுத்தாதது வழக்குத் தொடர்ந்து சாதகமான தீர்ப்பு பெற்று நிறைவேற்று தாக்கல் செய்யப் பட்டது – சுவாதினம் பெற வேண்டும் – கடுங்குறைபாடுகள் (கோப்பு எண் – 4043 / 79/ இ 4) (வெளிக்கடை அடையாள குறியீடு எண் 223)**

159

மதுரை நகர் வடக்கு மாசி வீதி கதவிலக்கம் எண்– 409 லுள்ள கட்டிடம் திரு. M.N.L இரத்தினம் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இவர் வாடகையை செலுத்தாமல் ஏற்பட்ட வாடகை பாக்கித் தொகை ரூ.11250/– க்காகவும், கட்டிடத்தை ஒப்படைக்க கோரியும், மதுரை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் முதனேற்பு வழக்கு எண்/– 71 / 76 தொடரப்பட்டது. 04.08.82 ல் வழங்கிய தீர்ப்புரையில் ,

1. சொத்தின் சுவாதீனத்தை கோவில் வசம் ஒப்படைக்க வேண்டும்.
2. வாதிக்கு ரூ 4000/– இடைக்கால நஷ்ட ஈட்டுத்தொகையாக வழங்க வேண்டும்.
3. ரூ. 2964.50 ஐயும் வழக்குச் செலவுத் தொகையாக வழங்க வேண்டும், என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கோவிலுக்கு சாதகமான இத்தீர்ப்பினை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் ஏ.எஸ் 354 / 82 என்ற எண்களில் மேல் முறையீடு செய்யப் பட்டுள்ளது. 12.09.83 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையில், கீழ்க்கோர்டின் தீர்ப்பு உறுதி செய்வதாகவும், மேல்முறையீடு தள்ளுபடி செய்வதாகவும் வழக்கு செலவு தொகை ரூ 1062.50 ம் தர வேண்டுமென்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேற்காணும் தீர்ப்பினை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் முறையீடு 179 / 94 தொடரப்பட்டு, மேல் முறையீட்டாளரும் அவரது வழக்கறிஞரும் ஆஜராகததால் கோவிலுக்கு 12.02.01 ல் சாதகமாக ஒரு தலைப் பட்ச தீர்ப்பு ஏற்பட்டுள்ளது. 12.02.04 ல் அதாவது 3 1/2 வருடங்கள் கழித்து விண்ணப்பிக்கப்பட்டு 09.09.04 ல் தீர்ப்பின் நகல் பெறப்பட்டு 21.10.04 ல் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. A/S/ 354 / 82 வழக்கில் E/P 8/05 என எண்ணிடப் பட்டும், EA 4007 / 06 ல் " for steps " என்று 27.07.07 வாய்தா ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே திரு. இரத்தினம் என்பார் காலமாகிவிட்டதால் அன்னாரின் வாரிசு தாரர்களை இவ்வழக்கில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாலயத்தில் பேணப்பட்டுள்ள வெளிக்கடை கேட்பு, வசூல், நிலுவை பதிவேட்டினை சரிபார்த்ததில் திரு இரத்தினம் என்பவரின் பெயரிலேயே கேட்பு எழுப்பப்பட்டு தணிக்கையாண்டின் முடிவில் ரூ.169800 /– ம் நிலுவையில் உள்ளது.

மேலும் இக்கட்டிடத்தில் பின் கண்ட நபர்களுக்கு திரு. இரத்தினம் என்பாரின் வாரிசுதாரர்கள் இக்கட்டிடத்தை வாடகைக்கு விட்டு வருமானத்தை அனுபவித்து வருவதாக எழுத்தர் தெரிவித்துள்ளார்.

1. திரு. கே. பாபு S/O கண்ணன் – மேல் மாடியில் குடியிருந்து வருகிறார்.
2. பா. சந்திரசேகரன் மாருதிமில்ஸ் ஸ்டோர்ஸ் – கீழ்ப்பகுதியில் நடத்தி வருகிறார்.
3. திரு.செல்வராஜ் – இவர் கீழ் தளத்தில் மேற்குப்பகுதியில் கடை வைத்துள்ளார்.

விரைவில் இச்சொத்தினை கைப்பற்ற தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

(55) <u>அர்த்த சாம கட்டளை மானியம் – கட்டளை நடைபெறாமையால் நிலங்களை மீள எடுக்க உத்திரவு – இந்நிலத்தினை கையகப்படுத்த வழக்குத் தொடர்ந்து நிலுவையில் உள்ளது – நிலம் திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் கொணரப் படல் வேண்டும் – குறைபாடுகள். (ந.க 3693/2000 இ4)</u>

160

அர்த்த சாமக்கட்டளைக் கென மதுரை மாவட்டம். வாடிப்பட்டி வட்டம், தனிச்சியம் கிராமத்தில் சதுர அடி எண்– 386 ல் 2.90 ஏக்கரும், சதுர அடி எண் – 399 ல் 4.47 ஏக்கரும், சதுர அடி எண் 402 ல் 2.41 ஏக்கரும் ஆக மொத்தம் 9.78 ஏக்கர் நிலங்களும் உள்ளன. கட்டளை நடைபெறாததால், மாவட்ட வருவாய் நீதி மன்றத்தில் நிலங்களை மீட்க ஆர். பி. 7625/01 என்ற எண்ணில் வழக்குத் தொடரப்பட்டது. மதுரை வருவாய் கோட்டாட்சியரின் உத்திரவு நாள் – 10.11.03 ல் கட்டளை தாரர்கள் கட்டளை செய்யாததால் மேற்படி நிலங்களை திருக்கோவிலே மீள எடுத்துக் கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பினை எதிர்த்து, கட்டளை தாரர்கள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மேல் முறையீடு செய்துள்ளனர். திரு. எஸ் மனோகர், வழக்கறிஞர் தமது 09.06.04 நாளிட்ட கடிதத்தில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியரின் நீதி மன்றத்தில் பட்டா மாறுதல் செய்ய உத்திரவு தேதி முதல் ஓராண்டிற்குள் இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு மனு தாக்கல் செய்யலாமென கருத்து தெரிவித்துள்ளார் கோட்டாட்சியர் தீர்ப்பு 10.11.03 ல் வழங்கப்பட்டுள்ளமையால் 09.11.04 க்குள் இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு தாக்கல் செய்திருக்க வேண்டும். 09.06.04 ல் வழக்கறிஞர் கருத்துரு பெற்றிருந்தும், வழக்கு தாக்கல் செய்யும் காலம் கடந்து விட்டது.

கட்டளைதாரர்கள் திரு. எம்.எஸ் வெங்கட்ராமன் மற்றும் திரு. எம். எஸ் சீனிவாசன் ஆகியோரிடம் மாவட்ட ஆட்சித்தலைவரின் விசாரணை முடிவுற்று தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவரின் தீர்ப்பினைப் பெற 22.09.05 ல் நினைவூட்டு அனுப்பப்பட்டுள்ளது. கடைசியாக 23.06.07 ல் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பின்னர் நடவடிக்கை இல்லை.

மாவட்ட ஆட்சியரின் தீர்ப்பு நிலுவையில் இருக்கும் பொழுது பட்டா மாறுதல் செய்ய இயலாது என்றும், தீர்ப்பு வரப்பெற்ற பின்பு நிறைவேற்று மனுதாக்கல் செய்து மேற்படி 9.78 ஏக்கர் நிலம் சுவாதீனம் எடுக்கலாம் என்று வழக்கறிஞர் நேரில் தெரிவித்ததாக கோப்பில் எழுதபபட்டுள்ளது.

இது தொடர்பாக மதுரை உயர்நீதி மன்ற கிளையில் W/P எண் – 11112/08 என்ற எண்ணில் வழக்கு நிலுவையிலுள்ளது. இணை ஆணையர் /செயல் அலுவலர் ந.க. 3693/2000 இ4 நாள் 28.7.09 நாளிட்ட கடிதத்தில் திருக்கோயில் சார்பில் ஆஜராகி விரைவில் இவ்வழக்கினை விசாரணைக்கு கொண்டு வந்து வழக்கினை முடித்துத் தர வழக்குறைஞர் திரு எஸ். மனோகரனை கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

இந்நிலையில் வருவாய் கோட்டாச்சியரின் ந.க. 7062/08 எச்1 நாள் 11.09.10 குறிப்பில் மீண்டும் ஆவணங்களுடன் மதுரை கோட்டாச்சியர் முன்பாக விசாரணைக்கு ஆஜராக கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. ஆதலின், இந்த 9.78 ஏக்கர் நிலத்தினை திருக்கோயிலின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவும், திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் கொணரப் படவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

156) 161

ஊழிய மானிய நிலங்கள் – ஊழியம் நடைபெறவில்லை – நிலங்கள் பாராதீனம் செய்யப்பட்டது – நிலங்களை மீட்க வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது – தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

அ) மெய் காவல் ஊழியம் – 68– 64 ஏக்கர் செண்ட் நிலம் மதிப்பு சுமார் 68 கோடி – ஊழியம் நடைபெறவில்லை – நிலத்திற்கு கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது – வாரம் வசூல் செய்ய வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது – தொடர் நடவடிக்கை தேவை

இத்திருக்கோவிலில் மெய்க்காவல் பணி செய்வதற்காக மதுரை பொன்மேனியில் புல எண் 176/2 ல் 68 – 64 ஏக்கர் செண்ட் நிலம் ஊழிய மானிய நிலமாக வழஙகப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நிலங்களை அனுபவித்து வருபவர்கள் திருக்கோயிலில் ஊழியம் செய்யாததால் செட்டில் மெண்ட் தாசில்தார் மேற்படி நிலத்தின் பட்டாவை திருக்கோவில் பெயருக்கு வழங்கியுள்ளார். திருக்கோவில் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து மேற்படி நிலங்களை அனுபவித்து வருபவர்களில் 43 நபர்கள். மதுரை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் சி.எம்.ஏ. 6 /73 மற்றும் 295/73–ல் வழக்கு தொடர்ந்து கூட்டுப்பட்டா பெற்றுள்ளனர். கூட்டுப்பட்டா பெற்றுள்ள ஆக்கிரமிப்பாளார்களிடமிருந்து வாரம் வசூல் செய்ய மதுரை சப்கோர்ட்டில் ஓ.எஸ் 411/99 என்ற வழக்கு தொடரப்பட்டு தற்போது மேற்படி வழக்கு ஓ.எஸ் எண் 100/2006 என மறு எண்ணிடப்பட்டு நிலுவையில் உளள்து. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்களில் இறந்து போனவர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்து வழக்கினை நடத்த நடவடிக்கையில் உள்ளது.

இதனிடையே பிரதிவாதிகளில் ஒருவரான திரு. தங்கையா என்பவர் “10 X 20” அளவில் ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டு வீடு கட்டிவருவதை எதிர்த்து ஓ.எஸ் 1245/2004 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் மீது திருக்கோவில் சார்பாக மதுரை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு எண்ணிடப்படாமல் உள்ளது.

மதுரை நகரில் அமைந்துள்ள மேற்படி இடத்தில் விவசாயம் ஏதும் நடைபெறுவதாக தெரியவில்லை. சுமார் 68 கோடி மதிப்புள்ள மேற்படி இடத்தினை அனுபவித்து வரும் நபர்களிடமிருந்து வாரம் வசூலிக்க எவ்வாறு முடிவெடுக்கப்பட்டது எனத் தெரியவில்லை. இவ் வழக்குக் கோப்பினை நன்கு ஆராய்ந்து. நிலத்தை திருக்கோவில் வசம் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அதற்கேற்றாற் போல தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். விரைவு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இணை ஆணையர் . செயல் அலுவலரின் தனிக்கவனத்திற்கு இக்குறைபாடு கொண்டு வரப்படுகிறது.

213

ஆ) கட்டியம் ஊழியம் – ஊழியம் நடைபெறவில்லை – 2–07 ஏக்கர் நிலம் – நிலத்தினை மீட்க வழக்கு தொடரப்பட்டு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது–தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்–குறைபாடுகள்

இத்திருக்கோவிலில் கட்டியம் ஊழியம் செய்யும் வகைக்காக மதுரை வடக்கு வட்டம் பரவை கிராமத்தில் சதுர அடி எண் 29/5 (புதிய சதுர அடி எண் 143/5 & 143/5 R)– ல் உள்ள 2–07 ஏக்கர் செண்ட் நிலம் டி.பி எண் 660 – ல் ஊழியமானிய நிலமாக வழங்கப்பட்டிருந்தது. சிறு இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி மதுரை செட்டில்மெண்ட் தாசில்தார் எஸ்.ஆர் 57 நாள் 01–06–06 மூலம் நாராயண அய்யர் மகன் திரு. சுப்பிரமணிய அய்யர் என்பவருக்கு மேற்படி நிலத்திற்கு இரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது.

மேற்படி நபர் இத்திருக்கோவிலில் கட்டியம் ஊழியம் செய்யாததால் மேற்படி நிலத்திற்கு திருக்கோவில் பெயரில் பட்டா பெறப்பட்டு. மேற்படி நிலத்தினை திருக்கோவில் வசம் கொண்டு வரும் சமயத்தில். பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து பிரதிவாதியால். மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் எஸ்.ஏ.790/2005 என்ற எண்ணில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. இதனிடையே இந்நிலத்தின் ஒரு பகுதியில் (சதுர அடி எண் 143/5ஆர் –ல் உள்ள 1–78 ஏக்கர் செண்ட் நிலத்தில்) சுமார் 10 செண்ட் இடத்தில் திரு. கணேசன் என்பவர் கட்டிடம் கட்டுவதை தடுத்து நிறுத்தக்கோரி ஓ.எஸ் 177/2002 என்ற எண்ணுள்ள வழக்கில் ஐ.ஏ.எண் 212/2003 – ல் உறுத்துக் கட்டளை பெறப்பட்டுள்ளது.

விலை மதிப்புமிக்க மேற்படி நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் கண்காணிக்கப்படவும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இணை ஆணையர் / செயல் அலுவலரின் தனிக்கவனத்திற்கு இக்குறைபாடு கொண்டு வரப்படுகிறது.

157)

162

கட்டளை நிலங்கள் – போலராஜா மண்டகப்படி கட்டளை – 8. 88 ஏக்கர் நிலம் – மதிப்பு சுமார் 4.50 கோடி – கட்டளை நடைபெறவில்லை – ஒரு பகுதி நிலம் விற்பனை செய்யப்பட்டது – நிலத்தை மீட்க வழக்கு தொடரப்பட்டு நிலுவையிலுள்ளது – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். குறைபாடுகள்.

இத்திருக்கோவிலில் போலராஜு மண்டகப்படி கட்டளை நடத்தப் படுவதற்காக மதுரை அவனியாபுரத்தில் கீழ்க்கண்ட விவரப்படி 8.88 ஏக்கர் நன்செய் நிலம் கட்டளை நிலமாக விடப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

சர்வே எண்	பரப்பு ஏ.செ
153	3–09
580	4–20
582/3	0–08
605/1	1–51
மொத்தம்	8–88

மேற்படி நிலத்தினை அனுபவித்து வந்தவர்கள் மேற்படி கட்டளையை நடத்தவில்லை. மேலும் புல எண் 605/1 – ல் உள்ள 1–51 ஏ.செ நிலத்தினை அய்யாச்சாமி கோனார் என்பவருக்கு 24–08–1974 –ல் விற்பனை செய்துள்ளனர். கட்டளை நடைபெறாததால் மேற்படி நிலங்களை திருக்கோவில் எடுத்துக்கொள்ள மதுரை வருவாய் கோட்டாட்சியர் ந.க.எண் 5018/2001 நாள் 10–11–2003 ல் உத்திரவிட்டுள்ளார்.

மேற்படி உத்தரவை எதிர்த்து பிரதிவாதிகள் மாவட்ட ஆட்சியரிடம் மேல் முறையீடு செய்துள்ளனர். இம்மனுவை விசாரித்த மாவட்ட ஆட்சியர். மனுவை மீண்டும் கோட்டாட்சியர் விசாரணைக்கு திருப்பி அனுப்பியுள்ளார்.

Set aside செய்யுமாறு திருக்கோவில் சார்பில் உயர்நீதிமன்றத்தில் நீதி பேராணை (writ petition) தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

சுமார் 4.5 கோடி மதிப்புள்ள மேற்படி நிலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாத வகையில் கண்காணிக்கும் பொருட்டு, நிலத்தினை திருக்கோவில் வசம் கொண்டு வரும் வகையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு இணை ஆணையர் / செயல் அலுவலரின் தனிக்கவனத்திற்கு இக்குறைபாடு கொண்டு வரப்படுகிறது.

214

158) 163

மதுரை தெற்கு வட்டம் – நகர்புற நன் செய் நிலம் மற்றும் மாநகரில் உள்ள கட்டிடம் –சோம சுந்தர முதலியார் பிரதோசக் கட்டளை – கட்டளை நிர்வாகத்தின் பரம்பரை அறங்காவலரால் அனுபவிக்கபட்டு வருவது கேட்புகளின்மை – நிலுவை வசூலிக்கப்படாமை மற்றும் இதர குறைபாடுகள்

இத்திருக்கோயிலில் பிரதோசக் கட்டளை நடத்துவதற்கான திரு.சோமசுந்தர முதலியார் என்பவர் 16.09.1899ல் செட்டில் மெண்டு பத்திரம் எழுதிவைத்துள்ளார். அதில் மதுரை தெற்கு வட்டம் கொக்குளம்பி கிராமத்திலுள்ள சர்வே எண் 7 / 15 உள்ள 1.76 ஏக்கர் நன்செய் நிலத்தின் மூலம் பெறப்படும் வருவாயிலிருந்து பிரதோசக் கட்டளை நடத்தப்பட வேண்டும் என எழுதி வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அறநிலைய வாரிய உத்தரவு எண் 1580 நாள் 28.03.49 ல் திட்டம் வரைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இக்கட்டளையின் பரம்பரை அறங்காவலர்களுள் ஒருவரான திரு.சங்கரன் என்பவருக்கு இந்நிலம் பசலி 1 ஆ ரூ. 5000/– வீதம் தனிப்பட்ட முறையில் 1.11.88 முதல் 31.10.91 முடிவுள்ள 3 ஆண்டுகளுக்கு ரொக்கக்குத்தகைக்கு விடப்பட்டு இந்நிலத்தில் தொழிற்சாலை அமைத்திட ஆணையர் ந.க.எண் 8014/85 / ஆர் 3 நாள் 16.9.1988 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குத்தகை காலம் முடிவுற்றதும் இந்நிலத்தினை கோயில் பொறுப்பில் கொண்டு வர ஓ.எஸ் 942/96 ன் படி மதுரை துணை ஆணையர்/ நீதிமனறத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருமங்கலம் சப்கோர்ட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு ஓ.எஸ் 825/04 என எண்ணிடப்பட்டு இவ்வழக்கின் மீது திருக்கோயிலுக்கு பாதகமாக தீர்ப்பாகியுள்ளது. இதன் பேரில் மதுரை சப்கோர்ட்டில் மேல் முறையீடு செய்ததில் (வழக்கு எண் ஏ.எஸ். 124/05) ஆலயத்திற்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டதை எதிர்த்து திரு. சங்கரன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல் முறையீடு செய்து வழக்கு எண் எஸ். ஏ. 917/07 எம். பி 1/07 படி நிலுவையில் உள்ளது.

இந்நிலம் தொடர்ந்து இவரது அனுபோகத்திலேயே உள்ள நிலையில் பல வகைக் கேட்புப்பதிவேட்டில் இவரது பெயரில் பசலி 1400 முதல் 1403 முடியவுள்ள 4 பசலிகளுக்கு மட்டும் பசலி 1 க்கு ரூ. 5000/– வீதம் ரூ. 20000/– நிலுவை கேட்பாக எழுப்பப்பட்டுள்ளது. பசலி 1404 முதல் 1418 முடியவுள்ள 14 பசலிகளுக்கு கேட்பு எதுவும் எழுப்பப்படாமல் உள்ளது. கோப்பின் படி, இவரால் பசலி 1416 க்கு ரூ.5000/– செலுத்தப்பட்டு வைப்புத் தொகையாக பேணப்பட்டுள்ளது அறியபட்டது. பசலி 1400 முதல் 1403 முடிய நிலுவை ரூ. 20000/– வசூலிக்கப்படாத போதிலும். பசலி 1404 முதல் 1420 முடிய கேட்பு ஏதும் எழுப்பப்படாத நிலையிலும் பசலி 1416 க்கு மட்டும் இவரிடமிருந்து தொகை பெறப்பட்டு வைப்புத் தொகையாக பேணப்படுவதற்கான காரணம் விளக்கப்பட வேண்டும்.

இதர குறைபாடுகள்

1) கட்டளையின் பரம்பரை அறங்காவலர்களில் ஒருவரான திரு.கே. சங்கரன் என்பவருக்கு தனிப்பட்ட முறையில் இந்நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 26 (1) ல் சி மற்றும் டி (53) 2) (1) ன் படி பரம்பரை அறங்காவலரைத் தகுதி இழக்கச் செய்யும் செயலாகும். பரம்பரை அறங்காவலருக்கு தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடப்பட்டது. மேற்படி சட்டத்திற்கு முரணான செயலாகும்.

2)சட்டத்திற்கு முரணான குத்தகைதாராக உள்ள நபரை வெளியேற்றுவதற்கு பதிலாக இத்திருக்கோவில் செயல் அலுவலர் தமது ந.க.எண் 4195/95/பி 4 நாள் 28.4.95 ல் குத்தகைதாரர் மேற்படி நிலத்தில் கட்டிடம் கட்டி தொழிற்சாலை நடத்தி வருவதால் குத்தகையை 1991 முதல் 1996 முடிய நீட்டித்து தருமாறு அனுமதி கோரியுள்ளார். இது சரியான நடைமுறையன்று. இக்குத்தகைதாரரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3)இந்நிலம் அமைந்துள்ள பகுதிக்கு வடக்குப் பக்கத்தில் இத்திருக்கோவிலில் நடைபெறும் தானகோனேரியப்பு முதலியார் கட்டளைக்குச் சொந்தமான ஏ.0.75 செண்ட் நிலம் கீழ்க்கண்ட விபரப்படி ரொக்கக்குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

சதுர அடி எண்	பரப்பு	குத்தகைதாரர்	ஆண்டு கேட்பு ரூ.பை
59 4 1.50 ல்	ஏக்கர் 0.75 செண்ட்	இராணி மங்கம்மாள் போக்குவரத்து கழகம்	35241.00

அ) ஏக்கர் 0.75 செண்ட் பரப்புள்ள நிலம் பசலி 1 க்கு ரூ 35241.00 என ரொக்கக்குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலையில் பிரதோஷ கட்டளைக்கு விடப்பட்ட 1.76 ஏக்கர் நிலத்திற்கு குறைந்த பட்ச கேட்பு செண்ட் 1-க்கு ரூ.469.88 வீதம் ரூ. 82698.88 (அல்லது) 82700.00 கேட்பாக நிர்ணயிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் பசலி 1404 முதல் கேட்பு ஏதும் எழுப்பப்படாததால் பசலி 1420 முடிய 16 பசலிகளுக்கு ரூ. 13,23,200.00 குறைந்த பட்ச வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விழப்பு தொகை இவ்விழப்பிற்கு பொறுப்பான நபரிடமிருந்து ஈடு செய்யப்பட வேண்டும்.

ஆ) மேலும் இப்பிரதோஷக்கட்டளைக்கு மதுரை மாநகர் மேலமாசி வீதி கதவு எண் 310 ல் உள்ள கட்டிடம் உரிமையாக உள்ளது. இக்கட்டிடமும் மேற்படி வாரிசுதாரர் திரு. கே. சங்கரனுக்கே வருட வாடகை கேட்பு ரூ1200.00 க்கு விடப்பட்டுள்ளது.

217

<u>இதில் கீழ்க்காணும் குறைபாடுகள் காணப்பட்டன.</u>

அ. இத்திருக்கோவிலுக்கான சொத்துப்பதிவேடு பக்கம் 134–ல் இச்சொத்து பின் கண்ட விபரப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

புல எண் 642 – ல் 1287 சதுர அடி

649– ல் 893 சதுர அடி மேலமாசி வீதி குடியிருப்பு / லேத் ஒர்க்ஸ்

ஆனால் பலவகைக் கேட்புப் பதிவேட்டில் கட்டிடத்தின் நீளம் / அகலம் குறித்த விபரங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. மதுரை மாநகரின் மையப்பகுதியில் உள்ள கட்டிடத்திற்கு இவ்வளவு குறைவாக வாடகை நிர்ணயம் செய்யப்பட்டமை குறித்து உரிய நிர்வாக நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட வேண்டும்.

ஆ. 1959 ம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் சட்டப்பிரிவு 26(1) ல் (இ) மற்றும்53 (2) (1) ன் படி அறங்காவலர் வாடகைதாராக இருப்பது சட்ட விதிகளுக்கு முரணானதாகும். எனவே வாடகைதாரரைவெளியேற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இ. மேற்கண்ட கட்டிடத்திற்கு பசலி 1405 முடிய வரிவிதிப்பு எண் 57906 ல் 1955 – 1996 கணக்கான மாநகராட்சி வரி ரூ. 3148.00 செலுத்தப்பட்டுள்ளது. (செ.சீ. எண் 891/11.3.91) ஆனால் பசலி 1406 முதல் 1418 முடிய உள்ள காலத்திற்கு இத்திருக்கோவிலிருந்து வரி ஏதும் செலுத்தப்படவில்லை. வாடகைதாரர் இக்கட்டிடத்திற்கு வரி ஏதும் செலுத்தியுள்ளாரா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மாநகராட்சி வரியினை திருக்கோயில் நிதியிலிருந்து செலுத்தி உரிய இரசீதுகள் பெற்றுத் தணிக்கைக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஈ. இத்திருக்கோவிலில் பேணப்பட்டு வரப்படும் கோப்பு எண் 4195/91 இ 2 பரிசீலினை செய்ததில் கிழ்க்கண்ட விபரங்கள் அறியப்பட்டன.

1. இணைஆணையர் மதுரை ந.க.எண் 14498. இ1 நாள் 18.11.98 ல் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் இணை ஆணையரிடம் கீழ்க்கண்ட விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

1. பிரதோஜக் கட்டளை இதுவரையில் நடத்தப்பட்டு வரப்படுகின்றதா.
2. கட்டளைச் சொத்துக்கள் யார் வசம் உள்ளன .
3. திருக்கோயில் வசம் இருந்தால் அதற்கென ஆகும் செலவுகள் மற்றும் பெறப்படும் வருமானம் குறித்து தணிக்கைக்கு பேணப்பட்டு வருகின்றதா.
4. மேற்படி கட்டளை செயல்பாடு குறித்து சிவில் நீதிமன்றங்களில் வழக்குகள் ஏதும் நிலுவையில் உள்ளதா, (அ) உத்தரவு பெறப்பட்டுள்ளதா

மேலே கண்ட கடிதத்திற்கு இணை ஆணையர் / செயல் அலுவலர் ந.க. எண். 4175 / 91 சி 2 நாள் 13.12.98 ல் பின் கண்ட வாறு பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன.

1. கட்டளை பிரதிமாதம் இரண்டு பிரதோஜங்களிலும் நடைபெற்று வருகிறது.

2. கட்டளை சொத்துக்கள் திருக்கோயில் பொறுப்பில் உள்ளன.

3. மேற்படி சொத்துக்களிலிருந்து வரும் வருமானம் மற்றும் செலவுகள் பொதுக்கணக்கில் பேணப்படுகின்றன. தனியாக கணக்குகள் பேணப்படவில்லை.

4. மேற்படி கட்டளை சொத்தினை திருக்கோவில் பொறுப்பில் கொண்டு வர மதுரை நடுவர் நீதிமன்றத்தில் ஓ. எஸ். 942 . 96 வழக்கு நிலுவையிலுள்ளது.

5. கட்டளை செயல்பாடு குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் நிலுவையிலில்லை.

மேலே குறிப்பிட்ட பதில்களை வ.எண் 2 ல் கட்டளைச் சொத்துக்கள் திருக்கோவில் பொறுப்பில் உள்ளதாகவும் வ.எண் 4 ல் கண்ட பத்தி கட்டளை சொத்தினை திருக்கோவில் பொறுப்பில் கொண்டு வர வழக்கு உள்ளது எனவும் தெரிவித்திருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. சரியான விபரம் தெரிவிக்கப்பட வேண்டும்.

மதுரை இணை ஆணையர் ந.க.எண் 14498 / 98 / இ1 நாள் 11.2.99 ல் திரு. கே. சங்கரன் தவிர மீதமுள்ள 6 வாரிசுதாரர்களின் பெயர் மற்றும் முகவரியைத் தெரிவிக்குமாறும் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார் எனவும் விபரம் தெரிவிக்கக் கோரப்பட்டுள்ளது.

இத்திருக்கோவில் இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலர் ந.க. எண் 4175 / 91 / சி2 நாள் 31.3.99 ல் திரு. சோமசுந்தர முதலியார் 16.8.1899 ல் செட்டில்மென்ட் பத்திரப்படி 6 வாரிசுதாரர் களுக்கும் நடைமுறை அறங்காவலர்களாக உள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு மதுரை இந்து சமய அறநிலையத் துறை ஒ.மு.எண் 14498 / 98 / இ 2 நாள் 19.4.99 ல் மேற்படி கட்டளை தொடர்பாக 1948 ம் ஆண்டில் பெறப்பட்ட நிர்வாகத்திட்டம் 1959 ம் ஆண்டு பெறப்பட்ட நிர்வாகத்திட்டம் / 1959 ம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளுக்கு முரணாக இருப்பதால் 1959 ம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை சட்டப் பிரிவு 64 (1) ன் கீழ் நிர்வாகத்திட்டம் பெற்றுக் கொள்ளும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து உரிய விரைவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

159/164

பரவை சேனாதிபதி மானிய நிலங்கள் – திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றிருந்தும் நிலங்களை கையகப்படுத்த முயற்சி ஏதும் எடுக்காதது – ஒன்றரை கோடிக்கும் அதிக மதிப்புள்ள சொத்து – திருக்கோயில் வசம் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும்– குறைபாடுகள்

மதுரைக்கு அருகே பரவை கிராமத்தில் தேசீய நெடுஞ்சாலைக்கு அண்மையில் சேனாதிபதி மானிய நிலங்கள் மற்றும் புல எண்– 141/1 ல் 2.09 ஏக்கர் நிலங்கள் மற்றும் புல எண் – 147/1 ல் 1.48 ஏக்கர் நிலங்கள் ஆக மொத்தம் 3.57 ஏக்கர் சிறு கொடை புலங்கள் சட்டம் 30/63 ன் கீழ் 8(2)(11)(ம) 21 ன் படி நிபந்தனை பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது.

மானியதாரர் திரு. நாகராஜராவ் என்பவர் ஊழியம் செய்யாமல் பாரா தீனம் செய்துள்ளார். கோப்பு எண் – 3858/2000/இ4 ஐ பரிசீலினை செய்ததில் 23.08.96 முதல் 10 ஆண்டுகளுக்கு கற்பகம் மெட்ரிகுலேசன் பள்ளிக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. மேற்படி நிலத்தில் நிரந்தரக் கட்டிடம் கட்டுவதையறிந்து, மதுரை நடுவர் நீதிமன்றத்தில் மேற்படி நிலத்தில் கட்டுமானப் பணி நடத்த தடைகோரி ஒ.எஸ் 212/2000 ல் வழக்கு தொடரப்பட்டு 28.08.01 வரை தடையாணை பெறப்பட்டுள்ளது. தற்போது இந்நிலத்தில் கற்பகம் மெட்ரிகுலேசன் பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு பள்ளி நடைபெற்று வருகின்றன.

இதனிடையே மானியதாரர் ஊழியம் செய்யாமலும் சொத்தை பாராதீனம் செய்தமையாலும் நிலங்களை கோவில் வசம் ஒப்படைக்க கோரி மாவட்ட வருவாய் ஆட்சியர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

மதுரை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு ஓ.எஸ் 212/2000 மற்றும் ஐ.ஏ 19 / 2001 ல் 28.11.03 ல் வழங்கப்பட்ட தீர்ப்பில் சம்பந்தப்பட்ட புலங்கள் திருக்கோவிலுக்கு முழு உரிமையுடையவை என்றும் பிரதிவாதி,வாதிக்கு செலவுத் தொகை தர வேண்டுமென்றும் தீர்ப்புரை பெறப் பட்டுள்ளது. நிரந்தர உறுத்துக் கட்டளை மனு தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் (1899/01) பிரதிவாதிகள் திரு. எஸ். நாகராஜன் மற்றும் 13 நபர்கள் மானிய நிலங்களைத் திருக்கோயில் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும் 10.11.03 ல் தீர்ப்பு வழங்கி உள்ளார்.

தாவா சொத்தில் எவ்வித வில்லங்கமோ / கட்டுமானமோ எதுவும் ஏற்படுத்தக் கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை கேட்டுத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் 212 / 00 ன் (மதுரை மாவட்ட உரிமையியல் நீதி மன்றம்) 28.11.03 தீர்ப்பாணையை நீக்கறவு செய்யக்கோரி மதுரை, முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மே.வ.எண் – 6 / 04 தொடரப்பட்டு 07.06.05 ல் மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, கீழ் ஆணை நீதிமன்றத்தில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பினை உறுதி செய்யப் பட்டுள்ளது.

மேலும் மாவட்ட வருவாய் ஆட்சியரின் தீர்ப்பின் படி தாசில்தார் மேற்படி நிலத்தை கையகப்படுத்திக் கொடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நிலங்களுக்கு திருக்கோயிலின் பெயரில் பட்டா எண் 323 வருவாய் துறையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இன்னும் சொத்துக்களை கையகப்படுத்தாத நிலையில் உள்ளது.

விரைவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, மேற்படி சொத்தினை திருக்கோயில் வசம் கொண்டு வந்து பாதுகாக்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

160) **கள்ளிக்குடி அருகே வடக்கம்பட்டி இனாம் புஞ்சை நிலங்கள் – திருக்கோயிலின் பெயரில் பட்டா பெறப்பட்டது – குத்தகை நிலுவைக்காக வழக்கு தொடர்ந்தது – மற்றும் உழவடைதாரர்களை குத்தகைதாரர்களாக மாற்றம் செய்யப்பட ஆணையருக்கு பரிந்துரை – உத்திரவு பெறப்பட வில்லை – குறைபாடு**

165

இவ்வாலயத்திற்கு சொந்தமான கள்ளிக்குடி அருகேயுள்ள வடக்கம்பட்டியில் 31.77 ஏக்கர் புன்செய் மைனர் இனாம் நிலங்கள் திருக்கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டு, சுவாதீனம் எடுப்பதற்காக முதனேற்பு வழக்கு எண் 409 / 1984 தொடரப்பட்டு திருக்கோயிலுக்கு சாதகமாக 13.02.99 ல் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

வழக்குகள் நிலுவையிலிருக்க, மேற்படி நிலத்தின் உழவடைதாரர்களை குத்தகைதாரர்களாக மாற்றக் கொள்ள விருப்பம் தெரிவித்ததால், அவர்களை குத்தகைதாரர்களாக மாற்றம் செய்ய அனுமதி வேண்டி செயல் அலுவலரால் தனது கடிதம் ந.க.எண் 2737 / 00 / இ 2 நாள் 02.05.08 ல் ஆணையருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படவில்லை.

உரிய உத்தரவுகள் பெறப்படவும், நிலங்களை திருக்கோயிலின் சுவாதீனத்தின் கீழ் கொணரப் படவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

161)
160

<u>மானகிரி கிராமம் – ஊழிய மானிய நிலங்கள் – நகர்ப்புற மனைப்பகுதியாக உள்ளது– ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு விற்பனை செய்தது – கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டது – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் – குறைபாடுகள்</u>

இத்திருக்கோயிலின் உப கோயிலான அருள்மிகு செல்லத்தம்மன் கோவிலுக்குச் சொந்தமான கீழ்க் கண்ட நிலங்கள் காவல் மானியங்களாக விடப்பட்டுள்ளன.

சதுர .அடி. எண் மானகிரி கிராமம்	பரப்பு ஏக்கர்
2014 2015	1.49

அலுவலக கோப்பு எண் – 2593/95/சி2 ஐ பரிசீலித்த போது கீழ்க் கண்ட விபரங்கள் அறியப்பட்டன.

மேலே குறிப்பிட்டநிலங்கள் முன்னாள் மன்னர்களால் காவல் மானியமாக விடப்பட்டுள்ளது. ஆனால் இந்நிலங்களை பல ஆண்டுகளாக பல நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, குடிவாரம் என்ற பெயரில், திரு. கே. கருப்பன் அம்பலம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து,தம் பெயரில் பட்டா பெற முயற்சித்துள்ளார். திருக்கோவில் நிர்வாகத்தால் , மதுரை செட்டில் மென்ட் தாசில்தார் முன்னிலையில்,வழக்கு பதியப்பட்டு, வழக்கு நடந்ததில் செட்டில் மென்ட் தாசில்தார் உத்தரவு எஸ்.ஆர்.எண் – 985/எம் 1/ஆக்ட்/எம்.டி.யு.66 நாள் 17.10.67 ல் இந்த நிலங்கள் யாவும், இனாம் ஒழிப்புச் சட்டம் 30/ஊ பிரிவு 8(1) ன் படி திரு.கே. கருப்பணன் அம்பலத்திற்கு ரயத்துவாரி பட்டா வழங்கிட ஆணையிடப்பட்டது.

இதனை எதிர்த்து, திருக்கோவில் நிர்வாகம் மேல் முறையீடு செய்து, சி.எம்.ஏ 150/71 ல் வழக்கு தொடர்ந்து 03.09.75 ல் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் பெயரில் பட்டா வழங்க ஆணை பெறப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பினை எதிர்த்து திரு.கே. கருப்பணன் அம்பலம், சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ததில், தீர்ப்பினை எஸ்.டி.ஏ.எண் – 234/75 நாள் 04.10.78 ல் நடுவர் நீதிமன்றத்தில் உத்தரவு உறுதி செய்யபப்பட்டுள்ளது. மேற்காணும் நிலங்களைத் திருக்கோயில் வசம் கையகப்படுத்த கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஓ.எஸ் 994/ 96 மற்றும் ஐ.ஏ 739/96 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு முடிவுற்று திருக் கோவிலுக்குச்சாதகமாகத் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

தற்போது கோப்பு எண் – 7072/77/ சி ஐ பரிசிலித்ததில் ஓ.எஸ் 431/96 ன் படி மானகிரி கிராம இனாம் நிலத்திற்கான ரயத்துவாரி பட்டா கோயிலுக்கு ஏற்பட்டதனைத் தொடர்ந்து ,வேறு நபர்களுக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தாசில்தார் மதுரை வடக்கு ஆகியோர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு 09.12.01 ல் திருக்கோயில் சார்பில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆக்கிரமிப்பிலுள்ள நிலங்களை திருக்கோவில் பொறுப்பில் கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது 90/2006 என்ற எண்ணிடப்பட்டு வழக்கின் மூலம் மதுரை முதலாவது சப்கோர்ட்டில் வழக்கு நிலுவையிலுள்ளது.

2)மேற்காணும் நிலங்களின் விபரங்களை,திருக்கோயிலுக் கான 1-15 வரையிலான தனித்துணை ஆட்சியரின் சிறப்புப் பதிவேடு எண் – 3 ல் இடம் பெறாமையினால் இந்நிலங்களை திருக்கோயிலின் சொத்துப் பதிவேட்டிலும், 1-3 வரையிலான பதிவேட்டிலும். இடம் பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3) மேலும், இந்நிலங்களின் விபரத்தை, பலவகைக் கேட்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

இக்குறைபாடுகளை களைய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

162) வழக்கு–ஓ.எஸ். 808/10–தொடர் நடவடிக்கை எடுத்து வழக்கினை முடிவிற்கு கொண்டு வந்து, நிலங்களை திருக்கோயில் வசம் கொணர நடவடிக்கை தேவை. (கோப்பு எண். 748 2010 இ1)

இத்திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட புது இராநாதபுரம் ரோடு, மதுரை நகர், மீனாட்சிபுரம் டி.எஸ்.2463–ல் உள்ள 1.47 ஏக்கர் நன்செய் நிலம் வருடம் ஒன்றிற்கு ரூ. 510/– வீதம் குத்தகைக்கு விடப்பட்டு பசலி 1419 வரை வசூல் செய்யப்பட்டுள்ளது.

பானையூர் கால்வாய் புதிதாக தோண்டப்படும் பொழுது, அதிலிருந்து கழிவு நீர் மற்றும் சகதிகளை திருக்கோயில் நிலத்தில் பாய்ச்சியும், மேலும் தென்பக்கம் 6 அடி உயரமும், 1 1/2 அடி அகலமும் உள்ள கருங்கல் சுவர் உடைக்கப்பட்டு, கருங்கற்கள் களவாடப்படுவதாகவும், மேற்படி நிலத்தில் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாகவும், வரப்பெறற புகார்களின் அடிப்படையில், இவ்வாலயத்தின் அலுவலர்களால் நேரிடையாக மேற்படி நிலத்தினை பார்வையிட்டபோது, பனையூர் கால்வாய் சகதிகள் திருக்கோயில் நித்தில் போடப்பட்டுள்ளதாகவும், கருங்கல் சுவர்கள் சேதமடைந்திருப்பதும் மற்றும் மேற்படி நிலத்தில் விவசாயப் பணிகள் ஏதும் செய்யப்படாமல் கழிவு நீர் பாய்ச்சப்பட்டிருப்பதும் உண்மையென தெரிய வந்துள்ளதன் அடிப்படையில், திருக்கோயில் நிலத்தினை உடனடியாக திருக்கோயில் வசம் ஒப்படைக்க அறிவிக்கை ஒன்று இத்திருக்கோயிலின் இணை ஆணையர் /செயல் அலுவலரின் ந.க.எண். 748/2010–1 இ1 நாள். 09.04.2010 ல் திரு.ஆர்.ராமச்சந்திரன் என்பாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்காணும் உழவடைதாரரின் வாரிசுகள் ஆர். ராமலட்சுமி மற்றுமுள்ள இருவர் தங்களை திருக்கோயில் நிலத்திலிருந்து காலி செய்யக் கூடாது எனவும், நிரந்தர உறுத்தும் கட்டளைக் கோரியும் ஓ.எஸ். 808/10 என்ற எண்ணில் மதுரைமாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேலும் மேற்காணும் மூவரும் 689/2010 என்ற எண்ணில் மதுரை முன்சீப் கோர்ட்டில் மனு செய்து நிலத்தை விட்டு வெளியேற்றக்கூடாது எனவும், ஒரிஜினல் வழக்கு முடியும் வரை இடைக்காலத்தடை கேட்டும் வழக்குத் தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

மேற்காணும் வழக்கு தொடர்பாக விரைவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வழக்கினை முடிவுக்கு கொணரவும், நிலங்களை ஆலயத்தின் கைப்பற்றில் கொணரவும் தக்க மேன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

225

163) ~~109.~~ <u>மதுரை நகர், வண்டியூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் கிழக்கு பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்தது–</u>

இத்திருக்கோயிலுடன் இணைந்த வண்டியூர். அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலின் கிழக்கு பகுதியில் உள்ள இவ்வாலயத்திற்கு சொந்தமான 80 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. இவ்வாலயத்திற்கு அதிகளவில் சேவார்த்திகள் வருகின்ற நிலையில் கிழக்குப் பக்கம் நுழைவு வாயில் இருந்தால் பொதுமக்கள் தரிசனம் செய்தவற்கு வசதியாக இருக்கும். எனவே கிழக்குப் பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்றி கிழக்குப் பக்கம் வாசல் வைக்க ஏதுவாக இவ்வாலயத்திற்கான சொத்துப் பதிவேட்டில் டி.எஸ். எண். 236 /1ல் டவுன் சர்வே வார்டு 1 பிளாக் எண் 7–ல் மதுரை தெற்கு வட்டம், ஐராவதநல்லூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் 80 சென்ட் என உள்ளது. மேலும் கிராம சிட்டா அடங்கலிலும் பட்டா எண். 236–ல் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடமுள்ளது என பதிவாகியுள்ளது. அ பதிவேட்டிலும் 80 சென்ட் நிலம் என காட்டப்பட்டுள்ளது. எனவே, இவ்வாலயத்தின் நலன் கருதியும், பொது மக்கள நலன் கருதியும் கிழக்குப்புறம் திருக்கோயிலுக்கு சொந்தமான (அண்ணாநகர் மேம்பாலம் அருகிலுள்ள) இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித்தரும்படி இணை ஆணையர்/ செயல் அலுவல ரது ந.க.எண். 518/08 இ4 நாள். 11.01.2011 ல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் வரையப்பட்டுள்ளது.

இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண். ஜே3/3295/2011 நாள். 04.02.2011 ல் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் வரையப்பட்டுள்ளது. அதில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுடன் இணைந்த உபகோயில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான 80 சென்ட் இடத்தில் கிழக்குப் பக்கமாக உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றி அறிக்கை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

எனவே இது குறித்து தொடர் நடவடிக்கைகள் எடுத்து ஆக்கிரமிப்பை அகற்றி பல கோடி மதிப்புள்ள இவ்விடத்தினை திருக்கோயில் வசம் கொண்டு வந்து திருக்கோயில் நலனிற்கு பயன்படுத்தப்படவேண்டும்.

164) <u>பசலி 1410–கூடல் செங்குளம் பண்ணையில் உள்ள தென்னை மரங்களின் மீதான மேற்பலன் உரிமம் குத்தகைக்கு விடப்பட்டது–குத்தகை தொகை ரூ. 26015–00 செலுத்தாமைக்கு வழக்கு தொடர்ந்தது நீதிமன்ற தீர்ப்பின்படி செலவுத் தொகையுடன் ரூ. 32,511–00 நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது–நீதிமன்றத்திலிருந்து தொகையினை பெற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். (கோப்பு எண். 803 /98/இ4)</u>

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கூடல் செங்குளம் பண்ணையில் உள்ள தென்னை மரங்களின் மீதான மேற்பலன் உரிமத்தை பசலி 1408 முதல் பசலி 1410 முடியவுள்ள மூன்றாண்டுகளுக்கு பொது ஏலத்தில் குத்தகைக்கு எடுத்த திரு.என்.எஸ். நாதன் என்பார் பசலி 1410 க்கு மட்டும் குத்தகை தொகை ரூ.26015–00 செலுத்தாமையால் மேற்படியார் மீது ஓ.எஸ். 205/01 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டு டிகிரி ஆகி உள்ளது. தீர்ப்புத் தொகையினை செலுத்தாததால் இ.பி.எண். 20/06 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அன்னார் மதுரை ரயில்வேயில் டிக்கட் பரிசோதகராக பணிபுரிந்து வருகின்ற நிலையில், நீதிமன்ற தீர்ப்பின்படி, அன்னாரது ஊதியத்தில் இருந்து ரூ. 32,511–00 பிடித்தம் செய்து, அத்தொகை காசோலை மூலம் தென்னக ரயில்வே கோட்ட அலுவலக கடிதம் ந.க.எண். 21/பி353/இபி/20/06 நாள். 27.11.2008–ல் மாவட்ட முனிசிப் கோர்ட்டில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் தொகையினை நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற கு.கோ.ப.எண். 28–ல் கடிதம் ஒன்று 07.01.2011 ல் வைக்கப்பட்டுள்ளது. தொகை பெறப்பட்ட விபரம் அதற்கு பின்னர் அக்கோப்பில் இல்லை. தொகை பெறப்படட விபரத்தினை தணிக்கைக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

165) <u>**வழக்கு-பொன்மேனியில் கடித எண். 154/2-ல் உள்ள 2.28 ஏக்கர் நிலத்தில் பாதையிடம் கேட்டு வழக்குத் தொடர்ந்தது-வழக்கு எண். ஓ.எஸ். 916/2010 ஐ தொடர் நடவடிக்கை மூலம் முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.**</u>

<u>**(கோப்பு எண் 4153/2010/இ4)**</u>

மதுரை தெற்கு வட்டம் பொன்மேனியில் இவ்வாலயத்திற்கு சொந்தமான சர்வே எண். 154/2 ல் உள்ள 2.28 ஏக்கர் இடத்தினை நீதிமன்றம் மூலம் திருக்கோயில் வசம் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நிலத்திற்கு அருகாமையில் உள்ள சர்வே எண். 153/4, 154/3, 154/5 ஆகிய சர்வே எண்களில் உள்ள இடங்களில் குடியிருப்பவர்கள் மற்றும் இ.எம். சுப்பிரமணயி நகர் மற்றும் அதன் குடியிருப்போர் சங்க செயலர் திரு.வி.எஸ். கோவிந்தன் என்பார் பெயரிலும் திருமதி. வள்ளி என்பார் பெயரிலும் (வாதியாக) எதிர் தரப்பில் இவ்வாலய இணை ஆணையர் /செயல் அலுவலரை 1 வது எதிர்வாதிகயாகவும் மதுரை மாநகராட்சி ஆணையரை 2 வது வாதியாகவும் சேர்த்து ஓ.எஸ். 916/2010 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து பாதையிடம் கேட்டும், நிரந்தர தடையுத்தரவை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

தற்போது மதுரை நகரின் பரபரப்பு மிகுந்த பகுதியாக, மக்கள் போக்குவரத்து/குடியிருப்பு மிகுந்த பகுதியான /அதிய விலை மதிப்புள்ள பகுதியான இவ்விடம் தொடர்பான வழக்கினை தொடாநடவடிக்கை எடுப்பதன் மூலம் முடிவுக்கு கொண்டு தக்க மேன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

228

166) ~~118~~. வழக்கு–திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியதை எதிர்த்து வழக்கு எண். ஓ.எஸ். 195/02 நடைபெற்று வரும் வழக்கினை விரைவு நடவடிக்கைகள் மூலம் முடிவிற்கு கொண்டுவரப்படவேண்டும். (கோப்பு எண். 3818/95 இ4)

இவ்வாலயத்திற்கு சொந்தமான சுண்ணாம்புக்காரத் தெருவில் உள்ள குடியிருப்பு எண். 50–க்கு அருகிலுள்ள குடியிருப்பு எண். 49–ல் குடியிருப்பவர் திருக்கோயிலுக்கு சொந்தமான கட்டிடத்தை ஒட்டி 2 அடி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியதை எதிர்த்து திருக்கோயில் சார்பில் ஓ.எஸ். 195/02 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று வருகிறது.

மேற்படி வழக்கில் இறுதியாக 20.01.2011 ல் வாய்தாவாகி நிலுவையில் உள்ளது. ஆக்கிரமிப்பை அகற்ற தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

167) ~~110.~~ **வழக்கு–சீர்பாதம் தாங்கி மானிய நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதை அகற்றிட தொடர் நடவடிக்கை எடுத்து வழக்கினை முடிவு செய்து பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை மீட்க வேண்டும்–(சேமிப்பு எண். 5072/77/இ4)**

இவ்வாலயத்தின் உபயோகிலான செல்லூரிலுள்ள அருள்மிகு திருவாப்புடையார் ஆலயத்தின் சீர்பாதம் தாங்கி ஊழியம் செய்தவற்காக விடப்பட்ட மொத்தமுள்ள 8.37 ஏக்கர் நிலத்தில் மேற்படி திருக்கோயில் அமைந்துள்ள இடத்திற்கு முன்புறத்திலும் பின்புறத்திலும் உள்ள 178 குடியிருப்புகள் திருக்கோயில் இடத்தை ஆக்கிரமித்து கட்டிடங்களாக /ஓட்டு வீடுகளாக கட்டி குடியிருந்து வருகின்றனர்.

தமிழ்நாடு இனாம் ஒழிப்பு சட்டம் 30/63 ன்படி மதுரை மாவட்டம் மதுரை தெற்கு வட்டம் புல எண் 1401/01 மற்றும் பல எண்களில் உள்ள 8.37 ஏக்கர் நிலத்திற்கும் மதுரை, முதன்மை சார்வு நீதிமன்ற சி.எம்.எ.15/83 நாள். 13.07.1995 ல் திருக்கோயில் பெயருக்கு பட்டா வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இத்தீர்ப்பினை எதிர்த்து எஸ்.ஆர். 16/02 ல் மேல் முறையீடு எதிர்வாதிகளால் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாக குறிப்புக் கோப்பில் பதிவுகள் உள்ளன.

இது குறித்து தொடர் நடவடிக்கைகள் எடுத்து வழக்கினை முடிவிற்கு கொண்டு வரவும், திருக்கோயிலின் பெயரில் பட்டா பெறவும் வேண்டும்.

230

168)

~~112.~~ **வழக்கு-ஓ.எஸ். 267/90 மதுரை நகர், பேச்சியம்மன் படித்துறை கதவிலக்கம் எண் 1-ல் உள்ள டவுன் சர்வே எண். 1197/7-1 ல் விஸ்தீரணம் 28961 சதுர அடியுள்ள சொத்து-பலகோடி மதிப்புள்ள இவ்விடத்தை தொடர் நடவடிக்கை மூலம் வழக்கினை முடிவிற்கு கொண்டு வந்து, இடம் ஆலயக்கைப்பற்றில் கொணரப்பட வேண்டும். (கோப்பு எண். 6404/2000/இ4)**

மதுரை நகரில், பேச்சியம்மன் படித்துறை கதவிலக்கம் எண் 1-ல் உள்ள டவுன் சர்வே எண். 1197/7-1 ல் விஸ்தீரணம் 28961 சதுர அடியுள்ள சொத்தினை (பேச்சியம்மன் படித்துறை வவ்வாலடி மானிய நிலம்) திருக்கோயில் கைப்பற்றில் கொண்டு வர வழக்கு எண். ஓ.எஸ். 267/90 ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இணை ஆணையர் /செயல் அலுவலரின் ந.க.எண். 6404/2000/இ4 நாள். 12.03.2003 ல் ஓ.எஸ். எண். 267/90 வழக்கானது திரு. செல்லையா பிள்ளை என்ற முத்தழகு பிள்ளை வகையறாக்கள் 53 பேர் மீது இவ்வாலயத்திலிருந்து மதுரை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் திருக்கோயில் சொத்துரிமை பரிகாரம் கேட்டும் மற்றும் மற்றும் மேற்படி சொத்தினை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால், வாரிசுதாரர்களை வழக்கில் சேர்க்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதென ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை மதுரை, அடிசனல் முனிசீப் கோர்ட்டிற்கு மாற்றப்பட்டு ஓ.எஸ். 1114/2010 என்ற புதிய எண்ணில் நம்பராகி வழக்கு நிலுவையிலுள்ளதென கோப்பு பக்க எண். 11 ல் 31.01.2011 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரப்படியுள்ள 28961 சதுர அடி இடம் அமைந்துள்ள இடம், நகரின் மையப்பகுதியில் அமையப்பெற்ற பலகோடி மதிப்புள்ள இடமாகும். தொடர் நடவடிக்கை எடுப்பதன் மூலம் வழக்கினை முடிவிற்கு கொண்டு வந்து இந்த இடத்தினை திருக்கோவிலின் கைப்பற்றில் கொணரப்படவேண்டும்.

169) ~~11.~~ **<u>வழக்கு வாடகைதாரர் வாடகைத் தொகையை செலுத்தாத காரணத்தால் வாடகை பாக்கியை வசூலிக்கவும், வாடகைதாரரை வெளியேற்றவும் வழக்கு தொடர்ந்து திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பானது—அப்பீல் செய்தது—வழக்கினை முடிவுக்கு கொண்டுவர தொடர் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். (கோப்பு எண் 4469/93/பி5)</u>**

மதுரை நகர் சிம்மக்கல்லிலுள்ள இவ்வாலயத்திற்கு சொந்தமான கடை எண். 174–ல் வாடகைதாரராக உள்ள திரு. ஒண்டிமுத்துபிள்ளை என்பார் வாடகை பாக்கியை செலுத்தாத காரணத்தினால் வாடகையை வசூல் செய்யவும், வெளியேற்றவும் வழக்கு எண். ஓ.எஸ். எண். 593/95 ல் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்று 17.02.2004–ல் டிகிரி ஆகியுள்ளது. அதன்படி பிரதிவாதி வழக்குச் சொத்தை 2 மாதகாலத்திற்குள் காலி செய்து வாதி வசம் ஒப்படைக்க வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் தீர்பின்படி பிரதிவாதியை காலிசெய்ய மேற்கண்ட நீதிமன்றத்தில் இ.பி. மனு போடப்பட்டு இ.பி.எண். 258/04 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று வருகிறது.

மேற்படி தீர்ப்பு ஓ.எஸ். 593 /95 ஐ ஆட்சேபித்து வாடகைதாரர் திரு. ஒ.மு. நாகேந்திரன், என்பார் மதுரை சப்கோர்ட்டில் மேல்முறையீடு செய்து எ.எஸ். 182/05 ல் நம்பராகி அவ்வழக்கிலும் திருக்கோயிலுக்கு சாதகமான தீர்ப்பு உள்ளது. இந்நிலையில் எ.எஸ். 182/05 வழக்கின் தீர்ப்பினை ஆட்சேபித்து சென்னை, உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் எஸ்.எ. 172/06 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து, எ.எஸ். 182/05 க்கான தீர்ப்பின் மீது எஸ்.எ. 172/06 மேல் முறையீட்டின்படி இரண்டு வார காலத்திற்கு இடைக்கால தடை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இ.பி. 258/04 வழக்கிற்கு 06.07.2006–ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்குகள் தொடர்பாக எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படாதது குறிப்புக்கோப்பின் மூலம் கண்டறியப்பட்டது. ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில், இவ்வழக்கில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன்? என்பதற்கு விளக்கமளிப்பதுடன் இது தொடர்பாக தக்க மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும்.

மேலும் இவ்வழக்கு தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்து, வாடகை நிலுவையை வசூலிப்பதுடன், வாடகைதாரரை வெளியேற்றவும் ஆணை பெறப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

170) ~~165.~~ வழக்கு–நில அனுபவதாரர்களை வெளியேற்ற வழக்கு தொடர்ந்து–இ.பி.வழக்கு எண். 197/99 ல் ஆஜராகாததால் டிஸ்மிஸ் ஆனது–வழக்கினை புதுப்பிக்க புதிய வழக்கு எண். இ.ஏ. 421/2010 ல் வழக்கு நடைபெற்று வருதல்–தொடர் நடவடிக்கை மூலம் வழக்கினை முடிவுக்கு கொண்டு வந்து நிலங்களை ஆலயக் கைப்பற்றில் கொணரப்பட வேண்டும் (கோப்பு எண். 7400/76/இ4)

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சூரக்குண்டு கிராமத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் சர்வே எண். 19/4 ல் உள்ள 1.43 ஏக்கர் புஞ்சை நிலத்தில் திரு. கே. சுப்பையா என்பவர் ஓட்டு வீடு கட்டி, தென்னை மரம், மாங்கன்று, தேக்கு கன்றுகள் வைத்து குடியிருந்து வருகிறார். அதே போல் சர்வே எண். 20/1–ல் உள்ள 2.20 ஏக்கர் நிலத்தில் திருவாளர்கள் காஞ்சீலனம், தனிக்கியம், அரசப்பன் ஆகிய மூவரும் கூரைவீடு போட்டு, மாடி கட்டி, வசிக்கிறார்கள். (இதன் விபரங்கள் வழக்கு எழுத்தர் மற்றும் நீதிமன்ற எழுத்தர் ஆகிய இருவரும் நேரில் சென்று பார்த்தில் அறிந்ததாக குறிப்புக் கோப்பில் உள்ளது)

மேற்காணும் 3.63 ஏக்கர் நிலத்தினை திருக்கோயில் பொறுப்பில் கொண்டு வரநில அனுபவதாரர்கள் மீது மதுரை நடுவர் நீதிமன்றத்தில் ஓ.எஸ். 733/83 என்ற எண்ணில் வழக்குத் தொடரப்பட்டு திருக்கோயிலுக்கு சாதகமாகி பின் இ.பி. 197/99 என்ற எண்ணில் நிறைவேற்றுதல் மனு தாக்கலாகி, நீதிமன்ற அமினா முன்னிலையில் பொஷிஷன் எடுக்கும் நிலையில், திருமதி. கல்யாணி அம்மாள் என்பவர் ஓ.எஸ். 135/01, ஐஏ 127/01 என்ற எண்களில் வழக்குத் தொடர்ந்து நடந்து வந்ததில் மேற்படி வழக்கானது மேலூர் தாலுகா கோர்ட்டிற்கு ஓ.எஸ். 341/04 என்ற எண்ணில் மாறுதலாகி வழக்கு நடைபெற்று வந்ததில், வாதி ஆஜராகாததால் expartee தீர்வு ஏற்பட்டு 22.06.2007 ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இ.பி. 197/99 வழக்கு மேலூர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் Steps என்று வரப்பெற்றுள்ளது. இந்நிலையில், மேலூர் வழக்கறிஞர் திரு.வி.ஆர். சுப்பையா என்பவர் இபி. வழக்கில் ஆஜராக வில்லை. பின் 24.11.2009–ல் plantiff is absent E.P. is dismissed என உத்திரவாகியுள்ளது.

எனவே மீண்டும் டிஸ்மிஸ்டு ஆன இ.வி. 197/99 வழக்கினை புதுப்பிக்க Restoration petition தாக்கல் செய்து புதிய வழக்கு எண். இ.எ. 421/2010 என்ற எண்ணில் நம்பராகி தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது.

அவ்வப்போது சரியான நேரத்தில் வழக்கு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருந்தால் இ.பி. வழக்கு தள்ளுபடியாயிருக்க வாய்ப்பில்லை. இனியாவது தொடர் நடவடிக்கைகள் எடுத்து வழக்கினை முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

171) **<u>பிர்லா பயணிகள் தங்கும் விடுதி - போதிய வருவாய் ஈட்டப்படவில்லை - குளிர் சாதன வசதியுள்ள அறைகள் வாடகைக்கு விடப்படவில்லை மற்றும் குறைபாடுகள்</u>**

<u>அ) பிர்லா பயணிகள் தங்கும் விடுதி - போதிய வருவாய் ஈட்டப்படவில்லை - குறைபாடுகள்.</u>

இத்திருக்கோவிலுக்கு சொந்தமான பிர்லா தங்கும் விடுதி திருக்கோவிலுக்கு அருகில் மேலச்சித்தரை வீதியில் அமைந்துள்ளது. இவ்விடுதியில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள 24 அறைகளுக்கு அவற்றிற்கு எதிரே காண்ப்பிக்கப்பட்டபடி வாடகை வசூலிக்கப்படுகிறது.

அறை எண்கள்	மொத்த அறைகள்	ஒருநாள் வாடகை ரூ. பை	ஆண்டு 1 க்கு வர வேண்டிய வாடகை ரூ.பை
1) 1, 2, 3, 6, 7, 8, 12, 13, 14, 15 (இரு படுக்கை வசதி)	10	200	7,30,000/-
2) 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24 (மூன்று படுக்கை வசதி)	9	300	9,85,500/-
3) 4, 5, 9, 10 &11 (குளிர் சாதன வசதி உள்ளவை)	5	முக்கிய பிரமுகர் களுக்காக பயன் படுத்தப்படுகிறது. வாடகை இல்லை.	....
	24		17,15,500/-

இவ்விடுதியின் வாடகையாக –ம் பசலி 1420ல் ரூ. 7,53,525/- வரவாகியுள்ளது. இது மொத்தம் வசூலாக வேண்டிய தொகையில் 43.92 % ஆகும். இதன்படி 50 % கூட வருவாயாக ஈட்டப்படவில்லை.

மேலும் தணிக்கையாண்டில் பிர்லா விடுதி வாடகை குறைவாக வசூலாகியுள்ளதையும், பிர்லா விடுதி வாடகை வரவினை விட பராமரிப்புச் செலவுகள் அதிகமாக உள்ளதையும், தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடுதி பக்தர்கள் பயன்பாட்டிற்காக இலாப நோக்கின்றி நடத்தப்பட்டு வந்தாலும், இவ்விடுதி நடத்துவதன் மூலம் திருக்கோவிலுக்கு நஷ்டம் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆதலின் பிர்லா விடுதி வாடகை வருவாயினை பெருக்கிட தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

ஆ)பிர்லா விஷ்ரம்–தங்கும் விடுதி – அறைகள் வாடகைக்கு விடப்படவில்லை– குறைபாடுகள்.

இவ்விடுதியில் அறை எண். 10 மற்றும் 11 ம் அறை எண். 4 மற்றும் 5 ம் ஒரே அறைகளாக சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி ஏதும் பெறப்படவில்லை. மேலும் இதில் குளிர்சாதனப்பெட்டியும் பொருத்தப்பட்டு அறைகள் யாவும் முக்கிய பிரமுகர்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. தணிக்கை பசலிகளில் இவை மற்றவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு அதன் மூலம் வருவாய் ஏதும் ஈட்டப்படவில்லை. இவ்வாறு வாடகைக்கு விடப்படாமல் முக்கிய பிரமுகர்களுக்காக பயன்படுத்துவதற்கு அறங்காவலர் குழுவின் தீர்மானமோ, ஆணையரின் தனி அனுமதியோ பெறப்படவில்லை. விரைவில் உரிய அனுமதியை பெற்றுதணிக்கைக்கு தாக்கல் செய்திடல் வேண்டும்.

மேலும் தணிக்கைப் பசலியில் மேற்படி அறைகள் முக்கிய பிரமுகர்களுக்கு என பயன்படுத்தப்பட்ட விபரத்தை சரிபார்க்க ஏதுவாக உரிய பதிவேட்டை தணிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி பதிவேடு தாக்கலின்மையால் மேற்படி அறைகள் பயன் கொள்ளப்பட்டதின் சரித்தன்மையினை தணிக்கையில் அறிய இயலவில்லை. விரைவில் மேற்படி பதிவேட்டினை தாக்கல் செய்திடல் வேண்டும்.

இ)பிர்லா தங்கும் விடுதி – அறைகள் காலியாக வைக்கப் பட்டது – தொடர் வருவாய் இழப்பு – குறைபாடுகள்

இத்திருக்கோயிலின் பிர்லா தங்கும் விடுதிக்கான அறைகள் புக்கிங் பதிவேட்டினை தணிக்கையின்போது பார்வையிட்டதில் அறைகள் காலி செய்த பின்னர் பெரும்பாலான அறைகள் தொடர்ச்சியாக பல நாட்கள் அறையை காலியாக வைத்திருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

இவ்வாறு பல நாட்கள் அறைகள் காலியாக வைத்திருந்த மைக்கான காரணங்கள் குறித்து ஆவணங்கள் பூர்வமாக தணிக்கைக்கு விளக்கப்படவில்லை. மேலும் இவ்வாறு அறைகள் காலியாக வைத்திருந்த மைக்கு இணை ஆணையர் / நிர்வாக அலுவலருக்கு தெரிவித்து தக்க உத்திரவுகள் பெறப்படவில்லை.

எனவே. இது தொடர்பாக தக்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இழப்பு ஏதும் கண்டறியப்படின் அவ்விழப்பினை இதற்கு காரணமான பொறுப்பான நபர், நபர்களிடமிருந்து தக்கவாறு ஈடுசெய்யப்படல் வேண்டும்.

இக்குறைபாடுகளை களைய தக்க மேல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

235

172)
171

பிர்லா தங்கும் விடுதி-நிரந்தர பொருட்கள் இருப்புப் பதிவேடு முறையாக பேணப்படவில்லை-தற்போது இருப்பிலுள்ள பொருட்கள் விபரம் அறிய இயலவில்லை.

இத்திருக்கோயிலுக்கு சொந்தமான பிர்லா பயணிகள் தங்கும் விடுதியில் மொத்தம் 24 அறைகள் உள்ளன. இந்த அறைகளில் ஒவ்வொரு அறையிலும் என்னென்ன பொருட்கள் உள்ளன, (அதாவது கட்டில். மெத்தை, பெட்சீட், நாற்காலி, வாளி மற்றும் இதர வகை பொருட்கள் முதலான சாமான்கள்) என்பதை அறியும் வகையில் ஒவ்வொரு அறையிலும் சாமான்கள் இருப்பு அட்டை வைக்கப்படவில்லை. 24 அறைகளிலும் மொத்தம் என்னென்ன பொருட்கள் உள்ளன என்பதை அறியும் வகையில் நிரந்தர இருப்புப் பதிவேடு முறையாக பேணப்படவில்லை.

தற்போது பேணப்பட்டு வரும் பதிவேட்டில் ஒவ்வொரு இனத்திலும் எத்தனை பொருட்கள் உபயோகத்தில் உள்ளன. கைவசம் இருப்பில் எவ்வளவு பொருட்கள் உள்ளன என்பதை தெரிந்து கொள்ளும் வகையில் சுருக்கப்பட்டியல் தயாரித்து காண்பிக்கப்படவில்லை. மேலும் இதுவரை வாங்கப்பட்டுள்ள பொருட்களில் எத்தனை பொருட்கள் பயன்படுத்த இயலாதவையாக ஆகியுள்ளன என்பதையும் அதை இருப்புப் பதிவேட்டிலிருந்து நீக்கியும் காண்பிக்கப்படாமல் உள்ளது.

மேலும் இவ்விடுதியில் தங்கும் முக்கிய பிரமுகர்களுக்கு உணவு மற்றும் காபி, டீ வாங்கி தருவதற்கு தேவையான டிபன் கேரியர், டூர் பேக், பிளாஸ்க் முதலியவை வாங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. இந்த பெருட்களுக்கும் நிரந்தர பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் முறையாக பதிவு செய்து இதுகாறும் காண்பிக்கப்படவில்லை.

எனவே பிர்லா பயணிகள் தங்கும் விடுதியில் பயன்பாட்டிற்கு வாங்கப்படும் நிரந்தர பொருட்கள் அனைத்திற்கும் தணிக்கை பசலி முடிய நாளது வரை வாங்கப்பட்ட பொருட்கள் அனைத்திற்கும் 24 அறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் நிரந்தர பொருட்கள் இருப்பு விபரத்தை காட்டும் பதிவேடு பேணப்பட்டு மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அவற்றின் இருப்பு மற்றும் பயன்கொள்ளப்பட்டது தொடர்பாக முறையான பதிவுகள் குறித்த விபரம் கண்காணிக்கப்படுவதுடன் மேற்படி விடுதி கண்காணிப்பாளர், பொறுப்பாளர் பொறுப்பில் உள்ள நபர் மேற்படி இருப்புப் பதிவேடு படி சாமான்கள் அனைத்தும் இருப்பில் உள்ளதை அவ்வப்போது ஆய்வு செய்து உரிய சான்று வழங்கவும் நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லை.

இக்குறைபாட்டினை களைய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

173) 178

<u>கட்டணச் சீட்டு பங்கு - அர்ச்சகர்களுக்கு பங்குத் தொகை வழங்கியது - அர்ச்சகர்கள் பணியமைப்பு மரபு வழியாகத் தொடர்தல் - உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யப் படவில்லை மற்றும் குறைபாடுகள்</u>

கட்டணச்சீட்டுக்களுக்கான பங்கு வழங்கப் பட்ட வகையில் தணிக்கையாண்டில் ரூ 4,10,075-75 செலவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் அர்ச்கர்கள் பணியமைப்பு மரபு வழி உரிமை உடையதெனவும், ஆலய நிதியிலிருந்து சம்பளம் ஏதும் வழங்கப் படுவதில்லையெனவும், பங்குத் தொகை மட்டும் பட்டுவாடா செய்யப் படுவதாகவும் தணிக்கையின் போது தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட விபரப்படி பங்குத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டதில் பங்கு பெற்றுக் கொண்ட அர்ச்சகர்கள் இவ்வாலய அர்ச்சகர் பணியமைப்பில் மரபு வழி உரிமை படைத்தவர்கள் என்பதை நிலை நிறுத்த ஏதுவாக ஆவணச் சான்றுகள் ஏதும் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை, அர்ச்சகர் பணியமைப்பு நிபந்தனைக்குட்பட்டதா என்பதையறியவும் ஆவணங்கள் ஏதும் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை, நிபந்தனையற்ற பணியமைப்பு மரபு வழியாக தொடரத்தக்கதல்ல என திருத்திய அறநிலைய சட்டம் 2/71 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறித்த ஆவணங்கள் ஏதுமில்லாத நிலையில் மேற்கூறிய திருத்திய சட்டத்தின்படி இவ்வாலய அர்ச்சகர் பணியமைப்பு மரபு வழி உரிமை உடையதன்று.

எனவே தற்போது நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்கு உட்பட்டு இவர்களது பணியினை வரன்முறை செய்யப்பட்டு முறைப்படுத்தபட உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

<u>பிற குறைபாடுகள்</u>

1) கட்டணச் சீட்டு பங்குபட்டுவாடா பதிவேடு பேணப் படவில்லை.

2) முன்பசலியில்விற்பனையான கட்டணச் சீட்டுக்களுக்கு தணிக்கையாண்டில் பங்கு பட்டுவாடா செய்யப் பட்டுள்ளன. முன்பசலியில் எந்த எண்கள் முடிய கட்டணச் சீட்டு பங்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை தணிக்கையில் அறியப் படாத நிலையில் தணிக்கையாண்டில் மேற்கொள்ளப் பட்ட பங்கு பட்டுவாடா செலவின் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

3) அர்ச்சனைக்கு வழங்கப்பட்ட கட்டணச்சீட்டுக்களின் அசல் பிரதிகள் ஒப்படைக்கப்பட்டதை சரிபார்த்து அதன் அடிப்படையில் பங்கு பட்டுவாடா செய்யப்பட்டதென்ற சான்று உரிய அலுவலர்களால் வழங்கப்படவில்லை.

4)கட்டணச் சீட்டு பங்கு பெறும் பொருட்டு, யாரால், எந்தெந்த நாட்களில், எந்த எண்ணுடைய, எந்த இன கட்டணச் சீட்டுக்கள் ஒப்படைக்கப் பட்டன என்கிற விவரத்தினை தணிக்கையில் அறியும் வகையில் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் ஏதும் தணிக்கைக்கு ஒப்படைக்கப் படவில்லை.

